பக்கங்கள் : 22+VIII=30

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 10.00

www.uthayan.com

சுடர் 20 வள்ளுவர் ஆண்டு 2036 வைகாசி 01 ஞாயிற்றுக்கிழமை (15.05.2005) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர் :170

# இடைக்கால அதிகார சபையை முதன்மைப்படுத்த புலிகள் முடிவு

## ஜப்பானியத் தூதர் அகாஷியிடம் நேற்று அதையே தமிழ்ச்செல்வன் வலியுறுத்தினார்

கிளிநொச்சி,மே15

**ஆழிப்பேரலை அனர்த்த மீள்கட்டுமானத்துக்கான உத்தேச பொதுக்கட்டமைப்பு விடயத்தில் நம்பிக்கை இழந்திருக்கும் புலிகள், போரினால் அழிவுண்ட தமிழர் தாயகத்து மக்களின் இயல்பு வாழ்வைத் தோற்றுவிப்பதற்கான இடைக்காலத்தன்னாட்சி அதிகாரசபை விவகாரத்தை மீண்டும் முதன்மைப்படுத்துவது என்று தீர்மானித்திருக்கின்றனர்.**

**நேற்று கிளிநொச்சியில் தம்மைச் சந்தித்த ஜப்பானின் விசேட தூதர் யசூசி அகாஷியிடம் இதனையே விளக்கியிருக்கின்றார் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன்.**

ஆழிப்பேரலை அனர்த்த நிவாரணம் மற்றும் மீள்கட்டுமானம் ஆகியன தொடர்பாக இலங்கை அரசுடன் சேர்ந்து பொதுக்கட்டமைப்பு ஒன்றை உருவாக்கும் விடயத்தில் இனி அதிகம் மினக்கெடுவது அர்த்தமற்றது என்பதை உணர்ந்துள்ள விடுதலைப் புலிகள் போரினால் அழிவுண்ட பல்லாயிரக்கணக்கான தமிழ் மக்களின் இயல்பு வாழ்வை மீள ஏற்படுத்துவதற்கான அடிப்படையாக அமைகின்ற, இடைக்காலத் தன்னாட்சி அதிகாரசபை விடயத்தை முதன்மைப்படுத்திச் செயற்படுவது என்று தீர்மானித்திருக்கின்றனர் - என்பதை அகாஷியிடம் எடுத்துரைத்தார் தமிழ்ச்செல்வன்.

(20ஆம் பக்கம் பார்க்க)



அகாஷியை அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன், காவல் துறைப் பொறுப்பாளர் பா.நடேசன் ஆகியோர் வரவேற்றபோது...

### உள்ளே சூரியகாந்தியில்

- கண்டி மாநாட்டில் பொதுக்கட்டமைப்பின் அவசியம் அரசுக்கு உணர்த்தப்படுமா?
- தொலைக்காட்சித் தொடர்களில் மூழ்கித் திளைக்கும் பெண்குலம்...
- 'சுக்குப்புக்கு ரயில் வண்டி' - நினைக்க, சிரிக்க, சிந்திக்க.
- '...கலைகள் மனதுக்கு நிம்மதி தருபவை...' ஓவியக் கலைஞரின் செவ்வி.
- சிவராம் : அறியாத இன்னொரு பக்கம்...
- அக்கினிக் குஞ்சு...

இவற்றுடன் வழமையான அம்சங்களும்...

## பொதுக்கட்டமைப்பில் உள்ள செயன்முறை பிரச்சினைகளுக்குத் தீர்வுகாணவேண்டும்

### *முடிவு அரசின் கைகளிலேயே என்கிறார் அகாஷி*



கிளிநொச்சி,மே15

பொதுக்கட்டமைப்பை உருவாக்குவதில் செயன்முறைப் பிரச்சினைகள் இருக்கின்றன. இந்தப் பிரச்சினைகளுக்குத் தீர்வு எட்டப்பட்டபின்னர், மேற்கொண்டு நடவடிக்கை எடுப்பதா இல்லையா என்பதை இலங்கை அரசே முடிவு செய்ய வேண்டும்.

இப்படிக் கூறினார் ஜப்பானின் விசேட பிரதிநிதி யசூசி அகாஷி.

கிளிநொச்சியில் நேற்று தமிழ்ச்செல்வனைச் சந்தித்த பின்னர் செய்தியாளர்களிடம் பேசுகையிலேயே அவர் இப்படிக் கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

பொதுக்கட்டமைப்பை உருவாக்குவதில் செயன்முறைப் பிரச்சினைகள் சில உள்ளன. தமிழ்ச்செல்வனுடனும் ஜயந்த தனபாலவுடனும் நடத்திய பேச்சுக்களின் மூலம் இதனை நான் அறிந்து கொண்டேன். இந்தப் பிரச்சினைகளுக்கும் பேச்சு மூலமே தீர்வுகாணப்படவேண்டும். தீர்வு கண்ட பின்னரும் மேற்கொண்டு நடவடிக்கை எடுப்பதா? இல்லையா? என்பதை இலங்கை அரசே முடிவு செய்யவேண்டும். - என்றார்.

நேற்று கிளிநொச்சியில் இருந்து கொழும்பு திரும்பிய அகாஷி அங்கு நடத்திய செய்தியாளர் மாநாட்டில் தெரிவித்ததாவது:-

பொதுக்கட்டமைப்புத் தொடர்பாக இணக்கம் ஏற்படாமல் பேச்சுக்களில் முறிவு ஏற்படுமாயின் அதனால் நிவாரணப் பணிகளில் பெரும் பின்னடைவு நிலை ஏற்படும். அந்நிலை ஏற்படாமல் இருக்க தீர்க்கமான ஒரு முடிவை ஜனாதிபதி எடுப்பார் என நம்புகிறேன்.

(20ஆம் பக்கம் பார்க்க)

## பேராதனை மாணவன் நீரில் மூழ்கிப் பலி!

கண்டி,மே15

பேராதனைப் பல்கலைக்கழக 3ஆம் ஆண்டு மாணவன் ஒருவர் நீச்சல் தடாகத்தில் மூழ்கி மரணமானார்.

நேற்று நண்பகல் 12 மணியளவில் இடம்பெற்ற இச்சம்பவத்தில் மட்டக்களப்பைச் சேர்ந்த சிவநேசராசா சுலக்ஷன் (வயது-22) என்பவரே மரணமானார்.

கண்டியில் ஹோட்டல் ஒன்றில்

(20ஆம் பக்கம் பார்க்க)

## தேர்தல் நடத்தும் எண்ணத்தை விட்டு ரணிலிடம் 'ஆட்சியைக் கையளியுங்கள்

### *ஜனாதிபதிக்கு பிரதமர் இப்படி ஆலோசனை*

கொழும்பு,மே15

ஆழிப்பேரலை அனர்த்தங்களினால் பாதிக்கப்பட்ட மக்களின் மீள்கட்டுமானப்பணிகளை முன்னெடுப்பதற்கான பொதுக்கட்டமைப்பு உருவாக்குதல், மின்சார சபையை மறுசீரமைப்புச் செய்தல் ஆகிய விடயங்களை நிறைவேற்ற முடியாவிட்டால் அரசைக் கலைத்துத் தேர்தல் நடத்தாமல் ஆட்சியை ரணில் விக்கிரமசிங்கவிடம் ஒப்படையுங்கள்.

- இப்படி ஜனாதிபதிக்கு ஆலோசனை வழங்கியுள்ளார் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ.

கடந்த வாரம் பிரதமர் தலைமையில் அமைச்சர்களை ஜனாதிபதி சந்தித்துக் கலந்துரையாடினார்.

"பொதுக்கட்டமைப்பு, மின்சார சபை சீரமைப்பு ஆகிய விடயங்களை நிறைவேற்ற முடியாவிட்டால் ஆட்சியைக் கலைத்துத் தேர்தல்

(20ஆம் பக்கம் பார்க்க)

### வெளியுறவுச் செயலரின் கூற்றுத் தொடர்பாக

## இந்தியத் தூதரகம் நேற்று இரண்டாவது மறுப்பு அறிக்கை

கொழும்பு,மே15

இந்திய வெளிவிவகாரத்துறையின் செயலாளர் ஷியாம் சரணுக்கும், நோர்வேயின் வெளிவிவகார அமைச்சின் ஆலோசகர் எரிக் சொல்ஹெய்முக்கும் இடையில் புதுடில்லியில் இம்மாதம் பதினோராம் திகதி சந்திப்பு நடைபெற்றதல்லவா? அந்தச் சந்திப்புக் குறித்து கொழும்பில் உள்ள இந்தியத் தூதரகம் நேற்றுச் சனிக்கிழமை இரண்டாவது அறிக்கையையும் வெளியிட்டது.

மேற்படி இருவரினதும் சந்திப்பின் போது 'புலிகளின் சர்வாதிகாரத்தை இந்தியா ஒரு போதும் அனுமதிக்காது' என்று ஷியாம் சரண் கூறியதாக (இந்திய ஊடகங்களில் வெளியான செய்திகளை அடிப்படையாக வைத்து) இலங்கை

(20ஆம் பக்கம் பார்க்க)

## தமிழர் இன்னல்கள் நீங்க வத்திக்கான் உதவவேண்டும்

### *பாப்பரசரிடம் யாழ். ஆயர் நேரில் வேண்டுகோள்*

யாழ்ப்பாணம்,மே15

இலங்கையில் வாழும் தமிழ் மக்களின் அவலங்களை - இன்னல்களைத் தீர்க்கக்கூடிய விதத்தில் வத்திக்கான் ராஜீக நடவடிக்கைகளை எடுக்கவேண்டும்.

- இவ்வாறு புதிய பாப்பரசரிடம் வேண்டுகோள் விடுத்தார் யாழ். ஆயர் அதி வண. தோமஸ் சௌந்தரநாயகம் ஆண்டகை.

இலங்கை ஆயர்கள் குழுவுடன் வத்திக்கான் சென்றிருந்த ஆயர் சௌந்தரநாயகம், அங்கு பாப்பரசரைச் சந்தித்த சமயம் இதனை அவரிடம் தெரிவித்துள்ளார்.



கடந்த கால யுத்தத்தினால் தமிழ் மக்கள் பெரும் இன்னல்களை எதிர்நோக்கினர். அவர்கள் வாழ்வு சீரழிந்த நிலையில் உள்ளது.

கடந்த மூன்று வருடங்களாக உருவான சமாதானச் சூழலில் அவர்கள் நிம்மதியாக வாழ்கின்றனர். அவர்கள் தொடந்தும் நிம்மதியாக வாழக்கூடிய நிலை தோற்றுவிக்கப்படவேண்டும். இதற்கு வத்திக்கான் ராஜீக செயற்பாடுகளை முன்னெடுக்கவேண்டும்.

- இவ்வாறு பாப்பரசரிடம் கோரினார் யாழ். ஆயர்.

ஆழிப்பேரலை தமிழர் பிரதேசங்களில் ஏற்படுத்திய சேதங்கள் குறித்தும் பாப்பரசருக்கு யாழ். ஆயர் விளக்கமாகக் கூறினார்.

(ஐ-3)

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# நேற்று நடந்த மருத்துவக் கருத்தரங்கில் பல தெற்கு நிபுணர்கள் ஆய்வறிக்கை சமர்ப்பிப்பு

யாழ்ப்பாணம்,மே15

இலங்கை அறுவைச் சிகிச்சை நிபுணர்கள் சங்கமும் யாழ்.மருத்துவ சங்கமும் இணைந்து ஏற்பாடுசெய்த பிராந்திய மருத்துவக் கருத்தரங்கு நேற்றுக் காலை ஆரம்பமானது.

யாழ். ஸெயலாஸ் கல்யாண மண்டபத்தில் உத்தியோகபூர்வமாக நேற்றுமுன்தினம் இரவு ஆரம்பமாகிய இந்த நிகழ்வில் நேற்றுக் காலை முதல் மாலைவரை பிரபல வைத்திய நிபுணர்கள் ஆய்வு அறிக்கைகளைச் சமர்ப்பித்தனர்.

இக்கருத்தரங்கில் கலந்துகொள்வதற்காக இலங்கையில் தலைசிறந்துவிளங்கும் 20 வைத்திய நிபுணர்கள் யாழ்ப்பாணம் வந்துள்ளனர். அவர்களுடன் 40 வைத்தியர்களும் வருகை தந்துள்ளனர்.

அறுவைச் சிகிச்சை மருத்துவர் சங்கத்தின் தலைவர் திருமதி ஐ.வை.அமரசிங்க தலைமையில் நடந்த நேற்றைய முதலாவது அமர்வில் சத்திர சிகிச்சை நிபுணர் எஸ்.கணேசானந்தன் 'யாழ்ப்பாணத்தில் மார்புச் சத்திரசிகிச்சை' எனும் தலைப்பில் ஆய்வுக்கட்டுரையைச் சமர்ப்பித்து உரையாற்றினார்.

அதையடுத்து சத்திரசிகிச்சை நிபுணர் எஸ்.கணேசரத்தினம் தலைமையில் ஆசீர் வைத்தியசாலை அறுவைச் சிகிச்சை ஆலோசனை நிபுணர் கே.எல்.பெர்னாண்டோ 'சலப்பை கற்கள் குறித்த புதிய சிகிச்சை முறைகள்' என்ற தலைப்பில் ஆய்வுக் கட்டுரை சமர்ப்பித்தார்.

பேராசிரியர் தயாசிறி பெர்னாண்டோ தலைமையில் நடந்த அமர்வில் ஸ்ரீஜெயவர்த்தனபுர வைத்தியபீட அறுவைச்சிகிச்சை ஆலோசனை நிபுணர் பேராசிரியர் மோகன் டி சில்வா 'லப்றஸ் போப்பி பரிசோதனை முறையில் உள்ள இடர்பாடுகள்' என்ற தலைப்பில் ஆய்வுக்கட்டுரையைச் சமர்ப்பித்தார்.

பேராசிரியர் ஏ.எச்.செர்பிடீன் தலைமையில் நடந்த அமர்வில் 'தெரோயிட் வியாதிகள்' என்ற தலைப்பில் பேராதனைப் பல்கலைக்கழக வைத்தியபீடத்தின் அறுவைச் சிகிச்சை ஆலோசனை நிபுணர் பேராசிரியர் சி.ரட்ணதுங்கவும்-

களனிப் பல்கலைக்கழக வைத்தியபீட அறுவைச்சிகிச்சை ஆலோசனை நிபுணர் ரணில் பெர்னாண்டோவும் - ஆய்வுக் கட்டுரைகளைச் சமர்ப்பித்தனர். வைத்திய கலாநிதி எஸ்.லியனாராட்சி தலைமையிலான அமர்வில் 'வைத்தியத்துறை முன்னேற்றத்துக்கான உபாயங்கள்' என்ற தலைப்பில் சத்திரசிகிச்சை நிபுணர் எஸ்.ஜே.ஸ்ரீபன் ஆய்வுக்கட்டுரை சமர்ப்பித்தார்.

மாலை நிகழ்வில் பேராசிரியர் மோகன் டி சில்வா தலைமையிலான அமர்வில் 'புரஸ்டேட் வியாதிகளைக் கையாளுதல்' என்ற தலைப்பில் கொழும்பு தேசிய வைத்தியசாலையின் சத்திர சிகிச்சை ஆலோசனை நிபுணர் நெவில் பெரேராவும் -

டாக்டர் ஏ.கபிரியல் தலைமையிலான அமர்வில் 'ஆபத்தான தெரோயிட் வியாதிகள்' என்ற தலைப்பில் பேராசிரியர் ஏ.எச்.செர்பிடீனும் - ஆய்வுக்கட்டுரைகளைச் சமர்ப்பித்தனர்.

பேராசிரியர் ஏ.எச்.செர்பிடீன் தலைமையிலான அமர்வில் 'மார்புப் புற்றுநோய்ச் சிகிச்சை' என்ற தலைப்பில் மகரகம புற்றுநோய் வைத்தியசாலை புற்றுநோய்ச் சிகிச்சை நிபுணர் ஐ.வை. அமரசிங்கவும் -

பதுளை தேசிய வைத்தியசாலை புற்றுநோய் சிகிச்சை நிபுணர் நோமல் பெரேராவும் - ஆய்வுக்கட்டுரைகளைச் சமர்ப்பித்தனர்.

சத்திரசிகிச்சை நிபுணர் எஸ்.ஜே.ஸ்ரீபன் தலைமையிலான அமர்வில் 'மார்பகப் புற்றுநோய் சிகிச்சை' என்ற தலைப்பில் கரப்பிட்டிய போதனா வைத்தியசாலை புற்றுநோயியல் ஆலோசனை வைத்திய நிபுணர் டிகான் குணசேகரவும், யாழ்.போதனா வைத்தியசாலை புற்றுநோய் ஆலோசனை நிபுணர் எஸ்.ஜெயக்குமாரும் - ஆய்வு அறிக்கை சமர்ப்பித்தனர்.

**இன்றைய நிகழ்வுகள்**

இன்று காலை 9 மணிமுதல் இடம்பெறும் இரண்டாம் அமர்வுகளின் விவரம் வருமாறு:-

பேராசிரியர் சி.ரட்ணதுங்க தலைமையில் நடைபெறும் அமர்வில் 'வயிறு மற்றும் உடல் நோய்களுக்கான லப்றோ ரொமி சிகிச்சை' என்ற தலைப்பல் சத்திரசிகிச்சை ஆலோசனை நிபுணர் காமினி குணதிலக ஆய்வுக்கட்டுரை சமர்ப்பிப்பார்.

வைத்திய கலாநிதி நரேந்திர பின்ரு தலைமையில் நடைபெறும் அமர்வில் 'முதுகு வலி நோய்களை எவ்வாறு கையாளுதல்' என்ற தலைப்பில் கொழும்பு தேசிய வைத்தியசாலை நிபுணர் கூரே பணகல, டாக்டர் அசோகபத்திரன ஆகியோர் ஆய்வுக் கட்டுரை சமர்ப்பிப்பர்.

டாக்டர் காமினி குணதிலக தலைமையில் நடைபெறும் அமர்வில் 'கீழ் கால் நோய்' என்ற தலைப்பில் சத்திரசிகிச்சை நிபுணர் பிரதீப் பெர்னாண்டோ, கொழும்புப் பல்கலைக்கழக அறுவைச் சிகிச்சை நிபுணர் பேராசிரியர் மண்டிக விஜயரத்ன, கொழும்பு தேசிய வைத்தியசாலை சத்திரசிகிச்சை நிபுணர் டூலீப் பெரேரா ஆகியோர் ஆய்வுக் கட்டுரை சமர்ப்பிப்பர்.

டாக்டர் கணேசானந்தன் தலைமையில் இடம்பெறும் இறுதி அமர்வில் 'கவனத்தை ஈர்க்க வல்ல யாழ்ப்பாணத்தின் சத்திர சிகிச்சை மாதிரிகள்' என்ற தலைப்பில் யாழ். வைத்தியசாலை சத்திரசிகிச்சை நிபுணர் ரவிராஜ் ஆய்வுக்கட்டுரை சமர்ப்பிப்பார்.

(ஐ-3-7-203-204)



இலங்கை அறுவைச் சிகிச்சை நிபுணர்கள் சங்கமும் யாழ். மருத்துவ சங்கமும் இணைந்து நடத்துகின்ற மருத்துவக் கருத்தரங்கின் ஆரம்ப நிகழ்வில் மங்கள விளக்கினை சிரேஷ்ட அறுவைச் சிகிச்சை நிபுணர் எம்.கனேசரட்னம் ஏற்றுவதையும் அறுவைச் சிகிச்சை மருத்துவர் சங்கத் தலைவர் திருமதி ஐ.வை.அமரசிங்க உரையாற்றுவதையும் நிகழ்வில் கலந்துகொண்ட அறுவைச் சிகிச்சை நிபுணர்களான டாக்டர் ஏ.கபிரியேல், பேராசிரியர் ஏ.எச்.செரிப்டீன், பேராசிரியர் தயாசிறி பெர்னாண்டோ, டாக்டர் கனேசானந்தன் உள்ளிட்ட தென்னிலங்கை வைத்திய நிபுணர்கள் அமர்ந்திருப்பதையும் படங்களில் காணலாம்.

# சிவபூமி பாடசாலையில் இன்று புற்றுநோய் உதவு தொகை

யாழ்ப்பாணம்,மே15

புற்றுநோயாளர்களுக்கென வழங்கப்பட்டு வரும் நிதியுதவி இன்று காலை 9 மணி முதல் கோண்டாவிலில் உள்ள சிவபூமி பாடசாலையில் வைத்து வழங்கப்படவுள்ளது எனத் தெரிவிக்கப்பட்டது.

இதுவரை காலமும், யாழ். ஆஸ்பத்திரியில் வைத்து நிதியுதவி வழங்கப்பட்டு வந்தது.

இனிவரும் காலங்களில் கோண்டாவிலில் சிவபூமி பாடசாலையில் வைத்து இந்த உதவு தொகை வழங்கப்படும்.

புற்றுநோயால் பாதிக்கப்பட்டவர்கள் அது தொடர்பான மருத்துவ அறிக்கையைச் சமர்ப்பித்து நிதியுதவியினைப் பெற்றுக்கொள்ள முடியும் என செஞ்சொற்செல்வர் ஆறு.திருமுருகன் தெரிவித்தார். (எ)

# ஆதீனத்தில் இன்று முதல் ஒரு வாரம் திருநெறிய தெய்வீக விழா நடக்கும்

யாழ்ப்பாணம்,மே15

நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனம் திருஞானசம்பந்த சுவாமிகளது அருத உற்சவத்தை முன்னிட்டு நடத்தும் திருநெறிய தெய்வீக விழா இன்று ஞாயிற்றுக்கிழமை முதல் எதிர்வரும் 22ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை வரை ஆதீன கலா மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

தினமும் மாலை 3 மணி முதல் திருநெறிய தெய்வீக விழாவில் இறைவணக்கம், மங்கல இசை சிறப்புச் சொற்பொழிவு, திருமுறை அரங்கு, இசைக் கச்சேரி, வில்லிசை, பரதநாட்டியம், இசைநாடகம், கவியரங்கு, பட்டிமன்றம் ஆகிய நிகழ்வுகள் நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது. நிகழ்வுகளுக்கு சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரி அதிபர் செஞ்சொற்செல்வர் ஆறு.திருமுருகன் தலைமை வகிப்பார்.

முதலாம் நாள் நிகழ்வு இன்று மாலை 4.30 மணிக்கு ஆதீன நாதஸ்வர வித்துவான் எம்.சிவசுப்பிரமணியம் குழுவினரின் மங்கல இசையுடன் ஆரம்பமாகும் தொடர்ந்து செஞ்சொற்செல்வர் ஆறு.திருமுருகன் சிறப்புச் சொற்பொழிவு நிகழ்த்துவார். மாலை 6 மணி தொடக்கம் 8 மணிவரை ஸ்கந்தவரோதயக் கல்லூரி மாணவர்களின் பேச்சு, பண்ணிசை, நடன நிகழ்ச்சிகள் இடம்பெறும்.

இரவு 8மணி முதல் 9 மணிவரை ஸ்கந்தவரோதயக் கல்லூரியின் இசை ஆசிரியர் சிற்றம்பலம் சிவஞானராசா குழுவினர் வழங்கும் இசைக்கச்சேரி நடைபெறும்.

இரண்டாம் நாள் நிகழ்ச்சிகள் நாளை மாலை 4.30 மணி முதல் இடம்பெறும். (எ)

## நெடுங்குளம் வரை மினிபஸ் சேவை நீடிப்பு

யாழ்ப்பாணம்,மே15

யாழ். - கொழும்புத்துறை மினிவான் சேவை நாளை திங்கட்கிழமை முதல் நெடுங்குளம் வரை நீடிக்கப்படும் என்று யாழ்.மாவட்ட தனியார் பஸ் உரிமையாளர் சங்கங்களின் இணையம் அறிவித்துள்ளது.

இதேவேளை - தெற்கு புன்னாலைக் கட்டுவன் வரை சேவையிலீடுபட்ட சிற்றூர்திகள் யாவும் வடக்குப் புன்னாலைக்கட்டுவன் வரை நீடிக்கப்படும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-202)

## உயர்தர மாணவருக்கு மீட்டல் செயலமர்வு

யாழ்ப்பாணம்,மே15

யாழ். மாவட்ட கல்வி மேம்பாட்டுப் பேரவை, யாழ்.மாவட்ட மாணவர் அமைப்பு, யாழ். மத்திய கல்லூரியின் லியோ கழகம் ஆகியவற்றின அனுசரணையுடன் வடமாகாண அதிபர் சங்கம் இம்முறை உயர்தரப் பரீட்சையில் கணித, உயிரியல் பாடப் பரீட்சையில் தோற்றவுள்ள மாணவர்களுக்கான துரித மீட்டல் செயலமர்வினை நடத்தவுள்ளது.

நாளைமறுதினம் 17ஆம் திகதியும்18ஆம், 19ஆம் திகதிகளிலும் யாழ்ப்பாணம், வலிகாமம், தீவகம் ஆகிய பிரதேச மாணவர்களுக்கு யாழ். மத்திய கல்லூரியிலும் வடமராட்சி, தென்மராட்சி மாணவர்களுக்கு நெல்லியடி மத்திய கல்லூரியிலும் காலை 8 மணிமுதல் மாலை 5 மணிவரை மீட்டல் செயலமர்வு நடைபெறவுள்ளது.

நாளை 16ஆம் திகதியும் எதிர்வரும் 20ஆம் திகதியும் கிளிநொச்சி, முல்லைத்தீவு மாணவர்களுக்கு கிளிநொச்சி மத்திய கல்லூரியில் செயலமர்வு நடைபெறும்.

யாழ். நகரின் முன்னணி ஆசிரியர்களும் கொழும்பில் உள்ள முன்னணி ஆசிரியர்களும் இந்தத் துரித மீட்டல் செயலமர்வில் விரிவுரைகளை வழங்கவுள்ளனர்.

உரிய மாணவர்கள் தவறாது கலந்துகொண்டு பயன்பெறுமாறு ஏற்பாட்டாளர்கள் கேட்டுள்ளனர். (ஐ-13)

# பருத்தித்துறை கரையோரப் பகுதியில் மட்டும் கடற்கரைத் தடைச்சட்டம் தளர்த்தப்படும்?

யாழ்ப்பாணம்,மே15

சுனாமியால் பாதிக்கப்பட்ட பருத்தித்துறைப் பிரதேசத்தில் கடற்கரையிலிருந்து 200 மீற்றருக்குள் வீடுகளை அமைப்பதற்கு விதிக்கப்பட்ட தடையைத் தளர்த்துவதற்கு கொள்கையளவில் இணக்கம் காணப்பட்டுள்ளது.

இந்தத்தடை தளர்வு பற்றி ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க அதிகாரிகளுக்குப் பணிப்புரை விடுப்பார் என்று தெரிய வருகிறது.

அண்மையில் யாழ்.அரச அதிபர் கே.கணேஷ் உட்பட அரச உயர் அதிகாரிகளுடன் ஜனாதிபதி கலந்துரையாடியபோதே இந்தக் கடற்கரையோரத் தடையைத் தளர்த்துவதற்கு கொள்கையளவில் ஜனாதிபதி இணக்கம் தெரிவித்துள்ளார்.

சுனாமியால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களில் கடற்கரையிலிருந்து 200 மீற்றர் தூரத்துக்கு அப்பால் வீடுகளை அமைக்குமாறு ஏற்கனவே அறிவுறுத்தல் விடுக்கப்பட்டிருந்தது. அந்த அறிவுறுத்தலுக்கமைய அரச காணிகள் தெரிவுசெய்யப்பட்டு நிரந்தர வீடுகள் அமைத்துக்கொடுக்கும் பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

ஆனால், பருத்தித்துறைப் பிரதேசத்தில் போதியளவு அரச காணிகள் இல்லாததாலும் வேறு இடங்களில் குடியமர அப்பகுதி மக்கள் சம்மதிக்காததாலும் இந்தத் தடையுத்தரவில் சிக்கல் ஏற்பட்டது. அத்துடன், இத்தடையால் சில கிராமங்களே இல்லாமற்போகும் நிலை கூட ஏற்பட்டது.

இதுதொடர்பாக யாழ்.அரச அதிபரும், பல்வேறு பொது அமைப்பினரும் ஜனாதிபதியின் கவனத்திற்குக்கொண்டு வந்து தடையுத்தரவைப் பரிசீலிக்குமாறு வேண்டுகோள் விடுத்திருந்தனர்.

இதையடுத்தே, ஜனாதிபதி பருத்தித்துறைப் பகுதியில் மட்டும் தடையுத்தரவைத் தளர்த்துவதற்குக் கொள்கை அளவில் இணக்கம் தெரிவித்துள்ளார் - என செயலக அதிகாரிகளின் தகவல்களிலிருந்து அறியப்படுகிறது.

இது தொடர்பாக யாழ். மாவட்ட மேலதிக அரச அதிபர் ஆசிவசுவாமி கருத்துத் தெரிவிக்கையில் -

அரச அதிபர் கலந்துகொண்ட கூட்டத்திலேயே ஜனாதிபதி இந்த இணக்கப்பாட்டைத் தெரிவித்துள்ளார். அவரின் கொள்கையளவிலான அந்த இணக்கப்பாட்டை அடுத்து பருத்தித்துறைப் பிரதேசத்தில் நிரந்தர வீடுகளை அமைப்பதற்கான ஆரம்பகட்ட நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளோம்.

'மூவிமொண்டோ', 'போரூட்', சர்வோதயம், 'கெயர்' போன்ற அரசசார்பற்ற நிறுவனங்களுக்கு கிராமங்களைத் தெரிவுசெய்து கொடுத்து, நிரந்தர வீடுகளை அமைப்பதற்கான பணிகளில் அந்நிறுவனங்கள் ஈடுபடுவதற்கான ஆரம்பகட்ட வேலைகளை ஆரம்பித்துள்ளோம்.

உடனடியாக பருத்தித்துறைப் பகுதியில் தடை வலயத்துக்கு வெளியேயான வீடுகள் அமைக்கப்படும். ஜனாதிபதியின் கொள்கை அளவிலான இணக்கம் கடிதம் மூலம் செயலகத்திற்குக் கிடைத்ததும் தடை வலயத்திற்குள்ளும் வீடுகள் அமைக்கும் பணிகள் ஆரம்பமாகும் - என்று தெரிவித்தார்.

(ஐ-202-204)

## எல்லைப்படை மாவீரர் நினைவு ஆட்டம்

# பருத்தித்துறை பெண்கள் அணி இலகுவாகப் பெற்ற வெற்றி

எல்லைப்படை மாவீரர் நினைவாகவும் சுனாமியால் பாதிக்கப்பட்ட சிறார்களின் கல்வி வளர்ச்சிக்காகவும் தமிழீழ விளையாட்டுத்துறையின் யாழ். மாவட்டப் பிரிவின் ஆதரவுடனும் உதயனின் ஊடக அனுசரணையுடனும் வலிகாமம் உதைபந்தாட்ட லீக் மின்னொளியில் நடத்திவரும் உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற பெண்கள் அணிகள் மோதலில் பருத்தித்துறைப் பெண்கள் அணியினர் இலகுவாக வெற்றிபெற்றுள்ளனர்.

சுன்னாகம், கந்தரோடை ஸ்கந்தவரோதயக் கல்லூரி மைதானத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற இந்த ஆட்டத்தில் யாழ்ப்பாணம் பிரதேச செயலர் பிரிவைச் சேர்ந்த தொடர்மாடி பெண்கள் விளையாட்டுக்கழக அணியும் பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக் அணியும் மோதிக்கொண்டன.

முதல்பாதி ஆட்டத்தில் பருத்தித்துறை பெண்கள் அணியினர் 2 கோல்களைப் பெற்ற நிலையில் ஆட்டம் நிறைவுபெற்றது.

முதல்பாதி ஆட்டத்தில் வலது முன்னணி வீராங்கனை கு.கேமாவதி மூலை உதையொன்றை அடிக்க அதனைப் பெற்று அடித்து தனது அணிக்கான முதலாவது கோலைப் பெற்றுக் கொடுத்தார் ச.சர்மிளா.

சு.சுரேக்கா இடது முன்னணி வீராங்கனை தட்டிக்கொடுத்த பந்தை அடித்து இரண்டாவது கோலையும் பெற்றுக்கொடுத்தார் ச.சர்மிளா.

இரண்டாவது பாதி ஆட்டம் ஆரம்பித்த சில நிமிடத்தில் மத்திய பகுதி வீராங்கனை கு.கேமாவதி எதிரணி வீராங்கனைகளை வெட்டிக்கொண்டுவந்து அடித்தார் அந்தப் பந்தை ச.சர்மிளா தட்டிக்கொடுக்க சு.சுரேக்கா அடித்து கோலைப் பெற்றுக்கொண்டார்.

ஐந்தாவது கோலையும் சர்மிளா தட்டிக் கொடுக்க கேமாவதி பெற்று மிகவும் வேகமாகக் கொண்டுவந்து கோல் காப்பாளரையும் வெட்டி அடித்துப் பெற்றுக்கொண்டார்.

ஆறாவது கோலை ச.விநோதினி முன்னணி வீராங்கனை தட்டிக்கொடுக்க ச.சர்மிளா அடித்துப் பெற்றுக்கொண்டார்.

6:0 என்ற கோல்கணக்கில் பருத்தித்துறை லீக் பெண்கள் அணியினர் வெற்றியைப் பெற்றுக்கொண்டனர். (3-86)

## சிறுவர் பூங்கா விளையாட்டு விழா

கிளிநொச்சி,மே15

முழங்காவில் இரணைமாதா நகர் சொக்கலிங்கம் சிறுவர் பூங்கா விளையாட்டு விழா நாளை திங்கட்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு சிறுவர்பூங்கா மைதானத்தில் நடைபெறவுள்ளது. (3-203)

## விளையாட்டு



பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக் பெண்கள் அணியும் தொடர்மாடி பெண்கள் அணியும் மோதிய ஆட்டத்தின் ஆரம்பத்தில் வீராங்கனைகள், பிரதம விருந்தினர்களாகக் கலந்துகொண்ட யாழ். நாடாளுமன்ற உறுப்பினர் திருமதி பத்மினி சிதம்பரநாதன், நல்லூர்ப் பிரதேச மகளிர் அரசியல் துறைப் பொறுப்பாளர் பூமகள், தென்மராட்சிக் கோட்ட அரசியல்துறை மகளிர் பொறுப்பாளர் கலைவாணி, யாழ். மாவட்ட மாணவர் அமைப்புப் பொறுப்பாளர் கிருஷ்ணா ஆகியோருக்கு அறிமுகம் செய்து வைப்பதைப படத்தில் காணலாம். *(படங்கள்: நேசன்)*

## யாழ். வலய உடற்பயிற்சிப் போட்டிகள்

# உரும்பிராய் இந்து, யாழ். மகளிர் அணிகள் சம்பியன்

யாழ்ப்பாணம்,மே.15

யாழ். கல்வி வலயத்துக்குட்பட்ட பாடசாலைகளுக்கிடையில் நடந்த உடற்பயிற்சிப் போட்டிகளில் ஆண்கள் பிரிவில் உரும்பிராய் இந்துக்கல்லூரியும் பெண்கள் பிரிவில் யாழ். இந்து மகளிர் கல்லூரியும் முதலிடம் பெற்றுச் சம்பியனாகின.

கோண்டாவில் இராமகிருஷ்ண ம.வியில் கடந்த இரு தினங்கள் உடற்பயிற்சிப் போட்டிகள் நடைபெற்றன.

அந்தப் போட்டியில் வெற்றிபெற்ற பாடசாலைகள் விவரம் வருமாறு:-

**ஆண்கள்**

உரும்பிராய் இந்துக் கல்லூரி, புத்தூர் சோமஸ்கந்தக் கல்லூரி, அத்தியார் இந்துக் கல்லூரி.

**பெண்கள்**

யாழ். இந்து மகளிர் கல்லூரி, பெரியபுலம் மகாவித்தியாலயம், அச்சுவேலி மத்திய கல்லூரி. (3-190)

## கரைதுறைப்பற்று தடகளப்போட்டி

# வற்றாப்பளை மங்களேஸ்வரா வி.க. முதலிடம் பெற்றுச் சம்பியனானது

முல்லைத்தீவு,மே15

முல்லைத்தீவு கரைதுறைப்பற்று பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட விளையாட்டுக்கழகங்களுக்கு இடையில் நடந்த தடகளப்போட்டிகளில், வற்றாப்பளை மங்களேஸ்வரா வி.க. வெற்றிபெற்றுச் சம்பியனானது.

மங்களேஸ்வரா விளையாட்டுக்கழக மைதானத்தில் நேற்றுமுன்தினம் 14 கழகங்களுக்கிடையில் நடைபெற்ற இப்போட்டியில் முதல் இடத்தை வற்றாப்பளை மங்களேஸ்வரா விளையாட்டுக்கழகமும் இரண்டாமிடத்தை மாமுனை விண்ணொளி விளையாட்டுக்கழகமும், மூன்றாமிடத்தை வற்றாப்பளை செந்தமிழ் விளையாட்டுக்கழகமும் .பெற்றுக்கொண்டன.

போட்டியின் முடிவில் சான்றிதழ் வழங்கும் நிகழ்வு இடம்பெற்றது. இந்நிகழ்வில் சிறப்புரையை முல்லைத்தவு மாவட்டப் பொறுப்பாளர் காளியும், பிரதம உரையை மாவட்ட அதிகாரி குருஸும் நன்றி உரையை விளையாட்டு உத்தியோகத்தர் குமாரும் நிகழ்த்தினர். (3-12-416)

# பயங்கரவாதத்தை எதிர்த்துப் போராடும் இந்தியா, பாகிஸ்தானுடன் நல்லுறவு

## அமெரிக்க வெளியுறவு அமைச்சர் தகவல்

வாஷிங்டன், மே15

பயங்கரவாதத்தை எதிர்த்துப் போராட இந்தியா, பாகிஸ்தான் ஆகிய நாடுகளுடன் அமெரிக்கா நல்லுறவை வைத்திருக்கும்.

அமெரிக்க வெளியுறவுத்துறை அமைச்சர் கொண்டலீஸா ரைஸ் இதனைத் தெரிவித்தார்.

அமெரிக்க செனட் உறுப்பினர்களின் கூட்டத்தில் இது தொடர்பாக ரைஸ் மேலும் தெரிவித்ததாவது:-

இந்தியா, பாகிஸ்தான் ஆகிய இரு நாடுகளுடனான உறவை அமெரிக்கா வலுப்படுத்திக் கொண்டுள்ளது. சர்வதேச அளவிலான பாதுகாப்பு மற்றும் அமைதி முயற்சிகளுக்கு இந்தியா ஒத்துழைப்பு அளித்து வருகிறது.

சர்வதேச அளவில் பயங்கரவாதத்தை எதிர்த்து அமெரிக்கா போராடி வருகிறது. இந்த விடயத்தில் இந்தியாவும், பாகிஸ்தானும் அமெரிக்காவுக்குப் பூரண ஒத்துழைப்பு அளிதது வருகின்றன.

உலகின் மிகப்பெரிய ஜனநாயக நாடுகளில் ஒன்றான இந்தியாவுடன் உறவை வலுப்படுத்திக் கொள்வதில் அமெரிக்கா ஆர்வமாக உள்ளது. இந்தியாவின் வளர்ச்சியில் அமெரிக்காவுக்கு அக்கறை உள்ளது.

சமீபத்தில் வாஷிங்டன் வந்திருந்த இந்திய வெளியுறவுத்துறை அமைச்சர் நட்வர்சிங், அதிபர் ஜோர்ஜ் புஷ்ஷைச் சந்தித்துப் பேசினார். இருவரும் உறவை வலுப்படுத்துவது குறித்து விவாதித்தனர். பிரதமர் மன்மோகன்சிங், ஜூலையில் அமெரிக்கா வரவிருக்கிறார். அவரது வருகையால் உறவு மேலும் வலுப்படும் என்று நம்புகிறேன்.

இந்தியாவுடன் மட்டுமல்ல, பாகிஸ்தானுடனும் அமெரிக்கா நல்லுறவு வைத்துள்ளது. பயங்கரவாதத்தை ஒடுக்கும் முயற்சியில் பாகிஸ்தான் அமெரிக்காவுக்கு முழு ஒத்துழைப்பு அளித்து வருகிறது. அதிபர் முஷாரப்பும் பாகிஸ்தான் பொருளாதார ரீதியில் வலுப்படுத்துவதற்கான முயற்சிகளை மேற்கொண்டு வருகிறார். 2007 இல் அங்கு தேசிய அளவில் தேர்தல் நடத்தப்படவேண்டும் என்று அமெரிக்கா வலியுறுத்தி வருகிறது.

பாகிஸ்தானை கேட்டுக்கொண்டதின்படி எவ 16 ரக போர் விமானங்களை விற்பனை செய்ய புஷ் நிர்வாகம் முடிவு செய்துள்ளது. - என்றார் கொண்டலீஸா ரைஸ். (எ)

# அரசியலுக்கு முழுக்குப்போடுமாறு பெனாஸீருக்கு அமெரிக்கா வற்புறுத்து

வாஷிங்டன்,மே15

பாகிஸ்தானின் முன்னாள் பிரதமரான பெனாஸீர்பூட்டோவை அரசியலுக்கு முழுக்குப் போடுமாறு அமெரிக்கா வலியுறுத்தி வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

பாகிஸ்தான் முன்னாள் பிரதமர் பெனாஸீர் பூட்டோ, தற்போது லண்டன் மற்றும் டுபாய் ஆகிய நாடுகளில் மாறி மாறி தங்கியிருக்கிறார்.

ஊழல் வழக்கில் சிறைத் தண்டனை விதிக்கப்பட்ட பெனாஸீர் நாடு திரும்பினால் அவரை பாகிஸ்தான் அரசு உடனடியாகக் கைதுசெய்யும் பெனாஸீர் வெளிநாட்டில் இருந்து கொணடே பாகிஸ்தானில் உள்ள தனது மக்கள், கட்சித் தொண்டர்களை அதிபர் முஷாரப்புக்கு எதிராக போராட்டத்தில் ஈடுபடுத்தி வருகிறார்.



இதுபோல் முன்னாள் பிரதமர் நவாஸ ஷெரீப்பும் நாடு கடத்தப்பட்டு தற்போது சவூதி அரேபியாவில் இருக் கிறார். அவரது முஸ்லிம் லீக் கட்சியும் முஷாரப்புக்கு எதிராகப் போராட்டம் நடத்தி வருகிறது.

இந்த நிலையில், பெனாஸீர் மற்றும் நவாஸ் ஷெரீப்பை அரசியலுக்கு முழுக்குப் போடும்படி அமெரிக்கா வற்புறுத்தி வருகிறது. முஷாரப்புக்கு எதிராக போராட்டங்களை தீவிரப்படுத்த வேண்டாம் என்றும் அவர்களை அமெரிக்கா எச்சரித்துள்ளது.

முஷாரப்புக்கு ஆதரவாக அமெரிக்கா செயற்பட்டு வருவது இந்த இரு கட்சிகளுக்கும் ஆச்சரியத்தை கொடுத்துள்ளது. முஷாரப் ஏற்பாட்டின் பேரில்தான் அமெரிக்கா இப்படி நடந்து கொள்வதாகவும் அந்த கட்சிகள் கூறுகின்றன.(எ)

## உலக அரங்கில்

# திருப்பதி ஆலயத்தில் பக்தர் வெள்ளம்: வழிபாட்டுக்கு 70 மணிநேரம் காத்திருப்பு!

திருப்பதி ஆலயத்திற்கு வரும் பக்தர்களின் எண்ணிக்கை நாளுக்குநாள் அதிகரித்து வருகின்றது. இவ்வாறு வரும் பக்தர்கள் சுவாமி தரிசனத்திற்காக சுமார் 70 மணிநேரம் காத்திருக்கவேண்டியேற்பட்டிருப்பதாக தகவல்கள் தெரிவித்தன.

திருப்பதி ஏழுமலையான் கோயிலுக்கு இந்தியா முழுவதிலும் இருந்து தினமும் பெரும் எண்ணிக்கையான பக்தர்கள் வந்து தரிசனம் செய்துவிட்டுச் செல்கின்றனர். கடந்த முதலாம் திகதி முதல் பக்தர்கள் கூட்டம் அதிகரித்த வண்ணம் உள்ளது. குறிப்பாக, கோடை விடுமுறையையொட்டி ஏராளமான பக்தர்கள் வந்து குவிந்த வண்ணம் உள்ளனர் என்றும் -

சனி, ஞாயிறு தினங்களில் பக்தர்கள் கூட்டம் நிரம்பி வழிவதாகவும் - கூறப்படுகிறது.

கடந்த இரண்டு தினங்களுக்கு முன்னர் இலவச தரிசனத்துக்காக சுமார் 49 மணி நேரம் பக்தர்கள் காத்து நினறனர். எனினும், திடீரென்று பக்தர்கள் கூட்டம் மேலும் அதிகரித்துள்ளது. இலவச தரிசனத்துக்காக பக்தர்கள் 70 மணி நேரம் காத்து நிற்கவேண்டிய சூழ்நிலை ஏற்பட்டதாகவும் - சுட்டிக்காட்டப்படுகின்றது.

தரிசனத்துக்கு வந்த பக்தர்கள் இரவில் கோயிலுக்கு வெளியேயும் காத்து நின்றனர். எனவே, பக்தர்கள் விரைவாக சுவாமி தரிசனம் செய்து விட்டுச்செல்ல ஆலய நிர்வாகிகள் சிறப்பு ஏற்பாடுகளைச் செய்துள்ளனர்.

திருப்பதிக்குப் பல்வேறு மாநிலங்களில் இருந்தும் வாகனங்களில் பக்தர்கள் வந்த வணணம் உள்ளனர். இதனால், வாகனங்கள் நிறுத்தும் இடங்களில் நெருக்கடி ஏற்பட்டுள்ளது.

பக்தர்கள் வருகையையொட்டி பலத்த பொலீஸ் பாதுகாப்பு போடப்பட்டுள்ளது. (எ)

# தீவிரவாதிகள் முகாம் மீது ஈ-ராக்கில் குண்டுத் தாக்கு!

பக்தாத்,மே15

ஈராக்கில் சதாம் ஹுசைன் ஆட்சி அகற்றப்பட்டு அமெரிக்காவின் ஆதரவுடன் புதிய அரசு அமைக்கப்பட்டுள்ளது. புதிய அரசு அமைந்த பின்னரும் அங்கு தீவிரவாதிகளின் தாக்குதல் நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது.

கடந்த ஒரு வாரத்தில் மட்டும் தீவிரவாதிகளின் கார்க் குண்டுத் தாக்குதல்களில் 700 பேர் பலியாகியுள்ளனர். தினமும் சராசரி 70 இடங்களில் கார்க்குண்டுத் தாக்குதல் நடைபெற்று வருகிறது.

இதனையடுத்து, தீவிரவாதிகளின் முகாம்களைத் தேடிப்பிடித்து அமெரிக்கப் படையினர் தாக்குதல் நடத்திவருகின்றனர்.

சிரியா எல்லையை அண்மித்துள்ள பகுதியில் தீவிரவாதிகளின் தலைவர் ஒருவர் பதுங்கி இருப்பதாகத் தகவல் கிடைத்தது. இதைத் தொடர்ந்து அந்த முகாம் மீது அமெரிக்கப் படையினர் அதிரடித் தாக்குதல் நடத்தினர். அமெரிக்க ஜெட் விமானங்களும் சரமாரியாக குண்டுகளை வீசின. இதில் அந்த முகாம் தகர்த்தப்பட்டது. இந்த அதிரடித் தாக்குதலைத் தொடர்ந்து ஆயிரக்கணக்கான தீவிரவாதிகள் சிரியாவுக்குள் தப்பி ஓடிவிட்டனர். தீவிரவாதிகளின் தலைவனும் சிரியாவுக்குள் புகுந்துவிட்டார் எனக்கூறப்படுகிறது. (எ)

# வளர்ந்தவர்களை மட்டுமன்றி சிறுவர்களையும் இலகுவில் தாக்கக்கூடியது டெங்குக்காய்ச்சல்

**நாளை திங்கட்கிழமை தொடக்கம் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை (16.05.2005 - 22.05.2005) வரையிலான ஒரு வார காலம் டெங்கு கட்டுப்பாட்டு வாரமாகப் பிரகடனம் செய்யப்பட்டுள்ளது. அதனை முன்னிட்டு இந்தக் கட்டுரை பிரசுரமாகின்றது.**

வயது வந்தவர்களை மட்டுமன்றி குழந்தைகளையும் இலகுவில் பிடிக்கக்கூடியது டெங்குக் காய்ச்சல். இந்தக் காய்ச்சலைப் பரப்பும் நுளம்புகளின் பரம்பல் குடாநாட்டின் பல்வேறு பகுதிகளிலும் அதிகரித்துக் காணப்படுவதாகவும் இனங்காணப்பட்டுள்ளது.

எனவே, டெங்குக் காய்ச்சல் பரவுவதற்குக் காரணமாக அமையும் நுளம்புகளை அழிக்கவும் டெங்கு அற்ற சமூகத்தைக் கட்டுப்படுத்தவுமென யாழ்.மாவட்டத்தில் டெங்கு கட்டுப்பாட்டு வாரம் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது. நாளை திங்கட்கிழமை தொடக்கம் எதிர்வரும் 22 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை வரை இந்தவாரம் அனுஷ்டிக்கப்படவுள்ளது.

டெங்கு அற்ற சமூகத்தைக் கட்டியெழுப்புவதற்கு தம்மால் இயன்ற பணிகளை ஆற்றவேண்டியது எம் அனைவரினதும் முக்கிய கடமையாகும். டெங்கின் பரம்பல், அதன் நோயரும்பு காலம், அதன் குணங்குறிகள், டெங்கு நோய்பரப்பும் நுளம்புகளைக் கட்டுப்படுத்தல் குறித்து நோக்குவோம்.

இலங்கையில் கடந்த 10 வருடங்களில் டெங்கு வேகமாகப் பரவி வருகிறது. 1995 ஆம் ஆண்டு 440 பேர் டெங்கு நோயால் பாதிக்கப்பட்டு 11 இறப்புகள் சம்பவித்தன. அதேபோல், 2000 ஆம் ஆண்டு 5 ஆயிரத்து 203 நோயாளர்களும் 37 இறப்புகளும் 2004 ஆம் ஆண்டு 15 ஆயிரத்து 434 டெங்கு நோயாளர்களும் 88 இறப்புக்களும் பதிவாகியுள்ளன.

சமீப காலமாக எமது பகுதியில் மழை வீழ்ச்சியில் பாரிய மாற்றம் ஏற்பட்டுள்ளது. விட்டு விட்டுப் பெய்யும் மழை டெங்கு நோய் அதிகரிப்புக்கு மிகவும் வாய்ப்பான சூழலை உருவாக்கும். யாழ் மாவட்டத்திற்கும் டெங்கு உள்ள மற்றைய மாவட்டங்களுக்கும் போக்குவரத்துத் தொடர்பு கூடுதலாக ஏற்பட்டுள்ளதன் காரணமாகவும் பரவும் வாய்ப்பு உண்டு.

யாழ்ப்பாணப் பகுதியில் 2004ஆம் ஆண்டு 153 நோயாளரும் 2 மரணமும் ஏற்பட்டதாக அறிக்கைகள் காட்டுகின்றன. இந்நோய்க்கான பரிசோதனை வசதிகள் குறைவாக உள்ளமையினால் நோய் பற்றிய அறிவித்தல்கள் தனியார் வைத்தியசாலைகளில் இருந்து பெறப்படாமை ஆகிய பிரச்சினைகளை வைத்துப் பார்க்கையில் இந்நோய் நிலைமை பல மடங்கு அதிகமாக உள்ளது என்பது புலனாகும். இந்நோய் அதிகமாக சிறுவர்களைப் பாதிக்கின்றது. டெங்கு ஓர் 'ஆபோ வைரஸ்' ஆல் ஏற்படுத்தப்படும் நோய்த் தொகுதியாகும். இதில் (டெங்கு காய்ச்சல், டெங்கு இரத்தப் பெருக்குடன் கூடிய காய்ச்சல், டெங்குஅதிர்ச்சி அறிகுறிகள் ஆகியவை அடங்கும்).

நான்கு வகையான டெங்கு வைரசுக்கள் இந்நோய்க்குக்காரணமாக உள்ளன. டீஈஎன் 1, டீஈஎன் 2, டீஈஎன் 3, டீஈஎன் 4 ஒரு வகை வைரசு தாக்க மேற்படுத்தி நோய் ஏற்பட்ட பின்னர் அடுத்த முறை மற்றைய வகை வைரஸ் தாக்கங்களுக்கு இதுயாது காப்புக் கொடுக்காது.

எனவே, நான்கு முறை ஒருவருக்கு டெங்கு காய்ச்சல் வரலாம்.

இந்நோயைக் காவும் நுளம்புகள் 'ஈடிஸ்இஜிப்ரஸ்', 'ஈடிஸ் அல்மோபிக்டஸ்' என இனங்காணப்பட்டுள்ளன. இவை பகல் நேரத்தில் குறிப்பாக காலை, மாலை நேரத்தில் கடிக்கும் தன்மையுடையன. இதனால், பயணம் செய்யும் போதும் பாடசாலை, வேலை செய்யும் இடத்திலும் என இவை கடித்து டெங்கு நோயை ஏற்படுத்தலாம். டெங்கு நுளம்புகளின் கால்களில் வெள்ளி நிற வளையங்களும் மேல் முதுகுப் புறத்தில் வெள்ளிக் கோடுகளும் காணப்படும்.

### நோயரும்பு காலம்

தொற்றுள்ள நுளம்பு கடித்து 4/6 நாள்களில் நோயறிகுறிகள் காணப்படும்.

### டெங்குக் காய்ச்சல் நோய்க் குணங்குறிகள்

முதலில் தலையிடி, முதுகு நோவு, களைப்பு ஆகியவை காணப்படும். இதைத் தொடர்ந்து

- கண்களுக்குள் பின் பகுதியில் நோவு
- வெளிச்சத்தைப் பார்க்க முடியாமை
- முதுகு நோவு
- மூட்டுத் தசை ஆகியவற்றில் கடும் நோவு
- 5,7 நாள்கள் காய்ச்சல் நீடிக்கும்
- சத்தி, தலைச் சுற்று
- அறிகுறிகள். 3–4நாள்களில் குறையும். சிலவேளை டெங்கு இரத்தப் பெருக்குடன் கூடிய காய்ச்சலாக மாறலாம்.

### டெங்கு இரத்தப் பெருக்குடன் கூடிய அறிகுறிகள்

இது இரத்தப் பெருக்குத் தன்மை கொண்டதாகவும் டெங்கு காய்ச்சல் அறிகுறிகள் உடையதாகவும் இருக்கும்.

- ◆ செந்நிறப் பருக்கள் தோன்றும்
- ◆ மூக்கு, முரசு போன்றவற்றிலிருந்து இரத்தக் கசிவு
- ◆ மண்ணிறமான அல்லது கறுப்பு நிற சத்தி அல்லது மலம்.
- ◆ கடுமையான வயிற்று நோ
- ◆ கண்கள் சிவந்து இருக்கும்
- ◆ ஈரல் பெருத்து இருத்தல்

### அதிர்ச்சியுடன் கூடிய டெங்கு அறிகுறிகள்

- ❒ காய்ச்சல் திடீரென குறைந்துவிடும்
- ❒ உடல் குளிர்ந்து வெளிறிக் காணப்படும்
- ❒ அமைதியின்மை, தூக்க நிலை
- ❒ பலவீனமானதும் அதிகரித்ததுமான நாடித் துடிப்பு
- ❒ மூச்சு வாங்கல்

இந்நிலைமைகள் நோயாளி மோசமடைவதையும், அதிர்ச்சி நிலைக்குச் செல்வதையும் குறிக்கும்.

அஸ்பிரின் போன்ற மருந்துகள் கொடுத்தலாகாது. பரிசிட்டமோல் மாத்திரம் சரியான அளவில் கொடுக்கப்படல் வேண்டும். டெங்கு அறிகுறிகள் காணப்பட்டதும் தாமதமின்றி நோயாளரை வைத்திசாலைக்கு அனுப்பிவைக்கப்படல் வேண்டும்.

டெங்கு நோய்க் கட்டுப்பாட்டில் பிரதான இடம் வகிப்பது நுளம்புக் கட்டுப்பாடாகும். அதிலும் நுளம்பு பெருகும் இடங்களை அழித்தல் ஆகும்.

1. நீர் சேகரிக்கும் கொள்கலன்களை மூடி வைத்திருத்தலும் அடிக்கடி உரஞ்சிச் சுத்தம் செய்தலும்.
2. சுற்றாடலைச் சுத்தமாக வைத்திருத்தல், புல் பூண்டுகளை அழித்தல்
3. நீர் தேங்கக் கூடிய சிரட்டை, கோம்பை, பாவிப்புக்கு உதவாத சட்டி, பானை அலுமினியப் பாத்திரங்கள், போத்தல், பேணி ஆகியவற்றை அழித்தல், அகற்றல், உரிய நடவடிக்கை எடுத்தல்
4. வாய்க்கால்கள், பீலிகளில் நீர் தேங்காமல் அடிக்கடி சுத்தம் செய்தல்
5. பழைய ரயர்கள், மரப் பொந்துகளில் நீர் தேங்காது இருக்க மண் இடுதல், துவாரம் இடுதல்.
6. பூச்சாடிகள் எறும்பு ஏறாமல் இருப்பதற்காக மேடைக்கால்களுக்கு வைக்கும் ஏதனங்களில் உள்ள நீருக்கு உப்பு இடுதல், அடிக்கடி அகற்றுதல்
7. இத்துடன் நுளம்புக் கடியிலிருந்து பாதுகாக்க,

- ▮ வீடுகளுக்கு திரைச் சீலை இடுதல். நுளம்பு புகாமல் தடுக்க வலைகள் இடுதல்
- ▮ நுளம்புத்திரி பாவித்தல்
- ▮ கால், கைகளை மூடக்கூடிய சட்டைகளை அணிதல்
- ▮ சிறுவர்களைப் பகலில் நுளம்பு வலையினுள் படுக்க வைத்தல்
- ▮ நோயாளர்களை நுளம்பு வலைக்குள் படுக்க வைத்தல்

### நோய்க் கட்டுப்பாட்டில் முக்கியமாகக் கவனிக்க வேண்டியவை

- ❖ மக்கள் டெங்கு நோய் பற்றிய அறிவையும் ஏற்படக்கூடிய ஆபத்தையும் அறிதல்
- ❖ சூழலைச் சுத்தமாக வைத்திருத்தலும் நீர் தேங்காத முறையில் கொள்கலன்களில் உள்ள நீரை உரிய முறையில் கையாளுத லும்.
- ❖ நோய் காணப் பட்டால் இரத்த மாற்றீடு பெறக் கூடிய வைத்தியசாலைக்கு நோயாளியை அனுமதித்தல். நோயாளியைத் தனிமைப்படுத்துதல்.
- ❖ சகல மக்களும் இந்நோய்க் கட்டுப்பாட்டுக்குத் தத்தமது பங் களிப்பை வழங்குதல்.

இவற்றின் மூலம் இக்கொடிய நோயை சமூகத்திலிருந்தும், எமது பகுதிகளிலிருந் தும் இல்லாமல் செய்ய முடியும். ✦

**சி.இராஜேந்திரா**
சிரேஷ்ட பொதுச்சுகாதாரப் பரிசோதகர்,
சுகாதார சேவைகள், யாழ்ப்பாணம்.

உ

**சிலாபம் ஸ்ரீ முன்னேஸ்வர தேவஸ்தானம்**

ஸ்ரீ வடிவாம்பிகா சமேத முன்னைநாதஸ்வாமி ஆலய

ஜீர்ணோத்தாரண, புனராவர்த்தன அஷ்டபந்தன, ஸ்வர்ணபந்தன

**மஹா கும்பாபிஷேகப் பெருவிழா**

22.05.2005 ஞாயிற்றுக்கிழமை காலை 6.30 மணிமுதல் 8.00 மணிவரை ஸ்தூபிகள் அபிஷேகம் 108 குண்ட பக்ஷ மஹாகும்பாபிஷேகம்.

19.05.2005 வியாழக்கிழமை காலை 6.00 மணிமுதல் பிற்பகல் 3.00 மணிவரை பக்தர்கள் எண்ணெய்க்காப்பு சாத்துதல்

பிரதான சிவாசாரியார்: "ஆகமப்பிரவீணா"

**சிவஸ்ரீ ஐ.கை.வாமதேவக்குருக்கள் (நயினை)**

☞ கும்பாபிஷேகத்தில் பங்குபற்றும் சிவாச்சாரியார்கள் (18.05.2005) புதன்கிழமை காலை 6.30 மணிக்கு வாகனப் போக்குவரத்து வசதிக்கான வாகன ஒழுங்குகள் நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனத்திலிருந்து ஒழுங்குபடுத்தப்பட்டுள்ளன.

அடியார்கள் அனைவரும் கும்பாபிஷேகத்தில் கலந்து எம் பெருமானைத் தரிசித்து திருவருள் பெற்றுய்வீர்களாக!

முன்னேஸ்வரம்.
T.P.: 032 4860379
(45352)(42-11-17)

**கா.இரத்தினகைலாசநாதக்குருக்கள்**
யாழ்ப்பாணம்.
T.P.: 021 222 6910

## கண்ணீர் அஞ்சலி

அரிச்சந்திரனுக்கோர் சந்திரமதியாகவும் இன்னும் பல பாத்திரங்களிலும் எமது தந்தையார் **கலாநிதி நடிகமணி வீ.வீ.வைரமுத்து** அவர்களோடு பல்லாயிரக்கணக்கான மேடைகளில் நடித்துப் பெரும் புகழ்பெற்ற

*சோகசோபித சொர்ணக் கவிக்குயில்*

**V.K. இரத்தினம்** அவர்கள்

காலமாகிய செய்தி அறிந்து பெருந்துயரம் அடைகின்றோம் அவரது பிரிவால் துயரத்திலாழ்ந்திருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதுடன் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

நடிகமணி
வீ.வீ.வைரமுத்து
குடும்பத்தினர்.

"சாரங்கா",
காங்கேசன்துறை. (45374)(11-17-42)

## மரண அறிவித்தல்கள்

### A.T.திருநாவுக்கரசு

**(இளைப்பாறிய உத்தியோகத்தர், அரச திரைப்படக் கூட்டுத்தாபனம், தற்போதைய பிரத்தியேக ஆங்கில ஆசிரியர்)**



கொக்குவில் மேற்கைப் பிறப்பிடமாகவும் சண்டிலிப்பாயை வசிப்பிடமாகவும் கொண்ட தம்பிப்பிள்ளை திருநாவுக்கரசு 13.05.2005 வெள்ளிக்கிழமை காலை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற தம்பிப்பிள்ளை- இராசம்மாவின் சிரேஷ்ட புத்திரனும் நிவேதிதாதேவியின் அன்புக் கணவரும் வசந்தி, வாசுகி ஆகியோரது பாசமிகு தந்தையாரும் கலை ஈசனின் அன்பு மாமனாரும், கலைப்பிரியா, பிரதீபன், சஞ்சீவன் ஆகியோரின் பேரனும் குலசிங்கம் (ஜேர்மனி), சரோஜினி தேவி (கனடா), செல்வரட்ணம் (ஓய்வூதியர், சுதுமலை), பஞ்சரட்ணம் (லண்டன்), கனகேந்திரன் (கனடா), ஜெயமலர் (கொக்குவில்), சந்திரகுமார் (கனடா) ஆகியோரின் பாசமிகு சகோதரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (16.05.2005) திங்கட்கிழமை காலை 11 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கொட்டுப்பனை இந்துமயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*சண்டிலிப்பாய் வடக்கு,*
*சண்டிலிப்பாய்.* (45353)(38-11-17-42)

தகவல்:
A.T.செல்வரட்ணம்
(சகோதரன்).

### திருமதி கார்த்திகேயன் திருமகள்

(பகுதிநேர விரிவுரையாளர், கல்வியியற்கல்லூரி, யாழ்ப்பாணம்)

சம்பியன் ஒழுங்கை, கொக்குவிலைச் சேர்ந்த திருமதி கார்த்திகேயன் திருமகள் அவர்கள் 13.05.2005 வெள்ளிக்கிழமை இரவு காலமானார்.

அன்னார் வைத்திய கலாநிதி கார்த்திகேயன் அவர்களின் பாசமிகு மனைவியும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக புவியியற்றுறைத் தலைவர் பேராசிரியர் கா.குகபாலன் - கோகிலாதேவி தம்பதியினரின் சிரேஷ்ட புதல்வியும் சிறுப்பிட்டியைச்சேர்ந்த பரமேலழகபிள்ளை (இளைப்பாறிய வலயக்கல்வி ஆலோசகர்) - தேவரஞ்சிதம் (ஆசிரியை, அச்சுவேலி சென்திரேசா மகளிர் கல்லூரி) தம்பதியினரின் அன்பு மருமகளும் திருவேணி (ஆதார வைத்தியசாலை, பருத்தித்துறை), திருவருள் ஆகியோரின் அன்புச் சகோதரியும் கோபிகிருஷ்ணா (கணக்காய்வாளர், கொழும்பு)வின் மைத்துனியும். விக்னேஸ்வரராசா (இளைப்பாறிய ஆசிரியர்), சண்முகானந்தராசா (லண்டன்), நடராசா (லண்டன்), சிவானந்தராசா (கனடா) மற்றும் சந்திரசேகரம்பிள்ளை (இளைப்பாறிய அதிபர், புத்தூர் சோமாஸ்கந்தக் கல்லூரி) அனவரதவிநாயகம்பிள்ளை (புத்தூர்), முருகேசப்பிள்ளை (ஆஸ்திரேலியா) மற்றும் திருமதி கமலாம்பிகை கனகசுந்தரம் (பிரான்ஸ்), திருமதி இந்திராணி சண்முகநாதன் (இளைப்பாறிய ஆசிரியர்) ஆகியோரின் அன்பு மருமகளும மனோரஞ்சிதம கனகரத்தினம் (சிறுப்பிட்டி) அமெரிக்கா, கனகசபை (இளைப்பாறிய அதிபர், புங்குடுதீவு), காலஞ்சென்ற தனபாலசிங்கம் (இளைப்பாறிய ஆசிரியர்), லோகநாதன் (ஆசிரியர் - ஜேர்மனி), திருநாவுக்கரசு (அதிபர் - ஹறறன்) மற்றும் தம்பிப்பிள்ளை (இளைப்பாறிய ஆங்கில ஆசிரிய ஆலோசகர் - வாழைச்சேனை), திருமதி தவதேவி புஸ்பநாதன் (கொழும்பு), திருமதி கலாதேவி சுந்தரலிங்கம் (லண்டன்), திருமதி மயில்வாகனம் பேரின்பநாயகி (சிறுப்பிட்டி) ஆகியோரின் பெறாமகளும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (15.05.2005) ஞாயிற்றுக்கிழமை அவரது இல்லத்தில் காலை 10 மணிக்கு நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கொக்குவில் இந்துமயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

*சம்பியன் ஒழுங்கை,*
*கொக்குவில்.*
(45362)(35-11-17-42)

தகவல்:
வைத்தியகலாநிதி ப.காத்திகேயன் (கணவர்)
பேராசிரியர் கா.குகபாலன்

## 5ஆம் வருட நினைவு நாள்

*தாயின் மடியில்* 1972 – 04 – 19



*மண்ணின் மடியில்* 2000 – 03 – 15

**சிதம்பரன் கணேசலிங்கம்**

(தமிழீழக் காவல்துறையின் முதன்மைக் காவலன்)

*கெருடாவில் தெற்கு,*
*தொண்டைமானாறு.* (45355)(42-11-17)

## 8ஆம் வருட நினைவு நாள்

*தாயிடம்* 1931 – 05 – 01



*இறைவனிடம்* 1997 – 05 – 17

**இராமன் சிதம்பரன்**

உங்கள் பிரிவால் துயருறும்:
தாய், மனைவி,
சி.பொன்னி (கட்டி)

உதயன்
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி, தொலைநகல் — 222 2030, 222 2083, 222 3837.

# சின்னத்திரை எனும் மாயம்

சின்னத்திரை மாயையின் பாதிப்புகள் குறித்து எச்சரித்திருக்கின்றார் அனலைதீவு கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவர் க.பரத்துவாசன்.

சின்னத்திரை மாயையிலிருந்து விடுபடும் வரை மாணவரின் கல்வித்தரம் மேம்பாடடையாது என்ற உண்மையைச் சுட்டிக்காட்டியிருக்கின்றார் அவர்.

கல்வியைப் பற்றிக்கொள்ள வேண்டிய மாணவரை சின்னத்திரை பற்றிக்கொள்கிறது. அது மாணவரை நேரடியாக மட்டும் கெடுக்கவில்லை. அதற்கு அப்பாலும் போய் அவர்களை மறைமுகமாகவும் அது பாதிக்கின்றது.

மாணவர்களுக்கு நன்னெறி காட்டி அவர்களை நல்வழிப்படுத்த வேண்டிய பெற்றோரையும் சின்னத்திரை மாயை பீடித்து ஆட்டுவிக்கின்றது. அதன் மூலமும் அந்த மாணவனின் முன்னேற்றத்திற்கு ஆப்பு வைக்கிறது அது.

பெற்றோர்கள் சின்னத்திரை மாயையிலிருந்து விடுபடும் போதுதான் பிள்ளைகளின் கல்வித்தரம் மேம்பாடடையும் என்கிறார் பரத்துவாசன்.

நவீன விஞ்ஞானத்தின் அசுரவேக முன்னேற்றத்தால் இந்தப் பரந்த பூமிப்பந்து, சுருங்கி பூகோளக் கிராமமாகிக் கொண்டிருக்கின்றது. உலகமயமாதலின் கபளீகரப்பிடியிலிருந்து தப்பமுடியாமல் எங்கோ ஒரு மூலையில் ஒதுங்கிக்கிடந்த - முன்னேற்றமே காணாத - குக்கிராமம் கூட - அதில் சிக்கித் தவிக்கிறது.

இந்தப் பின்னணியில் தான் தொலைக்காட்சி என்ற அதிசயம், பல்லாயிரம் மைல்களுக்கு அப்பால் - ஏன் கோடிக்கணக்கான மைல்களுக்கு அப்பால் - அண்ட வெளியில்கூட இடம்பெறுகின்ற நிகழ்வுகளை நமது வீட்டுக்குள் கொண்டு வந்து சின்னத்திரையில் தத்ரூபமாகக் காட்டுகின்றது.

விஞ்ஞான உலகின் இந்த வளர்ச்சி சமூக மேம்பாட்டுக்கு உதவும் என்று பார்த்தால், அது நமது சமூகச் சீரழிவுக்கும், சமூக முன்னேற்றத் தடைக்கும் கால்கோளாகியிருப்பது அதிர்ச்சி தருகின்றது.

வெறும் வானொலியைக் கேட்டும் பத்திரிகைகளை வாசித்தும் கொண்டிருந்த நமது சமூகம், இலத்திரனியல் ஊடகம் என்ற தொலைக்காட்சிக்குள் சிக்கி, அதையும் தாண்டி இணையத் தளங்கள் என்ற கணனி வலைப்பின்னல்களுக்குள் மாட்டி, தன்னைக் கெடுத்துக்கொண்டிருப்பது வேதனையிலும் வேதனையாகும்.

தொலைக்காட்சி, இணைய வலைப்பின்னல் போன்றவை சமூக மேம்பாட்டுக்கும், வளர்ச்சிக்கும் உறுதுணையாய் நிற்கக்கூடியவை - அதற்குரிய முறையில் அவை பயன்படுத்தப்பட்டால்.

ஆனால், பொழுதுபோக்கு மட்டுப்படுத்திய அளவில் பயன்படுத்த வேண்டிய தொலைக்காட்சியையும் அறிவு விருத்திக்கு முறையாக உபயோகிக்க வேண்டிய இணையத்தள வலைப்பின்னலையும் அத்தேவைகளுக்கு அப்பால் பயன்படுத்தி நம்மை நாமே கெடுத்து - அழித்துக் - கொள்கிறோம். இதுதான் இன்றைய யதார்த்த நிலை.

ஓய்வுநேரத்தில், பொழுதுபோக்காக, மனப் புத்துணர்வை ஏற்படுத்துவதற்காகப் பார்க்கவேண்டிய சின்னத்திரைக்கு நாம் அடிமையாகி, ஓய்வு ஒழிச்சலின்றி - எமது அன்றாடப் பணிகளையும், கடமைகளையும் துறந்து - தொலைக்காட்சியே கதி என்று சரணடையும் நிலைக்குச் சென்று விடுகின்றோம். அதன்மூலம் நமது உயர்வையும் விருத்தியையும் கெடுத்து, குடும்பத்திலிருந்து சமூகம் வரை ஒவ்வொன்றினதும் அங்கத்தவன் என்ற முறையில் அவையவற்றின் உயர்வையும் வளர்ச்சியையும் நாசமாக்கி, நம்மை நாமே கெடுத்துக் கொள்கிறோம்.

அறிவு வளர்ச்சிக்குப் பயன்படுத்தப்பட வேண்டிய இணைய வலைப்பின்னல், பார்க்கக் கூடாதவற்றைப் பார்க்கவும் 'அரட்டை' என்ற பெயரில் ஆபாச உரையாடல்களுக்கும் கருவியாகியிருக்கின்றது.

அறிவுப்பசிக்கு விருந்தாகவும் உலகானுபவத் தேடலுக்குக் களமாகவும் விளங்கி வந்த நூலகங்களை மக்கள் நாடுவது குறையத் தொடங்கிவிட்டது. வாசிப்புப் பழக்கம் அருகத் தொடங்கிவிட்டது. அதற்கு மாற்றீடாகக் கேட்டும், பார்த்தும், கவனித்தும் அறிவை விருத்தி செய்வதற்குக் கருவிகளாகக் கூடிய வானொலி, தொலைக்காட்சி, கணனி போன்ற கட்புல சாதனங்கள் அறிவுக்கு விருந்தாவதற்கு அப்பால் தனிமனித அழிவுக்கு உரமிடுவனவாக மாறிக்கொண்டிருக்கின்றன.

விஞ்ஞானத்தின் வளர்ச்சியும், வீச்சும், நம்மைப்பற்றிக் கொள்ளும் அதன் ஆக்கிரமிப்பும், நம்மை - நமது சமூகத்தை - நமது இனத்தை - நமது தாயகத்தை - நமது உலகை - நல்வழிப்படுத்துவதற்குப் பயன்படுத்தப்பட வேண்டும். தவறி, அவற்றினால் கவர்ந்திழுக்கப்பட்டு நாம் அடிமையாவோமேயானால் அது நமது அழிவுக்கே வழிவகுக்கும்.

வானொலி, தொலைக்காட்சி, கணனி போன்ற தொடர்பூடகங்கள் எமக்குத் தேவை; அவசியமானவை. ஆனால், அவற்றை நாம் அளவறிந்து பயன்படுத்த அறிந்துகொள்ள வேண்டும். அது கட்டாயமாகும். எமது சமூக முன்னேற்றத்துக்கு அதுவே அத்தியாவசியமானதும் ஆகும்.

# கிடைக்கும் நிதி பங்கீடு செய்யப்பட முன்னர் பேச்சுக்கள் மீண்டும் ஆரம்பிக்கப்பட வேண்டும்

## சமாதான நீதிவான்கள் சங்கம் அறிவுறுத்து

யாழ்ப்பாணம்.மே15

உலக நாடுகள் வழங்கும் நிதி பங்கீடு செய்யப்பட முன்னர் சமாதானப் பேச்சுக்கள் மீண்டும் ஆரம்பிக்கப்பட வேண்டும்.

-இவ்வாறு வேண்டுகோள் விடுத்துள்ளது யாழ்.மாவட்ட சமாதான நீதவான்கள் சங்கம்.

இதுவிடயமாக மேற்படி சங்கம் விடுத்துள்ள செய்திக்குறிப்பு வருமாறு:-

யாழ்.மாவட்ட சமாதான நீதவான்கள் சங்க உறுப்பினர்களாகிய நாம், தங்களிடம் விநயமாக வேண்டிக்கொள்வது யாதெனில் உலக நாடுகளால் இலங்கைக்கு வழங்கப்படவிருக்கின்ற நிதிப் பங்கீடுகளுக்கு முன்பதாக இலங்கை அரசு, தமிழீழ விடுதலைப் புலிகளுடன் சமாதானத்திற்கான பேச்சுகளை மீள ஆரம்பிக்க வேண்டுமென்பதே இதுவிடயத்தில் அழுத்தங்களைக் கொடுக்க வேண்டுமென நாம் கோரிக்கை விடுக்கின்றோம்.

20 வருடகாலமாக இலங்கையில் ஏற்பட்ட இனப்பிரச்சினையால் எமது மக்கள் அனுபவித்த துன்பங்களை உலகம் நன்கு அறியும். மீண்டும் ஒரு கொடிய யுத்தம் ஏற்படுவதை எந்த மனிதனும் விரும்பமாட்டான்.

எனவேதான், இலங்கையில் நீண்ட காலமாக நிலவி வந்துள்ள இனப்பிரச்சினைக்குச் சமாதான வழியில் தீர்வுகாணப் பேச்சுகள் உடன் ஆரம்பிக்கப்பட வேண்டும். இதுவே, இனப்பிரச்சினையின் தீர்வுக்குப் படிக்கல்லாக அமையும்.

அதேவேளை, இலங்கையில் நிரந்தர சமாதானம் ஏற்படுவதற்குத் தமிழீழ விடுதலைப்புலிகள் இலங்கை அரசுக்குச் சமர்ப்பித்த இடைக்கால தன்னாதிக்க அதிகாரமுள்ள இடைக்காலத் அரசையும் ஒப்படைக்க வேண்டுமென இத்தால் உறுதியாகவும் இறுதியாகவும் வேண்டி நிற்கிறோம் - என்று அதில் உள்ளது. (எ)

# வீதி விபத்துக்களைத் தவிர்க்கும் வகையில் பாடசாலை தோறும் விழிப்புணர்வு ஏற்பாடுகள்

## உடுவில் கோட்டக் கல்விப்பணிப்பாளர் அறிவுறுத்து

வலிமேற்கு.மே15

வீதி விபத்துக்களைத் தவிர்க்கும் வகையிலும் மாணவர்கள் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையிலும் பொருத்தமான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு பணிப்புரை விடுக்கப்பட்டுள்ளது. உடுவில் கல்விக் கோட்டப் பணிப்பாளர் செ.குபேரநாதன் இந்தப் பணிப்புரையை விடுத்துள்ளார். இது விடயமாக உடுவில் கல்விக் கோட்டப் பாடசாலை அதிபர்களுக்கு அவர் அனுப்பி வைத்துள்ள கடிதத்தில்:-

வீதி விபத்துக்களைத் தடுப்பதற்கு வழிசெய்யும் செயற்றிட்டமாக மாணவர்களுக்கு வீதி ஒழுங்கு விதிகளைப் பாடசாலைகளில் நடைபெறும் காலைக் கூட்டங்களில் எடுத்துக் கூறுதல் வேண்டும். இது விவகாரத்தில் பெற்றோருக்கும் உரிய கருத்தரங்குகள் ஒழுங்கு செய்யப்பட வேண்டும்.

பாடசாலைகள் அமைந்துள்ள பகுதியில் உள்ள பொலீஸ் பொறுப்பதிகாரிகளுடன் இதுவிடயமாகத் தொடர்பு கொண்டு, வீதி ஒழுங்கு விதிமுறைகளை மாணவர்களுக்குச் செய்முறையாகக் காண்பிக்க வேண்டும். அது தொடர்பான அறிவிப்புகளை பொலீஸ் அதிகாரி மூலம் மேற்கொள்ளவும் -

பாடசாலைகள் தமது வசதிகளின் நிமித்தம் இணைந்தோ, தனித்தோ செய்முறை வகுப்புகளை ஒழுங்கு செய்யலாம்.

மாணவர்கள் வீதிகளில் சமாந்தரமாகச் செல்வது தவிர்க்கப்பட வேண்டும். அவ்வாறு செல்லும் மாணவர்களைப் பொலீஸார் எச்சரித்துப் புத்திமதி கூறி அனுப்புவர். தொடர்ந்தும் மாணவர்கள் இவ்வாறு நடந்துகொண்டால், குறிப்பிட்ட மாணவர்கள் கல்வி பயிலும் பாடசாலை அதிபர் ஊடாகச் சம்பந்தப்பட்டவர்களுக்கெதிராகச் சட்டநடவடிக்கை எடுப்பர்.

உயிரின் பெறுமதியை உணர்ந்து வீதி விபத்துச் சம்பந்தமான சட்டநடவடிக்கைகளைப் பொலீஸார் எடுப்பதற்கு முன்னர் மக்கள், மாணவர்கள் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்தவேண்டும் - என்று அந்தக் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. (எ-152)

# நாகர்கோவில் பாதையை திறந்துவிடக் கோரிக்கை

வடமராட்சியையும் வடமராட்சி கிழக்கையும் இணைக்கும் நாகர்கோவில் வீதியை பொதுமக்களின் பாவனைக்கு திறந்துவிடுமாறு அப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

வடமராட்சி கிழக்கில் அரச அலுவலகங்களில் கடமைபுரிவோர், பாடசாலை ஆசிரியர்கள் உட்படப் பலர் வடமராட்சி வடக்கிலிருந்து செல்கின்றனர். முகமாலை ஊடான போக்குவரத்தில் நீண்ட நேரவிரயம் ஏற்படுவதாகவும் அதனைத் தவிர்க்கும் முகமாக நாகர்கோவில் பாதை திறக்கப்படவேண்டுமெனவும் அவர்கள் கோரியுள்ளனர்.

வடமராட்சி கிழக்கிலுள்ள மக்களுக்கு வைத்தியசாலை வசதிகள் மிகக் குறைவாகவே உள்ளன. இவர்கள் கிளிநொச்சி வைத்தியசாலைக்கோ அல்லது முகமாலை ஊடாக சாவகச்சேரி வைத்தியசாலைக்கோ நீண்டநேரத்தின் பின்னரே செல்ல முடியும்.

எனவே, இம்மக்களின் பல்வேறு வசதிகளைக் கருத்திற்கொண்டு மேற்படி பாதையைத் திறந்துவிட நடவடிக்கை எடுக்கவேண்டும் எனச் சம்பந்தப்பட்ட தரப்பினரிடம் அப்பகுதி மக்கள் கோரியுள்ளனர். (கு-36)

# அரியாலை ஈச்சங்காட்டுப்பகுதி வயல் நிலங்கள் கையளிப்பு

யாழ்ப்பாணம்.மே15

அரியாலை தெற்கு, மத்தி ஜே-9 கிராம அலுவலர் பிரிவுக்குட்பட்ட - ஈச்சங்காடு வயற்பகுதியில் குறிக்கப்பட்ட ஒரு பகுதி வயல் நிலங்கள் விவசாய நடவடிக்கைக்காகக் கையளிக்கப்படவுள்ளது.

ஏ-9 வீதிக்கும், அரியாலை கிழக்குக்குச் செல்லும் வீதிக்கும் ரயில் பாதையிலிருந்து 100 மீற்றர் தொலைவுக்கு அப்பாலும் காணப்படும் - நல்லூர் பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட - வயல் காணிகளே விவசாயிகளிடம் கையளிக்கப்படவுள்ளன.

இந்த வயல் நிலங்கள் மிதிவெடிகள் அகற்றப்பட்டுத் துப்புரவு செய்யப்பட்டுள்ளன.

வயல் நிலங்களைக் கையளிக்கும் வைபவம் நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை முற்பகல் 11 மணிக்கு இடம்பெறும்.

குறிப்பிட்ட பகுதி வயல் நிலங்களின் உரிமையாளர்களை உடனடியாக அரியாலை விவசாய சம்மேளனத்துடன் தொடர்பு கொள்ளுமாறும் -

காணிகள் கையளிக்கப்படும் தினத்தன்று முற்பகல் 10.45 மணியளவில் அரியாலைச் சந்தியில் அவர்களை ஒன்று கூடுமாறும் நல்லூர் பிரதேச செயலர் திருமதி க.தெய்வேந்திரம் கேட்டுள்ளார். (ஐ)

# உதவிப்பொருள் வழங்கலில் முறைகேடு; ஆதிகோவிலடி மக்கள் ஆர்ப்பாட்டம்

செம்பியன்பற்று.மே15

வல்வெட்டித்துறை, ஆதிகோவிலடியைச் சேர்ந்த மக்கள் நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை பருத்தித்துறை பிரதேச செயலகம் முன்பாக எதிர்ப்புப் போராட்டம் ஒன்றில் ஈடுபட்டதுடன் மகஜர் ஒன்றையும் கையளித்தனர்.

ஆழிப்பேரலை பாதித்தோருக்கென தொண்டர் நிறுவனங்களால் வழங்கப்பட்ட நிவாரணப் பொருள்கள் விநியோகிக்கப்பட்டதில் தமது பிரதேசத்தில் முறைகேடு இடம்பெற்றதாகக்கூறி மக்கள் இந்தப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

அன்றையதினம் முற்பகல் 10 மணியளவில் இடம்பெற்ற இந்தப் போராட்டத்தில் நூற்றுக்கணக்கானோர் கலந்துகொண்டனர்.

அண்மையில் வெளிநாட்டு நிறுவனம் ஒன்றினால் கடற்கரையிலிருந்து 300 மீற்றர் தொடக்கம் 350 மீற்றர் வரையிலான பகுதியில் வசிக்கும் பாதிக்கப்படாதவர்களுக்கு உதவிப்பொருள்கள் வழங்கப்பட்டன என்றும் -

இது தொடர்பாக கிராம சேவையாளரிடம் தாம் முறையிட்டதாகவும் -ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டமக்கள் தெரிவித்தனர். (எ-36)

## நாளை

வைகாசி 02
திங்கட்கிழமை
16.05.2005
திதி : அட்டமி
பின்னிரவு 02.00 வரை
நட்சத்திரம் : ஆயிலியம்
முற்பகல் 09.53 வரை
சுபநேரம் : 11.53 - 01.23
ராகுகாலம்: 07.23 - 08.53
(யாவும் பழைய நேரப்படி)

# இசைநாடகக் கலைஞர் 'சந்திரமதி' இரத்தினம் நேற்றுக் காலமானார்



கொழும்புத்துறை.மே15

குடாநாட்டின் முதுபெரும் இசை நாடகக் கலைஞரான அரியாலையைச் சேர்ந்த கலாபூசணம் கதிர்வேலு இரத்தினம் நேற்றுக் காலமானார். இறக்கும் போது அவருக்கு வயது 77.

கலையுலகில் சந்திரமதி இரத்தினம் என அழைக்கப்பட்ட இவர், நடிகமணி வி.வி.வைரமுத்துவின் 'அரிச்சந்திர மயான காண்டம்' இசை நாடகத்தில் சந்திரமதி பாத்திரம் ஏற்று நடித்ததன் மூலம் தமது திறமையை வெளிப்படுத்தியிருந்தார்.

கட்டட ஒப்பந்தக்காரரான கலைஞர் இரத்தினம் - பக்த நந்தனார், ஸ்ரீவள்ளி போன்ற நாடகங்களில் நடித்து கலையுலகுக்குப் பெருமை சேர்த்திருந்தார்.

கடந்த சில ஆண்டுகளாக நோய்வாய்ப்பட்டிருந்த இவர், நேற்று அதிகாலை யாழ்.போதனா வைத்தியசாலையில் காலமானார்.

நடிக கலாமணி, சோக சோபித சொர்ண கவிக்குயில் போன்ற பல பட்டங்களைப் பெற்ற இவரது கலைச் சேவையைப் பாராட்டி 2001 ஆம் ஆண்டு கலாசார அமைச்சு 'கலாபூஷணம்' விருதினை இவருக்கு வழங்கிக் கௌரவித்தது.

சிறந்த சமூக சேவையாளனும், ஆன்மீகவாதியுமான அன்னாரது இறுதிக்கிரியைகள் அரியாலை கலைமகள் வீதியில் உள்ள அவரது இல்லத்தில் இன்று நண்பகல் 12 மணிக்கு நடைபெறவுள்ளன. (எ-30)

# பளைப்பிரதேச செயலகத்துக்கான இருமாடிக் கட்டட வேலைகள் பூர்த்தி

தென்மராட்சி.மே15

பளைப்பிரதேச செயலகத்திற்கான புதிய இருமாடிக் கட்டட வேலைகள் பூர்த்தியடைந்துள்ளன.

இக்கட்டடத்தில் விரைவில் பிரதேச செயலகம் இயங்கவுள்ளது.

2000ஆம் ஆண்டு யுத்த அனர்த்தங்களின் போது பிரதேச செயலகக் கட்டடங்கள் முழுமையாகச் சேதமடைந்தன.

கடந்த வருடம் 17 மில்லியன் ரூபா செலவில் புதிய இருமாடிக் கட்டட வேலைகள் ஆரம்பிக்கப்பட்டு வேலைகள் தற்போது பூர்த்தியடைந்துள்ளன.

பிரதேச செயலகக் கட்டடங்கள் சேதமடைந்ததால் கடந்த 2002ஆம் ஆண்டு தொடக்கம் தனியார் வீடொன்றில் பிரதேச செயலகப் பணிகள் நடைபெற்று வந்தமை குறிப்பிடத்தக்கது. (எ-117)

## உதயவாக்கு

ஆராய்ந்தறிவதும், சிந்தனை செய்வதும் நம்முடைய உரிமை மட்டுமல்ல; உயர்ந்த கடமையும் கூட.

- இங்கர்சால்

# சின்னஞ்சிறு விளம்பரங்கள்

## விற்பனைக்கு

நல்ல நிலையில் உள்ள ஐஸ்கிறீம் வான்கள், ஐஸ்கிறீம், ஐஸ்பழம் முதலியவை தயாரிக்கும் இயந்திரங்கள் (Bபாத்), குளிர்சாதனப் பெட்டி (டிப்பிறிச்), மின்பிறப்பாக்கி (ஜெனரேற்றர்) போன்றவை விற்பனைக்குண்டு. தொடர்புகளுக்கு: 021 226 3325, 0777 515035. (45105)

எம்மிடம் நல்ல நிலையிலுள்ள OLymbia (Portable) Type writer, Toshiba Deck, Pan-na sonic Black &White T.V என்பன விற்பனைக்குண்டு. தொடர்பு: கி.அகிலன், அராலி வடக்கு. T.P 0777 112186. (45325)

## காணி விற்பனைக்கு

மூளாய் கூட்டுறவு வைத்தியசாலைக்கு மிக அருகில் காரைநகர் - யாழ்ப்பாணம் பிரதான வீதியில் 5 பரப்புக்காணி உடன் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: 0777 238332. (45295)

மல்லாகம் சோடாக்கொம்பனி ஒழுங்கை, அப்பா வளவில் 11 பரப்புக்காணி, பயன்தரும் தென்னம்பிள்ளைகள், மா, பலா, மற்றும் பழ மரங்கள், தேக்கு, சமண்டலை முதலிய மரங்களுடன் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: ந.வேலும்மயிலும், சிவபதி, வன்னியசிங்கம் வீதி, தாவடி வடக்கு. (45357)

புன்னாலைக்கட்டுவன் வடக்கு சந்தியிலிருந்து நிலாவரை செல்லும் வீதியில் 23 பரப்பு தோட்டக்காணியும் (குருக்கட்டு) ஈவினைப் பிள்ளையார் கோவிலில் இருந்து வடகிழக்கே ஒரு கி.மீ தூரத்தில் 53 பரப்புக்காணியும் விற்பனைக்குண்டு. (கலடு, தோட்டம், தனிக்கிணறு) தொடர்பு: சி.மாணிக்கராசா கோண்டாவில் T.P 077 6054361, 021 - 4591550. (45289)

## கமரா போன் விற்பனைக்கு

4 மாத காலம் பாவித்த மிக நல்ல நிலையில உள்ள Nokia 7610 விற்பனைக்குண்டு. (10 நிமிட வீடியோ E.mail, web, Streaming Video (T.V.), Mp3 Ringtone, 64 MB Memory Card, USB - Cable உட்பட பல நவீன தொழில்நுட்பங்கள் நிறைந்தது. தொடர்பு: 071 3052146. (45364)

## வீடு விற்பனைக்கு

கொக்குவில் கிழக்கு, 49/5, அச்சுக்கூட ஒழுங்கையில் 3¾ பரப்பு உள்ள காணியுடன் சேர்ந்த வீடு விற்பனைக்குண்டு. தொடர்பு: 021 222 2638. (45292)

கோப்பாய் வெள்ளருவைப் பிள்ளையார் கோயிலுக்கு அருகில் 2½ பரப்பு காணியுடன் சேர்ந்த புதிய வீடு விற்பனைக்குண்டு. தொடர்பு: T.P.: 021 - 222 2638. (45293)

## நாய்க்குட்டி விற்பனை

அழகான காவலுக்குரிய Great Dane நாய்க்குட்டிகள் குறைந்த விலையில் விற்பனைக்குண்டு. தொடர்பு: க.தனபாலசிங்கம் (நல்லூர் வீடியோ சென்ரர் வளவு), முருகேசர் ஒழுங்கை முத்திரைச் சந்தையடி, நல்லூர் (45309)

## இறைச்சிக்கோழி விற்பனைக்கு

Prima உயிர் Broiler மற்றும் இறைச்சிக கோழிகள் சுகாதார முறைப்படி உடன் சுத்தம் செய்து தினமும் பெற்றுக்கொள்ளலாம். (Electronic நிறுவை) - தொடர்பு: (நல்லூர் வீடியோ சென்ரர்வளவு) 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர். (45310)

புறொயிலர் இறைச்சிக்கோழிகள் மொத்தமாகவும், சில்லறையாகவும் விற்பனைக்குண்டு. சுத்தம் செய்து வேண்டிய நிறைகளில் பெற்றுக கொள்ளலாம். மொத்தமாகக் கொள்வனவு செய்வோருக்கு விலை குறைக்கப்படும். றாஜீவ் ஆனைக்கோட்டைச் சந்தி, விஜயகுமார் குளப்பிட்டி றோட், ஆனைக்கோட்டை T.P.: 222 3529, 2867. (45366)

## கோழிக்குஞ்சு விநியோகம்

இரண்டு முறை தடுப்பு மருந்து போடப்பட்ட Original Prima Broiler குஞ்சுகள், பேட்டுக்குஞ்சுகள் 23.05.2005 திங்கட்கிழமை பிற்பகல் விநியோகிக்கப்படும். எமது பருத்தித்துறை கிளையிலும், நெல்லியடிக் கிளையிலும சுட்டி பாம் - வட்டுக்கோட்டை, சந்நிதி பாம் தொண்டைமானாறு, ஐங்கரன் களஞ்சியம், திருநெல்வேலி. முருகன் - சாவகச்சேரி, நல்லூர் பாம் சென்ரர், 19, முருகேசர் ஒழுங்கை முத்திரைச்சந்தையடி, நல்லூர். (43755)

அதிவிசேட Prima பேட்டுக்குஞ்சுகள் 16.05.2005 மாலை விநியோகிக்கப்படும் பதிவுகளை மேற்கொள்ளவும். றாஜீவ் - ஆனைக்கோட்டைச் சந்தி, றஞ்சித் - 517, ஸ்ரான்லி றோட், தாரகை - முதலாம் கட்டை பருத்தித்துறை, ஸ்ரீராம் - பருத்தித்துறை பஸ் நிலையம், முன்பாக P.ரவி - சாவகச்சேரி, ராதா - மாவடி வட்டுக்கோட்டை, கௌரி ஸ்ரோர்ஸ் - பிரதான வீதி, பண்டத்தரிப்பு. T.P.: 222 3529, 222 2867. (45367)

## தேவை

வடமராட்சியில் பிரதான வீதிக்கு அண்மையில் கடை அமைப்பதற்குரிய நிலம் தேவை. நிலம் விற்க விரும்புபவர்கள் 021 226 3325, 0777 515035 என்னும் தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்புகொள்ளவும். (45106)

## மணமகன் தேவை

யாழ். இந்து கௌரவ குடும்ப, 1982ஆம் ஆண்டு, 2இல் செவ்வாய், கேட்டை நட்சத்திரம், முதலாம் பாதம், 14½ கிரகபாவமுள்ள மணமகளுக்கு U.K. P.R உள்ள மணமகன் தேவை. தொடர்பு: M.ரவீந்திரன், துர்க்கை அம்மன் பின் வீதி, சாவகச்சேரி. (45044)

யாழ். இந்து கௌரவ குடும்ப, 1964ஆம் ஆண்டு, அச்சுவினி நட்சத்திரம் உள்ள மணமகளுக்கு உள்ளூரில் உத்தியோகம் உள்ள மணமகன் தேவை. தொடர்பு: M.ரவீந்திரன், துர்க்கை அம்மன் பின் வீதி, சாவகச்சேரி. (45045)

யாழ். இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த, 1970-01-24இல் பிறந்த 7இல் செவ்வாய் உள்ள மணமகளுக்கு அரச, தனியார் ஊழியர்கள், அல்லது வெளிநாட்டு மணமகன் உடன் தேவை. தொடர்பு: விளம்பர இல. 2585 மே/பா உதயன் யாழ்ப்பாணம். (45279)

## மணமகள் தேவை

யாழ். இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த, B.com பட்டதாரி (வேலை செய்து கொண்டு இருக்கும்) சாட்டற் இரண்டாவது வருடம் படிக்கும், HNDA படித்த 1975ஆம் ஆண்டு மணமகனுக்கு லண்டன், சுவிஸில் மணமகளை வெளிநாட்டில் உள்ள சகோதரர்கள் எதிர்பார்க்கிறார்கள் (நட்சத்திரம் - கார்த்திகை - இடபம்) 7இல் செவ்வாய், பாவம் - 28 தொடர்பு: 158/2, நாவலர் றோட், யாழ்ப்பாணம். (45336)

## மணமக்கள் தேவை

இந்து கௌரவ குடும்பம், சிறந்த சீதனமுடைய மணமகளுக்கு 37-46 வயதிற்கிடைப்பட்ட இலங்கை வதிவிட மணமகனும் இங்கிலாந்து பிரஜையான, இங்கிலாந்து பட்டதாரியான தம்பியாருக்கு 28-36 வயதிற்கிடைப்பட்ட மணமகளும் தேவை. மாற்றுச் சம்பந்தத்திற்கும் இடமுண்டு. விவரத்துடன் தொடர்பு கொள்ளவும். தரகுப் பணம் வழங்கப்படும். விளம்பர இல. 2588 மே/பா உதயன். (45305)

1975இல் பிறந்த கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த, வெளிநாட்டில் பொறியியலாளராகப் பணிபுரியும் மணமகனுக்கு பட்டதாரி தகைமையுள்ள ஏற்ற மணமகள் தேவை. தொடர்புக்கு: விளம்பர இல.2583 மே/பா உதயன், யாழ்ப்பாணம்.(45127)

இந்து, கிறிஸ்தவ வர்த்தகர், சுயதொழில் புரிபவர், அரச உயர்பதவி வகிப்பவர், சட்டத்தரணி, இலங்கை நிர்வாக சேவை, டாக்டர், எஞ்சினியர், எக்கவுண்டர், ஆசிரியர், விரிவுரையாளர், வெளிநாடு, விதவை, தாரமிழந்தவர், விவாகரத்துப் பெற்றவர், ஆகிய மணமக்கள் எம்மிடம் உள்ளனர். தொடர்புகளுக்கு: சிவாலயா சர்வதேச திருமண நிலையம், 68/15, சட்டநாதர் வீதி, நல்லூர். T.P.: 021 222 7844. (45381)

## வாடகைக்கு

மணித்தியாலம் மற்றும் நாளாந்த வாடகைக்கு இருபாலருக்கும் மோட்டார் சைக்கிள், மோட்டார்கார் வாடகைக்கு வழங்கப்படும். அத்துடன் குளிரூட்டப்பட்ட திருமணக்காரும் பெற்றுக் கொள்ளலாம். தொடர்பு 360/10, பிரதான வீதி (பஸ்தியன் சந்திக்கு அருகில்), யாழ்ப்பாணம். 0777-593722, 0776 - 991899 (45345)

கச்சேரிக்கு சமீபமாக நாவலர் வீதியில் 2000 சதுர அடிக்கு மேற்பட்ட விஸ்தீரணமுடைய வீடு சகல வசதியுடன் வாடகைக்குண்டு (NGO விரும்பத்தக்கது) தொடர்பு: T.P.: 0776 510537 (45377)

## வாடகைக்குத் தேவை

மருத்துவபீட மாணவர்களுக்கு 5 அறைகளைக் கொண்ட அடிப்படை வசதிகளடங்கிய வீடு ஒன்று மருத்துவபீட வளாகத்திற்கு அல்லது யாழ்வைத்தியசாலைக்கு அருகில் வாடகைக்குத் தேவையாக உள்ளது. தொடர்பு: 0777 917725, 0777 252171, 021 2222073. (45332)

## தவறிவிட்டது

நல்லூருக்கும் சாவகச்சேரிக்கும் இடையில (A-9) வீதியில் திருமண வீடியோ கசற் அடங்கிய பை ஒன்று தவறிவிட்டது. இதனைக் கண்டெடுத்தவர்கள் 0776047463 எனும் தொலைபேசி இலக்கத்துடனோ அல்லது இராஜேஸ்வரி பல்பொருள் வாணிபம், பஸ்நிலையம், சாவகச்சேரி எனும் முகவரியுடனே தொடர்புகொள்ளவும். (45369)

## திருமண சேவை

எம்மிடம் உள்நாட்டு, வெளிநாட்டு அரச, தனியார் நிறுவனங்களில் பணிபுரியும் இந்து, கிறிஸ்தவ மணமக்களின் ஜாதகங்கள் உண்டு. தொடர்பு: கல்யாண வேலன் சர்வதேச திருமண சேவை, இல.72, கச்சேரி நல்லூர் வீதி, யாழ்ப்பாணம். (45334)

புகைப்படங்கள் இணைக்கப்பட்ட விவரங்கள் வழங்கப்பட்ட ஐந்தைந்து வயது அடிப்படையில வகுத்து பிரித்தெடுக்கப்பட்ட நூற்றுக்கணக்கான கடிதக் கோப்புகளிலிருந்து 'சுயதெரிவு முறையில்' விரும்பும் நாட்டிலிருந்து மணமகனையோ, மணமகளையோ சுயமாகத் தெரிவு செய்யும் வாய்ப்பு வசதியுண்டு! தெரிவு செய்யப்பட்டவை சோதிடரீதியாகப் பொருத்தமுடையனவா? அல்லவா என்பதையும் நீங்கள் நொடிப் பொழுதில் தெரிந்து கொள்ளலாம்! மேலதிக விவரங்களைச் செவ்வாய், அரசு பொது விடுமுறை நாள்கள் தவிர்ந்த கிழமை நாள்களில் மாலை 4.30 மணி முதல் இரவு 8.30 மணி வரையிலான நேர காலத்துள் மாத்திரம் திருமணப் பொருத்துநர் வேல்அமுதன் அவர்களிடம் விசாரித்தறிக! வேல் அமுதனின் நேரடிக் கொழும்பு தொலைபேசி இலக்கங்கள் 2360488, 4514396. (சி-42797)

இந்து கௌரவ குடும்பதைச் சேர்ந்த, 1970 MBBS Doctor, 1975 Electronic Engineer, 1975 Civil Engineer, 1973 B.A. Teacher 1974 கல்வியியற் கல்லூரி ஆசிரியர், 1954 அரச உத்தியோகத்தர் ஆகிய மணமகன்களுக்கு அழகிய மணப்பெண்கள் தேவை. வெளிநாட்டு மணமகன்களின் ஜாதகங்களும் இருக்கின்றன. தொடர்பு: கிருஷ்ணர் திருமண சேவை, செங்குந்தவீதி, திருநெல்வேலி கிழக்கு. (45371)

## தேவை

மருத்துவ புத்தக விற்பனை நிலையத்திற்கு ஆங்கில அறிவும் அனுபவமும் உடைய பெண் விற்பனையாளர் தேவை. யாழ். மாநகர சபை எல்லைக்குள் வசிப்பவர் விரும்பத்தக்கது. தபால் மூலம் மட்டும் விண்ணப்பிக்கவும்.

பொ.சிவதாசன்
107, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.
(45371) (21-16)

## தேவை

மருந்தகத்திற்கு (Pharmacy) அனுபவமுள்ள பெண் மருந்தாளர் தேவை. மருத்துவ சான்றிதழுடன் மாநகர சபை எல்லைக்கள் வசிப்பவர் விரும்பத்தக்கது. தபால் மூலம் மட்டும் தொடர்பு கொள்ளவும்.

பொ.சிவதாசன்
107, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.
(45338) (21-16)

**வாழ்க்கையாளர்களே...**

பாஸ்போட், அடையாள அட்டை படங்களை (Colour/B/W) உடனுக்குடன் (5-15 நிமிடங்களில்) மேலதிக கட்டணமின்றி படம்பிடித்து பிரதியாக்கம் செய்து தருகின்றோம்.



**மூர்த்தி ஸ்ரூடியோ அன் டிஜிரல் கலர் லாப்**

42/14, ஸ்ரான்லி வீதி. (பழைய தபால் கந்தோர் ஒழுங்கை) யாழ்ப்பாணம். 0714168475

யாழ். வீதி. மானிப்பாய். T.P: 021-222 2884

E.mail: moorthylazer@yahoo.com

(C-42566) (54-15)

## கலந்துரையாடல்

யாழ்ப்பாணம்,மே15

யாழ்.மாவட்ட தொண்டர் ஆசிரியர் சங்க விசேட கலந்துரையாடல் ஒன்று நாளை திங்கட்கிழமை காலை 9 மணிக்கு யாழ். ஆரியகுளம் சந்தியிலுள்ள புதிய உயர் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

நிரந்தர நியமனம் கிடைத்த ஆசிரியர்கள், நிரந்தர நியமனம் கிடைக்காத ஆசிரியர்கள், தொண்டர் ஆசிரியர்கள் அனைவரையும் கலந்துகொள்ளுமாறு சங்கச் செயலாளர் கேட்டுள்ளார். (த-203)

## பாஷையூர் மீன்சந்தையை புனரமைக்கக் கோரிக்கை

கொழும்புத்துறை,மே15

கடந்தகால போர் அனர்தங்களால் பாதிக்கப்பட்ட பாஷையூர் மீன்சந்தையைப் புனரமைத்து வியாபார நடவடிக்கைகளுக்கு ஒத்துழைப்பு வழங்குமாறு பாஷையூர் கடற்றொழிலாளர் சங்கம் நாடாளுமன்ற உறுப்பினர் ஜி.கஜேந்திரகுமாரிடம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

தற்போது பாதுகாப்பு வலயத்தினுள் மட்டுப்படுத்தப்பட்ட பாவனையில் உள்ள இந்த மீன்சந்தையை எவ்வித கட்டுப்பாடு மின்றி பயன்படுத்தவும் நவீன வசதிகள் கொண்ட மீன்சந்தையாகப் புனரமைத்து பயன்படுத்தவும் உதவுமாறு அந்த வேண்டுகோளில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (த-30)

## இலவச இளைஞர்களுக்கான பயிற்சி

சர்வதேச வாழும் கலை அறநிறுவனம், இந்து கலாசார அமைச்சின் அனுசரணையுடன் அளிக்கிறது. 18 வயது முதல் 30 வயதிற்குட்பட்ட ஆண், பெண் இருபாலருக்கும் 18.05.2005 ஆம் திகதி முதல் 24.05.2005 வரை... 7 நாள்களுக்கு 7.30 மணிமுதல் மாலை 6 மணிவரை ... இலவச உணவுடன் குறைந்த இடமே உள்ளதால் இலவச அனுமதிச் சிட்டுப்பெற்றுக்கொள்ள உடன் கீழ்க்கண்ட இடங்களில் தொடர்புகொள்ளவும்.

பதிவு செய்யும் நேரமும் இடமும்
காலை 10 மணிமுதல் மாலை 4 மணிவரை

நாவலர் மணிமண்டபம், (கந்தசுவாமி கோயில் எதிரில்) யாழ்ப்பாணம் ☎ 222 3893

இந்து சமயப்பேரவை, பலாலி வீதி, கந்தர்மடம். தொ.பே.இல.222 6048

இந்த அரிய வாய்ப்பைத் தவறவிடாதீர்கள்

## விற்பனைக்கு

சகல வகையான கையடக்கத் தொலைபேசிகளும் அதற்கான உதிரிப்பாகங்களும் விற்பனைக்குண்டு. உங்கள் சொந்தப் பெயர்களுக்கு சிம் காட்டும் வழங்கப்படும். பழுது பார்த்துத் திருத்தும் சேவையும் உண்டு.

**யாழ்.போன்சொப்**
10, நவீனசந்தை மேல்மாடி, ஆஸ்பத்திரி வீதி, (திறீஸ்டார் ஹோட்டலுக்கு முன்பாக), யாழ்ப்பாணம். (சி-42495)

## இலவச அறிமுக உரை

**வாழும் கலை பயிற்சி - பாகம் I**

ஸ்ரீ ஸ்ரீ ரவிசங்கர்ஜியின் ஜெயந்தி விழாவை முன்னிட்டு சர்வதேச வாழும்கலை அறநிறுவனம் நடத்தும்

இடம்: இந்துசமயப்பேரவை, பலாலி வீதி, கந்தர்மடம், தொ.பேசி இல:222 6048

நாள்: 15.05.2005 ஞாயிறு மாலை 6 மணி அல்லது 16.05.2005 திங்கள் மாலை 6 மணிக்கு...(புதியநேரம்)

பயிற்சி நாள்கள்: 17.05.2005 செவ்வாய் முதல் 22.05.2005 ஞாயிறு வரை

(45384)

**அனைவரும் வருக!**

## தேவை

மருத்துவ நிலையத்திற்கு பகுதி நேர அடிப்படையில் பணிபுரியக்கூடிய மருத்துவ ஆய்வுகூட பரிசோதகர் (M.L.T) தேவை. சான்றிதழுடன் கூடியவர் விரும்பத்தக்கது.

பொ.சிவதாசன்
107, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.
T.P. 0714200141
(45337) (21-16)

அன்பர்கள், நண்பர்கள், ஆதரவாளர்களுக்கு

## ஒரு மகிழ்ச்சி தரும் செய்தி!

சிவகுரு வாணிபத்தின் கவர்ச்சிகரமான விலைகளில், பலவர்ணங்களில் இன்றே நாடுங்கள்!

பரந்தன் TVS நிறுவனத்தின் ஏகமுகவர்களான சிவகுரு வாணிபத்திடம்

GLX– 1,18000/= தொடக்கம்

ஸ்கூட்டிப் பெப் – 81900/=




தொடர்பு: **சிவகுரு வாணிபம்**

A-9 வீதி, பரந்தன். T.P.: 021 228 5072

(C-42800) (53)

உடனடி வெற்றிடம்

**MEDICAL REPRESENTATIVE**

மருத்துவப் பிரதிநிதி ஆண்/பெண்

EDNA GROUP

குழந்தைகளுக்கானபால்மா S.M.A,S.M.A Gold மருத்துவர்களிடையே, தாதியர்களிடையே Promotions செய்ய மருத்துவப் பிரதிநிதிகள் தேவை.

**தகைமைகள்**

- க. பொ. த உயர்தரம் விஞ்ஞானப் பாடங்களில் சித்தி, சிறந்த வெளிப்படுத்தும் தன்மை.(Promotional / detailing) பட்டதாரிகள் B.Sc.
- ஆங்கிலத்தில் பேச்சுவன்மை
- பெண்கள் விரும்பத்தக்கது

(45373)(51-11-17)

Walk In Interview Monday 11.00 AM - 2.00 P.M

Jude Vaz P.E Wyeth

C/O JEGAN PHARMACY
462 B, Hospital Road, Jaffna

# கொலை வெறிகோரத்தாண்டவமாடிய குமுதினிப் படுகொலையின் 20ஆவது ஆண்டு இன்று

**குமுதினிப் படுகொலை நடைபெற்று இன்றுடன் இருபது வருடங்கள் பூர்த்தியடைகின்றன. அந்தப் படுகொலையின் கொடூரத்தைச் சித்திரிக்கின்றது இந்த ஆக்கம்.**

சுந்தர உலகின் சுகங்களை எல்லாம் சுக்கு நூறாக்கிய சுனாமியால்கூட இன்று எட்டி உதைத்திட முடியாமற்போன - மனமில்லாமற்போன - எம் இனிய தீவில் இருபது வருடங்களின முன்பே பெரும் சுனாமி சூறையாடிச் சென்றதை உலகம் அறியும்.

ஆயிரத்துத் தொளாயிரத்து எண்பத்தைந்து மே பதினைந்து (1985.05.15) நெடுந்தீவின் வரலாற்றில் வரித்து எழுதப்பட்ட நாளாகியது. ஆழ்கடல், நீளக்கடல், அலைமோதும் கடல், நெடுந்தீவின் கடல் எனத் தம் நாளாந்தக் கடன்களில் ஒன்றாய் கடற்பயணத்தையும் கருதும் எம்மவர் அன்றும் இனிய நினைவுகளுடனே ஏறினர் குமுதினியில்.

குழந்தைகள், பெரியவர்கள், தாய்மார், திணைக்கள உத்தியோகத்தர்கள் என சுமார் எழுபத்திரண்டுபேர் அன்றைய பயணத்தை ஆரம்பித்தனர். பரந்த கடல் வெளியைக் கடந்து அக்கம் பக்கமாய் அமைந்த தீவுகள் தலை உயர்த்தி வரவேற்கும் தூரமளவில் கொலை வெறியர் கூட்டம் குறுக்கிட்டுக் கொண்டது.

எழுபது வருடங்களுக்கு மேல் மனிதர்களையும் மாந்தர் பசி தீர்க்கும் பண்டங்களையும் கரைசேர்க்கும குமுதினியாள் இடையில் மறிக்கப்பட்டாள் வழிமறித்தவர்கள் தமக்கு வசதியாக எல்லோரையும் ஓர் அறைக்குள் (Compartment) அனுப்பினார்கள். பின் ஒவ்வொருவராக முன்பக்க அறைக்குள் (1st Compartment) வருமாறு அழைத்துக் கூரியதும், வலியதுமான ஆயுதங்களால் வெட்டியும், குத்தியும் தாக்கியதாக அனுபவித்தவர்கள் வேதனையுடன் பகிர்வர்.

### ஊருக்கு உரம் சேர்த்தோர் கூண்டோடு மாண்டனர்

பெரும் புயலால் மரங்கள் சாய்ந்தது போல் ஊருக்கு உரம் பல சேர்த்த உயிர்கள் சரிந்து வீழ்ந்தன. வீழ்ந்தவர்களும் வெறியருடன் சமராடி வீர சொர்க்கம் அடைந்தவர்களுமாக முப்பத்திரண்டுபேர் அன்றைய தினமே எம்மைப் பிரிந்தனர். தப்பியவர்களில் நால்வர் சிகிச்சை பயனளிக்காமல் பின் இறந்தனர். இவர்களுடன் மொத்தமாக முப்பத்தாறு பேர் பலியாகினர். தப்பியவர்களும் தப்பவைத்தவர்களும் எம்மவரின் வீர அடையாளங்களாவர். தமது சுய முயற்சிகளாலும் அயற்கிராம மக்களதும் போராளிகளதும் துரித முயற்சிகளாலும் ஏனையோர் காப்பாற்றப்பட்டனர்.

இனவாதப் பேய்களின் இருப்புக்களை இல்லாதொழிக்க இளைஞர்களை வீறுகொள்ள வைத்த வரலாற்றுத் தடங்களில் முதன்மையானது குமுதினிப் படுகொலை என்பது குறிப்பிடத்தக்கது. ஒரு சுமுக நிலையில் குடும்ப உறவுகளோடு இணைந்திருக்க வேண்டியவர்களெல்லாம் இல்லை என்பதை எண்ணிப்பார்க்கையில் இது எத்தனை கொடுமை என்பது புரியும்.

இக் கொலைகளைப் புரிய உதததரவிட்டதற்காக அப்போதைய பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் ரஞ்சன் விஜேரட்ணவை ஜனாதிபதி ஜே.ஆர். ஜெயவர்த்தனா பாராட்டியதாகவும் கூறுவர். வெட்டுவதும், கொத்துவதும், வேரோடு சாய்ப்பதுவும் இனவாத சக்திகளுக்கு இது புதியதல்ல. குமுதினியில் மட்டுமன்றிக் குருநகரிலும் இதே கொடுமை நிகழ்ந்தது.

### கவிஞர் பார்வையில் குமுதினிப் படுகொலை

இக்கொடுமைகளை எல்லாம் பல இலக்கிய வடிவங்கள் எடுத்தியம்பியுள்ளதை நாம் அறியலாம். கவிஞர் புதுவை இரத்தினதுரை அவர்கள் "குமுதினிப் படகில் யார் வெட்டினார்கள்.... குருநகர் கடலில் ஏன் கொத்தினார்கள்..,." என்றும்

கவிஞர் செல்வரத்தினம் தமது பதிவில்
... முட்களை வெட்ட ஏந்திய வாள்கள்
மலர்களை,
தளிர்களை,
பிஞ்சுகளை,
கனிய நின்ற தோப்புகளை
வெட்டி எறிந்த குமுதினிக் காட்டில்
எது பூக்கும்?
என கவிப்பதும் குறிப்பிடத்தக்கவையே.

பால் மணம் மாறாப் பாலகி உட்பட கர்ப்பிணித்தாய், வயோதிபர் என எந்த வேறுபாடுமின்றித் துன்பியலுள் துவண்டு போய் இன்றுடன் இருபது வருடங்கள் கடந்துவிட்டன. எனினும் ஒவ்வொரு குடும்பங்களிலும் அந்தப் பதிவுகள் நாளாந்தம் துயரங்களைப் பெருக்கிக் கொண்டேதான் இருக்கின்றன. இவற்றுக்குப் பரிகாரமாக யாராலும் எதையும் வழங்கிவிட முடிந்திடா.

அன்பும் ஆதரவும் தேவைப்படும்போது உதவியும் ஆறுதலும் நல்கி குடும்பம் சிறக்கத் தூணாக நின்றவர்கள் நெடுந்தீவின் கல்வி வளர்ச்சியில் சிறப்புக்காட்டிய ஆசிரியர்கள், மாணவர்கள் என வரலாற்றுத் தூண்கள் சாய்க்கப்பட்டன. ஏன்? எதற்காக? என்ற கேள்விகளுக்குப் பதில் 'தமிழராய் பிறந்தார்' என்பதே பதிலாகும்.

தமது நாளாந்தக் கடமையினதும், தேவைகளினதும் பொருட்டு புறப்பட்ட இப் 'பயங்கரவாதிகள்' தமது அபரக் கிரியைகளுக்கு ஆயத்தம் செய்தவர்களானார்கள். முறைப்படியான சமயச் சடங்குகள் இன்றி ஊரின் மயானங்கள் ஒரே நாளில் இத்தனை உடல்களை வரவேற்றது இதுவே முதற்றடவை.

### திருப்புமுனை

செல்லரித்துப்போன தேச கட்டுமானங்களில் நம்மவரின் இழப்புகள் நிலையானவை. இனவாத அரசுகளை ஆட்டங்காணவைத்த வரலாறுகளின் சுவடுகளில் ஒரு முக்கிய திருப்புமுனை ஈழவரலாற்றில் என்றும் ஈரம்காயாத வரிகளாய் நிலைத்து நிற்பது குமுதினிப் படுகொலை.

குமுதினியின் வயது எழுபதைத் தாண்டினாலும் இத்துன்பியல் இன்றுடன் இருபது ஆண்டுகளைக் கடந்து நிற்கிறது. துயரங்களைச சர்வதேசத்துடன் பகிர்ந்து கொள்ளும் ஒரு நாளாகவும் எமது வாழ்வியலின் தடங்களையும் தடைகளையும் உணர்ந்துகொள்ளும் ஒரு நாளாகவும் இன்றைய நாள் என்றும் திகழும். 'குமுதினி' என்றும் எங்கள் தாயாக எம்மைச் சுமந்தபடி தம் பணி தொடர்வாள் என்ற நம்பிக்கையுடன் மட்டும் எம்மவரின் கடல்வழிப் பயணம் தொடர்கின்றது. ★

**கோ.பத்மநாதன்**
**நெடுந்தீவு.**

## கடலம்மா

கடலம்மா நீயே சொல்
குமுதினி ஏன் நொந்து வந்தாள்?
எம்மவரின் அவலங்களைச்
சடலங்களாய்ச் சுமந்து கொண்டு
குமுதினி குருதி வடிய வந்தாள்
கடலம்மா கண்டாயோ?
கார்த்திகேசு என்னவானான்
எந்தக் கடலில் உடலூதிக் கிடந்தானோ?
ஓ..... சோழகக்காற்றே - நீ
வசம்மாறி வீசியிருந்தால்
குமுதினி வரமாட்டாள்
என்று நெடுந்தீவுக்குச்
சொல்லியிருப்பாய்
பாவம்,
மரணங்களின் செய்திகூடக்
கிட்டாத தொலைவில்
ஏக்கங்களையும் துக்கங்களையும்
கடலலைகளிடம் சொல்லிவிட்டுக்
காத்திருக்கும் மக்கள்
கடலம்மா நீ மடி
ஏனைத் தீவுகளை
அநாதரவாய்த் தனியே விட்டாய்?
கடலம்மா!
உன் நீள் பரப்பில்
அநாதரவாய் மரணித்த எம்மவரை
புதிய கல்லறைகளை எழுப்பி
'அநாதைக் கல்லறைகள்'
என நினைவூட்டு! ஆனால்,
இனிவரும் கல்லறைகள்
வெறும் இழப்புக்களின்
நினைவல்ல - எமது
இலட்சியங்களின் நினைவாகட்டும்.

நிலாந்தன்


அபூர்வமான மூலிகைகளின் ஒன்றிணைப்பு
பரிபூர்ணமான நோய் நிவாரணத்திற்கான வழி.

பரிசோதனை மூலம் நிரூபிக்கப்பட்டுள்ளது

Baraka®
பரகா

தற்பொழுது உங்கள் யாழ் நகரிலும்!

ஆயுர்வேத திணைகளத்தின் அனுமதி இலக்கம் 3/1/5/4/94/30

DIABsol
(Black Seed Oil)



இயற்கையாக நீரழிவு நோயிலிருந்து நிவாரணம் பெற வேண்டுமா?

Baraka கருஞ்சீரகத்தினால் தயாரிக்கப்பட்ட வில்லைகள் மருத்துவ ஆய்வுகளின் மூலம் நிரூபிக்கப்பட்ட 100% இயற்கையான கருஞ்சீரக எண்ணெய்யினால் தயாரிககப்பட்டு நீரிழிவு நோயிலிருந்து நிவாரணத்தை தருவதோடு உடலின் நோய் எதிர்ப்புச் சக்தியை அதிகரிக்கின்றது. ஏனைய ஆங்கில மருந்துகளுடன் உபயோகிக்கலாம்.

GarliCHOL
(Garlic)



இயற்கையாக கொலஸ்ட்ரோலின் அளவை கட்டுப்படுத்த வேண்டுமா?

Baraka வெள்ளைப்பூண்டு கருஞ்சீரக எண்ணெய் வில்லைகள் 100% இயற்கையாக வெள்ளைப்பூண்டு கருஞ்சீரக கூட்டமைப்பில் தயாரிக்கப்பட்டு உடலிலுள்ள மேலதிக கொலஸ்ரோல் அளவை கட்டெபடுத்துகின்றது.

CODseas
(Cod Liver Oil)



உடலை ஆரோக்கிய நிலையில் பேண வேண்டுமா?

கருஞ்சீரகத்துடன் கூடிய மீன் எண்ணெய் (Cod Liver Oil) வில்லைகள் உடலுக்கு தேவையான ஒமேகா-3 மூலகத்துடன், விற்றமின்கள், கனியுப்புக்கள் மற்றும் மேலதிக கல்சியத்தை வழங்கி, உடலை ஆரோக்கியமாக பேண உதவும் மேலும் தடிமன், இருமல் என்பவற்றை தவிர்த்து கண்பார்வை என்பு, பல் என்பவற்றின் தொழிற்பாட்டை அதிகரிக்கும்.

BeeVIT
(Bee Honey)



இயற்கை மூலிகைகளின் மூலம் உடலுக்கு தேவையான புரதங்கள், விற்றமின்கள், கனியுப்புக்களை பெற வேண்டுமா?

பிரபலமான இரு மூலிகைகளான கருஞ்சீரகம் மற்றும் தேன் என்பவற்றின் கூட்டமைப்பில் தயாரான Baraka கருஞ்சீரக தேன் வில்லைகள் நாளாந்தம் உடலுக்கு தேவையான ஆரோக்கிய சக்தியை வழங்குகின்றது. மேலும் உடலுக்கு தேவையான மேலதிக புரதங்கள்,விற்றமின்கள், கனியுப்புக்களை வழங்கி உடலின் நோயெதிர்ப்பு சக்தியை அதிகரித்து உடலை பாதுகாக்கின்றது.

100% இயற்கை மூலிகையினால் தயாரிக்கப்பட்டதினால் ஏனைய மருந்துகளுடன் பாவிக்க முடியும்.

HFAC

அனைத்து பரகா உற்பத்திகளையும் ஏகவிநியோகஸ்தர்களான WESCO PHARMACY JAFFNA இடம் பெற்றுக்கொள்ளலாம்.
Tel : 021 2223188



EXPO LANKA
EXPOLANKA PHARMACEUTICALS (PVT) LTD.
11A, Mile Post Avenue, Colombo - 03 Tel : 0112 676398/9
email. expopharma@expolanka.lk, www.barakaoil.com
Baraka
Your health partner in life


# 24 மணி நேர வைத்தியசேவையை மூளாய் வைத்தியசாலை வழங்குகிறது

யாழ்ப்பாணம்,மே15

அண்மையில் புனரமைப்புச் செய்யப்பட்ட மூளாய் கூட்டுறவு வைத்தியசாலையில் 24 மணிநேர சேவைகள் நடைபெற்று வருகின்றன.

இநத வைத்திய சாலையில் வெளி நோயாளர் பகுதி, உள்ளக நோயாளர் பகுதி, மகப்பேற்று வசதி என்பன 24 மணி நேரமும் இயஙகி வருகின்றன. விசேட சேவைகளாகக் கண் வைத்திய சேவை ஞாயிறு, புதன், வெள்ளி ஆகிய நாள்களில் மாலை 4.30 மணிக்கும் -

மகப்பேற்று வைத்திய நிபுணர் சேவை புதன்கிழமைகளில் மாலை 4.30 மணிக்கும் -

இருதய வைத்திய நிபுணர் சேவை வியாழக்கிழமைகளில் மாலை 4.30 மணிக்கும் - பற்சிகிச்சை வைத்திய சேவை சனிக்கிழமைகளில் மாலை 5 மணிக்கும் - நடைபெற்று வருகின்றன.

மக்களால் மக்களுக்காக உருவாக்கப்பட்ட இவ்வைத்திய சாலை குறைந்த கட்டணத்தில் தனது சேவையை வழங்கி வருகின்றது.

(3-203)


STUDY IN LONDON
September 2005 Intake
UNIVERSITY OF EAST LONDON
STUDY AT A TOP BRITISH UNIVERSITY
Undergraduate & Postgraduate

- Architecture
- Finance Money & Banking
- Art, Fashion & Design
- Electronic & Electrical Eng.
- Manufacturing System Eng.
- Internet Engineering
- Bio - Sciences
- Bio Medical Sciences
- E.Commerce
- Sports Sciences
- Business Studies
- PG Diploma Civil Engineering
- Accounting & Finance
- Media & Communication
- Software Engineering
- Computer Forensics
- Computer Networks
- LLM
- LLB

B.A. B.Sc. M.A. M.Sc M.B.A. MPhil / PhD
OVER 1000 COURSES AVAILABLE
Affordable Tuition / Free Consultation / No Charges / Visa Guidence
Immediate Offers Made to Genuine

For Appoinments Contact :
Mr. Loho Gunesekara - Lohos Group
Official Representative & Education Adviser
Tel No's : 0777-917929 / 0714-124446
E-mail : loho@dialogsl.net web : www: uel.ac.uk
Office : Lucky Plaza Building SH2, 6th Floor, St. Anthony's Mw., Colombo 03.
(Weekdays by appoinment only 8 a.m. - 2 p.m.)
தமிழ் தொடர்புகளுக்கு :- Call Doctor INDRANI - 2862376

STUDY IN LONDON
TVU LONDON
September 2005 Intake
Thames Valley University
Study At a Top British University
Undergraduate & Postgraduate

Hospitality & Fitness
- Hospitality Management
- International Hotel Mgt.
- Culinary Arts Mgt.
- Travel & Tourism Mgt.
- Airline & Airport Mgt.
- Sports Science & Medicine
- Sports Health & Fitness Mgt.
- Exercise & Sports Psychology

Music & Media
- Advertising
- Video Production & Film Studies
- Media Arts
- Advertising with Design
- Advrt. With New Media
- Journalism
- Advert. With Radio Broadcasting

Business & Management
- Law
- Computing
- Marketing
- H.R. Mgt.
- Accounting & Finance

Health & Human Sciences
- Nursing
- Psychology

BA BSc MA MSc MBA MPhil / PhD
Affordable Tuition / Free Consultation / No Charges / Visa Guidence

For Appointments Contact
Mr. Loho Gunasekera - Lohos Group
Official Representative & Education Adviser
Tel No's : 0777-917929 / 0714-124446
E-mail : loho@dialogsl.net web : www. tvu.ac.uk
Office: Lucky Plaza Building SH2, 6th Floor, St. Anthony's Mw., Colombo - 03.
(Weekdays by appointment only 8 a.m. - 2 p.m.)
தமிழ் தொடர்புகளுக்கு: Dr, INDRANI - T.P. 2862376

# சிவராம் கொலையில் எனக்குத் தொடர்பா? குரூர அரசியல் லாபம் தேடும் செயல் இது!

## இறுதி நேரத்தில் அவருடன் இருந்த ரவி குமுதேஷ் தெரிவிப்பு

கொழும்பு,மே 15

ஊடகவியலாளர் மாமனிதர் சிவராமின் கொலையுடன் தன்னை சம்பந்தப்படுத்திக் கதைப்பது குரூர அரசியல் லாபம் தேடும் செயல என அகில இலங்கை சுகாதார ஊழியர் கூட்டுத் தொழிற்சங்கத்தின் அமைப்பாளர் ரவி குமுதேஷ் தெரிவித்தார்.

ஊடகவியலாளர் சிவராம் கொலையுண்ட தினததன்று இறுதி நேரத்தில் அவருடன் இருந்தவர் ரவி குமுதேஷ், குசல பெரேரா, பிரசன்ன ரட்நாயக்க ஆகியோருமே அவர்களுடன் சேர்ந்து பம்பலப்பிட்டி ரெஸ்டூரண்டில் இருந்து வெளியேறி வந்தவர்களாவர்.

சிவராம் கடத்தப்பட்டு கொலை செய்யப்பட்ட விடயத்துடன் ரவி குமுதேஷைத் தொடர்புபடுத்தி சுகாதார ஊழியர் சங்கங்களிலுள்ள அவருக்கு எதிரான தரப்பினர் துண்டுபிரசுரங்களை வெளியிட்டு வந்தனர். இந்தப் பிரசுரங்களுக்கு விளக்கமளிக்கும் வகையில் ரவி குமுதேஷ் செய்தியாளர் மாநாடொன்றை நடத்தினார். அங்கு விளக்கமளித்த போது அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இதுபற்றி அவர் மேலும் கூறியதாவது:-

சிவராம் என்ற ஆழ்ந்த சிந்தனையுள்ள ஒரு பத்திரிகையாளனைக் கொலை செய்ததன் மூலம் கொலையாளிகள் தமது நோக்கம் நிறைவேறி விட்டது என நினைப்பது முட்டாள் தனம்.

நான் அவருடன் உரையாடிய போதெல்லாம் அவரை ஓர் ஆழ்ந்த சிந்தனையாளனாகவே கண்டிருக்கிறேன். அவருடன் எனக்கு இருந்த உறவைக் கொச்சைப்படுத்தும் வகையிலும், எம்மீது சேறுபூசும் வகையிலும் சில இனவாத சக்திகள் செயற்பட்டு வருகின்றன.

சிவராம் கடத்திச் செல்லப்பட்ட விடயத்தை உடனடியாகப் பொலீஸில் ஏன் முறையிடவில்லை எனச் சிலர் கேள்வி எழுப்புகின்றனர்.

நாம் ரெஸ்டூரண்டை விட்டு வெளியேறியதும் நான் சிவராமிடம் "ஓட்டோவில் செல்லவில்லையா?" - என்று கேட்டேன். அதற்கு "பஸகள் வெறுமையாகச் செல்கின்றன. எனவே, நான் பஸ்ஸில் செல்கிறேன்" என்றார் சிவராம். பின்னர் நான் ஓட்டோ ஒன்றில் எனது வீட்டிற்குச் சென்றுவிட்டேன்.

சிவராம் கடத்தப்பட்டு விட்டார் என்று கேள்வியுற்றதும் நான் முதலில் அதை நம்பவில்லை. பல மணித்தியாலங்கள் கழித்த பின்னரே அந்தச் செய்தி உண்மையானது என்பதை உணர்ந்தேன். பின்னர் நான் உடனடியாக பம்பலப்பிட்டி பொலீஸ் நிலையத்துக்குச் சென்று நடந்தவற்றைக் கூறினேன் - என்றார் அவர்.

(க)

## தென்னாசியாவுக்கான ஐ.பி.ஸி. சேவை விவரம்

ஐ.பி.ஸி. வானொலியின் ஒலிபரப்புத் தொடர்பாக அந்த வானொலி நிறுவனம் செய்திக் குறிப்பொன்றை வெளியிட்டுள்ளது.

அதன் விவரம் வருமாறு:-

எமது வானொலியின் தென்னாசிய நாடுகளுக்கான ஒலிபரப்புகள் தற்போது 41 மீற்றரில் 7315 **Khz** அலைவரிசையில் நாளாந்தம் இடம்பெறுகின்றன. தினமும் தென்னிலங்கை நேரம் காலை 6 மணி தொடக்கம் 7 மணி வரையும் இந்திய மற்றும் வன்னி நேரம் காலை 5.30 மணியிலிருந்து 6.30 மணிவரையும் எமது ஒலிபரப்புகள் இடம்பெறுகின்றன.

24 மணி நேரமும் எமது வானொலியை **www.ibctamil.co.uk** எனும் இணையத்தளத்திலும் கேட்கலாம்.

எமது நிகழ்ச்சிகள் தொடர்பான தங்களது கருத்துக்களையும் விமர்சனங்களையும் தபால் மூலமாகவோ அன்றி மின்னஞ்சல் ஊடாகவோ அனுப்பி வைக்கலாம்.

எமது தபால் முகவரி: **IBC TAMIL, 3 College Fields, Prince Georges Road, Collierswood, London SW 19 2PT, United Kingdom.**

எமது மின்னஞ்சல் முகவரி: **ibcnews@hotmail.com** - என்றுள்ளது.


## இந்தியாவில் உயர்கல்வி வாய்ப்பு

**Muthayamal Educational Institutions**

RASIPURAM - 637 408. NAMAKKAL - (DT) TAMILNADU. www.muthayammal.com



இந்தியாவில் பிரபல்யமான முத்தயம்மாள் கல்வி நிறுவனமானது **ANNA (Engineering) UNIVERSITY - PERIYA UNIVERSITY** ஆகியவற்றின் பட்டதாரி **(Degree Courses)** நெறிகளை வழங்கி வருகிறது. இலங்கையில் **A/L** சித்தியுடைந்த மாணவர்கள் இக்கல்லூரியில் பின்வரும் நெறிகளில் சேர்ந்து உலகளாவியரீதியில் அங்கிகரீக்கப்பட்ட ஒரு பட்டதாரியாக வாய்ப்பு.

| பாடநெறி | காலாண்டுகள் | உட்பிரவேச தகமைகள் |
|---|---|---|
| B.E. Computer Science & Engineering | 4 Years | A/L Passes in Maths, Physics, Chemistry |
| B.E. Eletronics & Communication Engineering | 4 Years | A/L Passes in Maths, Physics, Chemistry |
| B.E. Electrical & Electronics Engineering | 4 Years | A/L Passes in Maths, Physics, Chemistry |
| B.E. Eletronics & Instrumentation Engineering | 4 Years | A/L Passes in Maths, Physics, Chemistry |
| B.E. Mechanical Engineering | 4 Years | A/L Passes in Maths, Physics, Chemistry |
| B.Tech Information Technology | 4 Years | A/L Passes in Maths, Physics, Chemistry |
| B.Sc. Computer Technology | 3 Years | A/L Passes in Maths, Physics, Chemistry |
| B.Sc. Infomation Technology | 3 Years | A/L Passes in Maths, Physics, Chemistry |
| B.Sc.Biochemistry | 3 Years | A/L Passes in Physics, Chemistry, Biology |
| B.Sc.Microbiology | 3 Years | A/L Passes in Physics, Chemistry, Biology |
| B.Sc. Biotechnology | 3 Years | A/L Passes in Physics, Chemistry, Biology |
| B.Sc. Bio-Informatics | 3 Years | A/L Passes in Physics, Chemistry,Maths |
| B.Sc. Maths | 3 Years | A/L Passes in Maths,Chemistry,Physics |
| B.Sc. Physics | 3 Years | A/L Passes in Maths, Physics |
| B.Sc. Electronics | 3 Years | A/L Passes in Physics, Chemistry,Maths |
| B.Sc. Chemistry | 3 Years | A/L Passes in Physics, Chemistry |
| B.Sc. Computer Science | 3 Years | Pass in All Subjects in any Discipline |
| Bachelor of Computer Applications (B.C.A) | 3 Years | Pass in All Subjects in any Discipline |
| B.Com. (CA) | 3 Years | Pass in All Subjects in any Discipline |
| Bachelor of Business Administration (B.B.A) | 3 Years | Pass in All Subjects in any Discipline |
| B.Com. | 3 Years | Pass in All Subjects in any Discipline |
| B.C.S. | 3 Years | Pass in All Subjects in any Discipline |

**O/L** மட்டும் சித்தியடைந்த மாணவர்கள் **Kaveri Polytechnical College**ல் சேர்ந்து 3 வருட **Diploma**வை பூர்த்தி செய்து, மேலும் 3 ஆண்டுகளில் **Engineer** ஆக வாய்ப்பு.

A/L 2005 மாணவர்கள் pending results முறையில் யூலை மாதத்திலே கல்லூரியில் சேர்ந்து பாடநெறியை தொடங்க வாய்ப்பு

**Call: 011-4512591** for prospectus and application forms

SCHOLARS INFORMATION CENTER
2nd Floor, Colombo Plaza, 50, Galle Road, Colombo-06.
email : peter@scholars-info.com



## தமிழீழ வைப்பகம்

## பணிநிலை வேண்டுகை

தமிழீழ வைப்பகத்தினால் கீழ்க்காட்டப்படும் பணிநிலைக்குத் தகுதியானவர்களிடமிருந்து வேண்டுகைகள் கோரப்படுகின்றன.

**பணிநிலை:** கணனி நிகழ்ச்சித் திட்டத் தயாரிப்பாளர்
Computer Programmer

**தகைமைகள்:** BIT கற்கைநெறி அல்லது அதனையொத்த கற்கை நெறியினைப் பூர்த்திசெய்தவராக இருத்தல் வேண்டும்.

அல்லது

ஏற்றுக்கொள்ளப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றில் கணனிக் கல்வியில் பொது / சிறப்புப் பட்டதாரியாக இருத்தல் வேண்டும்.

அல்லது

கணனி நிகழ்ச்சித்திட்டத் தயாரிப்புக் கற்கை நெறியில் டிப்ளோமா சான்றிதழும் இரண்டு (02)வருடப் பட்டறிவும் உடையவராக இருத்தல் வேண்டும்.

**ஊதியம்:** நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்


மேற்காட்டப்பட்ட பணிநிலைக்குத் தகுதியானவர்கள் தம்மால் தயாரிக்கப்பட்ட சுயவிளக்கங்களுடனும், கீழ்க்காட்டப்படும் ஆவணங்களுடனும் *யாழ்.சாலை, கரடிப்போக்கு, கிளிநொச்சியில்* அமைந்துள்ள தமிழீழ வைப்பக, நடுவப்பணியகத்திற்கு, 23.05.2005 ஆம் நாள் திங்கட்கிழமை காலை 10.00 மணிக்கு நேரில் வருகைதருமாறு வேண்டப்படுகின்றனர்.

01. கல்வித்தகைமையை உறுதிப்படுத்தும் சான்றிதழ்கள்
02. ஏனைய தகைமைகளையும், பட்டறிவையும் உறுதிப்படுத்தும் சான்றிதழ்கள்
03. ஆள்அடையாளத்தை உறுதிப்படுத்தும் ஆவணங்கள்
04. நற்சாட்சிப் பத்திரங்கள்
05. மாதிரி நிகழ்ச்சித்திட்டங்கள்

**மனிதவள மேலாளர்,**
மனிதவளப்பகுதி,
நடுவப்பணியகம்
தமிழீழ வைப்பகம்.

(சீ-42815)(42-11-14)





## 'யுனிசெவ்' 30 மலசல கூடங்களை அமைக்கும்

வலிகாமம் தெற்குபிரதேச செயலர் பிரிவில் 30 மலசல கூடங்களும், இரண்டு பொதுக்கிணறுகளும் அமைத்துக்கொடுக்க 'யுனிசெவ்' நிறுவனம் முன்வந்துள்ளது. இவற்றுக்குத் தகுதியான பயனாளிகளைத் தெரிவு செய்யும் பணிகள் கிராமசேவையாளர்களால் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. பெண்களைக் குடும்பத் தலைவராகக்கொண்டு, குடும்ப அங்கத்தவர்களை அதிகமாகக் கொண்டுள்ள வறுமைக்கோட்டின்கீழ் வாழும் குடும்பங்களை இனம்கண்டு, தெரிவு செய்து அவர்களுக்கே மலசல கூடங்களும், பொதுக்கிணறுகளும் அமைத்துக் கொடுக்கப்படவுள்ளன. (ஜ-152)


# முக்கிய அறிவித்தல்

**கிருஸ்ணா அடகு கடை**
370, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம்.
T. P: 222 5046
பதிவு இல. J/DS/BR/472

மேலே குறிப்பிட்ட எமது ஸ்தாபனத்தில் 2003 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் 31ஆம் திகதிக்கு (31.12.2003) முன்னர் அடகு வைத்து மீட்கப்படாதிருக்கும் அடகு நகைகள் யாவும் 2005 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 15 ஆம் திகதி (15.06.2005) விற்கப்படும் என்பதை எமது வாடிக்கையாளர்களுக்கு அறியத்தருகின்றோம்.

376, K. K. S. Road, Jaffna.

(45078) (54-15-34-46)

A.S. சுரேந்திரன்
உரிமையாளர்.


## தாதியர் தினம் அனுஷ்டிப்பு

யாழ்ப்பாணம்மே5 சர்வதேச தாதியர் தினம் யாழ்.போதனா வைத்தியசாலையில் நேற்றுமுன்தினம் சிறப்பாக அனுஷ்டிக்கப்பட்டது.

தாதியர் தினத்தை முன்னிட்டு யாழ்.போதனா வைத்தியசாலை தாதியர் பயிற்சிப் பாடசாலை மண்டபத்தில் இது தொடர்பான பல நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டன.

வைத்தியசாலை அனைத்து தாதியர்கள், தாதியமாணவர்கள் அனைவரும் இதில் பங்குகொண்டனர். விழாவின் இறுதியில் கலை நிகழ்ச்சிகளும் நடத்தப்பட்டன. (ஜ-15)

## குடியிருப்பாளர்களுக்கு விரைவில் காணி உறுதிகள்

கைதடி கிழக்கு இராசபுரிக் குடியேற்றத் திட்டத்தில் உள்ள குடியிருப்பாளர்களுக்கு விரைவில் காணி உறுதிகள் வழங்கப்படவுள்ளன. உறுதி வழங்குவது தொடர்பான காணிக் கச்சேரி அண்மையில் குடியேற்றத் திட்டத்தில் நடத்தப்பட்டது.

பிரதேச செயலர் செ.ஸ்ரீநிவாசன், உதவிக காணி ஆணையாளர் க.ஞானசேகரன், பிரதேச செயலக காணி அலுவலர், பிரிவு கிராம அலுவலர் ஆகியோர் இச் செயலணியில் கலந்துகொண்டனர். இக் குடியேற்றத்திட்டத்தில் 52 குடும்பங்கள் வசித்துவருகின்றன. (ஜ-117)


**திருமணக் கார் (குளிரூட்டியது) வாடகைக்கு**

★ திருமண வைபவங்கள் (அலங்காரத்துடன்)
★ விசேட வைபவங்கள் ★ சுற்றுலாக்கள்
போன்ற அனைத்துச் சேவைகளுக்கும்
புத்தம் புதிய [ஆங்கில இலக்கம் கொண்ட]
குளிரூட்டிய நவீன கார் சாரதியுடன்
நியாயமான செலவில் உயர்ந்த சேவையுடன்
வாடகைக்குக் கிடைக்கும்.



T.P.: 0777 - 903090, 077-3086939, 0777-246117, 077-6018467. (44881) (26-14-17)

தொடர்பு: ரஞ்சனம்,
சோமசுந்தரம் பாலர் பாடசாலை,
22, சோமசுந்தரம் அவனியூ,
சுண்டுக்குளி, யாழ்ப்பாணம்.



# ஏமாற வேண்டாம்

இதோ எமது புதிய உறைகள்



**ASTRA Sun**

போலிகளால் ஏமாறாதீர்கள்

அஸ்ட்ரா சண் நூல்களை வாங்கும் போது இப்புதிய அம்சங்களை அவதானியுங்கள்



கோட்ஸ் இலச்சினையுடன் ஹெலோகிறாம் ஸ்டிக்கர்

SKYLINE CONCEPTS

**வடக்கில் எமது ஏக விநியோகஸ்தர்**

வைரமாளிகை
இல.65, கண்டி வீதி, கிளிநொச்சி,
தொலைபேசி, தொலைநகல்: 021 2285882

நியு சொப்பிங் சென்ரர்
இல.131/g, K.K.S. றோட்,
யாழ்ப்பாணம்.

தரமான தையல் நூல்களுக்கு ASTRA Sun

COATS
கோட்ஸ் திரட் லங்கா,
163, யூனியன் பிளேஸ், கொழும்பு 2.
தொலைபேசி : 2307358



# றோயல் தங்கப் புதையல் போட்டி



ஒன்று... இரண்டு...மூன்று ஓட்டப்போட்டியா? இல்லை றோயல் குளுக்கோஸ் தங்கப் புதையல் போட்டியில் பங்குபற்றுவோருக்கு தலா ஒரு பவுண் வீதம் தங்க நாணயங்களை முதலாவது, 2ஆவது, 3ஆவது பரிசுகளாக குலுக்கல் முறையில் தேர்ந்தெடுக்கப்படும் அதிர்ஷ்டசாலிகளுக்கு வழங்கப்படவிருக்கிறது. நீங்கள் செய்யவேண்டியது இதுதான். றோயல் குளுக்கோஸ் (6) வெற்றுப்பெட்டிகளைச் சேகரியுங்கள். றோயல் குளுக்கோஸ் வாங்கும்போது பற்றுச்சீட்டினை நீங்கள் றோயல் குளுக்கோஸ் வாங்கும் வியாபாரியிடம் கேட்டு வாங்கத் தவறாதீர்கள். பின்பு 6 வெற்றுப் பெட்டிகளையும் பற்றுச்சீட்டினையும் இணைத்துப் பின்வரும் முகவரிக்கு அனுப்பிவையுங்கள் அல்லது நேரில் கையளியுங்கள்.

**றோயல் தங்கப் புதையல் போட்டி,**
**சிவா நறுமணப் பூங்கா,**
இல.288, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி: 222-2567

மேற்படி போட்டியில் 31.03.2005 முதல் 31.06.2005 வரை கொள்முதல் செய்யும் பற்றுச்சீட்டுக்கள் மட்டுமே செல்லுபடியாகும்.
றோயல் குளுக்கோஸ் புயல்வேகத்தில் உங்களுக்கு இழந்த சக்தியை மீட்டுத் தருகின்றது.

வட மாகாண ஏக விநியோகஸ்தர்கள்:
**சிவா நறுமணப் பூங்கா,**
288, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி இல:
222-2567




இறக்குமதி செய்து பொதி செய்வோர்
றோயல் இன்டஸ்ரீஸ்
கொழும்பு - 12
T.P.:- 0777- 277670,
011-4712439.

**றோயல் குளுக்கோஸ்**

பிரபல பார்மசிகளிலும்,
கடைகளிலும் கிடைக்கும்.

(C/42504) (54)



BOC

# இலங்கை வங்கி

## பகிரங்க ஏல விற்பனை பற்றிய அறிவித்தல்

இலங்கை வங்கியின் பின்வரும் கிளைகளில் 30-04-2004ஆம் திகதி வரை அடகு வைக்கப்பட்டு இதுவரை மீட்கப்படாத நகைகள் யாவும் ஆஸ்பத்திரி வீதியில் அமைந்துள்ள எமது யாழ்ப்பாணம் மேற்றரக் கிளையில் இம்மாதம் 28ஆம், 29ஆம் திகதிகளில் காலை 9.00மணி முதல் பகிரங்க ஏலத்தில் விடப்படும் என அறியத் தருகின்றோம்.

- ★ யாழ்ப்பாணம் மேற்றரக் கிளை
- ★ யாழ்.இரண்டாம் கிளை [ஸ்ரான்லி வீதி]
- ★ பருத்தித்துறை
- ★ மானிப்பாய்
- ★ சுன்னாகம்
- ★ திருநெல்வேலி

இந்த நகைகள் மீட்கப்படவேண்டிய கடைசித் திகதி 27-05-2005.

☞ அறிவித்தலின்றி ஏல விற்பனைத் திகதியை ஒத்திப்போடும் உரிமை வங்கிக்கு உள்ளது.

உதவிப் பொது முகாமையாளர்,
(வடபிராந்தியம்-யாழ்ப்பாணம்.)

15-05-2005 (C/42774)(46-15-34-46)



# 31ஆம் நாள் நினைவஞ்சலியும்

*வீட்டுக்கிருத்திய அழைப்பும்*

மண்ணகத்துள் 10 ※ 11 ※ 1925



விண்ணகத்துள் 14 ※ 04 ※ 2005

அமரர் **கந்தையா மார்க்கண்டு**

இன்று (15-05-2005) ஞாயிற்றுக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் தொடர்ந்து நிகழும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு எமது உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

பிள்ளையார் கோயிலடி,
வடலியடைப்பு,
பண்டத்தரிப்பு. (45253)(46-15-34)

**அருளானந்தம் குடும்பத்தினர்.**
(சகோதரன்)

## ஊடகவியலாளர் விபத்தில் மரணம்

சிங்கள வானொலி ஊடகவியலாளரான சஜித்ர சில்வா (வயது 28), அவர் பயணம் செய்த மோட்டார் சைக்கிள் ராஜகிரியவில் நேற்று முன்தினம் விபத்துக்குள்ளானதில் மரணமானார்.

ஒரு குழந்தையின் தந்தையான சஜித்ர சில்வா, சர்வதேச விவகாரம், வணிகம் ஆகிய துறைகளில் அதிக ஈடுபாடு கொண்டவர்.

இவர் 'லக்ஹண்ட', 'சிரச' வானொலிகளின் ஊடகவியலாளராகவும், செய்தியாசிரியராகவும் பணியாற்றியுள்ளார். (க-3)


## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

பிறப்பு 15 - 02 - 1976



இறப்பு 26 - 05 - 2004

அமரர் செல்லையா பரமேஸ்வரன்

(முன்னாள் தபாலக ஊழியர்)
திதி: வைகாசி பூர்வபக்க அட்டமி

ஓராண்டு நகர்ந்தாலும் உங்கள்
அழியாத நினைவுகள்
நாங்கள் வாழும் வரை என்றும்
எங்கள் மனங்களில் நிறைந்திருக்கும்.

தந்தை: மூ.செல்லையா,
தாய்: செ. மகேஸ்வரி,
மனைவி: ப.கஜீதா,
மகன்: ப.அபிராம்.

நிற்சாமம், சங்கானை. கருகம்பன், மந்திகை.
(45329)(26-11-14)


# பிரான்ஸ் செல்வதற்கான விசா வழங்கப் புதிய நடைமுறை

கொழும்பு,மே 15

பிரான்ஸ் நாட்டு விசாவுக்கு விண்ணப்பித்தோர் நாளை திங்கட்கிழமை முதல் விசாரணைக்கு அழைக்கப்படுவர் என கொழும்புக்கான அந்நாட்டு தூதரகம் அறிவித்துள்ளது.

பிரான்ஸ்நாட்டு விசா விண்ணப்ப நிலையம், 367 டிமெல் மாவத்தை (டுப்ளிகேஷன் வீதி), கொழும்பு - 03 இல் திறந்துவைக்கப்படவுள்ளது. இந்நிலையமே, பிரான்ஸ், ஸ்பெயின், போர்த்துக்கல் ஆகிய நாடுகளுக்கான குறுங்கால விசா தொடர்பான தகவல்களை வழங்கும்.

இந்நிலையம் வாரந்தோறும் திங்கள் முதல் வியாழன் வரை காலை 8.30 மணியிலிருந்து 2.30 மணிவரையும் திறந்திருக்கும். வெள்ளிக்கிழமைகளில் மதியம் 12 மணிவரையும் திறந்திருக்கும்.

விண்ணப்பப்படிவம் வழங்கல், தூதரகத்தில் சந்திப்பை ஏற்படுத்த ஒத்துழைத்தல், விசா முடிவுறும் தறுவாயில் திரும்பிவருவதற்கான கடவுச் சீட்டுடன் தொடர்பான விவரங்கள் என்பனவற்றை இந்நிலையமே மேற்கொள்ளும்.

மாலைதீவில் வசிக்கும் விண்ணப்பதாரிகள் 0094114 516321 எனும் தொலைபேசியில் தொடர்பு கொண்டு நேரம் ஒதுக்கிக்கொள்ளமுடியும்.

ஆயினும், ஐரோப்பிய நாட்டவர் இராஜதந்திர, உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொள்வோர் நீண்டகால விசாபெறும் மாணவர்கள், மீளச் சேரும் குடும்பத்தார்கள் என்போர் இந்த நிலையத்துடன் தொடர்கொள்ளத் தேவையில்லை.

அவர்கள் நேரடியாகவே தூதரகத்துடன் தொடர்புகொள்ளலாம் - இவ்வாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (க-த)


## STUDY IN U.K.

U.K. இல் கல்வி, உயர்கல்வியைத் தொடரவிரும்பும் அனைவருக்கும் சகல பாடநெறிகளுக்குமான

* CECOS, Gateway 2U.K, ஆகிய கல்லூரிகளுக்கும் Thames Valley University, University of East London ஆகிய பல்கலைக் கழகங்களுக்குமான Spot Admission வசதிகளுடன் நீங்கள் U.K. செல்வதற்கான அனுகூலங்கள் பற்றி U.K. பிரதிநிதியுடன் நேரில் கலந்து ஆலோசிப்பதற்கான வாய்ப்பு.

காலம்: 23.05.2005, 26.05.2005 காலை 9.00 மணி – பி.ப 1.00 மணி வரை

for Appointment and Details please Conform before 20.05.2005 at Colombo.

LONDON ENGLISH COLLEGE
105, Arasady Rd., Jaffna. T.P:222 5889 (45333)

O/L எடுத்தவர்களும் பங்குபற்றலாம்.
எதிர்வரும் 20.05.2005 அன்று தங்கள் வரவையும் இடத்தையும் உறுதிப்படுத்திக்கொள்ளவும்.


## வாழும் கலைப்பயிற்சி இலவச அறிமுக உரை

யாழ்ப்பாணம்,மே15

சர்வதேச வாழும் கலை அறநிறுவனம் நடத்தும் வாழும் கலைப்பயிற்சியின் இலவச அறிமுக உரை இன்றும் நாளையும் நடைபெற உள்ளது.

இன்றும் நாளையும் கந்தர்மடத்திலுள்ள இந்துசமயப் பேரவையில் மாலை 6 மணிக்கு இது நடைபெறவுள்ளது.

பயிற்சி நாளைமறுதினம் செவ்வாய்க்கிழமை தொடக்கம் எதிர்வரும் 22ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது. (த-202)

## ரணில் எழுதிய நூல் நாளை வெளியீடு

எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க எழுதிய "தேசபாலன சகா தர்மய" (அரசியலும் தர்மமும்) நூல் நாளை திங்கட்கிழமை மாலை 4 மணிக்கு வெளியிடப்படவுள்ளது.

நவீன உலகில் அரசியல் செயற்பாடுகளால் ஏற்பட்டுள்ள சிக்கல்களும் அவற்றிற்கான தீர்வுகளும் என்பது பற்றி புத்த தர்மம் என்ன கூறுகிறது என்பது தொடர்பாக இந்த நூலில் ரணில் வலியுறுத்தியுள்ளார் எனத் தெரிவிக்கப்பட்டது.

கொழும்பு கங்காராம விகாரையில் நடைபெறும் விழாவில் மேற்படி நூலை மாதுவ வேவே யோகிததேரர் வெளியிட்டு வைப்பார்.

## விவசாயப் பயிற்சி வகுப்பு நாளை

தென்மராட்சி,மே15

தொல்புரம் கமநல சேவை நிலைய எல்லைக்குட்பட்ட விவசாய சம்மேளனங்களின் பிரதிநிதிகளுக்கான பயிற்சி வகுப்பும் கலந்துரையாடலும் நாளை திங்கட்கிழமை காலை 9மணிக்குத் தொல்புரம் கமநல சேவைகள் நிலையத்தில் நடைபெறும்.

தென்னைப் பயிர்ச்செய்கை மற்றும் கால்நடை அபிவிருத்தி தொடர்பாக இப்பயிற்சி வகுப்புகள் நடத்தப்படும்.

பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தினரும் சம்பந்தப்பட்ட திணைக்கள உத்தியோகத்தர்களும் இப்பயிற்சி வகுப்பில் கலந்துகொள்வர்.

தொல்புரம் பிரிவு விவசாய சம்மேளனப் பிரதிநிதிகளை இப்பயிற்சி வகுப்பில் கலந்துகொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது. (3-117)

## மாவின் விலை மேலும் குறைப்பு

கொழும்பு,மே15

கோதுமை மா மாவின் விலை ஒரு ரூபாவால் குறைந்துள்ளது. புதிய விலைப்படி ஒரு கிலோ மாவின் விலை 22 ரூபா. இது உடனடியாக நடைமுறைக்கு வருகிறது என வர்த்தக, நுகர்வோர் விவகார அமைச்சர் ஜெயராஜ் பெர்னாண்டோ புள்ளே அறிவித்துள்ளார்.

இம்மாதம் மாவின்விலை ஒரு கிலோ ஒரு ரூபாவால் ஏற்கனவே குறைக்கப்பட்டு 23ரூபாவுக்கு விற்கப்பட்டது. அதிலிருந்து இன்னும் ஒரு ரூபா தற்போது குறைக்கப்பட்டுள்ளது. (க-3-13)


## சேரன் வாணிபம்

அன்றும் இன்றும் என்றும்
யாழ் மக்களின் மனதில்
நீங்காத இடம் பிடித்த
சேரன் வாணிபத்தின்
மற்றுமோர் ஆக்கம்
"சேரன் அரிசி மா"

சிறந்த தரம் ! குறைந்த விலை !!



இலகுவான செய்முறை

புதுமத் தொழில்நுட்ப முறையில் தூய்மையாக
ஆக்கப்பட்ட சேரன் அரிசி மாவை எங்கும்
மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம்.

மொத்த விலை - 33/50 சில்லறை விலை - 36/-

தொலைபேசி: 021-222 5874, 021-228 5770-71



## காணி விற்பனைக்கு

கொக்குவில் மேற்கு ஆனைக்கோட்டை வீதி.
அரசடி லேனில் நான்கு பரப்புக்காணி விற்பனைக்குண்டு.
தொடர்புகளுக்கு: து.தர்மானந்தசிவம்
மே/பா.நா.கனகராசா,
பொன்னையா லேன்,
கொக்குவில் மேற்கு, கொக்குவில்.
தெ.பேசி 077 6156029, 077 6261412
(45359)

## வான் விற்பனைக்கு

WP JO XXXX தொடர் இலக்கமுடைய (ISUZU) இசுசு புதிய எல்ப் 250 ரக வான் விற்பனைக்குண்டு.
தொடர்பு: 077 6354362.
(45342)

# விரத தினங்கள் தொடர்பாக பஞ்சாங்கங்களில் குழப்பம்

*இலங்கையில் வெளியிடப்படும் - இந்து மக்களுக் குரிய விரத தினங்களை அறிந்துகொள்ளக்கூடிய - வாக்கிய பஞ்சாங்கம், திருக்கணித பஞ்சாங்கம் ஆகிய இரண்டிலும் இவ்வாண்டுக்குரிய விரத தினங் கள் சில அமையும் தினங்களில் பாரிய வேறுபாடு காணப்படுகிறது. இந்து அமைப்புகள்மூலம் இதுபற்றி இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டுள்ளது.*

*குறிப்பாக 2005 - 2006ஆம் ஆண்டிற்காக வெளி யிடப்பட்டுள்ள இவ்விரு பஞ்சாங்கங்களிலும் திருக் கார்த்திகை விரதம், விநாயகர் விரதம், திருவெம்பாவை போன்ற முக்கிய விரத தினங்களில் ஏறத்தாழ ஒரு மாத கால வேறுபாடு காணப்படுகிறது. இதனால், இந்துமக்கள் இவ்விரத தினங்களைத் தீர்மானித்துக் கொள்வதில் பெரும் இடர்பாடுகளை எதிர்நோக்கு கின்றனர் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.*

*இவ்விவகாரம் தொடர்பான ஒரு பக்கக் கருத்து இங்கு பிரசுரமாகிறது. இக்கட்டுரையின் தொடரான இன்னொரு பகுதி பிறிதொரு தினத்தில் பிரசுரமாகும்.*

*இவ்விவகாரம் தொடர்பான முடிவு, இதுவிடயத் தில் விற்பன்னர்களாக உள்ளவர்களின் ஆய்வுக்கும் தீர்க்க மான பரிசீலனைக்கும் பின்னரே எடுக்கப்பட வேண்டும். இந்தக் கட்டுரையில் உள்ள கருத்துகளும் அத்தகைய முடிவுக்கான ஆய்வில் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்படக் கூடியவை என்பதால் அவற்றை இங்கு பிரசுரிக்கின்றோம். (ஆ-ர்)*

### பார்த்திப (2005 - 2006) வருட இரகுநாதைய வாக்கிய பஞ்சாங்கத்தில் கார்த்திகை விளக்கீட்டை ஐப்பசியில் குறித்திருப்பது சரியா?

இரகுநாதையர் வாக்கிய பஞ்சாங்கத்தைப் பின்பற்றி வெளி வந்த மெய்கண்டானிலும் ஏனைய கலண்டர்களிலும் மிக முக்கியமான விரத நாள்களில் பல பிழைகள் உள்ளன. விவரங்களை அட்டவணை ஒன்றில் காணலாம். இவற்றைத் திருத்துவதற்கு வசதியாக, மெய்கண்டான் வெளிவந்தவுடனே, ஏனைய கலண்டர்கள் அச்சிடப்பட்டுக்கொண்டிருக்கும் தரு ணத்தில் 03-11-2004 'உதயனில்' பிழைகள் சுட்டிக்காட்டப்பட் டன. இரகுநாதையர் வாக்கிய பஞ்சாங்க கணிதர் வெங்கடேச ஐயரைக் கொண்டு இப்பிழைகளைத் திருத்துவித்து கலண்டர் களைச் சரியாக அச்சிட வேண்டியது மெய்கண்டானினதும் ஏனைய நிறுவனங்களினதும் கடமை என்றும் எழுதியிருந்தேன். இந்நிறுவனங்கள், இதுபற்றி வெங்கடேச ஐயரிடம் கேட்கவில் லையா? ஏனெனில், இன்றுவரை கலண்டர்களில் பிழைகள் எவையும் திருத்தப்படவுமில்லை. பிழை திருத்தம் அறிவிக்கப் படவுமில்லை. எவ்வித பிழையும் இல்லை என்று வெங்கடேச ஐயர் ஆதாரத்துடன் நிரூபிக்கவுமில்லை. வெளிவந்துள்ள பார்த்திப வருட (2005-2006) இரகுநாதையர் வாக்கிய பஞ் சாங்கத்திலும் இப்பிழைகள் திருத்தப்படாதுள்ளன.

ஒரு மாதமளவில் பிழை! மிக முக்கியமான விரதங்களில் பிழை!!

### அட்டவணை - 1

**மெய்கண்டானிலும் இரகுநாதையர் வாக்கிய பஞ்சாங்கப்படி வெளிவரும் ஏனைய கலண்டர்களிலுமுள்ள விரத நாள் பிழைகள்**

| பிழையான விரத நாள்கள் | சரியான விரத நாள்கள் |
|---|---|
| *சங்கடகர சதுர்த்தி விரதம் – 27–05–2005 – வைகாசி 13* | 26-05-2005 - வைகாசி 12 |
| *ஆடிப்பூரம் – 07–08–2005 – ஆடி 22* | 08-08-2005 - ஆடி 23 |
| *சங்கடகர சதுர்த்தி விரதம் – 23–08–2005 – ஆவணி 07* | 22-08-2005 - ஆவணி 06 |
| *கார்த்திகை விரதம் – 19–10–2005 – ஐப்பசி 02* | 20-10-2005 - ஐப்பசி 03 |
| *சங்கடகர சதுர்த்தி விரதம் – 21–10–2005 – ஐப்பசி 04* | 20-10-2005 - ஐப்பசி 03 |
| *சர்வாலய தீபம் – 15–11–2005 – ஐப்பசி 29* | 15-12-2005 - கார்த்திகை 30 |
| *வீடுகளில் தீபம் – 15–11–2005 – ஐப்பசி 29* | 15-12-2005 - கார்த்திகை 30 |
| *குமராலய தீபம் – 16–11–2005 – கார்த்திகை 01* | 13-12-2005 - கார்த்திகை 28 |
| *திருக்கார்த்திகை விரதம் – 16–11–2005 – கார்த்திகை 01* | 13-12-2005 - கார்த்திகை 28 |
| *விநாயக விரதாரம்பம் – 16–11–2005 – கார்த்திகை 01* | 16-12-2005 - மார்கழி 01 |
| *விஷ்ணுவாலய தீபம் – 17–11–2005 – கார்த்திகை 02* | 14-12-2005 - கார்த்திகை 29 |
| *விநாயகஷஷ்டி விரதம் – 06–12–2005 – கார்த்திகை 21* | 05-01-2006 - மார்கழி 21 |
| *திருவெம்பாவை பூஜாரம்பம் – 08–12–2005 – கார்த்திகை 23* | 04-01-2006 - மார்கழி 20 |
| *உதயம் நடேசர் ஆர்த்திரா தரிசனம் – 17–12–2005 – மார்கழி 02* | 13-01-2006 - மார்கழி 29 |

இரகுநாதையர் வாக்கிய பஞ்சாங்கத்தில் ஆடிப்பூரம், கார்த் திகை விளக்கீடு, திருக்கார்த்திகை, விநாயக ஷஷ்டி, திரு வெம்பாவை போன்ற மிகமுக்கியமான விரத நாள்களில் பிழை கள் உள்ளன. கார்த்திகை விரதம், ஆடிப்பூரம், சங்கடகர சதுர்த்தி விரதம் ஆகியவற்றில் ஒரு நாள் பிழை உள்ளது. கார்த்திகை விளக்கீடு, திருக்கார்த்திகை விரதம், விநாயக ஷஷ்டி விரதம், திருவெம்பாவை ஆகியவை கிட்டத்தட்ட ஒரு மாதத்தால் பிழைக்கின்றன.

### கார்த்திகை விளக்கீட்டின் முக்கியத்துவம்

பழம்பெரும் நூல் காலப்பிரகாசிகையின் 240ஆம் பக்கத் தில் கார்த்திகை தீபம் ஏற்றுவது ஏன்? அதன் நற்பலன்கள் என்ன? என்பவற்றிக்குப் பதில் உள்ளது. அதனைக் கீழே பாருங்கள்:-

> Even if ast. Krithika does not co-exist with the Full-Moon, there should be illumination. The celebration of this festival, as ordained by the Sastras, bestows prosperity upon the king and the country; there will be no failure of rainfall and [illegible]demics. The people will live in health, happiness and contentment everywhere.

ஏன் கார்த்திகை தீபம் ஏற்றுகிறீர்கள்? அதன் முக்கியத்து வம் என்னவென்று தெரியுமா? சரியான நாளில் விரதம் அனுஷ் டித்தால்தான் இதில் சொல்லப்பட்டுள்ள நற்பலன்கள் உங் களுக்கு கிடைக்கும். ஒருசில விரதங்களைப் பிழையான நாளில் அனுஷ்டித்தால் அதன் பலன் கிடைக்காது. வேறுசில விர தங்களைப் பிழையான நாளில் அனுஷ்டித்தால், துற்பலன்களும் நிகழலாம்.

பிழையான நாளில் கார்த்திகை தீபம் ஏற்றுவதால் பின்வரும் துற்பலன்கள் நிகழும் என்று காலப்பிரகாசிகையின் 239ஆம் பக்கம் கூறுகிறது.

> THE KRITHIKA FESTIVAL.
>
> At sunset on the Full-Moon day ruled by asterism Krithika when the Moon is located in Taurus and the Sun in Scorpio, every house should be adorned with lighted lamps The Full-Moon is the fundamental significator of this festival whether the ruling asterism, at the time, be Bharani or Rohini. Any other time,(than the Full-Moon) for celebrating this festival will adversely affect the king and the country. The appropriate time for illumination is about sunset—when the Sun is on the sensible horizon.

'கார்த்திகை விளக்கீட்டுக்கு பிழையான நாளில் தீபம் ஏற்றுவது, நாட்டையும் அரசனையும் கடுமையாகப் பாதிக்கும்' - என்று காலப்பிகாசிகை கூறுகிறது. நீங்கள் பிழையான நாளில் கார்த்திகை விளக்கீட்டுக்குத் தீபம் ஏற்றலாமா? அவ்வாறு செய்வது உங்களை நீங்களே அழிப்பது போன்றதல்லவா?

கார்த்திகை மாதத்தில் வரவேண்டிய கார்த்திகை விளக்கீடு 1986இல் வெளிவந்த இரகுநாதையர் வாக்கிய பஞ்சாங்கத்தில் பிழையாக ஐப்பசி மாதத்தில் குறிப்பிடப்பட்டிருந்தது. இப்பிழை யான நாளில் கார்த்திகை விளக்கீட்டுக்குப் பலர் தீபம் ஏற்றினர். அதன் பின்னர் நிகழ்ந்த போர் பலரையும் பாதித்தது யாவரும் அறிந்ததே. இப்பிழையான நாளில் கார்த்திகை விளக்கீட்டுக்கு விளக்கு வைத்தவர்களில் பலருக்கு விளக்கு வைக்கப்பட்டது. இனிமேலும் கார்த்திகை விளக்கீட்டுப் பிழை தொடரலாமா? பார்த்திப (2005-2006) வருட இரகுநாதையர் வாக்கிய பஞ்சாங் கத்தில் கார்த்திகை விளக்கீட்டை ஐப்பசியில் குறிப்பிட்ட பிழை, கட்டாயமாகத் திருத்தப்பட வேண்டியது ஒன்றல்லவா?

### பிழைகளைத் திருத்திப் பஞ்சாங்கத்தை மீள் பதிப்பு செய்வதே உத்தமம்!

தாய்மண் வெளியீட்டகம் வாக்கிய பஞ்சாங்கப்படி வெளியிடும தமிழ்த்தாய் நாள்காட்டியிலும், மட்டுவிலில் வெளிவரும் திருக் கணித பஞ்சாங்கத்திலும் கார்த்திகை விளக்கீடு சரியான நாளில் கார்த்திகை மாத இறுதியில் குறிப்பிடப்பட்டுள்ளது. 2005இல் கார்த்திகை விளக்கீடு ஐப்பசியில் வருவது பிழை என்று அநேகமானவர்களுக்குத் தெரியும். பலருக்கும் பிழை என்று தெரிந்த நாளில் கார்த்திகை விளக்கீட்டுக்குத் தீபம் ஏற்றுவது இரகுநாதையர் வாக்கிய பஞ்சாங்க அபிமானிகளுக்கே கஷ்டமாக இருக்கும். இந்நிலையில், இரகுநாதையர் வாக்கிய பஞ்சாங்கத்தைப் பின்பற்றும் அந்தணர்களும் ஆலயங்களும் அப்பஞ்சாங்கத்தில் உள்ளவாறு, கார்த்திகை விளக்கீட்டை ஒரு மாதம் முன்னர் பிழையாக ஐப்பசியில் அனுஷ்டித்தால், மான பங்கம் ஏற்படலாம், சமயத் துரோகக் குற்றச்சாட்டுக்கு உள்ளாகலாம்.

இதனால், கார்த்திகை விளக்கீடு,..திருவெம்பாவை பிழை கள் திருத்தப்படாவிட்டால், இரகுநாதையர் வாக்கிய பஞ்சாங் கம் இலங்கையிலேயே நிராகரிக்கப்பட வேண்டிய நிலை ஏற்படலாம். இதனைத் தவிர்ப்பதற்கும், வாக்கிய பஞ்சாங்கத் தின் வருங்காலத்திற்காகவும், சகல பிழைகளையும் திருத்திப் பார்த்திப (2005-2006) வருட இரகுநாதையர் வாக்கிய பஞ்சாங் கத்தை மீள்பதிப்பு செய்வது சமயோசிதமானது. நிராகரிக்கப்பட விடுவதைவிட, பிழைகளைத் திருத்தி மீள் பதிப்பு செய்வது நல்லதல்லவா?

### கார்த்திகை விளக்கீட்டுப் பிழை திருத்தப்படாததால் இரகுநாதையர் வாக்கிய பஞ்சாங்கக் கலண்டர் கனடாவில் நிராகரிக்கப்பட்டது!

இங்கிலாந்தில், 2000ஆம் ஆண் டில், இரகுநாதையர் வாக்கிய பஞ்சாங்கத்தினர் லண்டன் நேரத் திற்கு கணித்த கலண்டரில் கிட்டத் தட்ட வருடம் முழுவதும் ராகு கால,...சுபநேர, விரத நாள் பிழை கள் இருந்தன. அவற்றைத் திருத்த மறுத்ததால், இரகுநாதை யர் வாக்கிய பஞ்சாங்கம் இங் கிலாந்தில் நிராகரிக்கப்பட்டது. 2005 இற்குரிய கனடா நேர இரகு நாதையர் வாக்கிய பஞ்சாங்க கலண்டரிலும் கார்த்திகை விளக் கீட்டை ஐப்பசியில் குறிப்பிட்ட பிழை இருந்தது. இதனைத் திருத்த மறுத்ததாலும், பெரிய கோவில் என்று கனடாவில் சொல்லப்படும் ரிச்மன்ஷில் இந்து ஆலயத்தில் அக்கலண்டர் நிராகரிக்கப்பட்டது. இதனால், பிழை என்று தெரிந்து கொண்டும், இரகுநாதையர் வாக் கிய பஞ்சாங்க கலண்டரை வெளியிட்ட கனடாவிலுள்ள ஒரு சில ஆலயங்களும் வெங்கடேச ஐயரது பஞ்சாங்கத்தை நிரா கரிக்க வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளன.

### மீள் பதிப்புச் செய்வது மிக அவசியம்

பார்த்திப (2005-2006) வருடப் பஞ்சாங்கத்தின் அநேகமான மாதங்களில் பிழைகள் உள்ளன. பிழைகளைத் திருத்துவதற்கு வசதியாக, முக்கியமான பிழைகளை ஆதாரங்களுடன் நிரூ பித்துள்ளேன். தமிழகத்து வாக்கிய, திருக்கணித பஞ்சாங் கங்களும், மட்டுவிலில் வெளிவரும் திருக்கணித பஞ்சாங்கமும் வெளிவந்துவிட்டன. தமிழகத்தில் வெளிவந்த அனைத்துப் பஞ்சாங்கங்களையும் 'உதயன்'இற்கு அனுப்பி வைத்துள்ளேன். இவற்றைப் பார்த்துப் படித்தும், விளக்கம் தேவையானவற்றிக்கு அப்பஞ்சாங்க கணிதர்களுடன் தொடர்புகொண்டு கேட்டும் பிழைகளைத் திருத்துவது மிகவும் சுலபம்.

### சரியான விரத நாள்களுக்கான ஆதாரம்

கார்த்திகை மாதத்தில் கார்த்திகை விளக்கீட்டுக்குரிய சரியான தினம் இருக்கும் போது, இதனை ஐப்பசியில் குறிப்பிடு வது பிழை என்று உங்களில் அநேகமானவர்களுக்குத் தெரியும. எனினும், இதனை ஆதாரத்துடன் நிரூபிக்க வேண்டும் அல்லவா?

இரகுநாதையர் வாக்கிய பஞ்சாங்கப்படி, கார்த்திகை 30ஆம் திகதி (டிசெம்பர் 15) முன்னிரவு 09 மணி 59 நிமிடம் வரை பூரணை திதி நிற்கிறது. அன்று சூரிய அஸ்தமனத்தின் பின் னர் சில மணி நேரம் பூரணை இருப்பதால் அன்றுதான் கார்த்திகை விளக்கீடு. அன்றே சர்வாலய தீபம், வீடுகளில் தீபம். இவை, இரகுநாதையர் வாக்கிய பஞ்சாங்கத்தைப் பின்பற்றி வெளி வந்த கலண்டர்களில் பிழையாக, ஒரு மாதம் முன்னர் ஐப்பசி 29இல் (நவம்பர் 15இல்) குறிப்பிடப்பட்டுள்ளன. இதன் பின்னர் ஆரம்பமாகும்

விநாயகஷஷ்டியும், திருவெம்பாவையும் கிட்டத்தட்ட ஒரு மாதம் பிழையாகக் குறிப்பிடப்பட்டுள்ளன. இப்பிழையை நிரூ பிக்க மேலதிக ஆதாரங்கள் இதோ:-

### ஆதாரம் 1 - தமிழக வாக்கிய பஞ்சாங்கங்கள்

தமிழகத்தில் கிட்டத்தட்ட 10 இற்கு மேற்பட்ட [illegible] பஞ்சாங்கங்கள் வெளிவருகின்றன. அவற்றில் பின்வரும் பஞ்சாங் கங்கள் வெளிவந்துவிட்டன.

1. பாம்பு பஞ்சாங்கம்
2. ஸ்ரீ ரங்கம் கோயில் வாக்கிய பஞ்சாங்கம்
3. சர்வ முகூர்த்த பஞ்சாங்கம் - கே. எஸ். குப்புசாமி கணித்தது
4. சர்வ முகூர்த்த பஞ்சாங்கம் - கே. என். நாராணயமூர்த்தி கணித்தது
5. திருநெல்வேலி வாக்கிய பஞ்சாங்கம்
6. கருடன் பஞ்சாங்கம்
7. திருக்கோயில் அனுஷ்டான வாக்கிய பஞ்சாங்கம்

அட்டவணை 1இல் உள்ள அநேகமான விரத நாள் பிழை களுக்கு இப்பஞ்சாங்கங்களில் ஆதாரம் உள்ளது. மிக முக்கிய விரதங்களாகிய ஆடிப்பூரம், சர்வாலய தீபம்,..திருவெம்பாவை ஆகியவை இரகுநாதையர் வாக்கிய பஞ்சாங்கத்தில் பிழை யாக இருப்பதை நிரூபிக்கும் ஆதாரமாக மேலேயுள்ள சகல பஞ்சாங்கங்களும் உள்ளன.

பாம்புப் பஞ்சாங்கம் மிகவும் பிரபல்யமானது, அநேகமானவர் களால் பாவிக்கப்படுவது, பெரும்பாலான கோயில்களில் பின்பற் றப்படுவது. இது, இலங்கை அந்தணப் பெரியோர்களுக்கும் நன்கு தெரியும். இரகுநாதையர் வாக்கிய பஞ்சாங்கத்தில் ஒகஸ்ட் 7 என்று பிழையாகவுள்ள ஆடிப்பூரம், பாம்புப் பஞ்சாங் கத்தில் ஒகஸ்ட் 8 என்று இருப்பதைக் கீழே பாருங்கள்.

| | | |
|---|---|---|
| 7 | 22 | ஞாயி - துவி 17-20, மக 10-58, பரி 54-10, சௌ 17-20, தி 32-44 (சிம்ம-சந் 4-58.) |
| 8 | 23 | திங்க - திரு 21-02, பூர 16-18, சிவ 54-20, கர 21-02, தி 35-36, ஸ்வர்ண கௌரி விரதம், கன்னி-சந் 32-33, திருவாடிப்பூரம். |
| 9 | 24 | செவ் - சதுர் 23-43, உத்ர 20-40, சித் 53-33, பத் 23-43, தி 42-47, சதுர்த்தி விரதம், நாக சதுர்த்தி. |
| 10 | 25 | புதன் - பஞ் 25-12, ஹஸ் 23-52, சாத் 51-50, பால 25-12, தி 44-32, கருட பஞ்சமி, நாக பஞ்சமி, துலா-சந் 54-52. |

டிசெம்பர் 13இல் திருவண்ணாமலை தீபம் என்றும், டிசெம் பர் 15இல் சர்வாலய தீபம் என்றும் பாம்புப் பஞ்சாங்கத்தில் இருப்பது கீழே உள்ளது. திருவண்ணாமலை தீபம் அன்றுதான் குமராலய தீபம், திருக்கார்த்திகை விரதம். இவை, இரகுநாதை யர் வாக்கிய பஞ்சாங்கத்தில் பிழையாக நவம்பர் 16இல் குறிப் பிடப்பட்டுள்ளன. சர்வாலய தீபத்தன்றே வீடுகளில் தீபம். இதுவும் இரகுநாதையர் வாக்கிய பஞ்சாங்கத்தில் பிழையாக நவம்பர் 15இல் குறிப்பிடப்பட்டுள்ளது.

| | | |
|---|---|---|
| 11 | 26 | ஞாயி - ஏகா 43-23, ரேவ 10-06, வரி 29-59, வணி 15-18, தி 58-33, ஸர்வ கைசிக ஏகாதசி, மேஷ-சந் 10-06. |
| 12 | 27 | திங்க - துவா 40-33, அசு 8-15, பரி 24-24, பவ 11-58, சௌ 2-33, தி 31-55, பரணி தீபம். |
| 13 | 28 | செவ் - திர 36-45, பர 7-27, சிவ 19-39, கௌ 9-39, தி 37-34, பிரதோஷம், கார்த்திகை விரதம், திருவண்ணாமலை தீபம், ரிஷப-சந் 22-31. |
| 14 | 29 | புதன் - சதுர் 38-10, -☆- கார் 7-42, சித் 15-46, கர 8-27, தி 48-43. |
| 15 | 30 | வியா - ○ - பௌ 38-55, ரோ 9-14, சாத் 12-54, பவ 8-32, தி 23-53, பௌர்ணமி விரதம், விருச்சிக சகல பௌர்ணமி திதி, வைகானஸ பாஞ்சராத்திர தீபம், ஸர்வாலய தீபம், மிதுன-சந் 40-39, தனுர் ரவி 59-08. |

திருவெம்பாவை பூர்த்தியாகிய ஆர்த்திரா தரிசனம் டிசெம் பர் 17 என்று இரகுநாதையர் வாக்கிய பஞ்சாங்கத்தில் குறிக் கப்பட்டிருப்பது பிழை என்பதற்குரிய பாம்புப் பஞ்சாங்க ஆதா ரம் கீழே உள்ளது.

| | | |
|---|---|---|
| 9 | 25 | திங்க - தச 18-52, பர 26-53, சாத் 33-46, கர 18-52, தி 56-54, கார்த்திகை விரதம், ஸ்ரவண மன்வாதி, ரிஷப-சந் 41-54. (ஏகாதசி.) |
| 10 | 26 | செவ் - ஏகா 17-12, -☆- கார் 26-55, சுப 29-36, பத் 17-12, சௌ 0-54, தி 0-0, வைகுண்ட |
| 11 | 27 | புதன் - துவா 16-44, ரோ 28-08, சுப் 26-24, பால 16-44, தி 7-43, 42-42, பிரதோஷம், கூடாரைவல்லி, கெர்ப்போட்ட நிவர்த்தி 10-45, மிதுன-சந் 59-22. |
| 12 | 28 | வியா - திர 17-36, மிரு 30-37, பிரா 24-12, தை 17-36, தி 52-54, இரவு நடராஜர் அபிஷேகம். |
| 13 | 29 | வெள் - சதுர் 19-44, திருவா 34-19, மாஹே 22-58, வணி 19-44, தி 0-0, சாப சகல பௌர்ணமி திதி, ஆருத்ரா தரிசனம், போகிப்பண்டிகை, திருவக்கரை வக்கிரகாளியம்மன் ஜோதி தரிசனம். |

### ஆதாரம் 2 - தமிழ்த்தாய் நாள்காட்டி

தாய்மண் வெளியீட்டகத்தினர் வாக்கிய பஞ்சாங்கப்படி வெளியிடும் வன்னி, ரொறண்ரோ, ஐரோப்பா, லண்டன் நேரத் தமிழ்தாய் நாள்காட்டியைக் கணித்து வருகிறேன். அட்டவணை 1இல் உள்ள இரகுநாதையர் வாக்கிய பஞ்சாங்க விரத நாள் பிழைகள் அனைத்தையும் நிரூபிப்பதற்குரிய ஆதாரங்கள் வன்னி நேர தமிழ்த்தாய் நாள்காட்டியில் உள்ளன.

### ஆதாரம் 3 - தமிழகத்து திருக்கணித பஞ்சாங்கங்கள்

தமிழகத்தில் ஐந்திற்கு மேற்பட்ட திருக்கணித பஞ்சாங்கங் கள் வெளிவருகின்றன. அவற்றில் பின்வரும் பஞ்சாங்கங்கள் வெளிவந்துவிட்டன.

1. கும்பகோண மடத்து பஞ்சாங்கம்
2. காஞ்சிபுர மடத்து பஞ்சாங்கம்
3. வாசன் பஞ்சாங்கம்
4. ஸ்ரீநிவாஸன் பஞ்சாங்கம்
5. இராச்சரிய பஞ்சாங்கம்

வாக்கிய பஞ்சாங்கங்கள் மாத்திரமல்ல, தமிழகத்து திருக் கணித பஞ்சாங்கங்களும் அட்டவணை 1இல் குறிப்பிட்டுள்ள அநேகமான பிழைகளை நிரூபிக்கும் ஆதாரமாக உள்ளன.

### ஆதாரம் 4 - யாழ். திருக்கணித பஞ்சாங்கம்

தமிழகத்து திருக்கணித பஞ்சாங்கங்கள் [illegible]ட்டுமல்ல, யாழ். நேரப்படி கணிக்கப்பட்டு மட்டுவிலில் வெளிவரும் திருக்கணித பஞ்சாங்கமும் வெளிவந்துவிட்டது. அதிலும், அட்டவணை 1இல உள்ள அநேகமான விரத நாள் பிழைகளை நிரூபிப்பதற்கு ஆதாரங்கள் உள்ளன.

### பிழைகளைத் திருத்த வேண்டியது காலத்தின் கட்டாயம்!

கடந்த சில வருடங்களாக வெளிவந்த இரகுநாதையர் வாக்கிய பஞ்சாங்கங்களில் பிழைகள் இருக்கின்றன. 2004இல் மஹா மகம், 2003இல் பூணூல் மாற்றும் தினம், 2003இல் 10 நாள்கள் வரவேண்டிய திருவெம்பாவையை 11 நாள்கள் என்று குறித்தது,... போன்ற விரத நாள் பிழைகளும், ராகு கால,..சுபநேரக் கணிப்புப் பிழைகளும், விவாக,...வீடு குடிபுகுதல சுபமுகூர்த்தப் பிழைகளும் இருந்தன. இவற்றைப் பல பத்திரிகை களிலும் பல கட்டுரைகளில் சுட்டிக் காட்டியிருந்தேன். தவறு என்று அநேகமானவர்களுக்குத் தெரிந்த, 10 நாள் வர வேண் டிய திருவெம்பாவையை 11 நாள் என்று குறித்த பிழைக்கு மட்டுமே திருத்தம் அறிவிக்கப்பட்டது.

பிழையான நாளில் கார்த்திகை விளக்கீட்டை அனுஷ்டித் தால் நாட்டையும், அரசனையும் பாதிக்கும் என்று காலப்பிர காசிகையில் கூறப்பட்டிருப்பதால், பிழையைத் திருத்துவது கௌரவப் பிரச்சினையுமல்ல, மானபங்கமுமல்ல. இது எமது நாட்டின் பிரச்சினை. தற்போதுள்ள சூழ்நிலையைக் கருத்தில் கொண்டு பிழையைத் திருத்த வேண்டியது காலத்தின் கட் டாயம். அட்டவணை 1இல் குறிப்பிட்டிருப்பவை பிழையில்லை என்று நிரூபிக்க முடியாதவர், பிழைகளைத் திருத்தாவிடில், அதற்குரிய நடவடிக்கை எடுக்க வேண்டியது, அதற்குரியவர் களது கடமை. மேலும் பல ஆதாரங்களுடன் அடுத்த கட்டுரை யில் விளக்கம் தருவேன்.

**கௌசிகர்**
தமிழ்த்தாய் நாள்காட்டி கணிப்பாளர்

## 3 ஆம் ஆண்டு ஈரவிழி நினைவுகள்...

மலர்வு
18 - 07 - 1961



உதிர்வு
20 - 05 - 2002

## அமரர் இரத்தினம் பாஸ்கரன்

எம் குடும்பத்துச் சூரியனே!
உன் ஒளியிழந்து தவிக்கும்
எம் வாழ்வில் உன் நினைவுகள் தானே
எம் வானத்துப் பௌர்ணமியே!
காலங்கள் தான் கரைந்தோடும்
உன் சிரிப்பின் விம்பம் மட்டும்
எம் ஈரவிழிக்குள்ளேயே...
உன் நினைவுகளும் சாதனைகளும்
என்றென்றும் உயிரோடு... எம் நெஞ்சினில்...!

"சாந்தமஹால்"
அண்ணாசிலையடி, கரணவாய்.

மனைவி, பிள்ளைகள்
குடும்பத்தினர்.
(45318)(50-14-15)


## மரவேலைப் பயிற்சிக்கு ஆள்கள் சேர்ப்பு

வலிகாமம் தெற்கு பிரதேச செயலர் பிரிவின் கீழ் இயங்கிவரும் மரவேலைப் பயிற்சிப் பாடசாலைக்குப் பயிற்சியாளர்கள் சேர்த்துக் கொள்ளப்பட உள்ளனர். மரவேலைப் பயிற்சிக்காலம் ஒரு வருடத்துக்குரியதாகும். பயிற்சிபெறும் பயிற்சியாளர்களுக்கு நாளொன்றுக்கு ஐம்பது ரூபா ஊக்குவிப்புப்படியாக வழங்கப்படும். அத்துடன் அவர்களின் உற்பத்தியின் இலாபத்தில் 80 சதவீதமும் அவர்களுக்கு வழங்கப்படும்.

18 தொடக்கம் 30 வயதுக்கிடைப்பட்டவர்கள் இப்பயிற்சி நெறியைப் பயிலவிரும்பினால் இம்மாதம் 25ஆம் திகதிக்கு முன் தமது விண்ணப்பங்களை வலிகாமம் தெற்குப் பிரதேச செயலருக்கு அனுப்பிவைக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-152)

## 25 பணியாளர்களுக்கு சேவைநலன் பாராட்டு

கடந்த காலங்களில் வலிகாமம் தெற்குப் பிரதேச செயலர் பிரிவில் கடமையாற்றி ஓய்வுபெற்ற மற்றும் வெவ்வேறு திணைக்களங்களுக்கு இடமாற்றம்பெற்றுச்சென்றுள்ள 25 அரச ஊழியர்களுக்கு பிரதேச செயலகத்தினரால் சேவை நலன் பாராட் டுவிழா நடத்தப்பட்டது.

வலிகாமம் தெற்கு பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் பிரதேச செயலர் எஸ். திருவாகரன் தலைமையில் விழா நடைபெற்றது. பிரதேச செயலக உதவித் திட்டமிடல் பணிப்பாளர் திருமதி இ.இரகுநாதன், கணக்காளர் ஏ.ஜே. எலிசன், நிர்வாக உத்தியோகத்தர் எஸ்.ஆர். ஜெயப்பிரகாசம், கிராம சேவையாளர் செ.வைத்தியநாதன் ஆகியோர் விழா நாயகர்களின் சேவைகளைப் பாராட்டி உரையாற்றினர். விழா நாயகர்களின் சேவை அடிப்படையில் ஒவ்வொருவருக்கும் பெறுமதி வாய்ந்த அன்பளிப்புகள் வழங்கப்பட்டன. (ஐ-152)

# கலைப்பீட அவைக்கு கல்வியாளர் தெரிவு

யாழ்ப்பாணம், மே 15

யாழ்.பல்கலைக்கழக கலைப்பீட அவைக்கு கல்வியாளர்கள் மூவர் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர்.

ஓய்வுபெற்ற அதிபரும், எழுத்தாளருமான சிற்பி சரவணபவன், புவியியல் பட்டதாரியும் பிரபல சட்டத்தரணியுமான மாணிக்கம் தியாகராஜா, கொக்குவில் கலாபவன இயக்குநர் திருமதி சாந்தினி சிவனேசன் ஆகியோரே இவ்வாறு தெரிவுதெரிவுசெய்யப்பட்டுள்ளார்.

யாழ். பல்கலைக்கழக கலைப்பீடத்தின் அவைக்கூட்டம் கடந்த புதன்கிழமை நடைபெற்றது என்றும் -

அன்றையதினம் தெரிவானவர்கள் 3 வருடகாலத்திற்கு பதவியில் இருப்பர் என்றும் - கலைப்பீடதிபதி பேராசிரியர் இரா.சிவச்சந்திரன் அறிவித்துள்ளார். (எ)


## இங்கிலாந்தில் உயர்கல்வியைத் தொடர ஓர் அரிய சந்தர்ப்பம்.

**Foundation Degree Programme**

GCE O/L தகைமையுடன் இங்கிலாந்தில் உயர்கல்வியைத் தொடர விரும்பும் மாணவர்கள் அதற்கான பல்கலைக்கழக அனுமதியினையும், Student Visa வினையும் இலகுவாகப் பெற்றுக் கொள்வதற்கு Foundation Degree Programme துணை புரிகின்றது.

GCE O/L → Foundation Degree Programme → UK Degree



COURSE LENGTH 3 Months (Full Time)

COURSE STRUCTURE

- Computing
  Introduction to IT, Windows XP - OS, MS-Office XP, Internet & E-mail Applications, Website development, Programming Languages, Graphic Designing, Hardware & Networking
- English Reading, Writing, Listening and Speaking.
- Personality Development

விபரங்களுக்கு:

LONDON INSTITUTE OF FURTHER EDUCATION
25A, Hospital Road, Dehiwela. Tel: 011 5518666, 0777 715788
Fax: 011 5515387 E-mail: edulife@sltnet.lk

யாழ்.நகரில் முன்னணிச் சேவையில்!

## "துஷா பல் மூக்குக் கண்ணாடியகம்"

- மிதப்புப் பற்களுக்கு இலகுமுறையில் கிளிப் பொருத்திச் சீர்செய்ய-
- சீனமுறையில் சங்குப் பற்களைக் கட்டிக்கொள்ள -
- பல்கட்டுதல், கிளிப் பொருத்துதல் போன்ற பல் சம்பந்தமான இலவச ஆலோசனைகளைப் பெற்றுக்கொள்ள -
- இலவசக் கண் பரிசோதனைசெய்து மூக்குக் கண்ணாடிகளை அதிநவீன பிறேம்களில் பொருத்திக்கொள்ள -
- FRAME LESS மூக்குக் கண்ணாடிகளை விரும்பிய நிறங்களில் பெற்றிட -
- சண்கிளாஸ், கூலிங் கிளாஸ் வகைகளைப் பெற்றுக்கொள்ள

(4-42755)(50-14-15)

## துஷா ஒப்ரிசன்ஸ்

544, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே. 021 - 222- 3461, 0777 150032.


## வலிமேற்குப் பகுதியில் சிறுதானியம் அறுவடை

வட்டுக்கோட்டை, மே15

வலிகாமம் மேற்குப் பகுதியில் உள்ள வயல் நிலங்களில் செய்கை பண்ணப்பட்ட சிறுதானியங்கள் அறுவடை செய்யப்பட்டு வருகின்றன.

வட்டுக்கோட்டை, அராலி, சங்கரத்தை, அரசடி, சுழிபுரம் ஆகிய பிரதேசங்களில் செய்கைபண்ணப்பட்ட எள்ளுச்செய்கை பெருவிளைச்சலைத் தந்துள்ளது.

கடந்த சில ஆண்டுகளில் செய்கை பண்ணப்பட்டு கிடைக்கப் பெற்ற அறுவடையிலும் பார்க்க இவ்வாண்டு சிறந்த விளைச்சல் கிடைத்துள்ளதாக விவசாயிகள் மகிழ்ச்சி தெரிவித்துள்ளனர். (ஐ-161)

## சாவகச்சேரி நகரசபை மைதானம் செப்பனிடப்படுகிறது

சாவகச்சேரி, மே15

சாவகச்சேரி நகரசபை பொது விளையாட்டு மைதானம் படையினரால் செப்பனிடப்பட்டு வருகிறது. மைதானத்தில் காணப்பட்ட புற்கள் வெட்டப்பட்டு அழிக்கப்பட்ட பின்னர் தற்போது கனரக புல்டோசர் வாகன உதவியுடன் மைதானம் சமப்படுத்தப்பட்டு செப்பனிடப்படுகிறது. (ஐ-31)


## G.C.E.A/L 2005

2005 A/L பரீட்சைக்குரிய பொது அறிவு, பொது ஆங்கிலம் வெளிவந்துவிட்டது!
(45265) (14-53-15) வெளியீடு: உயர்கல்விச்சேவை நிலையம்.
சகல புத்தக நிலையங்களிலும் பெற்றுக்கொள்ளலாம்.

## வீடு விற்பனைக்கு

உரும்பிராய் சந்தியிலிருந்து மானிப்பாய் வீதியில் யா/சந்திரோதயம் பாடசாலைக்கு முன்பாக உள்ள ஒழுங்கையில் 50 யார் தூரத்தில் 2 பரப்புக் காணியுடன் வீடு விற்பனைக்கு உண்டு, தொடர்பு இரவு 7 மணிக்குப்பின். லயன் கா.சற்குணதேவன், TCலேன், உரும்பிராய் கிழக்கு, உரும்பிராய். T.P: 222 5440
(C-42812)(53-14-15)

# மிக விரைவில் காங்கேசன் சீமெந்து வடக்கு , கிழக்கில் விநியோகஸ்தர்கள் தேவை




50 வருட அனுபவமும்

உயரிய தரமும்,குறைந்த விலையும் கொண்டது

தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி
தலைவர்:
இலங்கை சீமெந்து கூட்டுத்தாபனம்
130, டபிள்யூ ஏ டி ராமநாயக்க மாவத்தை,
கொழும்பு - 2
தொலைபேசி : 2440211, 2440212 -2440203
தொலைமடல் : 2448866

நாங்கள் ரெடி! நீங்கள் ரெடியா?

யாழ்.ரமணனின்

கடல் கடந்து இசைமழை பொழிந்து
மீண்டும் யாழ்.மண்ணில் கால் பதித்துள்ள

## ராஜன்ஸ் இசைக்குழுவினரின்

கலக்கல் இசைமழையில் நனைய நீங்கள் ரெடியா?
நாங்கள் ரெடிப்பா

தொடர்புகளுக்கு: யாழ்.ரமணன்,
242, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே: 077 6510 165

மினிமகாலிங்கம்
958/47, கே.கே.எஸ். வீதி,
நாச்சிமார்கோயிலடி, யாழ்ப்பாணம்.
தொ.பே.: 222 5237

எங்களுடன் இணைந்து கலக்க விரும்பும் பாடகர், பாடகிகள்,
தாராளமாகத் தொடர்புகொள்ளலாம்.
(45827)(50-14-16)

# நாஜிகளின் கோரப்பிடியிலிருந்து உலகம் மீட்டெடுக்கப்பட்ட வெற்றி நாள்

## உலக வலம்
மேனா

இரண்டாவது உலகமகா யுத்தம் முடிவடைந்து 60 ஆண்டுகள் பூர்த்தியடைந்ததை கடந்தவாரம் உலகம் கொண்டாடியது.

இலங்கை நாடு நேரடியாக உலகப்போரில் சம்பந்தப்பட்டிருக்கவில்லை என்றாலும், அந்தப் போர் நம் நாட்டவர்களையும் பலவழிகளில் தாக்காமல் விடவில்லை.

இலங்கை பிரிட்டிஷ் 'காலணி' நாடுகளில் ஒன்றாக இருந்தவகையில் பிரிட்டிஷ் படைகளின் பல அணிகள் இங்கே நிலைகொண்டிருந்தன. இங்கே பிரிட்டிஷ் ஆட்சியைத் தக்க



மொஸ்கோ செஞ்சதுக்கத்தில் உலகப் போர் வெற்றியைக் குறிக்கும் விதத்தில் நடைபெற்ற ரஷ்ய படைகளின் அணி வகுப்பு.

வைத்துக்கொள்ளும் பாதுகாப்பு நடவடிக்கையாக மட்டுமல்ல தென்கிழக்காசியாவில் தன் 'நாட்டாமையை' ஸ்திரப்படுத்திக் கொள்வதற்கும் தெற்காசியாவில் தன்து படை நகர்வுப் பணிகளுக்குக் கேந்திர நிலையில் உதவும் என்பதாலும் இங்கே பிரிட்டிஷ் படைகளின் நடமாட்டம் அதிகரித்திருந்தது. மேற்கே அரபுக் கடல் பிராந்தியத்தையும் கிழக்கே ஆஸ்திரேலியா வரையிலான கடற்பகுதியை இங்கிருந்து



நிதியமைச்சர் கோர்டன் பிரவுன் பிரதமர் பிளேயர்

கண்காணிக்க வசதியாகவிருந்தது.

### 1945இல் இலங்கையில்...

1945ஆம் ஆண்டளவில் உலகப் போர் முடியும தறுவாயில் போரின் தாக்கம் இலங்கை மக்களைப் பெரிதாகப் பாதித்திருந்தது. அரிசி விளையும் நாடுகளை யுத்தம் பாதித்திருந்ததால் இலங்கை மக்கள் கோதுமை அரிசியைப் பயன்படுத்தும்படி கேட்கப்பட்டிருந்தார்கள். அந்தக் காலத்தில் சிறுவர்களாய் இருந்து இன்று பெரியவர்களாய் உயிருடன் இருப்பவர்களுக்கு அந்தப் பஞ்சகாலத்தின் தாக்கம் இன்றும் நினைவிருக்கும்.

அரிசிக்குப்பதில் கோதுமையை மட்டுமல்ல வேறு குரக்கன், சோளன், கம்பு மொச்சை போன்ற பயிர்களையும் மக்கள் சாப்பிடப் பழகிக் கொண்டார்கள். மரவள்ளிக்கிழங்கின் அருமையும் பாகற்காயின் பெருமையும் அந்தக் காலத்தில்தான் நன்றாகப் புரிந்தது. அரிசி, கோதுமை மா விநியோகத்துக்கென கொண்டுவரப்பட்ட கூப்பன்முறைதான் இன்னமும் வெவ்வேறு முறையில் தொடர்கிறது.

போதாக்குறைக்கு கொழும்பு நகரிலும் திருகோணமலையிலும் ஜப்பானியரின் குண்டு வீச்சு இடம்பெற்றது. கொழும்பில் மிகநல்ல நிலையில் இருந்த பலபேர் அவ்விடங்களை விட்டு உள்ளூர்ப் பகுதிகளை நோக்கி ஓடிவிட்டார்கள். அந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக் கொண்டு கொள்ளையடிப்பதிலும், சூறையாடுவதிலும் ஈடுபட்ட அநேகர் பிற்காலத்தில் மிகப்பெரிய புள்ளிகளா விளங்கியதாகவும் பேச்சுக்கள் உண்டு.

யுத்தம் ஒன்று வந்தால் அநேகர் பாதிக்கப்பட்டு விடுகிறார்கள். ஒருசிலர் அதையே மூலதனமாகவும் பயன்படுத்திக் கொண்டு விடுகிறார்கள்.

இது வடக்கு - கிழக்கு மக்களுக்கு புதிய விடயமல்ல. பெரும் எடுப்பில் இடப்பெயர்வு இடம்பெற்ற காலத்தில் திடீர் பணக்காரர்களாகவும் ஊர்ப்பிரமுகர்களாகவும் மாறிவிட்டவர்கள் அநேகர் நம் மத்தியில்தானே இருக்கிறார்கள்.

இவ்வாறு உலக மகாயுத்தத்தின்போது உலகத்தை ஒரு கொடிய சர்வாதிகாரியின் பிடியிலிருந்து விடுவிப்பதற்காகப் பெரும் விலை கொடுத்த நாடு ஒன்று இருக்குமானால், அது ரஷ்யாதான். அப்போது சோவியத் ஒன்றியமாக அது இருந்தது. ஏறத்தாழ 2 கோடியே 70 லட்சம் சோவியத் மக்கள் அந்தப் போரில் பலியானார்கள்.

மொஸ்கோவில் இடம்பெற்ற இரண்டாவது உலக மகாயுத்த முடிவின் 60ஆவது நினைவு தின நிகழ்வில் 50 நாடுகளின் தலைவர்களும் போர்க்கால முதிய பிரமுகர்களும் கலந்து கொண்டார்கள். மொஸ்கோ செஞ்சதுக்கத்தில் நடைபெற்ற வெற்றி விழா நிகழ்வில் ஆயிரக்



பிரதமர் ரொனி பிளேயர் இங்கிலாந்தில் தமது சொந்த உள்ளூர் வாக்குச் சாவடியில் வாக்களிக்கச் செல்லுமுன் மனைவி செரி, மகன் எவான் (இடது), நிக்கி (வலது) ஆகியோர்களுடன் காணப்படுகின்றார்.

## அடையாளம் தெரியாத போர் வீரனுக்கு உலகத் தலைவர்கள் மொஸ்கோவில் அஞ்சலி

கணக்கான ரஷ்ய இராணுவ வீரர்களும் போர்கால முதிய பிரமுகர்களும் அணிவகுத்துச் சென்றார்கள். அணிவகுப்பின் ஆரம்பத்தில் ரஷ்ய அதிபர் விளாடிமிர் புட்டின் நிகழ்த்திய முக்கிய உரையில் அணிவகுப்பில் கலந்துகொண்டவர்களைப் பாராட்டியதோடு மற்ற நாடுகளின் வெற்றிக்கும் விடுதலைக்கும், சுதந்திரத்துக்குமாகப் போராடிய அனைவருக்கும் புகழ் உரை வழங்கினார். 'அந்த மகா பெரிய தேசப்பற்று போரில் கலந்துகொண்ட அனைத்து முதிய வீரர்களுக்கும் முன்னால் நான் தலைவணங்கி நிற்கின்றேன்' என்று கூறிய அதிபர் புட்டின் அந்த வெற்றி நாளை, தீமையை நன்மை வெற்றி கொண்ட நாள், கொடுங்கோன்மையை சுதந்திரம் வெற்றி கொண்ட நாள் என்று வர்ணித்தார்.

சீன அதிபர் ஹூ ஜின்டாவோ, அமெரிக்க அதிபர் ஜோர்ஜ் டபிள்யூ புஷ், பிரெஞ்சு அதிபர் ஜெக்ஸ் சிராக், இந்திய பிரதமர் மன்மோகன் சிங் மற்றும் உலகத் தலைவர்கள் இந்நிகழ்வில் கலந்து கொண்டார்கள்.

செஞ்சதுக்கத்தில் நடந்த பேரணியையடுத்து உலகத் தலைவர்கள் செஞ்சதுக்கத்தின் ஒரு பகுதியில் அமைந்துள்ள அடையாளங் காணப்படாத போர்வீரனின் கல்லறையில் மலர் வளையங்கள் வைத்து அஞ்சலி செலுத்தினார்கள்.

### புட்டின் - புஷ் பேச்சு

மொஸ்கோ செஞ்சதுக்கத்தில் உலகத் தலைவர்களை வரவேற்பதற்கு ஆயத்தமாகிக் கொண்டிருந்த அதே வேளையில், அதிபர் விளாடிமிர் புட்டின் அமெரிக்க அதிபர் ஜோர்ஜ டபிள்யூ புஷ்ஷை தமது மொஸ்கோவுக்கு மேற்கே உள்ள கிராமிய வாசஸ்தலத்தில் வரவேற்று விருந்தளித்தார்.

இரு தலைவர்களும் இரு தரப்புக்குமிடையிலான கருத்து முரண்பாடுகளை வெளியிட்டு தீர்த்திக்கொள்ள முயன்றதாகச் செய்திகள் கூறின.

அதற்கு முன்னதாக சனிக்கிழமையன்று அதிபர் புஷ் வத்திக்கான் தலைநகர் ரீகாவில் பேசிய போது உலகப் போரில் இறுதியில் நாஜிகளை வெற்றி கொண்டதன் பின்னர் கிழக்கு ஜேர்மனியை சோவியத்யூனியன் ஆக்கிரமித்தது தவறான நடவடிக்கை என்றும் பால்டிக் நாடுகள் ரஷ்யாவை ஜனநாயத்தில் முன்மாதிரியாக இருப்பதாகவும் கூறியிருந்தது. ரஷ்ய தரப்பில் மனக்கசப்பை உருவாக்கியிருநததாகக் கருதப்பட்டது. அதேசமயம் ஞாயிறு இரவில் ஊடகப் பேட்டியொன்றில் அதிபர் புட்டின் அமெரிக்கக் குற்றச்சாட்டை மறுத்தார். சோவியத்தின் கிழக்கு ஜேர்மனி மீதான ஆக்கிரமிப்பு குறித்து கவலை தெரிவிக்கவும் அவா விரும்பவில்லை. ஜனநாயத்தை வேறு இடங்களுக்கு ஏற்றுமதி செய்யமுடியாது என்று புட்டின் தெரிவித்தார்.

இந்த விடயங்கள் பற்றி இரு தலைவர்களும் மேற்படி சந்திப்பின்போது விவரமாக ஆராய்ந்துள்ளார்கள் என்றும் - பேச்சுகள் திறந்த மனதோடும், சுமுகமாகவும் நடைபெற்றதாக வெள்ளைமாளிகை அதிகாரிகள் அறிவித்துள்ளனர்.

பேச்சுகள் முடிந்து வெளியில் வந்த தலைவர்களும் ரஷ்யாவில் 1956இல் தயாரிக்கப்பட்ட கார் ஒன்றில் ஏறி சிறிது தூரம் பயணம் செய்து மகிழ்ந்தார்கள். அதிபர் புஷ் காரை ஓட்டினர்.

### ஐ.நா. சபையில் நினைவஞ்சலி

இரண்டாவது உலக மகாயுத்தம் முடிவுக்குக் கொண்டுவரப்பட்டதன் 60ஆவது ஆண்டு விழாவையொட்டியும் யுத்தத்தில் மடிந்த மக்களுக்கும் போர்வீரர்களுக்கும் அஞ்சலி செலுத்துவதற்காகவும் கடந்த திங்கட்கிழமை ஐ.நா. பொதுச்சபையில் ஒரு நிகழ்வு இடம்பெற்றது. பொதுச்சபைத் தலைவர் ஜீன் பிங் இந்நிகழ்வில் பேசியபோது நாடுகள் தங்களுக்கிடையில் ஏற்படும் பிணக்குகளை அமைதியான முறைகளில் தீர்த்துக் கொள்ளவேண்டும் என்று கேட்டுக் கொண்டார்.

ரஷ்யா - சீனா உட்படப் பல நாடுகளின் தூதுவர்கள் ஐ.நாவைப் பலப்படுத்துவது பற்றியும் பொதுவான பாதுகாப்பு கட்டமைப்பின் நடுநாயகமாக ஐ.நா. இருப்பதை உறுதிப் படுத்திக் கொள்ளவேண்டும் என்றும் வற்புறுத்தினார்கள்.

### பிரிட்டனில் மகாராணி அஞ்சலி

லண்டனில் இடம்பெற்ற ஒரு நிகழ்வில் பிரிட்டிஷ் 2ஆவது எலிசபெத் மகாராணியும் கணவர் எடின்பரோ கோமகனும் கலந்துகொண்டனர். 60 ஆண்டுகளுக்கு முன் நாஜிகளிடமிருந்து கால்வாய்த் தீவுகள் (Channel islands) விடுவிக்கப்பட்டதை நினைவு கூர்வதாக இந்த வைபவம் நடந்தது.

போலந்தில் பல நிகழ்ச்சிகள் இடம்பெற்றன. உலக மகாயுத்தத்தின்போது சுமார் 60 லட்சம் போலந்து மக்கள் கொல்லப்பட்டனர். இவர்களில் 40 வீதமானோர் யூதர்கள்

உக்ரேயின், செக்கோஸ்லாவாக்கியா மற்றும் ஐரோப்பிய நாடுகள் பலவற்றிலும் இந்த வைபவம் இடம்பெற்றது.

ஜேர்மனியில் 2ஆவது உலகப் போரில் நேசப் படைகள் ஹிட்லரை வெற்றி கொண்ட தினம் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது

ஜேர்மன் பிரதமர் ஜெராட் ஸ்சுரூடரும் அதிபர் ஹோர்ஸ் கோஹ்வரும் கலந்துகொண்ட ஒரு நிகழ்வில் நாஜிகளால் கொல்லப்பட்ட மக்களுக்காகப் பிரார்த்தனைகள் நடத்தப்பட்டன. பின்னர் நாடாளுமன்றத்தில் அதிபர் கோஹ்வர் பேசும்போது நாஜிகளால் கட்டவிழ்த்துவிடப்பட்ட கொடூரத்தை நாம் மறந்து விடக்கூடாது. அம்மாதிரி கொடுமைகள் மீண்டும் நடக்காமலிருக்கும்படி பார்த்துக் கொள்வது நமது கடமையாகும் என்று கூறினார்.

செர்பியா, பல்கேரியா, சைப்பிரஸ் மொங்கோலியா மற்றும் அல்பேனியா போன்ற நாடுகளிலும் உலக மகாயுத்தத்தின் வெற்றி நாள் கொண்டாடப்பட்டது.

### ரொனி பிளேயரின் எதிர்காலம்

பிரிட்டன் பிரதமர் ரொனி பிளேயர் தொடர்ந்து இன்னும் எவ்வளவு காலம் பதவியில் இருப்பார்?

பிரிட்டிஷ் வாக்காளர்கள் மத்தியில் இப்பொழுது கேட்கப்படும் கேள்வி இதுதான். பிரித்தானியாவில் மூன்றாவது தடவையாகவும் தொழிற்கட்சியை வழிநடத்தி பதவியில் அமர்த்தியுள்ள அவருக்கு அவரது கட்சிக்காரர்களாலேயே இப்பொழுது எதிர்ப்புக் கிளம்பியிருக்கிறது.

கட்சி வெற்றி பெற்றது பெரிய விடயமல்ல. கட்சியின் முந்தைய பெரும்பான்மை 167இல் இருந்து 66 ஆகக் குறைந்துவிட்டதே என்பது தான் தொழிற்கட்சியினரின் ஒரு பகுதியினரின் ஆதங்கம்.

தேர்தல் முடிவு அறிவிக்கப்பட்டவுடனேயே கொன்சர்வேட்டில் கட்சியின் தலைவர் மைக்கல் ஹோவார்ட் தமது கட்சித் தலைவர்

## பிரி.பிரதமர் ரொனி பிளேயர் பதவியில் நீடிப்பாரா?

பதவி யிலிருந்து விலகிக்கொண்டுவிட்டார். பிளேயர் அரசுக்கு எதிராக அவர் முன்வைத்த கருத்துக் கள் குறிப்பாக ஈராக் பற்றிய அவரது பிரசாரம் பிரிட்டிஷ் மக்கள் மத்தியில் எடுபடவில்லை. இதை உணர்ந்ததும் தோல்வியை ஏற்றுக் கொண்டு கட்சித் தலைவர் பதவியை அவர் இராஜினாமாச் செய்துவிட்டார். அதேமுறையில் பிளேயரும் தலைமைப் பதவியைக் கைவிட்டு நிதி அமைச்சர் கோர்டன் பிரவுனுக்கு இடம்கொடுத்து விலகிக் கொள்ளவேண்டும் என்று தொழிற்கட்சிக்குள் கிளர்ச்சி ஏற்பட்டுள்ளது.

பிரிட்டிஷ் அரசியல் மரபுப்படி பிளேயர் இந்த எதிப்புக்கு மதிப்பளித்து விலகிக்கொள்வார் என்று பெரும்பாலும் எதிர்பார்க்கப்படுகின்றது. ஆனால், எப்பொழுது விலகுவார் என்பதே இப்போது சர்ச்சையில் இருக்கின்றது.

தனது நிலை பலவீனமடைந்திருப்பதை அவரே ஏற்றுக்கொண்டுள்ளார். முடிவுகள் அறிவிக்கப்பட்டதுடன், தனது சொந்த மாவட்டத்தில் ஒரு கூட்டத்தில் பேசிய பிளேயர் "மூன்றாம் தடவையும் தெரிவுசெய்யப்பட்டிருப் பது ஒரு சிறப்பான விடயம் இது ஒரு பெரிய கெளரவம்" என்று கூறியதுடன் "பிரிட்டிஷ் மக் கள் மீண்டும் தொழிற்கட்சி பதவியில் அமர் வதை விரும்பியிருக்கிறார்கள். ஆனால், பெரும் பான்மை குறைக்கப்பட்டுள்ளது. இதற்கு நாம் பதிலளித்தாக வேண்டும். புத்தியோடு - அறி வோடு - பொறுப்போடு" என்று குறிப்பிட்டார்.

பிளேயர் பதவி விலகவேண்டும் என்று தொழிற்கட்சியில் ஒரு பிரிவினர் கூக்குரல் இட்டபொழுதிலும் ஏனையவர்கள் அவரை ஆதரித்தே நிற்கிறார்கள்.

(14ஆம் பக்கம் பார்க்க)

# நாஜிகளின் கோரப்பிடியிலிருந்து......

(13ஆம் பக்கத் தொடர்ச்சி)

ரொனி பிளேயரின் அரசியல் கலாசார அமைச்சராக இருந்த ரெஸா ஜோவெல் அம்மையார் கருத்து வெளியிடுகையில், "பிரதமர் பிரதமர் தான். அவர் தனது பதவிக் காலத்தை முழுமையாகப் பயன் படுத்தப் போவதாக அறிவித்திருக்கிறார். எமது கடமை இப்பொழுது என்னவென்றால், பிரதமரிலிருந்து அனைவரும் அரச கடமைகளை நிறை வேற்றுவதில் தோள்கொடுப்பதுதான்" - என்றார்.

பிரதமர் ரொனி பிளேயர் இந்த வாரம் ஒரு விசேட உரை நிகழ்த்தவிருக்கிறார். அதில் பாடசாலைகள், வைத்தியசாலைகள் மற்றும் குடிவரவு முறைகளில் சீர்திருத்தம் கொண்டு வருவது பற்றியும் இவைகளை சாதிப்பதற்குப் பிரிட்டிஷ் மக்கள் தமக்குப் புதிய ஆணையொன்றை வழங்கியிருப்பது பற்றியும் அறிவிப்பார் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

★★★

### விசாரணை தொடர்கிறது

பாகிஸ்தானில் பிடிபட்டுள்ள அல்கெய்டா பயங்கரவாத அமைப்பின் மூன்றாம் நிலை தள பதியின் புலன் விசாரணைகள் சிறப்பாக நடை பெற்றுவருவதாக அதிகாரிகள் கூறியிருக்கிறார்கள்.

அபு பராஜ் அல்-லிப்பி என்ற இந்த ஆள் கடந்த திங்கட்கிழமை பாகிஸ்தானில் வட பகுதியில் பழங்குடிப் பிரதேசமான வாஸிரிஸ்டான் என்ற இடத்தில் பிடிபட்டார். இவரிடமிருந்து கிடைக்கும் தகவல்கள் அல்கெய்டா தலைவர் ஒஸாமா பின்லேடனைப் பிடிப்பதற்கு உதவியாய் இருக்கும் என்று அதிகாரிகள் கருதுகிறார்கள்.

பின்லேடனின் செயற்றிட்ட தளபதியான லிப்பி பிடிபட்டிருப்பது பின்லேடனின் மரணம் அல்லது கைது வெகுதூரத்தில் இல்லையென்பதையே காட்டுகிறது என்ற கவலை அவருக்கு ஏற்பட்டிருக்கலாம் என்று அமெரிக்க அதிகாரிகள் கருத்துவெளியிட்டிருக்கிறார்கள்.

★★★

### மீண்டும் தோன்றியுள்ள பறவை

அரை நூற்றாண்டுக்கு மேலாக அழிந்து போன பறவை இனமாகக் கருதப்பட்ட மிகப்பெரிய மரங்கொத்திப் பறவையினம் ஒன்று இப்பொழுது மீண்டும் தலைகாட்டத் தொடங்கியுள்ளது.



அமெரிக்காவின் சதுப்பு நிலைக் காட்டுப் பகுதியில் இவ்வினப் பறவைகள் அழிநதுவிட்டதாகக் கருதப் படடுவந்தபோதிலும், மீண டும் அவை அப்பகுதியில் கண்டுபிடிக கப்பட்டுள்ளதக இயறகை இன ஆயவாளர்கள் கூறுகிறார்கள்.

அர்க்கன்சாஸ் பெருங்காடுகளில் இவ்வினப் பறவைகள் மீண்டும் காணப்படுவதாக அவர்கள் தெரிவிக்கின்றனர். யானைத்தந்தம் போன்ற அமைப்பில் சொண்டுகளையுடைய இந்த மரங்கொத்திப் பறவைகள் 60 வருடங்களுக்கு மேலாக மனிதக் கண்களில் படாமல் இருந்து வந்துள்ளன. இப பறவையின் மந்திர சக்தியில் வடஅமெரிக்க இந்தியர்கள் அதிக நம்பிக்கை கொண்டிருப்பதால், அதற்குப் பெருமதிப்புண்டு. 15 வருடங்கள் வரை வாழக்கூடிய இப்பறவை இனம் 1944ஆம் ஆண்டுக்குப் பின்னர் இப்பொழுதுதான் முதற்றடவையாகக் காணப்பட்டுள்ளது. எத்தனை பறவைகள் உள்ளன என்பது இன்னமும் தீர்மானிக்கப்படா விட்டாலும் இப்பறவை இனத்தை அழிவிலிருந்து காப்பாற்றி விடலாம் என்று இயற்கை இயலாளர்கள் நம்புகிறார்கள்.

★★★

### இருதயமாற்றுப் பெண்ணுக்கு 18 வயது

பிரிட்டனில் இருதய மாற்று அறுவைச் சிகிச்சை செய்துகொண்ட முதலாவது பெண் தனது 18ஆவது வயதைக் கொண்டாடியிருக்கின்றார்.

கேய்லீ டேவிடசன் என்ற இந்தப் பெண் பிள்ளை 5 மாதக் குழந்தையாக இருந்தபோது 1987ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் இதயமாற்று சிகிச்சையளிக்கப்பட்டது. தனது பிறந்த நாள் விழாவை இவ்வாறான இருதயக் கொடையாளிகளை ஊக்குவிப்பதற்கு அவர் பயன்படுத்தினார்.

இது எனது பிறந்த தினமாக அல்லது எனது இருதயத்தின் வருடாந்த தினமாகவும் இருக்கலாம். ஆனால், இந்த நாளில் எனக்கு இதயம் ஒன்றை வழங்கி உயிர்ப்பிச்சையளித்த அந்தக் குடும்பத்தைப் பற்றிப் பெரிதாக நினைவு கூருகிறேன் - என்றார் அவர்.

காய்லி குழந்தையாய் இருந்தபோது இதய நோயினால் பாதிக்கப்பட்டு மரணத்தைத்தழுவவிருந்தார். அவ்வேளையில் டாகடர்கள் இருதய மாற்று சிகிச்சையளித்து அவரைக் காப்பாற்றினார்கள்.

இதயத்தை உறுதியாக வைத்துக்கொள்வதற்கான மாத்திரைகளையும் இரத்த அழுத்தத்தையும் சீராக வைத்துககொள்ள சில மருந்துகளையும் எடுப்பதைத் தவிர இயல்பாக ஆரோக்கியமாக வாழ்ந்துவருகிறார்.

அமெரிக்காவைச் சேர்ந்த இப்பெண் 4 வயதாய் இருந்தபோது தான் தனக்கு இருதய மாற்று செய்யப்பட்டிருப்பது பற்றி அறிந்து கொண்டாராம்.

வீட்டில் கண்ணாடியின் முன்னின்று மார்பில் காணப்பட்ட பெரிய தழும்பைப் பார்த்து அதிசயித்தேன். அம்மாவிடம் கேட்டபோதுதான் என்னை வாழ வைப்பதற்கு வேறொருவரின் இதயம் பொருத்தப்பட்டிருப்பதை அவர் விளக்கினார் என்று காய்லி கூறுகிறார்.★


## WWW.YOURCOMPANY. COM
## DOMAIN REGISTRATION ! WEB HOSTING !

உங்கள் நிறுவனத்துக்கென ஒரு
WEBSITE உண்டா? E-MAIL உண்டா?
இனியும் தாமதிப்பதா? வேண்டாம்
Windows / Linux web server space
20 MB தொடக்கம் நீங்கள்விரும்பிய அளவு மட்டும்
Cheep Cost ! Quality Host !
24 மணிநேர வாடிக்கையாளர் சேவை
குறுகிய கால இடைவெளியில் Activation
அனைத்தையும் நாங்களே வழங்குகிறோம்.

## SPEED IT NET

149/1, TEMPLE ROAD, NALLUR, JAFFNA
துர்க்கா மணிமண்டபம் அருகில்
E.mail:biz@speeditnet.com
Web:http://www.speeditnet.com
HOTLINE: 0777 563213.
(45385)(42-44-26)



## யாழ்ப்பாணத்தில்!
## Colombo MOON BEAUTY CARE இன் அழகுக்கலை பயிற்சி வகுப்புகள்

பின்வரும் பயிற்சி நெறிகள் ஆரம்பம்

- Beginners Diploma Course in Beauty Culture & Hair dressing (3- மாதங்கள்)
- Advance Diploma Course (3- மாதங்கள்)
- Personal Gromming Class (தங்கள் சருமகேச அழகை தாங்களே பராமரித்தல் - 4 கிழமைகள்)
- Fashion Make - up - 2 days(Day Make -up, Party make-up) Stich make -up

இடம்: 92, பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி
[இந்து குருகுலம் அருகில் DCM முன்]



பயிற்சி வழங்குபவர்:
Moon Beauty care இயக்குநரும் நடன ஆசிரியையுமான திருமதி B.அகிலா
(Dip. in Beauty culture, Dip. in Dance Visaratha in Kathak)

பதிவுகளுக்கும் ஏனைய விவரங்களுக்கும்
☎ 0777-570138
வகுப்புகள் கிழமை நாள்களிலும்
வார இறுதி நாள்களிலும்
இரு பிரிவுகளாக நடைபெறும்.
(45240)(19-34-46)


## 45ஆம் நாள் நினைவு தின அழைப்பு

## கமலநாதன் கலைச்செல்வி (செல்வி)

தாயின் மடியில்
1985-01-27

தாயக மண்ணில்
2005-04-02



கடந்த 02-04-2005 அன்று யாழ்.கொக்குவில் பகுதியில் எதிர்பாராது ஏற்பட்ட வீதி விபத்தின்போது உயிர்நீத்த எமது அன்பு மகளின் வீட்டுக்கிருத்திய நிகழ்வு நாளை (16.05.2005) திங்கட்கிழமை எமது இல்லத்தில் நடைபெறவிருப்பதால் இந்நிகழ்வில் கலந்து கொள்வதுடன், மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.
அன்னாரின் துயரச் செய்தியைக் கேட்டு எமக்கு ஆறுதல் கொடுத்தமைக்கு இந்நாளில் எமது நன்றியினைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

Note: இந்த அறிவித்தலைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்.

கச்சாய் வீதி,
கொடிகாமம்.
- குடும்பத்தினர்.
(45340)(26-11-14)

## யாழ்.மாவட்டத் தொண்டர் ஆசிரியர் சங்கம்.
## விசேட கலந்துரையாடல் - 2005

காலம்: நாளை (2005.05.16) திங்கட்கிழமை
காலை 9.00 மணி
இடம்: புதிய உயர் கல்லூரி,
ஆரியகுளம், யாழ்ப்பாணம்.

நிரந்தர நியமனம் கிடைத்த, நிரந்தர நியமனம் கிடைக்காத ஆசிரியர்கள், தொண்டர் ஆசிரியர்கள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

- செயலாளர்
(45363)(42)

## 45ஆம் நாள் நினைவும் அந்தியேட்டி அழைப்பும்

தோற்றம்
1976 – 06 – 01



மறைவு
2005 – 04 – 01

## அமரர் இராசரத்தினம் செல்வமாணிக்கராசா
(சின்ராஸ்)

01.04.2005 அன்று அகாலமரணமான எமது அன்புச் செல்வத்தின் 45 ஆம் நாள் நினைவுப் பிரார்த்தனையும் வீட்டுக்கிரியைகளும் இன்று (15.04.2005) ஞாயிற்றுக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறவுள்ளதால் அந்நிகழ்விலும் அதனைத் தொடர்நது இடம்பெறும் மதியபோசனததிலும் கலந்துகொள்ளுமாறு எமது உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும அன்புடன் அழைக்கின்றோம்.

☆ இந்த அழைப்பையே தனிப்பட்ட அழைப்பாக ஏற்கவும்.

தகவல்:
மனைவி, தாய், தந்தை, சகோதரர்கள்
(ரவி, விக்கி, காந்தன்).

அந்தோனியார் வீதி,
சுன்னாகம்.
(45280)(42-18-15)

## நீங்காத நினைவில் நிறைந்த 45 ஆம் நாள் நினைவுப் பிரார்த்தனை

அன்னை மடியில்
28 - 10 - 1938



ஆண்டவன் அடியில்
31 - 03 - 2005

மாப்பாண முதலியாரின் வழித்தோன்றல்
## அமரர் செல்லையா மாணிக்கம்
(உரிமையாளர், ஆனந்தா ஸ்ரோர்ஸ், நெல்லியடி)

பாரினிலே அவதரித்து பண்பின் சிகரமாய்
பாசத்தின் திருவுருவமாய் இருந்து
பார்ப்போர் மனதைக் கொள்ளை கொண்டாய்!
அன்பின் ஆசானாய் அறிவின் இருப்பிடமாய் இருந்த
எம் ஆருயிர்க் குலவிளக்கே! எங்களது
இல்லத் தலைவனுமாய் இறுதியுடன் இங்கிதமாய் இருந்தால்
ஐ ஒன்பது நாள்கள்தான் சென்றாலும் என்ன?
எத்தனை ஆண்டுகள்தான் சென்றாலும் என்ன?
உம் நினைவில் நாம் திளைத்திருப்போம்
அன்புத் தெய்வத்தின் ஆத்மா சாந்தியடைய
எல்லாம்வல்ல ஆண்டவனைப் பிரார்த்திப்போமாக.

அமரர் செல்லையா மாணிக்கம் அவர்கள் வேலும்மயிலும் (அல்வாய்) அவர்களின் அன்புச் சகோதரனும் இராசம்மா அவர்களின் பாசமிகு கணவரும் கனகம்மா, சரஸ்வதி, ஞானேஸ்வரன் (கனடா) ஆகியோரின் மைத்துனரும் சபேசன், குணேசன், இரஞ்சனா (லண்டன்), சாந்தீபன் (அல்வாய்) ஆகியோரின் அன்புத் தந்தையும் சித்திரா, ராஜி, இரட்ணராஜா (லண்டன்), யோகநாயகி (அல்வாய்) ஆகியோரின் மதிப்புக்குரிய மாமனும் சியானி, அஸ்வின், அனுஜன், அஜீவன், டிலக்ஷனா, அபிநாஸ் (லண்டன்), சாருகா (அல்வாய்) ஆகியோரின் செல்லப் பேரனுமாவார்.

அன்னாரின் 45 ஆம் நாள் நினைவு ஆத்மசாந்திப் பிரார்த்தனை இன்று (15.05.2005) ஞாயிற்றுக்கிழமை லண்டன் சிறீமுருகன் மண்டபத்தில் நடைபெறுகின்றது என்பதை எமது உற்றார், உறவினர், நண்பர்களுக்கு அறியத் தருகின்றோம். அன்னாரின் ஆத்மா சாந்தியடைய ஆண்டவனைப் பிரார்த்திக்குமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

பொன் கந்தையா வீதி,
கொல்லன் தோட்டம்,
நெல்லியடி.

மாணிக்கம்
குடும்பத்தினர்.
(45303)(50-14-15)

# ஈழத்தமிழர்களின் தொடர்ச்சியான நிலைப்பாடு உங்களுக்கு நன்மை செய்யும் என்று நம்பலாம்

## மனந்திறந்து சொல்கிறார் தமிழகப் பேராசிரியர்

*தமிழ்நாடு இறையியல் கல்லூரி முதல்வர் பேராசிரியர் எம்.ஞானவரம் அண்மையில் யாழ்ப்பாணம் வந்திருந்தார்.*

*யாழ்.கிறிஸ்தவ சமூக ஆராய்ச்சி மன்றத்தின் அனுசரணையுடன் அண்மையில் யாழ்ப்பாணக் கல்லூரியின் பட்டப்படிப்புக்கள் பிரிவு மண்டபத்தில் நடைபெற்ற கருத்தரங்கு ஒன்றில் பங்குபற்றி 'தமிழ்நாடு எங்கே போகிறது?' என்ற தலைப்பில் உரையாற்றினார்.*

*தமிழ்நாட்டின் தற்போதைய நிலைவரங்கள் தொடர்பாகத் தனது நீண்ட உரையில் விளக்கிய அவர், ஈழத்தமிழர்கள் பற்றிய விடயங்களையும் பிரஸ்தாபிக்கத் தவறவில்லை.*

*அவரது உரையிலிருந்து முக்கியமான சில பகுதிகளை இங்கு தொகுத்துத்தருகிறோம்.*

இலங்கையிலே இருக்கின்ற தமிழ்மக்கள் தமிழீழம் மலர வேண்டும் என்றே விரும்புகின்றார்கள். அதில் மறுபேச்சுக்கு இடமேயில்லை. நான அறிந்த வரையில் அன்று முதல் இன்று வரை ஈழத்தமிழர்கள் அந்த நிலைப்பாட்டிலிருந்து மாறவே இல்லை. அத்தகைய தொடர்ச்சியான நிலைப்பாடு உங்களுக்கு நன்மையையே செய்யும் என்று நம்பலாம்.

விடுதலைப் புலிகள் இயக்கம் தமிழ்மக்களின விடுதலைக்காகப் போராடுகின்ற ஒரு பெரும் விடுதலை அமைப்பு என்பது சாதாரண மக்கள மத்தியில் நிலவுகின்ற ஒரு கருத்து. இதனை நான் நன்கு அறிவேன்.

விடுதலைப் புலிகளின் தலைமையில் தமிழீழம் வரவேண்டும் என்று இங்குள்ள மக்கள் நினைக்கிறார்கள்; விரும்புகிறார்கள்.

தமிழகத் தலைவர்களைப் பொறுத்தவரை உங்களுககுத் தெரியும் வைகோவின் நிலை. நிச்சயமாக அவர் இன்னும் தாராளமாக துணிச்சலாகப் பேசுகிறார்.

தமிழீழத்தைப் பற்றி, விடுதலைப் புலிகளைப் பற்றி பேசுகிறார். உங்களுக்கு 'சப்போட்' பணணியதால் அவர் பட்டபாடு உங்களுக்குத் தெரியும். 'பொடா' சட்டத்தில் இரண்டு வருடம் உள்ளே இருந்தார். ஆனால், இன்னும் அவர் பேசுகிறார். அவருக்கு மத்திய அரசில் ஆதரவு இருக்கிறது.

டாக்டர் ராமதாஸ் தாராளமாகச் 'சப்போட்' பண்ணிப் பேசுகிறார். திருமாவளவனும் பேசுகிறார். அவர் இங்கு வந்திருந்தார் என்று கேள்விப்பட்டேன். ஆனால், வேறு யாரும் பேசுவதாக இல்லை.

### ஈழத்தமிழர்களுக்காக கலைஞர் குரல் கொடுத்தாரா?

என்ன நீங்கள் தலைவர் கருணாநிதி பற்றிச் சொல்லமாட்டேன் என நினைக்கலாம்.

அவர் உங்களுக்கு 'சபோட்' பண்ணிப் பேசியதை நான் கேட்கவில்லை. நான் கேட்காத இடங்களில் பேசியிருப்பாரோ தெரியாது. பார்க்காத பத்திரிகைகளில் எழுதியிருப்பாரோ தெரியாது. என்னைப் பொறுத்தவரை நான் கேட்டதாக இல்லை. ஆகவே, அதனைத் திட்டவட்டமாக நிறுத்திக்கொள்கிறேன்.

### சேது சமுத்திரத்திட்டத்தால் பாதிப்பு யாழ்ப்பாணத்துக்கு!

சேது சமுத்திரத்திட்டத்தைக் கொண்டுவர இப்பொழுது முயற்சிக்கிறார்கள்.

இத்திட்டப்படி ஒரு கால்வாயை வெட்டி கப்பலகள் 'பாக்' சலசந்தி ஊடாகச் செல்லலாம் என்ற நிலை.

அதனால் எங்களுக்குப் பிரச்சினை இல்லை. இங்கு பிரச்சினை ஏற்படலாம் என்று பேசிக்கொள்கிறார்கள். அதாவது, வட இலங்கைக்கு - யாழ்ப்பாணத்திற்கு - இந்தத் திட்டத்தால் பொருளாதாரப் பிரச்சினைகள், தொய்வுகள், பாதிப்புகள் ஏற்படும் என்பது நிச்சயம் என்பது பலரது கருத்து. அதுவேண்டாம் என்று சொல்லக்கூடியவர்கள் இங்கு இருக்கிறார்கள்.

ஆனால், அங்கு உள்ளவர்களைப் பொறுத்தவரை பொதுமக்கள் அதுபற்றி ரொம்பவும் அலட்டிக்கொள்ளவில்லை. நம்ம அரசியல் தலைவர்கள்தான் இதைப்பற்றிப் பேசிக்கொண்டிருக்கிறார்கள். வைகோ சொல்லுவார் "நான்தான் இந்தப் பிரச்சினையை இங்கே வைத்தவன், 'பார்லி மென டில்' வைத்தவன். அதனாலே எனக்குத்தான் அதனுடைய பெருமை" - என்று.




கலைஞர் கருணாநிதி "எங்க கவர்மென்டு தான். யு.பி.ஏ.கவர்மெண்டு. இப்ப நாங்கள் வந்த பின்னர் தான் அதை 'ஓ.கே.' பண்ணியிருக்கு. அதனால் பெருமை எனக்குத்தான்".

ஜெயலலிதா அம்மா தன்னுடைய பங்கிற்கு சொல்லுவாங்க, "நான் முதலமைச்சராயிருக்கும் போதுதான் இது வந்திருக்கு அதனால எனக்குத தான் பெருமை".

அங்கே ஒரு பெரிய அடிபிடி சண்டை நடக கிறது. நண்பர்களே உள்நாட்டு மக்களைப் பொறுத்தவரை இது பற்றிப் பெரிய பிரச்சினைகள் விமர்சனங்கள் இல்லை.

கடலோர மக்களைப் பொறுத்தவரை தமிழ்நாட்டில் கொஞ்சம் நன்மை ஏற்படும் என்று அதை வரவேற்கிறார்கள். வேலையில்லாத் திண்டாட்டம் குறையும் என்கிறார்கள். நீங்கள் என்ன நினைக்கிறீர்கள் என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

### உலக மயமாக்கலினால் தமிழகத்தில் பாதிப்புகள்

தமிழகத்தைப் பொறுத்தவரை அங்கு உலக மயமாக்கல் பெரும் பாதிப்புகளை ஏற்படுத்தியிருக்கிறது. விவசாயக் கூலித்தொழிலாளர்களுக்கு வேலை இல்லாத நிலை ஏற்பட்டிருக்கிறது. பஞ்சத்தால் அவர்கள் தவிக்கிறார்கள். மூன்று வருடங்களாக மழை இல்லை.

சுனாமி ஏற்படுவதற்கு முன்னர் கொஞ்சம் மழை பெய்தது; பயிர்செய்தார்கள். ஆனால், அது வளர்ந்த நேரம் 'சுனாமி' வந்து எல்லாவற்றையும் பாழாக்கிவிட்டது. அங்கு அரசியலில் ஏராளம் குழப்பங்கள். திராவிடக் கட்சிகளினால் தமிழ் மக்கள் களைப்படைந்த நிலையில் இருக்கிறாகள் என்றுதான் சொல்ல வேண்டும்.

மத்திய அரசில் தமிழ்க்கட்சிகள் சேர்ந்திருக்கின்றன. தமிழகத்தில் இப்போது நிறைய அமைசசர்கள் இருக்கிறார்கள். இருந்தும் தமிழ்நாட்டு ஏழைகள் பலர் இன்னமும் கீழ் நோக்கிப் போய்க கொண்டிருக்கிறார்கள்.

தமிழகத்தின் நெற களஞ்சியம் என்று கூறப்படும் தஞ்சை மாவட்டம் பாதிக்கப்பட்டது. காவிரிப் பிரச்சினை வேறு இன்னமும் முடிவில்லாமல் இருக்கிறது.

சுனாமி நிவாரணத்தில் பாரபட்சம், முறைகேடுகள் நடக்கின்றன.

பொருளாதாரத்தின் இழுபறியில் தான் நாங்கள் இருக்கிறோம். உலக மயமாக்கலின் தாககத்தை ஏழைத் தொழிலாளிகள், விவசாயத் தொழிலாளர்கள் புரிந்துகொள்ளும் நிலை ஏற்பட்டிருக்கிறது.

மேற்கத்தேச கம்பனிகளின் படையெடுப்பினால் எமது தொழில் வளங்கள் அருகிவருகினறன. குறிப்பாக நெல்வயல்கள் இப்போது ருல பண்ணை, பூப்பண்ணைகளாக மாறிக்கொண்டிருக்கின்றன.

இதனால் ஏழை விவசாயிகளுக்கு நன்மை இல்லை. ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலங்கள் ஏழைகளிடமிருந்து பறிக்கப்பட்டு இப்படிப்பட்ட பெரிய கம்பனிகளிடம் ஒப்படைக்கப்படுகின்றன. இந்தச் சூழலில்தான் நாங்கள் இருக்கிறோம்.

### நீங்க 'ஓடிற்றர்' நாங்க 'ஆடிட்டர்'

ஒரு சகோதரி இங்கிருந்து இந்தியாவுக்கு படிக்க வந்தார். அவரை நான் 'இன்ரவியூ' பண்ண வேண்டிய நிலை. அவர் திருமணமானவர்.

"உங்களின் கணவர் என்ன வேலை?" எனறேன். அதற்கு அவர் 'ஓடிற்றர்' என்றார். நான் அப்படியே அசந்து போனேன். "ஏன் ஓடினார்?" "எதற்கு ஓடினார்" என்று கேட்டேன். உடனே அந்தம்மா, "நீங்க தப்பா புரிச்சுகிட்டீங்க. எனது கணவர் 'ஓடிற்றர்' வேலை செய்கிறார் என்றார். அப்பொழுது தாம நான் நினைத்தேன் நம்மதான் தப்புப்பண்ணி விட்டோம் என்று. அவர் 'ஆடிட்டர்' நாங்க அங்கே 'ஆடிட்டர்' என்பது போல நீங்க இங்க 'ஓடிற்றர்' சொல்கிறீங்கள்.

அதனால் நான் இங்கு வந்த இரண்டு வாரங்களாக கவனத்துடன் இருக்கிறேன்.

### தூய தமிழை இங்கு கேட்கிறேன்

தமிழ்மொழியைப் பொறுத்தவரையில் நான தூயதமிழை விரும்புகின்றேன். அருளுரையிலும சரி விவிலிய மொழி பெயர்ப்பிலும் சரி தூய தமிழையே விரும்புகிறேன். யாழ்ப்பாணத்திலே தமிழ் பேசுகிறவர்கள் இருக்கிறீர்கள். நான் வந்தத்தில் இருந்து நல்ல தமிழைக் கேட்டுக்கொண்டிருக்கிறேன்.

உங்களுக்குச் சமஸ்கிருதப் பாதிப்பு மிகக் குறைவாக இருக்கிறது. இது உண்மை. இங்கிருந்த பதினைந்து நாள்களுக்குள்ளே இதனை நான் கண்டுபிடித்தேன்.

குறிப்பாகத் திருச்சபைகளிலே இந்தச் சமஸ்கிருதப் பாதிப்புக் குறைவு.

நூற்றி இருபது ஆண்டுகளுக்கு முன்னர் மொழிபெயர்க்கப்பட்ட பைபிளில் 75 விழுக்காடு சமஸ்கிருதம், 25 விழுக்காடுதான் தமிழ் இருக்கும். அதைத் 'தமிழ் பைபிள்' என்று சொல்லி நாங்கள் பயன்படுத்திக் கொண்டிருக்கிறோம்.

ஆனால், யாழ்ப்பாணத்தில் நீங்கள் பேசுகிற மொழியிலே - தமிழ் மொழியிலே - சமஸ்கிருதக் கலப்பு மிகமிகக் குறைவாகவே இருக்கிறது. நான் உங்களை வாழ்த்துகிறேன்; பாராட்டுகிறேன் தொடர்ந்து சொல்லுங்கள் உங்களிடமிருந்து நாங்கள் கற்றுக்கொள்ளவேண்டும்.

அந்த வகையிலே, தமிழ் என்ற மொழி தமிழர்களை முழுமையாக இணைத்து வைக்கிறது. மகிழ்ச்சியடைகிறேன்.

### இரு துருவங்கள் ஒன்றாக இணைந்தன

சமீபத்தில் ஒரு நல்ல காரியம் நடந்தது. எங்களுக்கெல்லாம் என்ன தெரியுமா? ஒருவரை ஒருவர் தாக்கி ஒருவரை ஒருவர் மண்ணை வாரி இறைச்ச இரண்டு தலைவர்கள் ஒன்றாகச் சேர்ந்தார்கள்.

விடுதலை இயக்கத்தைச் சேர்ந்த தோழர் திருமாவளவனும் ஐயா டாக்டர் ராமதாஸும் ஒனறாகச் சேர்ந்து ஒரு மேடையில் நின்று அவர் இவரைத் தம்பி என்றழைக்க இவர் அவரை ஐயா என்றழைத்தார்கள்.

அதிலே கொஞ்சம் அரசியல் இருக்கிறது. இருந்தாலும் எனக்கு ரொம்ப மகிழ்ச்சி. தமிழின் பேராலே எதிர் எதிர் அணிகளில் இருந்தவர்கள சேர்ந்திருக்கிறார்களே. மகிழ்ச்சி இல்லாமலா இருக்கும்?

ஆனால், இதற்கு முன்னரே தோழர் திருமாவளவன் நிறையக் காரியங்களைத் தமிழுக்காகச் செய்து கொண்டிருக்கிறார்.

அவர் ஊரூராகச் சென்று ஆயிரக்கணக்கானவர்களுக்குத் தமிழ்ப் பெயர் வைத்தார். அதைப் பார்த்த பாரதிய ஜனதா அரசும் ஜெயலலிதா அரசும் எவ்வளவு கடுமையாக கிடுக்கிப்பிடி போட்டார்கள் என்று எங்களுக்குத் தெரியும். ஆனால், இப்ப ஒருக்கால் சமீபத்தில் நம்ம தமிழ் வருஷப் பிறப்பன்று இரண்டு, மூன்று தமிழ்ப்படம் வந்தது. அதில் ஒரு படம் 'மும்பை எக்ஸ்பிரஸ்' அதனை வெளியிடக்கூடாதென்று சொல்லி திரையிடப்படவிருந்த அரங்குகளிலும் இந்த இயக்கத்தைச் சேர்ந்தவர்கள் ஆர்ப்பாட்டம் செய்தார்கள்.

இந்த நிலையில் தமிழ் பாதுகாப்பு இயக்கம் என்று தொடங்கியிருக்கிறார்கள். குறைகள் இருக்கலாம நீங்கள் வித்தியாசமான கருத்துக்கொண்டவர்களாக இருக்கலாம் என்னைப் பொறுத்தவரை அது சந்தோமாக இருக்கிறது.

### பெண்களின் நிலை

தமிழ்நாட்டில் பெண்களின் நிலை சில இடங்களில் மோசமாக இருக்கிறது.

உசிலம்பட்டியிலும் சேலத்திலும் பெண் சிசுக்கொலை நடக்கிறது. பிறந்தவுடன் பெண் குழந்தையாக இருந்தால் சாகடிக்கிறார்கள். கள்ளிப்பாலை வாய்க்குள் விட்டுச் சாகடிக்கிறார்கள். இதனைப் பெண்களே செய்கிறார்கள்.

இது ஒரு பரிதாபமான - கேவலமான நிலை. அது இப்பொழுது மாறிக் கொண்டிருக்கிறது. அதற்கு அந்த வகையில், ஜெயலலிதா அம்மையாரை நான் பாராட்டுவேன். இந்த விடயத்திலே ஒரு பெண்ணாக நடவடிக்கை எடுத்து இதைத் தடுப்பதற்கு முயற்சி செய்தார்கள்.

அவர் என்ன சொன்னாங்க தெரியுமா? இனி மேல் அரசவிடயத்தில் உரிய சான்றிதழ்களில் உங்கள் அப்பா பெயர்தான் போடவேணும் என நில்லை. அம்மா பெயரையும் போடலாம் அதனால் ஒரு படமே வந்தது. "எம். குமரன் சன் ஒவ் மகாலட்சுமி"

நான் பார்க்கவில்லை. அதில் என்ன சொல்கிறார்கள் என்று எனக்குத் தெரியாது. நீங்கள் பார்த்திருக்கலாம். ஆனால், அந்தப் படத்தின் தலைப்பு எனக்கு மிகப்பிடித்திருக்கிறது. இது ஒரு பெரிய உந்துதல்.

ஆகையினால் பெண் உரிமை இயக்கங்கள பெண்ணிய இயக்கங்களின் எழுச்சியைக் காண முடிகிறது.

### தலித் மக்களின் எழுச்சியும் அவர்கள் மீதான தாக்குதலும்

'தலித்' என்று அழைக்கப்படுகின்ற தாழ்த்தப்பட்ட மக்கள் மீது செலுத்தப்படுகிற தாக்குதல்கள் அதிகரித்துக் கொண்டிருக்கின்றன. அவர்கள் மத்தியில் எழுச்சியும் ஏற்பட்டிருக்கிறது.

அவர்களது எழுச்சி அதிகமாக அதிகமாக அவர்கள் மீதான தாக்குதலும் அதிகமாகிறது. எழுச்சி அதிகமாகத் தாக்குதலும் தாக்குதல் அதிகமாக எழுச்சியும் ஏற்படுவது சகஜம்தான்.

மூன்று வருடங்களுக்கு முன்னர் திண்ணியம் என்ற ஊரிலே ஒரு முதலாளிக்கு இரண்டு தொழிலாளிகள் கீழ்ப்படியவில்லை என்ற காரணத்தினால் - அவரைப்பற்றித் தரக்குறைவாகப் பேசிவிட்டார்கள் என்பதற்காக - அந்த முதலாளி தனது சாதியினரைக் கூட்டிவைத்து பஞ்சாயத்து என்ற பெயரில் 'தலித்' ஆண்கள் இருவரையும் கொண்டு வந்து மலத்தைத் தின்ன வைத்தார்கள்.

சமீபத்தில் கவனம்பட்டி என்ற ஊரிலே வாழுகின்ற ஒருபையன் மதுரைக்குப் போய் படித்துவிட்டு வீட்டுக்கு வந்த போது செருப்பு போட்டுக கொண்டு போய்விட்டான் அந்த மேல் சாதிக்காரர் என்று சொல்லப்படுபவர்களின் தெருவில்.

தெருவைச் சேர்ந்த சில வாலிபப் பையன்கள் வந்து "டேய் உனக்குத் திமிரா? செருப்பைக் கழற்றிக்கையிலே தூக்கிக்கொண்டு போடா" என அவனை அதட்டினார்கள்.

"என் செருப்பை நான் எதற்கு கையில் தூக்கிவிட்டுப் போக வேணும்? உன் செருப்பையா போட்டுக்கொண்டு போறேன்? என்றான்". "அதிகம் பேசாமல் செருப்பைக் கழற்றிட்டுப் போடா..." "கழத்திட்டுப் போறன் நீ தூக்கிட்டு வாறியா".

அவ்வளவுதான் அடித்தார்கள். 'தலித்' மக்கள் எல்லோரும் சேர்ந்து பொலீஸில் முறைப்பாடு கொடுத்தார்கள்.

உயர்சாதிக்காரர்கள் ஊர்க்கூட்டம் போட்டு அதனை வாபஸ் வாங்வேணும். இல்லாவிட்டால் ஊில எந்தத தெருவிலும் நடக்கவிடமாட்டோம்; வேலைக்கு விடமாட்டோம். ரேசன் கடையில் சாமான்கள் வாங்க விடமாட்டோம் என்று மிரட்டினார்கள்.

இப்படி ஓர் ஊர்க் கட்டுப்பாடு இது பரிதாபமான நிலை. இதை இந்த அரசு பார்த்தும் பார்க்காமலும் - கண்டும் காணாமலும் - விட்டிருக்கிறது.

அதிலேயும் எங்களுடைய இறையியல் கல்லூரி தலையிட்டது. சில கம்யூனிஸ்ட் மாக்ஸிச நணபர்கள் - மிகுந்த பொறுப்புடைய நண்பர்கள் - தலையிட்டார்கள். கொஞ்சம் தீர்வு கிடைத்திருக்கிறது.

*தொகுப்பு:-* நெடுந்தீவு லக்ஷ்மன்

அப்பொழுதெல்லாம் என்ன சொல்லுவார்கள் தெரியுமா? "நாங்கள் தாயாப் பிள்ளையா நல்லாகத்தான் இருந்தோம்" இறையியல் கல்லூரி ஆள்கள் வந்து பிரச்சினைகளைக் கிளப்புகிறார்கள். என்ன தாயா பிள்ளையா? இதுக்குப் பெயர் தாயா பிள்ளையாவா?

மிகவும் கொடூரமான சம்பவம் நடைபெற்றது. கவனம்பட்டியில் ஊருக்குள் தலித்துக்கள் தங்கி இருக்கின்ற சேரிப்பக்கத்தில் மேல் சாதிக்காரர்கள் என்று சொல்லப்படுகிறவர்களுடைய வயல் நிலங்கள் உள்ளன.

அந்த வயல்களைத் தாண்டித்தான் இவர்கள் காலைக்கடன்களைக் கழிக்கப்போக வேண்டும் மறித்துவிட்டார்கள். "எங்களுடைய வயல்களுக்குள் கால்வைத்தால் வெட்டிவிடுவோம்" என்றார்கள். அதனால, பெண்கள் காலையில் எழுந்து காலைக கடன் கழிக்கப்போக முடியாத நிலை வாரக்கணக்கில் ஏற்பட்டது. அவ்வளவு ஒடுக்கு தல்கள்.

இதனால் இப்போது தலித் இளைஞர்கள் விழிப்படைகிறார்கள். மக்கள் சிந்திக்கிறார்கள் நாங்கள் இப்படி இருக்க வேண்டும் என்று அவசியமில்லை. இவ்வளவு நாள் பொறுத்திட்டுப் போனோம் இனிமேல் பொறுக்கமாட்டோம். பொங்கியெழுவோம்; திருப்பி அடிப்போம்; சீறி எழுவோம் என்கிறார்கள்.

இவையெல்லாம் தோழர் திருமாவளவனின் வார்த்தைகள். இவை இப்பொழுது தலித் இளைஞர்கள் மத்தியில் நிரம்பவே பயன்படுத்தப்படுகின்றன.

# தொழிலாளர் வேலைவாய்ப்புகள்

## டோஹா - கட்டார்

**வேலைவாய்ப்பு 100**

**சம்பளம் QR 500/= ரூபா 14500/=**

உணவு தங்குமிட வசதி இலவசம்.
ஒப்பந்தக் காலம் 02 வருடம்.
வைத்திய வசதி இலவசம்.
வேலை நேரம்: 08 மணிப்படி 06 நாட்கள்.
மற்றைய நிபந்தனைகள் தோஹா கட்டார் சட்டத்திற்கும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு காரியாலயத்தின் சட்டத்திற்கும் ஏற்ப.

கட்டணம் ரூபா 55000/= மட்டுமே

உடனடியாக வரவும்.

LOTUS

HA ஹேவாஸ் அசோஸியேட்ஸ் (பிரைவட்) லிமிட்ட்

05, பிகரிங்ஸ் றோட், கொட்டாஞ்சேனை, கொழும்பு 13.
(எட்டியாவத்தை சந்தி அருகாமையில்)

License. No : 750 App: NO: AL/750/Advt/03/05


# முதலாம் ஆண்டு நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

| மண்ணுலகம் | | விண்ணுலகம் |
|---|---|---|
| 02 - 01 - 1946 |  | 26 - 05 - 2004 |

**அமரர் செல்லையா சாமுவேல் பாலசந்திரன்**

திதி: வைகாசி மாதம் வளர்பிறை ஸப்தமி (15-05-2005) ஞாயிறு

நல்லதோர் குடும்பத் தலைவனாய்
அன்பும் நற்குணமும் கொண்ட ஆசானாய்
எம் எல்லோரையும் வழிநடத்தி வாழ்ந்திட்ட
உங்களை எத்தனை தசாப்தங்கள் கடந்தாலும் நாம் மறவோம்.

33¼, Arethusa Lane, Wellawatta.
(45376)(26-14-17)

அன்புடன் நினைவுகூரும்:
மனைவி, பிள்ளைகள், குடும்பத்தினர்.


# தமிழீழ வைப்பகம்

## பணிநிலை வேண்டுகை

தமிழீழ வைப்பகத்தினால் கீழ்க்காட்டப்படும் பணிநிலைக்குத் தகுதியானவர்களிடமிருந்து வேண்டுகைகள் கோரப்படுகின்றன.

**பணிநிலை:** அலுவலக உதவியாளர் தரம் - 04
(சிற்றூழியர் தரம் - 04/Peon Grade - 04)

**தகைமைகள்:** i. க.பொ.த.(சாதாரண தர) தேர்வில் கணிதம் 42/தரங்கள் II, தமிழ் உட்பட 04 பாடங்களில் ஒரே அமர்வில் சித்தியடைந்திருக்க வேண்டும்.
ii. ஆண்பாலார் மட்டும்.

**மாதாந்த ஊதியம்:** $\frac{1,870 - 2,870 + 6,000}{50x20}$

**அகவை எல்லை:** 18 - 25 வருடங்கள்

மேற்காட்டப்பட்ட பணிநிலைக்குத் தகுதியானவர்கள் தம்மால் தயாரிக்கப்பட்ட சுயவிளக்கங்களுடனும், கீழ்க்காட்டப்படும் ஆவணங்களுடனும் *யாழ்.சாலை, சுராடிப்போக்கு, கிளிநொச்சியில்* அமைந்துள்ள தமிழீழ வைப்பக நடுவப்பணியகத்திற்கு, 30.05.2005 ஆம் நாள் திங்கட்கிழமை காலை 10.00 மணிக்கு நேரில் வருகைதருமாறு வேண்டப்படுகின்றனர்.

01. கல்வித்தகைமையை உறுதிப்படுத்தும் சான்றிதழ்கள்.
02. ஏனைய தகைமைகளை உறுதிப்படுத்தும் சான்றிதழ்கள்.
03. ஆள் அடையாளத்தை உறுதிப்படுத்தும் ஆவணங்கள்.
04. நற்சாட்சிப் பத்திரங்கள்.

மனிதவள மேலாளர்,
மனிதவளப்பகுதி,
நடுவப்பணியகம்
தமிழீழ வைப்பகம்.

(சி-42831)(26-14-17)



## வீடு விற்பனைக்கு

பெரிய கோயிலடி, மத்தியூஸ் வீதி, 2ஆம் ஒழுங்கையில் 1½ பரப்புக் காணியில் மூன்று அறைகளுடன் கூடிய வீடு விற்பனைக் குண்டு. தரகர் தேவையில்லை.

தொடர்பு: தாசன்,
15/4. மத்தியூஸ் வீதி. சுண்டுக்குளி.
யாழ்ப்பாணம். T.P.: 021 4590292.
(45380)


# சமய சந்நிதிகளில்

யாழ்ப்பாணம்,மே15

அனலைதீவு எழுவடிவயல் எழுமங்கை நாச்சிமார் என அழைக்கப்படும் அருள்மிகு ஸ்ரீமனோன்மணி அம்பாள் ஆலய பெரும் திருவிழா நேற்று கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியது.

இந்தத் திருவிழா தொடர்ந்து 11 தினங்கள் நடைபெறும்.

எதிர்வரும் 22 ஆம் திகதி முற்பகல் 10 மணிக்குத் தேர்த்திருவிழாவும் மறுநாள் தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறும். (எ-203)

☆ ☆ ☆

பருத்தித்துறை கல்லூரி வீதி அத்தியடிப் பிள்ளையார் ஆலய வருடாந்தப் பெருந்திருவிழா நேற்றுக் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியது.

திருவிழா தொடர்ந்து 10 தினங்கள் நடைபெறவுள்ளது.

எதிர்வரும் 22 ஆம் திகதி தேர்த்திருவிழாவும் மறுநாள் தீர்த்தத் திருவிழாவும் நடைபெறும். (து-15-203)

☆ ☆ ☆

கோண்டாவில் தில்லையம்பதி ஸ்ரீசிவகாமி அம்பாள் ஆலயப் பெருந்திருவிழா நேற்றுக் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து 10 தினங்கள் நடைபெறவுள்ளது.

திருவிழாவில் எதிர்வரும் 22ஆம் திகதி தேர்த்திருவிழாவும் மறுநாள் தீர்த்தத் திருவிழாவும் நடைபெறவுள்ளன. (து-15-203)

☆ ☆ ☆

காரைநகர்,மே15

காரைநகர், பாலாவோடை முத்துமாரி அம்மன் ஆலய வருடாந்தப் பெருந்திருவிழாவில் இன்று ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து பத்துத் தினங்கள் நடைபெறவுள்ளது.

பெருந்திருவிழாவில் தேர்த்திருவிழா எதிர்வரும் 23ஆம் திகதி திங்கட்கிழமையும தீர்த்தத் திருவிழா மறுநாள் செவ்வாய்க்கிழமையும் நடைபெறவுள்ளது. (எ-73)

☆ ☆ ☆

காரைநகர், மருதடி வீரகத்தி விநாயகர் ஆலய வருடாந்தப் பெருந்திருவிழா எதிர்வரும் 21ஆம் திகதி சனிக்கிழமை முற்பகல் 10 மணிக்குக் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து பததுத் தினங்கள் சிறப்பாக நடைபெறவுள்ளது.

தேர்த் திருவிழா எதிர்வரும் 29ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமையும் தீர்த்தத் திருவிழா மறுநாள் திங்கட்கிழமையும் நடைபெறும். (எ-73)

## சுற்றுலாத்துறையை சீரமைக்க அமெ.உதவி

ஆழிப்பேரலையால் சீர் குலைந்துபோன சுற்றுலாத்துறைக்கு பெருமளவிலான நிதி உதவியை வழங்க அமெரிக்கா முன்வந்துள்ளதாகச் சுற்றுலாத் துறைத் தலைவர் உதயநாணயக்கார தெரிவித்துள்ளார்.

அமெரிக்காவின் சர்வதேச வளர்ச்சி நிறுவனம் இந்து சமுத்திரப் பிராந்தியத்தின் சுற்றுலா சீரமைப்பிற்காக 43 லட்சம் டொலரை ஒதுக்கியுள்ளதாகவும் இதில் ஸ்ரீலங்காவிற்கு 30 லட்சம் டொலர் அளிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் கூறினார்.

ஆழிப்பேரலைக்கு பிறகு சுற்றுலாப் பயணிகளை நம்பியிருந்த தங்குமிடங்களின் அறைகள் அனைத்தும் வெற்றிடங்களாகவே இருக்கின்றன. இவற்றை நிரப்புவதே எமது முக்கிய நோக்கம். ஐரோப்பா மற்றும் இந்திய சுற்றுலாப் பயணிகள் பெரும் எண்ணிக்கையில் மீளவும் இலங்கைக்கு வருவார்கள் என்ற நம்பிக்கை இருக்கின்றது என்றும் அவர் கூறினார்.

# நூற்றாண்டு நிறைவு 1904 - 2004

யா/ சாவகச்சேரி இந்துக் கல்லூரி

## நூற்றாண்டு நிறைவு - கல்விக் கண்காட்சி

மேற்படி கண்காட்சி அநேகரின் வேண்டுகோளுக்கிணங்க இன்று (15-05-2005) ஞாயிற்றுக்கிழமை வரை நீடிக்கப்பட்டுள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கின்றோம்.

(சி-42825)(26-14-17) - நூற்றாண்டு விழாச் சபை.


# மீண்டும் ஒரு சந்தர்ப்பம்

## FIRST MAN POWER CENTRE & JOB AGENTS

எமது அன்புக்குரியவர்களே!

இது ஆரம்பிக்கப்பட்டு 20 நாள்களுக்குள் பலருக்கும் பல வகையான தொழில்களைப் பெற்றுக்கொடுத்துச் சாதனை படைத்துள்ளது.

யாழ்.நகருக்கு அண்மையில் உள்ள நிறுவனங்கள், வியாபார நிலையங்களில் வேலைசெய்ய விரும்புவோர் உடனடியாக எம்முடன் தொடர்புகொள்ளுங்கள்.

உங்கள் தகைமைக்கேற்ற பொருத்தமான வேலைகளைப் பெற்றுத்தர முயற்சிக்கப்படும்.

தொடர்பு முகவரி:
**POWER GYM BUILDING**
230/1, நாவலர் வீதி
(ஆனைப்பந்திச் சந்திக்கு அருகில்),
யாழ்ப்பாணம்.
T.P.: 021 - 2223298, 077 - 3068984. (சி-42824)(26-14-17)


# துயர் பகிர்கின்றோம்

யாழ்.பல்கலைக்கழகப் புவியியற்றுறைத் தலைவரும் குடித்தொகை அபிவிருத்திக் கல்வி டிப்ளோமா நிகழ்ச்சித் திட்ட இணைப்பாளருமாகிய
பேராசிரியர் கா.குகபாலன்
அவர்களின் அன்பு மகள்

**திருமதி திருமகள் கார்த்திகேயன்**

அவர்களின் திடீர் மறைவை அறிந்து மிகவும் துயரடைகிறோம். அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திப்பதோடு, அவரின் மறைவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

குடித்தொகை அபிவிருத்திக் கல்வி டிப்ளோமா மாணவர்கள்.
2004/2005.

(45378)(26-14-17)

# மரண அறிவித்தல்

'சோக சோபித சொர்ணக் கவிக்குயில்'

## கலாபூஷணம் V.K. இரத்தினம்

(இசை நாடகக் கலைஞரும், கட்டட ஒப்பந்தகாரரும்)



அரியாலை, கலைமகள் வீதியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கலாபூஷணம் V.K.இரத்தினம் அவர்கள் நேற்று (14.05.2005) சனிக்கிழமை சிவபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற கதிர்காமு - சின்னம்மா தம்பதிகளின் ஏக புதல்வனும் காலஞ்சென்ற நீலன் கணபதிப்பிள்ளை - சின்னப்பிள்ளை தம்பதிகளின் மருமகனும் செல்வமணியின் அன்புக் கணவரும் வைகுந்தவாசன் (பனை அபிவிருத்திச்சபை), இரஞ்சினிதேவி (ஆசிரியை, ஸ்ரீ கலைமகள் பாலர் பாடசாலை), கமலினிதேவி, வசந்தவாசன் (நோர்வே), வதனவாசன் (யாழ்ப்பாணம், ப.நோ.கூ.சங்கம்), இராகினி ஆகியோரின் அன்புத் தந்தையும் அன்னலட்சுமி, வரதராஜன் (உதவி முகாமையாளர், யாழ்ப்பாணம் தேசிய சேமிப்பு வங்கி), நேத்திரானந்தம் (கிராம உத்தியோகத்தர், வல்வெட்டி மத்தி), நிர்மலா (நோர்வே), கௌரி (ஆசிரியை, மானிப்பாய் விவேகானந்தா வித்தியாசாலை), அன்பரசன் ஆகியோரின் அன்பு மாமனாரும் பானுதீபன் (யாழ்.தபாலகம்), தேனுகா (யாழ்.பல்கலைக்கழக நுண்கலைப்பீடம்), சுவர்ணகீதன், ரஜிதா (யாழ்.பல்கலைக்கழக நுண்கலைப்பீடம்), சங்கீதா, மயூரதன் நேருஜனன், சாருகேசி (நோர்வே), சகானா, சாகித்தியா, கஜானி, துஷானி, சந்திரஜோதி ஆகியோரின் அன்புப் பேரனும் மகாலெட்சுமி, சிவபாக்கியம், மதுரவேணி, காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை, நாகலிங்கம் ஆகியோரின் அன்புச் சகோதரனும் காலஞ்சென்ற மூதறிஞர் கவிஞர் வே.ஐயாத்துரை மற்றும் நாகமணி, பஞ்சாட்சரம், அன்னலட்சுமி, புஸ்பமணி ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (15.05.2005) ஞாயிற்றுக்கிழமை நண்பகல் 12 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக அரியாலை சித்துப்பாத்தி இந்துமயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்

*34/3, கலைமகள் வீதி, அரியாலை மேற்கு, யாழ்ப்பாணம்.*
(45362)(35-14-17-26)

தகவல்:
இ.வைகுந்தவாசன் (மகன்),
இ.வதனவாசன் (மகன்).

# இறைவன் மீதான நம்பிக்கையைப் புதுப்பித்து உள்ளங்களை அவருக்காகத் திறந்து விடுங்கள்

இலங்கை கத்தோலிக்க ஆயர் பேரவையினர் புதிய திருத்தந்தை 16 ஆவது பெனடிக்கற் பாப்பரசரைச் சந்தித்த பின்னர், இலங்கை திரும்பியுள்ளனர். கூட்டாகவும் தனியாகவும் பாப்பரசரைச் சந்தித்த இவர்கள் இலங்கை நாடு எதிர்நோக்குகின்ற பிரச்சினைகள் பற்றியும் ஒவ்வொரு மறைமாவட்டமும் எதிர்நோக்குகின்ற பிரச்சினைகள் பற்றியும் கலந்துரையாடினர். முதலில் இலங்கை கத்தோலிக்க ஆயர் பேரவையின் தலைவரும் கண்டி ஆயருமான மேதகு வியன்னி பெர்னாண்டோ ஆண்டகை இலங்கை ஆயர் சார்பாக பொதுவான ஓர் உரையை ஆற்றினார். அவ்வுரையில் இலங்கை மறைமாவட்டங்களின் நிலையையும் இலங்கை நாட்டின் நிலையையும் அவர் தெளிவாக விளக்கினார். அனைத்தையும் கவனமாகச் செவிமடுத்த திருத்தந்தை தமது உரையில் நான்கு விடயங்களை முக்கியமாகத் தெரிவித்தார்.

அவர் தம் உரையின் ஆரம்பத்தில், எனது தேர்வின் பின்னர் முதலாவதாக நடைபெறுகின்ற - ஐந்து ஆண்டுகளுக்கு ஒருதடவை பாப்பரசரைத் சந்திக்கின்ற - இச்சந்திப்பிற்கு எனது பாப்பரசர் பணியின் ஆரம்ப நாள்களிலேயே இலங்கை கத்தோலிக்க திருச்சபையின் ஆயர்களாகிய உங்கள் அனைவரையும் வரவேற்பதில் மகிழ்ச்சி அடைகிறேன். உங்கள் பெயரால் இலங்கை கத்தோலிக்க ஆயர் பேரவையின் தலைவர் ஆயர் மேதகு ஜோசப் வியன்னி பெனாண்டோ ஆண்டகையால் எமக்கு வழங்கப்பட்ட மதிப்பான வார்த்தைகளிற்கு அன்பான நன்றிகள். நீங்கள் கலாசார செழிப்பும் மொழிகளும் பாரம்பரியங்களும் குறிப்பாக நிறைந்த ஒரு கண்டத்தில் இருந்து வருகிறீர்கள். உலகின் ஒரே மீட்பரான இயேசுக் கிறிஸ்துவில் உங்கள் மக்கள் வைத்திருக்கும் ஆழ்ந்த நம்பிக்கைகளிற்கு நீங்கள் சாட்சிகளாக விளங்குகிறீர்கள். புனிதர்களான பீற்றர், போல் ஆகிய அப்போஸ்தலர்களின் கல்லறைகளைத் தரிசிக்கின்ற இந்த திருயாத்திரை உங்களது அர்ப்பணத்தைப் புதுப்பித்து கிறிஸ்துவை நம்பிக்கையோடு அறிவிக்க வரமருள மன்றாடுகிறேன். இதனால், எல்லோரும் வாழ்வைப்பெறும் பொருட்டு அதுவும் நிறைவாய் பெறும் பொருட்டு வந்தவரின் (யோவான் 10:10) அறிவிலும் அன்பிலும் உங்கள் மக்கள் வளர்வார்களாக என்று தெரிவித்தார்.

## ஞாயிறு நற்பிரசாதம்

சுனாமி பேரழிவு பற்றி அவர் தெரிவிக்கும்போது உலகம் முழுமையிலும் உள்ள ஏராளமான மற்றவர்களோடு இணைந்து கடந்த மார்கழியில் நிகழ்ந்த சுனாமி பேரழிவின் விளைவுகளால் நானும் மிகவும் ஆழமாக குழப்பமடைந்தேன். இது இலங்கையில் மட்டும் பல உயிர்களைப் பறித்து ஆயிரக் கணக்கானவர்களை வீடிழக்கச் செய்துள்ளது. இது போன்ற பயங்கரமான இழப்புக்களை அனுபவித்தவர்கள் எல்லோரும் தயவுசெய்து எமது உலகம் முழுமையிலும் வாழுகின்ற எல்லா கத்தோலிக்க மக்களினதும் ஆழ்ந்த அனுதாபங்களை ஏற்றுக்கொள்ள வேண்டுகிறோம். இழப்பிலும் வேதனையிலும் இருப்பவர்களுள் துன்பப்பட்ட இயேசுவின் முகத்தை நாம் இனம்காணத் தவறக்கூடாது.

**அருள்திரு.**
**ரூபன் மரியாம்பிள்ளை**

இவர்களிற்கு நாம் உதவி செய்யும்போதே எமது அன்பையும் அரவணைப்பையும் நாம் தேவையிலிருப்போருடன் பகிர்ந்துகொள்கிறோம். (மத். 25:40)

இந்த இயற்கை அனர்த்தத்தால் பெற்றோரை இழந்த பிள்ளைகள் மீது கிறிஸ்தவ சமூகத்தினருக்கு ஒரு குறிப்பான கடமையுண்டு. எமது சமூகத்தில் வாழும் மிகுந்த ஆபத்திற்குரிய இவர்களிற்குத்தான் விண்ணரசு சொந்தமானது. (மத்.19:14) இருப்பினும் அநேகமான தருணங்களில் இவர்கள் மறக்கப்பட்டவர்களாக அல்லது வெட்கப்படத்தக்க நிலையில் பயன்படுத்தப்படுகிறார்கள். படைவீரர்களாகவோ, வேலையாள்களாகவோ குற்றமற்ற பலிக்கடாக்களாகவோ மனிதர்களால் பயன்படுத்தப்படுகிறார்கள். இந்த துஷ்பிரயோகங்களுக்கு எதிராகச் சண்டைபிடிக்கவும் இளம் சிறுவர்களிற்குத் தேவையான சட்டபூர்வ பாதுகாப்பை வழங்கவும் சர்வதேச சமூகத்திடமோ சிவில் அதிகாரி[illegible]மோ இருந்து வேண்டத் தேவையான ஒரு முயற்சியையும் நாம் கைவிடலாகாது.

எமது வாழ்வின் மிக இருண்ட நேரங்களில் கூட பிரசன்னமாகாது இறைவன் ஒருபோதும் இல்லை என்பது எமக்குத் தெரியும். தம்மை அன்பு செய்பவர்களுடன் எல்லாவற்றிலும் இறைவன் நன்மைக்காகவே உழைக்கிறார். கடவுளிடம் அன்பு கூருபவர்களோடு அவர்களின் நன்மைக்காகவே இறைவன் எல்லாவற்றிலும் பணியாற்றுகிறார் என புனித பவுல் அடியார் நினைவூட்டுகிறார். இது சுனாமியின் பின்னர் மனித சமுதாயத்தால் பதிலாக கொடுக்கப்பட்ட முன்னொருபோதும் நடைபெறாத மனிதாபிமான தாராள உதவியினால் வெளிப்படுத்தப்பட்டுள்ளது. இலங்கை கத்தோலிக்க திருச்சபையில் நீங்கள் இந்தப் பாதிப்பிற்குள்ளானவர்களின் பொருளாதார, ஒழுக்க, உளவியல், ஆன்மீக தேவைகளை நிறைவு செய்வதற்காக இலங்கை கத்தோலிக்க திருச்சபையில் வெளிப்படையாக முயற்சித்தவிதம் குறிப்பிடத்தக்கது.

இந்த மீட்புப் பணிகளில் சமுதாயத்தின் பல்வேறு பகுதியினர் இணைந்தும் பங்குபற்றியும் பணியாற்றிய விதத்தில் இறைவனின் வேறு நன்மைத்தனத்தின் கருவிகளை எம்மால் உணரக்கூடியதாய் இருக்கின்றது. இலங்கையிலும் உலகமயமான சமூகங்கள் முழுவதிலும் உள்ள பல் சமய, இனங்களைச் சார்ந்த குழுக்கள் ஒன்றாக இணைந்து உழைத்தது உள்ளத்தை நெகிழச் செய்தது. இது அவர்களின் ஒருமைப்பாட்டையும் தாக்குப்பட்டவர்கள்பால் அவர்கள் கொண்டிருந்த சகோதர இணைப்பின் பந்தத்தையும் மீளக்கண்டுகொள்ளக் கூடியதாய் இருந்தது. விஷேசமாக நிதி உதவிகளை தேவையிலிருப்போருக்கு இலவசமாக வழங்குவதன் வழியாக இந்த ஒருமைப்பாட்டின் பயன்களை நீங்கள் மென்மேலும் கட்டியெழுப்ப வழிகளைக் கண்டு கொள்வீர்கள் என நான் நம்புகிறேன்" - என்றும் புதிய திருத்தந்தை தெரிவித்தார்.

திருத்தந்தையின் உரையினைத் தெளிவாகக்கேட்ட ஆயர்கள் தமது விஜயத்தையும் மற்றப் பணிகளையும் முடித்துக்கொண்டு இலங்கை திரும்பியுள்ளனர். திருத்தந்தையின் பணி சிறப்புற நடைபெற எமது செபங்களை அவருக்குக் காணிக்கையாக்குவோம். ★

# அன்பை நீட்டி அனைவருக்கும் தொண்டு செய்யின் ஆனந்தமே

## வாழும்கலை குறித்து சுவாமி சத்யோதயா

யாழ்ப்பாணம்,மே15

சர்வதேச வாழும் கலை அற நிறுவனத்தின் நிறுவுநர் குருஜி ஸ்ரீஸ்ரீ ரவி சங்கர்ஜியின் 49 ஆவது ஜெயந்திவிழாவை முன்னிட்டு ஆன்மீகப் பெருவிழாவொன்று கடந்த வெள்ளிக்கிழமை மாலை யாழ்.வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெற்றது.

சுவாமி சத்யோதயாவின் தலைமையில் யாழ்ப்பாணத்தில் தற்போது தங்கியிருந்து ஆன்மீக உரை, தெய்வீக இன்னிசை மற்றும் தியானப் பயிற்சிகள் என்பவற்றின் மூலம் வாழுமகலை பற்றி பொதுமக்களுக்கு விளக்கி வரும் அந்த நிறுவனத்தின் தொண்டர்களால் இவ்விழா ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

ஆன்மீக நாட்டம் கொண்ட பெருந்திரளான மக்கள் கலந்துகொண்ட இவ்விழாவில் யாழ்ப்பாணம் காயத்ரி மடத்தைச் சேர்ந்த காயத்ரி சுவாமிகளும், யாழ்ப்பாணம் வேதாந்த மடத்தைச் சேர்ந்த சோமஸ்கந்தவேள் சுவாமிகளும் விஷேட விருந்தினர்களாகக் கலந்துகொண்டு ஆரம்பத்தில் ஆன்மீக அருளுரைகளை வழங்கினர்.

அதனைத் தொடர்ந்து ஆன்மீகச் சொற்பொழிவாற்றிய சுவாமி சத்யோதயா, தமது உரையில்-

பரபரப்பு மிக்க இன்றைய உலக வாழ்க்கையில் மனிதர்களாகிய நாம் நிம்மதியிழந்து அமைதியற்ற வாழ்வை மேற்கொள்ள நேர்ந்துள்ளது. அவ்வித மகிழ்ச்சியற்ற தன்மையிலிருந்து விடுபட்டு மனச்சாந்தியும் அமைதியும் பெற்று வாழும் வழியை மக்களுக்கு எடுத்துச் சொல்லி மகிழ்வான வாழ்க்கைக்கு வழிகாட்டும் நோக்கத்துடன் சர்வதேச வாழும்கலை அற நிறுவனம் இயங்கிவருகிறது - என்றார்.

ஆன்மீகம் என்பது சன்னியாசம் என்றாகாது. சத்தத்துக்கும் சங்கீதத்துக்கும் நெருங்கிய தொடர்புண்டு. சத்தம் நீட்டப்படும் போது அது சங்கீதம் ஆகிறது; சலனம் நீட்டப்படும்போது அது நடனம் என்றாகின்றது. அதேபோன்று எமது மனதை நீளச்செய்வதால் - தியானத்தின் மூலம் ஞானம் கிட்டுகின்றது. அவ்வாறு அன்பை நீட்டி - அனைவருக்கும் தொண்டு செய்ய முனையும் வேளையில் அது ஆனந்தத்தையும் மன அமைதி, மனத்திருப்தி என்பவற்றையும் பெற உதவுகிறது. அவ்விதம் வாழக் கற்றுக்கொண்டால் வாழ்க்கை எப்போதும் கொண்டாட்டமாக, திருப்தியும் அமைதியும் தருவதாக, பயன்மிக்கதாக அமைகிறது. அதன் மூலம் நாம் இப்பிறவியில் அர்த்தமுள்ள வாழ்க்கை வாழ்ந்ததன் பலனை அடைய முடிகிறது.

இத்தகைய வாழும்கலை குறித்து தெய்வீக மக்களுக்கு விளக்கமளித்து ஒன்றிணைந்து தெய்வீக இன்னிசையை இசைப்பதன் மூலம் ஆண்டவன் புகழ் பாடுவதுடன், மனதை ஒரு நிலைப்படுத்தி, புலன்களை அடக்கி தியானம் செய்வதன் மூலம் மன அமைதியையும் நிம்மதியையும் பெறுவதற்கான பயிற்சியை மேற்கொள்வதே எமது நோக்கமாகும்-

சந்தர்ப்பம் வாய்க்கும் போதெல்லாம் பெரியோர்களின் ஆன்மீக அருளுரைகளைச் செவிமடுப்பதன்மூலம், அவற்றில் பொதிந்துள்ள கருத்துக்களை உள்வாங்க, அவற்றுக்கமைய ஒழுகப் பழகிக் கொள்வோமானால், ஆரோக்கியமான சமுதாயமொன்று உருவாக நாமும் பங்களித்தவர்களாவோம். அதன் மூலம் இவ்வுலக வாழ்வில் மனதில் மகிழ்ச்சியும் நிம்மதியும் கிட்டுவதோடு, எமது ஆன்ம ஈடேற்றத்திற்கும் அவை வழிவகுக்கும் - என்று சுவாமிஜி கூறினார்.

அராலி உலோல சிட்டிப் பிள்ளையார் ஆலய பரிபாலன சபையின் செயலாளர் க.திருஞானசம்பந்தரின் நீண்டகால ஆலயத் தொண்டினைப் பாராட்டி அவ்வூர் மக்களாலும் ஆலய பரிபாலன சபையினராலும் அவருக்கு 'ஸ்ரீ கண தர்மஜெயன்' என்னும் விருது வழங்கப்பட்டது.

விருதினை பரிபாலனசபையின் தலைவர் க.குமாரவேல் வழங்குவதையும் அருகில் விழாநாயகனின் பாரியார் நிற்பதையும் படத்தில் காணலாம்.

*(படம்: வட்டுக்கோட்டைச் செய்தியாளர்)*






யாழ்.மாவட்ட முன்னாள் அரச அதிபர் செ.பத்மநாதனின் சேவையைப் பாராட்டி கரவெட்டிப் பிரதேச செயலகத்தினரால் அண்மையில் பாராட்டு விழா நடத்தப்பட்டது. இந்த நிகழ்வில் முன்னாள் அரச அதிபர் செ.பத்மநாதன் உரையாற்றுவதைப் படத்தில் காணலாம். கரவெட்டிப் பிரதேச செயலர் எஸ்.சத்தியசீலன், பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் வீ.இராசையா ஆகியோரும் படத்தில் உள்ளனர்.

*(படம்: குடத்தனைச் செய்தியாளர்).*

# என்றும் எவருக்கும் இனியவராக வாழ்ந்து மறைந்தவர் நாகராஜா



[illegible]ந்த 25 வருடங்களாக மக்களோடு மக்களாக இருந்து[illegible] மருத்துவப் பணிசெய்து இளைப்பாறி நேற்றுவரை எம்மோ[illegible] மலேரியாத் தடுப்பு இயக்க வெளிக்கள அலுவலர் அமரர் க.நாகரா[illegible] இன்று எம்முடன் இல்லை.

1967ஆம் ஆண்டு முதல் குப்பிழான், ஏழாலை, புன்னாலைகட்டுவன் முதல் மன்னார், கிராஞ்சி போன்ற பின்தங்கிய கிராமங்களில் மக்கள் சேவையே மகேசன் சேவை என்ற வாக்கிற்கிணங்க ஓய்வுபெறும் வரை பலவிதமான போராட்ட சூழ்நிலையிலும் மக்களுக்காகக் கடமை உணர்வுடன் பணியாற்றிவர் அவர்.

தெல்லிப்பழை மாவட்ட வைத்தியசாலையில் அன்புடன் பாசமும் கொண்டு மக்களுடன் மனித நேயத்துடன் இறுதிக் காலங்களில் பணியாற்றியவர் அமரர் நாகராஜா.

அவரிடம் துணிவு, விடாமுயற்சி, நேரம் தவறாமை, எவருக்கும் உரிய வேளையில் உதவுதல் போன்ற நற்பண்புகள் நிறைந்திருந்தன.

## நீத்தார் நயப்புரை

இளம்பராயம் முதல் இறைவன் அழைப்பு வரை சைவத்தில் ஈடுபாடு கொண்டு வயாவிளான் மானம்பிராய் பிள்ளையார் ஆலயத் திருப்பணிகளில் கோயில் தொண்டு செய்து பணியாற்றியவர்.

நற்பண்புகளினதும் - நல்லுணர்ச்சிகளினதும் உறைவிடமாகத் திகழ்ந்த அமரர் கதிரிப்பிள்ளை நாகராஜா தனது 57ஆவது அகவையில் இவ்வுலகில் இருந்து நீங்கிவிட்டார்.

**செ.ரமேஷ்.**

---

## மக்கள் முகம்



**பிரபல எழுத்தாளரும் விமர்சகருமான சட்டத்தரணி பொன். பூலோகசிங்கம் நீதி அமைச்சினால் மல்லாகம் மாவட்ட நீதிமன்ற நிர்வாக எல்லைக்குள் சமாதான நீதிவானாகவும் உத்தியோகப்பற்றற்ற நீதிபதியாகவும் (ஜே.பி.யூ.எம்) நியமிக்கப்பட்டுள்ளார். இவர் கடந்தவாரம் மல்லாகம் மாவட்ட நீதிபதி திருமதி ச.இளங்கோவன் முன்னிலையில் சத்தியப்பிரமாணம் செய்து பதவி ஏற்றுக்கொண்டார். இவர் கடந்த பதினேழு வருடகாலமாக யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்திலும் இலங்கை உயர் தொழில்நுட்பக் கல்லூரியிலும் சட்ட விரிவுரையாளராகவும் பணியாற்றி வருகின்றமை குறிப்பிடத்தக்கதாகும்.** (ஜ)

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

அன்னையின் மடியில் 11 - 11 - 1975



ஆண்டவன் திருவடியில் 16 - 04 - 2005

### செல்வி வசந்தமாலா சொர்ணலிங்கம் (வசந்தி)

பாசம் என்னும் பெருங்கடலில் எம்மை எல்லாம் திளைக்க வைத்த எங்கள் அன்பு வசந்தியே!
மாதமொன்று சென்றதம்மா உன் அன்பு முகம் கண்டு
உன் அன்பு முகத்தையும், இனிய குரலையும், எமக்கெல்லாம் முன்மாதிரியாகத்திகழும் உன் செயல்களையும் நினைக்கும்போதெல்லாம் ஆறமாட்டாமல் நாம் தேம்பி அழுகின்றோம்.
அறியாத உன் நினைவில் ஆண்டுகள் பல போனாலும் எழிலான உன் நினைவு எம் இதயத்தில் துடித்துக்கொண்டிருக்கும்.

ஓம் சாந்தி! ஓம்சாந்தி!! ஓம்சாந்தி!!!

இன்று (15.05.2005) ஞாயிற்றுக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் தொடர்ந்து இடம்பெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

"கதிர்காம வசந்தம்"
இணுவில் கிழக்கு, இணுவில். (45386) (38-14-24)

தாய், சகோதரர்கள்,
உறவினர்கள்.

## சக்தி ரீ.வியில் 'பயோரெக்' நிகழ்வு

'பயோரெக் ஒன்றியன்' நிறுவனம் இலங்கை முதலீட்டுச் சபையில் பதிவுசெய்துகொண்டதைக் குறிக்கும் நிகழ்வு இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 7.30 மணிக்கு சக்தி ரீ.வியில் ஒளிபரப்பாகவுள்ளது. கடந்த மாதம் 28ஆம் திகதி மேற்படி நிறுவனம் முதலீட்டுச் சபையில் பதிவு செய்துகொண்டமை குறிப்பிடத்தக்கது.

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்



### திருமதி சின்னம்மா செல்லத்துரை (செல்லம்மா)

அன்புக்கும் பண்புக்கும்
இலக்கணமானவரே!
உங்கள் ஆத்மா சாந்திபெற
இறைவனை வேண்டுகிறோம்.

அன்னாரின் அந்தியேட்டிக் கிரியைகள் இன்று (15-05-2005) ஞாயிற்றுக்கிழமை காலை 7 மணிக்கும் சபிண்டீகரண நிகழ்வுகள் நாளை (16-05-2005) திங்கட்கிழமை முற்பகலில் அன்னாரது இல்லத்திலும் நடைபெறவுள்ளதால் இந் நிகழ்வுகளில் கலந்து அன்னாரது ஆத்மசாந்திக்காகப் பிரார்த்திப்பதோடு, மதியபோசனத்திலும் பங்கேற்குமாறு எமது உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

'செல்வ வாசம்'
இடைக்காடு, அச்சுவேலி.

– குடும்பத்தினர்.
(45389) (24-14)


## பணியாளர் தேவை

சிற்றுண்டிச்சாலையில் பணியாற்றுவதற்கு காசாளர், பணியாளர்கள் தேவை. உடன் நேரில் வரவும். சம்பளம் பேசித் தீர்மானிக்கப்படும்.

தொடர்பு:
யாழ். மாநகரசபை ஊழியர் சிக்கன கடனுதவிக் கூட்டுறவுச் சங்கம்,
மாநகர சபை, யாழ்ப்பாணம்.
(சி-42828)(24-14)


# மரண அறிவித்தல்கள்

## அத்தனாஸ் அருட்பிரகாசம் (அருளையா)



ஏழாலையைப் பிறப்பிடமாகவும் கந்தர் மடத்தை வசிப்பிடமாகவும் கொண்ட அத்தனாஸ் அருட்பிரகாசம் அவர்கள் 10-05-2005 செவ்வாய்க்கிழமை காலமானார்.

அனனார் காலஞ்சென்ற அத்தனாஸ் (கந்தையா) - றோசம்மா (லட்சுமி) தம்பதியரின் அன்பு மகனும் தையல்நாயகியின் அன்புக் கணவரும் காலஞ்சென்றவர்களான சிங்கராயா, நேசம்மா, நல்லம்மா, நல்லையா மற்றும் நேசையா (உதவி அரச அதிபர் பணிமனை, தெல்லிப்பழை) ஆகியோரின் அன்புச் சகோதரரும் செல்வநாயகம் (ஓய்வுபெற்ற நில அளவை புல உதவியாளர், நில அளவைத் திணைக்களம்), அருள்நாயகி, அருள்மாலினி (ஓய்வுபெற்ற தாதிய உத்தியோகத்தர், யாழ். போதனா வைத்தியசாலை - பிரான்ஸ்), அருட்செல்வி (முன்னாள் ஆசிரியை, கோண்டாவில் இந்து மகாவித்தியாலயம் - கனடா), அருள்மலர் (ஊழியர், HILLS COLOR FOTO (PVT) LTD, COLOMBO) ஆகியோரின் அன்புத் தந்தையாரும் இந்திரவதனா, குலசபாநாதன், பாலசுப்பிரமணியம் (பிரான்ஸ்), சற்குணராஜா (கனடா) ஆகியோரின் அன்பு மாமனாரும் கிரிஷாந், ரவிசாந், சசிகாந், சுவேந்தா, நிகேசன், அபிராமி, கஜப்பிரகாஷ், சுரபி,சயந் ஆகியோரின் பாசமிகு பேரனும் காலஞ்சென்றவர்களான ஞானப்பிரகாசம் (டாக்டர் - சித்த வைத்தியம்), கனகாம்பிகை, காசிலிங்கம் (லிகிதர், கல்வித் திணைக்களம்) மற்றும் இரத்தினேஸ்வரி (ஓய்வுபெற்ற முன்னாள் ஆசிரியை, யா/நாவலர் இந்து மகாவித்தியாலயம்), காந்தியம்மா ஆகியோரின் மைத்துனருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (15-05-2005) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு கோப்பாயிலுள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் ஏழாலை புனித இசிதோர் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*கிறேசர் பின் ஒழுங்கை,*
*இராச வீதி, கோப்பாய்.*

தகவல்: (45384)(46-14-24)
கு.குலசபாநாதன் (மருமகன்) நயினாதீவு.

## கந்தசாமி. சிவபாதம்

(முன்னாள் பொதுமுகாமையாளர் கடற்றொழிலாளர் கூ.சங்கம்–மயிலிட்டி, பதில்முகாமையாளர் வடபிராந்திய பாரவூர்தி உரிமையாளர் கூட்டுறவுச் சங்கம்)



வயாவிளானைப் பிறப்பிடமாகவும் இல.69, ஸ்கந்தபுரம், கிளிநொச்சியை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தசாமி சிவபாதம் அவர்கள் 13.05.2005 வெள்ளிக்கிழமை இறையடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தசாமி - இராசம்மா தம்பதிகளின் மூத்த புதல்வனும் சிவராணியின் அன்புக் கணவரும் சிவலோஜினி (ஆசிரியை, மு/கோட்டைகட்டியகுளம் அ.த.க. பாடசாலை), சிவதர்சினி (வடபிராந்திய பாரவூர்தி கூட்டுறவுச் சங்கம்), சிவரூபன் (மின்னியலாளர் 5 நைன் எலக்றிகல் கொண்டக்ரேர்ஸ், கொழும்பு), சிவநந்தன் ஆகியோரின் அன்புத் தந்தையும் இராகுலனின் (கரைச்சி கிழக்கு பலநோக்கு கூட்டுறவுச் சங்கம்) மாமனாரும் திருநாவுக்கரசு, அருள்தேவி ஆகியோரின் அன்புச் சகோதரனும் முகுந்தனின் பெரியப்பாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (15-05-2005) ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணியளவில் அவரது தற்காலிக முகவரியில் (இல.49/4, யாழ். வீதி, சிறீதர் தியேட்டர் பின்புறம்) நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காகக் கோம்பையன்மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*இல.49/4, யாழ். வீதி,*
*யாழ்ப்பாணம்.*
T.P.:0714182387. (45385)(46-14-17-38)

தகவல்:
குடும்பத்தினர்.

## திருமதி இலட்சுமி காசிப்பிள்ளை



சுன்னாகம், அந்தோனியார் கோயிலடியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி இலட்சுமி காசிப்பிள்ளை அவர்கள் 13.05.2005 வெள்ளிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வேலன் - பார்வதி தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்ற காசிப்பிள்ளையின் பாசமிகு மனைவியும் செல்லத்துரை, தம்பிராசா, நாகபூரணம், நவரத்தினம் (கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரியும் லூசியா லீயோ, நவரத்தினமணி, சிவநாதபிள்ளை, கனகரத்தினம், தங்கரத்தினம், பத்மநாதன், காலஞ்சென்ற குணரத்தினம் மற்றும் நாகரத்தினம் (ஜேர்மனி), இராசரத்தினம் (கனடா), அழகரத்தினம் (லண்டன்), சற்குணானந்தரத்தினம், பரஞ்சோதிலிங்கம் (டென்மார்க்) ஆகியோரின் பாசமிகு தாயாரும் காலஞ்சென்றவர்களான லியோ, தங்கரத்தினம் மற்றும் நாகேஸ்வரி, மீனலோஜினி, லோகேஸ்வரி ஆகியோரின் அன்பு மாமியாரும் ஜோய் லோறிற்றா, யோகமலர், சொர்ணலதா, பிறேமலதா, விஜயலதா, சந்திரலதா, சாந்தி நிகேதன், கர்ணாநிவேதன், சாந்தினி, சிறிதரன், சுமதி, கிருபாகரன், ரூபி, பகர்தரன், நஜீபா, சஞ்சீவ்குமார், சர்மிளா, ஜெனா, இந்திரா, பிறேந்திரா, சக்தியேந்திரன், கஜேந்திரன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியாரும் வேணுஷா, லியோனி லியோறின், ப்றையன், காயத்திரி ஆகியோரின் பாசமிகு பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (16-05-2005) திங்கட்கிழமை காலை 10 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் சுன்னாகம் கொத்தியாலடி மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*புனித அந்தோனியார் கோயிலடி,*
*சுன்னாகம்.* (45388)(24-38-14-17)

தகவல்:
கனகரத்தினம் (மகன்).


## சளைக்காத சக்தியும் அசுர பலமும்

BLACK & DECKER
DEWALT
High Performance Industrial Tools

தச்சு வேலைக்கு, இரும்பு வேலை மற்றும் வீடமைப்பு வேலைகளுக்கும்
பிளெக் அன்ட் டெக்கர் மற்றும் டிவோல்ட்
மின் சக்திக் கருவிகள் ஏராளம்




சமமான 12 தவணைகளில் செலுத்தக் கூடிய
இலகு தவணை முறையுடன்

இப்பொழுது நாடு முழுவதிலுமுள்ள விற்பனை முகவர்களிடமும்

பிரதான காட்சியறை: 482/1A, ரி. பி. ஜயா மாவத்தை கொழும்பு 10.

விற்பனையாளர்கள் - யாழ்ப்பாணம்

| | |
|---|---|
| நந்தலாலா இரும்பகம், யாழ்ப்பாணம் - தொலைபேசி: 021 222 | தங்கம் சன்ஸ், நெல்லியடி - தொலைபேசி: 021 226 3205 |
| குளோபல் காட்வெயார், யாழ்ப்பாணம் - தொலைபேசி: 021 222 2732 | தேவன்சன், சாவகச்சேரி - தொலைபேசி: 0777 847562 |
| லிங்கம் அன்கோ, யாழ்ப்பாணம் - தொலைபேசி: 021 222 2133 | தபோதரன், சுண்ணாகம் - தொலைபேசி: 0777 161738 |
| சுந்தர்சன்ஸ், மானிப்பாய் - தொலைபேசி: 021 222 2751 | சுதா ரேடர்ஸ், நல்லூர் - தொலைபேசி: 07773 107690 |

Delgraphics

நிகரற்ற பலம் - நேர்த்திமிகு வேலை

## மரண அறிவித்தல்

### திருமதி கந்தையா இலட்சுமிபிள்ளை
(நகோமி)



நாராயணன் வீதி, கோண்டாவில் கிழக்கு, கோண்டாவிலைச் சேர்ந்த திருமதி கந்தையா இலட்சுமிபிள்ளை (நகோமி) அவர்கள் நேற்று (14.05.2005) சனிக்கிழமை கர்த்தருக்குள் நித்திரையடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தையாவின் அன்பு மனைவியும் சரஸ்வதி (பிரான்ஸ்), பத்மநாதன் (பத்மஸ்ரீசவுண் சேவிஸ் உரிமையாளர், கோண்டாவில்) ஆகியோரின் அன்புத் தாயாரும் ஆவார்.

அன்னாரின் இறுதி நல்லடக்க ஆராதனை பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

தகவல்:
நாராயணன் வீதி, கோண்டாவில் கிழக்கு. (45409) பத்மநாதன் (மகன்). (16-15-53-25)

## கண்ணீர் அஞ்சலி



எங்கள் அன்புக்குரிய பேராசிரியர்
கா.குகபாலன்
அவர்களின் மூத்தபுதல்வி
**திருமதி திருமகள் கார்த்திகேயன்**
அவர்கள் காலமான செய்தி அறிந்து அழ்ந்த கவலை அடைவதுடன் அன்னாரின் ஆத்மசாந்திக்காக பிரார்த்திக்கும்

கரிகணன்
யாழ்ப்பாணம்.
(C-42846)(16-15-53-25)

## மரண அறிவித்தல்கள்

### திருமதி செல்வராசா சரஸ்வதி



கோண்டாவிலைப் பிறப்பிடமாகவும் நந்தாவில் கொக்குவிலை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி செல்வராசா சரஸ்வதி 11.05.2005 புதன்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (16.05.2005) திங்கட்கிழமை காலை 10 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கொக்குவில் இந்துமயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

நந்தாவில் ஒழுங்கை, கொக்குவில். (45392) (16-15-53-25)
தகவல்: குடும்பத்தினர்.

### சதாசிவம் கணேஸ்வரன் (கணேஸ்)
(பழக்கடை - ஊர்காவற்றுறை)



நாரந்தனை வடக்கைச் சேர்ந்த சதாசிவம் கணேஸ்வரன் (கணேஸ்) அவர்கள் நேற்று (14-05-2005) சனிக்கிழமை காலமானார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
பழைய தபாற்கந்தோர் ஒழுங்கை, கே.கே.எஸ். றோட், கொக்குவில். (45401)(16-15-53-25)
ச.சிவநாதன் (சகோதரன் - சிவம்)

### திருமதி சிவமணி பரஞ்சோதி



உடுப்பிட்டியைச் சேர்ந்த திருமதி சிவமணி பரஞ்சோதி அவர்கள் நேற்று (14.05.2005) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் பரஞ்சோதி (இளைப்பாறிய உத்தியோகத்தர், தொழில்திணைக்களம், கொழும்பு) அவர்களின் அன்பு மனைவியும் ஆனந்தகுமார் (சுகாதார முகாமைத்துவ உதவியாளர், யாழ்.போதனா வைத்தியசாலை), சிவகுமார் (டுபாய்) ஆகியோரின் அன்புத் தாயாரும் காலஞ்சென்ற நாகநந்தினி மற்றும் சுமதி (சுகாதாரத் திணைக்களம், DPDHS Office, Jaffna) காலஞ்சென்ற புஸ்பா மற்றும் திருமதி சுபத்திரா சந்திரசேனன், காலஞ்சென்ற சித்திரா மற்றும் சத்தியபாமா (இலங்கை வங்கி, திருநெல்வேலி) ஆகியோரின் ஆசை அத்தையும் சிவானந்தம் (இளைப்பாறிய சுங்க அதிகாரி), சிவலிங்கம் ஆகியோரின் சகோதரியும் காலஞ்சென்ற கிருகாம்பாள், இராஜேஸ்வரி ஆகியோரின் மைத்துனியும் மோகனப்பிரியா, கீர்த்தனப்பிரியா, பிரியதர்ஷனா, யவனப்பிரியா (உடுப்பிட்டி மகளிர் கல்லூரி), மதிசுதன் (உடுப்பிட்டி அமெரிக்கமிஷன்), சேயோன் (ஜேர்மனி) ஆகியோரின் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (15.05.2005) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் தகனக்கிரியைகளிற்காக வல்லை இந்துமயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*'சிவசோதிபவனம்'*
*சந்தை வீதி, உடுப்பிட்டி.*
*T.P.:060 2212640* (45404) (16-15-25)
தகவல்: குடும்பத்தினர்.

### நாகன் சோதிலிங்கம்
(இமையாணன்)
(இளைப்பாறிய படவரைஞர், கட்டடத் திணைக்களம்)



வல்வெட்டியைப் பிறப்பிடமாகவும் இமையாணனை வசிப்பிடமாகவும் கொண்ட நாகன் சோதிலிங்கம் அவர்கள் 13.05.2005 வெள்ளிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் பூமணியின் அன்புக் கணவரும் நாகநந்தினி (கட்டடத் திணைக்களம், வவுனியா), சுபாநந்தினி (கலைப்பீடம், யாழ்.பல்கலைக்கழகம்) ஆகியோரின் பாசமிகு தந்தையும் காலஞ்சென்றவர்களான நாகன் - அசுபதி தம்பதிகளின் மகனும், மயிலு - சின்னக்கண்டு தம்பதிகளின் மருமகனும் காலஞ்சென்ற நேசமலரின் சகோதரனும், இராசேந்திரம் (சுவிஸ்), இராஜரட்ணம் (சுவிஸ்), இரவீந்திரன் (சுவிஸ), இராஜேஸ்வரன் (சுவிஸ்), இராமச்சந்திரன் (சுவிஸ்), இராஜேஸ்வரி, இரத்தினேஸ்வரி ஆகியோரின் மைத்துனரும் அருந்தவச்செல்வி (சுவிஸ்), அருந்தவச்செல்வம் (ஆசிரியர்), வசீகரன் (வ.பி.போ.சபை, கோண்டாவில்) ஆகியோரின் மாமனாரும் பார்த்தீபன் (லண்டன்), பாமினி (ஆசிரியை), சுகீரதன் (மொறட்டுவ ஜேர்மன் தொ.நு.கல்லூரி), பகீசன் ஆகியோரின் பெரியப்பாவும், கேதாரணியின் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (14.05.2005) சனிக்கிழமை மாலை 4 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் வல்லை இந்துமயானத்தில் தகனஞ்செய்யப்பட்டது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*'மணிமகால்'*
*இமையாணன்.* (45397) (16-15-25)
தகவல்: சி.தெய்வேந்திரன் (சகலன்) (வ.பி.போ.சபை)

**கண்காட்சி இன்றுவரை நீடிப்பு**

சாவகச்சேரி இந்துக் கல்லூரியின் நூற்றாண்டு நிறைவை முன்னிட்டு நடத்தப்பட்டு வரும் கல்விக் கண்காட்சி இன்றுவரை நீடிக்கப்பட்டுள்ளது.

நேற்றுடன் நிறைவுறுவதாக அறிவிக்கப்பட்ட இக்கண்காட்சி இன்றும் இடம்பெறும் என விழாச்சபை தெரிவித்துள்ளது. (3-202)


இன்று ஆரம்பம் –
காலை 10 மணிக்கு
மாகாண மட்ட
ஆசிரியர் தெரிவு
போட்டிப் பரீட்சை
வகுப்புகள்

கிரகித்தல், பொது உளச்சார்வு

D.C.S நியூட்டன்
அரியகுளம் சந்தி,
யாழ்நகர்.
ஞாயிறு
10 - 1 P.M., 2 - 4 P.M.
திங்கள், புதன்
4 - 6 P.M.

திகழ் கல்வி நிறுவனம்
கே.கே.எஸ் றோட்,
இணுவில்.
திங்கள், செவ்., புதன்
6.30 - 8.30, A.M.
செவ்., புதன்
3 - 6 P.M. (16-15-25-53)

மாதிரிவினாத்தாள், பாடக் குறிப்புகள் வழங்கப்படும்.
அனுமதிகள் மட்டுப்படுத்தப்பட்டவை. (45399)





MTS இன் நாட்டிய மயில்' 2005

சர்வதேச ரீதியில் நடாத்தப்படவுள்ள
MTSஇன்
'நாட்டியமயில் 2005'இற்கான
விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**போட்டிக்கான விதிமுறைகளும் - நிபந்தனைகளும்**

- கருப்பொருள்: வர்ணம் (தமிழில் அமைதல் வேண்டும்)
  நேரம் (25 நிமிடங்கள் மட்டுமே)
- முதற்கட்டப் போட்டியில் பக்கவாத்தியம் அல்லது ஒலிநாடா உபயோகிக்கலாம்.
- உடை அலங்காரமும், ஒப்பனையும் பரத நாட்டிய நிகழ்வு போன்று அமைந்திருப்பின் விசேட புள்ளிகள் வழங்கப்படும்.
- விண்ணப்பங்கள் நடன ஆசிரியரின் உறுதிப்படுத்தலுடன் விண்ணப்பித்தல் வேண்டும்.
- விண்ணப்பதாரருக்கான முழுமையான பொறுப்பு, உறுதிப்படுத்தும் ஆசிரியருக்குரியது.
- விண்ணப்பங்கள் பரிசீலிக்கப்பட்ட பின்னரே ஏற்றுக்கொள்ளப்படும்.
- விண்ணப்பதாரர் 30-07-2005 இல் 16 வயதிற்கு மேற்பட்டவராயும், 25 வயதிற்கு உட்பட்டவராயும் இருத்தல் வேண்டும்.
- போட்டியாளர்கள் தங்களது சுயவிபரங்களை எமது நிறுவனத்தினால் வெளியிடப்பட்டுள்ள விண்ணப்படிவத்தில் அல்லது அதன் நகலில் விண்ணப்பிக்கலாம்.
- ஜூன் மாதம் 10ம் திகதிக்குள் விண்ணப்பித்தல் வேண்டும்.



விண்ணப்பங்கள் அனுப்பவேண்டிய முகவரி:
MTS INTERNATIONAL (PVT) LTD
532, ஆர். ஏ. டிமெல் மாவத்தை, கொழும்பு-03. தொலைபேசி: 2597124



**நாய்க்குட்டிகள் விற்பனைக்கு**

45 நாள்கள் நிரம்பிய வெள்ளை, மண்ணிற பொமேரியன் நாய்க்குட்டிகள் (ஆணும், பெண்ணும்) விற்பனைக்குண்டு.
தொடர்பு: சி.ஞானசேகரம் (ஆண்டவர்)
சாவல்கட்டு, ஆனைக்கோட்டை.
(45390) (15-16-25)



**மனோகரா யாழ்ப்பாணம்**

இந்தியாவிலும் இலங்கையிலும் ஒரேதின வெளியீடு.
சரத்குமார், அறிமுகம் ரமேஸ், பூஜா நடித்த
ஐதீகன்
காட்சி நேரம்: 10.30a.m., 2.30.p.m.,6.30p.m.,9.30 p.m.



**நாகம்ஸ் சினிமா சுன்னாகம்**



50 ஆவது நாளை நோக்கி
ரஜனி, நயன்தாரா, பிரபு, ஜோதிகா, வடிவேல், நாசர் நடித்த
சந்திரமுகி (ரீல்ஸ்)
காட்சிகள்: 11.00. 3.00. 7.00 (பு.நே.)



**ராஜா யாழ்ப்பாணம்**

தனுஷ், ஸ்ரீதேவி, கருணாஸ் நடித்த
தேவதையைக் கண்டேன் (ரீல்ஸ்)
காட்சி நேரம்: 10.30, 2.30, 6.30, 9.30 (பு.நே.)
விரைவில் இந்தியாவிலும், இலங்கையிலும் ஒரே தின வெளியீடு
அறிந்தும் அறியாமலும்



**நாதலிங்ஸ் சினிமா** யாழ்ப்பாணம்



செவ்வேல்
கா.நே.: 10.30, 2.30, 6.30, 9.30. (பு.நே.)


## முதலாவது பிறந்தநாள் வாழ்த்து



15-05-2005

கொழும்பில் வசிக்கும் மனோகரன் - சரிதா தம்பதிகளின்
செல்வப்புதல்வி அபிராமி

தனது முதலாவது பிறந்த நாளை இன்று (15-05-2005) ஞாயிற்றுக்கிழமை தனது இல்லத்தில் வெகு குதூகலத்துடன் விமரிசையாகக் கொண்டாடுகின்றார்.

அபிராமிக்குட்டியை அன்பு அப்பா, அம்மா, அம்மம்மா, கனடாவில் இருக்கும் அத்தை, சுரேஸ்மாமா, லண்டனில் இருக்கும் சுதாமாமா, அத்தை, கொழும்பில் இருக்கும் ஜெயாமாமா, திருகோணமலையில் இருக்கும் பெரியப்பா, பெரியம்மா, அண்ணா, அக்கா ஆகியோர் மனமார வாழ்த்துகின்றார்கள்.

தகவல்: அரசரத்தினம் இரஞ்சிதமலர், 'அன்னை இல்லம்' காளியம்மன் கோவிலடி, கம்பர் மலை, வல்வெட்டி.
(45394) (16-15-25-53)

## கண்ணீர்க் காணிக்கை



### திருமதி திருமகள் கார்த்திகேயன்
(விரிவுரையாளர், யாழ்.தேசியக் கல்வியியற் கல்லூரி)

*திருவிளக்காய் ஒளி தந்த திருமகளே!*
*அறிவுரைகள் பல கூறி ஒளி பகன்ற தீபமொன்று*
*ஓய்ந்துபோனதுமேன்?*
*கலங்குகின்றோம் செய்தி கேட்டு*
*கனவாகிப் போகாதோ? காதோரம் வந்த செய்தி*

அன்னாரை இழந்து தவிக்கும் குடும்பத்தினரின் கவலையில் நாமும் பங்கெடுப்பதோடு அன்னாரின் ஆத்மசாந்திக்காகப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

**நூலக விஞ்ஞானமும் தகவல் தொழில் நுட்பத்துறை, ஆங்கிலத் துறை, உள்ளகப் பயிற்சி ஆசிரியர்கள் 4ஆம் அணி யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி**
(45393)(16-15-22-25)


**HNB அஷ்யூரன்ஸ் யாழ்ப்பாணம்**
மென்பந்து துடுப்பாட்டச் சுற்றுப்போட்டி – 2004

## இறுதியாட்டம்

மேற்படி நிறுவனத்தால் நடத்தப்பட்டு வரும் மென்பந்து கிரிக்கெற் சுற்றுப்போட்டியின் இறுதியாட்டம் இன்று (15.05.2005) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு யாழ்.கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது. அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம். இறுதியாட்டத்தில் பங்குபற்றும் அணிகள்,

யாழ். தபாற்கந்தோர் எதிர் நல்லூர் பிரதேச செயலகம்.

குறிப்பு: இதில் பங்குபற்றிய அனைத்து அணிகளையும் அன்புடன் அழைக்கின்றோம்.

'நாங்கள் என்றும் உங்களை பாதுகாப்போம்.' (சி-42844)(30-15-16-25)

எச்என்பி அஷ்யூரன்ஸ், 212,214, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

# இந்தியத் தூதரகம்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஊடகங்கள் செய்திகளை வெளியிட்டதும் -

அந்தச் செய்திகள், அடிப்படைகள் எதுவுமற்றவை என்று இந்தியத் தூதரகம் வெள்ளிக்கிழமை (13.05.2005) அவசர அவரசமாக மறுப்பு வெளியிட்டிருந்ததும் வாசகர்கள் அறிந்ததே.

அந்த மறுப்புப் போதாது என்று கருதிப் போலும், புதுடில்லியில் உள்ள இந்திய அரசின், வெளிவிவகார அமைச்சின் பேச்சாளரை மேற்கோள்காட்டி நேற்று (14.05.2005) மற்றும் ஓர் அறிக்கையை கொழும்புத் தூதரகம் விடுத்தது.

அந்த அறிக்கையின் விவரம் வருமாறு:-

இலங்கைக்குத் தாம் ஆகக் கடைசியாக சென்றிருந்த வேளை அங்கிருந்த நிலைமை குறித்து எரிக் சொல்ஹெய்ம் வெளியுறவுச் செயலாளரிடம் விளக்கினார்.

சுனாமியால் பாதிக்கப்பட்ட வடக்கு - கிழக்குப் பகுதீ மக்களுக்குரிய நிவாரணப் பணிகளை மற்றும் மீள்கட்டுமானப் பணிகளுக்கு முத்தரப்புகளை உள்ளடக்கிய பொதுக்கட்டமைப்பு ஒன்றை உருவாக்குவதில் நோர்வேயின் பங்கு,பணிகளை அவர் ஷியாம் சரணிடம் விவரித்தார். அந்தக் கட்டமைப்பில் அரசாங்கம், விடுதலைப் புலிகள், முஸ்லிம், சிங்கள சமூகங்களின் பிரதிநிதிகள் அங்கத்துவம் பெறுவர் என்றும் சொல்ஹெய்ம் கூறினார்.

இந்த விவரங்களை இந்தியாவுடன் பகிர்ந்து கொள்வதனை வெளியுறவுச் செயலர் வரவேற்றதுடன், தமது பாராட்டுக்களையும் தெரிவித்தார். அத்தோடு இலங்கையின் சமாதான நடவடிக்கைகள் குறித்து, நோர்வே இந்தியாவுடன் நெருங்கிய முறையில் கலந்தாலோசனையை ஒழுங்காக நடத்தி வருவது குறித்தும் ஷியாம் சரண் நன்றி தெரிவித்தார்.

இலங்கையின் இன ஒற்றுமை, இறைமை, ஆட்புல ஒருமைப்பாடு ஆகியன குறித்து வெளியுறவுச் செயலர் மீண்டும் வலியுறுத்தி இருந்தால் அந்த நாட்டில் மீண்டும் வன்முறைகள் நடைபெறுவதற்கு இடமளிக்கக்கூடாது என்றும் - காணப்படும் சமாதானத் தீர்வு பலகட்சி ஜனநாயக் கோட்பாட்டில் அமைந்து அங்கு வாழும் சகல இன மக்களும் அமைதியுடனும் கௌரவத்துடனும் வாழ்வதற்கு வழிசெய்ய வேண்டும் என்று இணக்கம் காணப்பட்டது.

வடக்கு - கிழக்கு உட்பட இலங்கை முழுவதிலும் மீள்கட்டுமானம், சமூக அபிவிருத்தி ஆகிய பணிகளில் இந்தியா மேற்கொண்டு வரும் திட்டங்களை எரிக் சொல்ஹெய்முக்கு வெளியுறவுச் செயலாளர் விவரித்தார்.

இவ்வாறு நேற்று விடுக்கப்பட்ட அறிக்கை தெரிவிக்கிறது. (அ)

# பொதுக்கட்டமை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பொதுக்கட்டமைப்பை உருவாக்க முடியாத நிலை ஏற்படும்பட்சத்தில் அரசும் சர்வதேச சமூகமும் இணைந்து மாற்று ஏற்பாடு ஒன்றைச் செய்யவேண்டிய நிலை ஏற்படும்.

கண்டியில் நடைபெறவிருக்கும் உதவி வழங்கும் நாடுகளின் மாநாட்டுக்கும் பொதுக்கட்டமைப்புக்கும் நெருங்கிய தொடர்புகள் இருக்கின்றன. ஆனாலும் பொதுக்கட்டமைப்புடன் தொடர்புபட்டவிடயத்தை விட வேறு பல விடயங்களும் மாநாட்டில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

ஜே.வி.பி. தலைவர் சோமவன்ஸ அமரசிங்கவுடன் கலந்துரையாடினேன். அவரை ஜப்பானுக்கு வருமாறு அழைப்பு விடுத்துள்ளேன் - என்றார் அகாஷி.

(ஐ-3-7-8)

# தேர்தல் நடத்தும்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஒன்றுக்குப் போவதைத் தவிர வேறு வழியில்லை. எனது ஆலோசகர்களும் இதையே வலியுறுத்துகின்றனர் என ஜனாதிபதி அங்கு தெரிவித்தார்.

தற்போதுள்ள பொருளாதார நெருக்கடி நிலையில் தேர்தல் ஒன்றை நடத்துவது உகந்த விடயம் அல்ல. தேர்தலுக்கு சென்றால் மக்கள் எம்மைத் திட்டித் தீர்ப்பார்கள் ஆட்சியை ஐ.தே. கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவிடம் கையளியுங்கள். நாங்கள் எதிர்க் கட்சியில் இருந்து மக்களுக்குச் சேவை செய்வோம் என்று பிரதமர் தெரிவித்தார் என அறியவந்தது. (3)

# போதனை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நடந்த ஒன்றுகூடல் நிகழ்வில் கலந்து கொண்ட பிரஸ்தாப மாணவன் அங்குள்ள நீச்சல் தடாகத்தில் குளித்த சமயம் நீரில் முழ்கி மரணமானார் எனத் தெரிவிக்கப்பட்டது.

(ஐ-3)

# இடைக்கால அதிகார...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பொதுக்கட்டமைப்பு விடயத்தில் அரசு தொடர்ந்தும் இழுபறிபண்ணுகின்றது. இந்த விடயம் ஒரு பெரும் அரசியல் விவகாரமாக்கப்பட்டு தென்னிலங்கையில் சிங்களக் கட்சிகளிடையே பெரும் சர்ச்சையாகவும் உருவாக்கப்பட்டிருக்கிறது.

பொதுக்கட்டமைப்பு என்பது ஆழிப்பேரலையால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான நிவாரணம் மற்றும் மறுவாழ்வு சம்பந்தமாக சில திட்டங்களை முன்னெடுப்பதற்கான ஓர் அமைப்பு மட்டுமே. ஆனால், அது இன்று தென்னிலங்கையில் பெரும் அரசியல் விவகாரமாகப் பெருப்பிக்கப்பட்டிருக்கின்றது. தமிழர்களுக்கு ஏதோ தனிநாடு வழங்குவதைப் போலவும், உரிமைகளையும் அதிகாரங்களையும் அள்ளி வழங்குகின்ற ஒரு திட்டம் போலவும் பிரசாரப் படுத்தப்பட்டிருக்கின்றது.

பொதுக்கட்டமைப்பு விவகாரத்தில் ஏற்பட்டிருக்கும் இழுபறி மற்றும் சர்ச்சைகளைப் பார்த்தால் அது ஏதோ இனப்பிரச்சினைக்கான தீர்வு விவகாரம் போன்று அர்த்தப்படுத்தப்படுவதாகத் தெரிகின்றது.

இனப்பிரச்சினைக்கான பேச்சு முயற்சிகள், போரினால் பாதிக்கப்பட்ட பல லட்சம் தமிழ் மக்களின் மனிதாபிமான மற்றும் மறுவாழ்வுப் பணிகளுக்கு அடிப்படையான இடைக்கால அதிகாரக் கட்டமைப்புப் போன்ற முக்கிய விவகாரங்களைப் பின்தள்ளி, மூடிமறைத்து விட்டு பொதுக்கட்டமைப்பு ஒன்றுதான் தமிழர்களின் பிரதான பிரச்சினை என்பதுபோல தென்னிலங்கையில் அது பிரதானப்படுத்தப்பட்டுள்ளது.

ஆழிப்பேரலை அனர்த்தத்தால் பாதிக்கப்பட்டோருக்கான நிவாரணம் மற்றும் மீள்கட்டுமாணப் பணிகளை முன்னெடுப்பதற்குப் பொதுக்கட்டமைப்பு ஒன்றின் அவசியத்தை அரசுதான் முதலில் பிரேரித்திருந்தது. நாங்கள் அதனை ஏற்றுக்கொண்டோம். எங்களது தரப்பு யோசனைகளையும் முன்வைத்தோம். திருத்தங்களைச் செய்யவும் தயாராக இருந்தோம்.

ஆனால், அனர்த்தம் நிகழ்ந்து ஐந்து மாதங்களாகியும் அரசு ஓர் இணக்கத்துக்கு வரா மல் இழுபறி பண்ணுகிறது. இனியும் இந்த விடயத்தோடு ஒட்டியிருந்து இழுபறிப்படுவது அர்த்தமற்றது என்று உணர்கின்றோம்.

இரண்டு தசாப்தகால யுத்தம் விளைவித்த பேரழிவுகள், இன்னமும் பல்லாயிரக்கணக்கான தமிழ் மக்களின் இயல்பு வாழ்வுக்குத் தடையாக உள்ளன. அந்தப் பாதிப்புகளில் இருந்து எமது மக்கள் மீளவேண்டும். அதற்கான அடிப்படையாக நாங்கள் முன்வைத்திருப்பது இடைக்காலத் தன்னாட்சி அதிகாரசபை யோசனை. போர் அனர்த்தங்களினாலும், இயற்கைப் பேரனர்த்தத்தாலும் பாதிக்கப்பட்டிருக்கும் தமிழர் தாயக மக்களின் மறுவாழ்வுக்கு அதுதான் ஒரே அடிப்படை. இனி அதனை முதன்மைப்படுத்திச் செயற்படுவதுதான் அர்த்த பூர்வமாக இருக்கும்.

-இவ்வாறு தமிழ்ச்செல்வன் அகாஷிக்கு எடுத்து விளக்கினார் என அறியவந்தது.

இதேவேளை -

நேற்று அகாஷியுடன் நடத்திய சந்திப்பின் பின்னர் ஊடகவியலாளர் மத்தியில் பேசுகையில் தமிழ்ச்செல்வன் தெரிவித்ததாவது:-

இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகளில் முக்கியமான நாடாக ஜப்பான் விளங்குகின்றது. அத்துடன், சமாதான முன்னெடுப்புக்களுக்கும் அது தனது பங்களிப்பை வழங்கிவருகின்றது. அதன் காரணமாக இங்கு ஏற்பட்டுள்ள நெருக்கடி நிலைமைகள் தொடர்பாக அவர்களுக்கு எடுத்துக் கூறியுள்ளோம்.

முக்கியமாக தற்போது இந்த யுத்த நிறுத்தச் சூழல் மிகவும் நெருக்கடியான நிலையை எட்டியிருக்கின்றது. இது தொடர்பாக விரிவாக எடுத்துச்சொன்னோம். எமது மக்கள் மீது திணிக்கப்பட்டுள்ள இராணுவ நெருக்குவாரங்கள், படுகொலை முயற்சிகள் நிறுத்தப்பட்டு யுத்த நிறுத்த உடன்படிக்கையில் கூறப்பட்டுள்ளதைப் போன்ற இயல்பு நிலையை ஏற்படுத்துவதற்கான சூழலை ஏற்படுத்தாவிட்டால் மக்கள் கொந்தளிப்பான நிலைமைக்குத் தள்ளப்படுவது தவிர்க்க முடியாததாகிவிடும்.

மூத்த பத்திரிகையாளர்கள், மூத்த அறிஞர்கள் கொல்லப்படுகின்ற சம்பவங்கள் அதிகரித்து வருகின்றன. குறிப்பாக தென்தமிழீழத்தில் ஆயுதக் குழுக்களால் மக்கள் படுகொலை செய்யப்படுகின்றமையையும் நாம் ஜப்பானியத் தூதுவருக்கு விளக்கியிருக்கின்றோம்.

வடக்கு - கிழக்கில் ஆயுதக்குழுக்கள் செயற்பட அனுமதிப்பதில்லை என்பது யுத்த நிறுத்த உடன்படிக்கையில் ஏற்றுக்கொள்ளப்பட்டதொரு நடைமுறை. இதை மீறிப் படைத்தரப்பு எம் மீதான ஒரு நிழல்யுத்தத்தை ஆரம்பித்திருக்கின்றது. எனவே, சர்வதேச சமூகம் இவற்றை நிறுத்துவதற்கு இலங்கை அரசுக்கு அழுத்தம் கொடுக்க வேண்டும்.

ஆழிப்பேரலை அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான நிவாரண உதவிகளை இங்கு கொண்டுவர முடியாத ஒரு சூழலை இலங்கை அரசு ஏற்படுத்தியுள்ளது பற்றியும், தற்போது ஜனாதிபதி பொதுக்கட்டமைப்பில் கையெழுத்திடுவதாகவும், விரைவில் கொண்டு வருவதாகவும் அறிவிப்புக்களைச் செய்வது சர்வதேச உதவிகளைக் கவர்ந்திழுப்பதற்கான உத்தியே தவிர தமிழ் மக்களுக்கு நன்மையளிக்கும் விதத்தில் எதையும் செய்யவில்லை என்பதையும் நாம் தெளிவாகக் கூறினோம். - என்று தமிழ்ச்செல்வன் தெரிவித்தார்.

(ஐ-3-8-7)



அதிரடி விலைக் கழிவில்

10,500/= 13,500 /=

மொபிரெல், டயலொக் மேசைத்தொலைபேசிகள் இணைப்புடன் எப்பிரதேசத்திற்கும் பொருத்தித்தரப்படும்.

- உத்தரவாதம் உண்டு.
- உள்வரும் அழைப்பு முற்றிலும் இலவசம்.

தொடர்புகளுக்கு : பவர் செலூலர் டிரேடிங்கம்பனி.

| | |
|---|---|
| office | : 185, முதலாம் மாடி, கஸ்தூரியார் வீதி. |
| Shop | :205/01 கஸ்தூரியார் வீதி, யாழ். |
| Tel/Fax | :021 - 222 7070 |
| Mobile | :0712 - 399220 |
| | 0714 - 182500 |
| | 0714 - 182501 |

[★ இச் சலுகை கையிருப்பு முடியும் வரை மட்டுமே]

(#-42467)(30-15)


# மரண அறிவித்தல்கள்

## கந்தையா கிருஷ்ணபிள்ளை

(சிவசக்தி மில் உரிமையாளர்)

புங்குடுதீவு, 9 ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் கிளிநொச்சி இல.128, வில்சன் வீதியை வதிவிடமாகவும் கொண்ட கந்தையா கிருஷ்ணபிள்ளை நேற்று (14.05.2005) சனிக்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

வில்சன் வீதி,
கிளிநொச்சி. (#-42847)(30-15-16-12)

தகவல்:
குகேந்திரகுமார் (மகன்).

## பொன்னையா சீவரத்தினம்

அல்வாய் தெற்கைப் பிறப்பிடமாகவும் வதிரி, பஞ்சுதோட்டத்தை வசிப்பிடமாகவும் கொண்ட பொன்னையா சீவரத்தினம் அவர்கள் நேற்று (14.05.2005) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் ஸ்ரீதேவியின் அன்புக் கணவரும் சிவராசா (ஜனா கூ, நீர்கொழும்பு), சிவகுமார் (ஸ்ரீ கூபலஸ், நீர்கொழும்பு), யோகராஜ, சியாமளா, ஸ்ரீதரன் (லண்டன்), வாமதேவன் கோமளா, பொன்னாதன், சிவனேசன், சித்தார்த்தன் ஆகியோரின் அன்புத் தந்தையுமாவார்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சிவமஹால்,
அல்வாய் தெற்கு, அல்வாய், வதிரி. (#-42848)(30-15-12-16)

தகவல்:
சீ.சிவராசா (மகன்).


D.C.C.A இன்

2005 A/L பரீட்சை மாணவர்களுக்கான மாபெரும் கருத்தரங்கு

| | |
|---|---|
| அரசறிவியல் | - பொன்சந்துரு |
| புவியியல் | - கிரிதரன் |
| தமிழ் | - பாலமுரளி |
| கிறிஸ்தவம் | - றங்கன் |
| நாடகம் | - சந்திரன் |

புறெஜெக்ரர் மூலவிளக்கம், எதிர்பார்க்கை வினாக்கள்.
பாடக்குறிப்புகள் 21,22,23,24 மே பதிவுகள் இன்றிலிருந்து

D.C.C.A மக்கள் வங்கி அருகில்
ஸ்ரான்லி றோட், யாழ்ப்பாணம்.

மாபெரும் கருத்தரங்கு
வணிகக்கல்வி
A/L 2005
பகுதி - 2

காலம்: 17.05.2005. (8.30)
இடம்: விக்னா கல்வி நிறுவனம்
ஆசிரியர் : திரு.ப.முரளி.B.B.A (F.M.Spl.)


# மரண அறிவித்தல்கள்

## முருகேசு வேலுப்பிள்ளை



காரைநகர், களபூமி விளானைச் சேர்ந்த முருகேசு வேலுப்பிள்ளை அவர்கள் நேற்று (14.05.2005) சனிக்கிழமை காலமாகி விட்டார்.

அன்னார் காலஞ்சென்ற முருகேசு - வள்ளியம்மையின் மகனும் காலஞ்சென்ற சின்னத்தம்பி - சிவகாமிப்பிள்ளையின் மருமகனும் சின்னம்மாவின் அன்புக் கணவரும் ஆறுமுகம், கனகரத்தினம் (மலேசியா), காலஞ்சென்றவர்களான கந்தையா, கணபதிபிள்ளை ஆகியோரின் சகோதரரும் நடராசா, பாலசுப்பிரமணியம் (கிளி) ஆகியோரின் தந்தையும் தர்மலோசினி, சோதி ஆகியோரின் மாமனாரும் உதயபாஸ்கரன், [illegible]ணிகைவாசன், பிரியதர்சினி, பிரதீபன், தேவப்பிரியன், ஜேஜன், அகல்யா ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (15.05.2005) ஞாயிற்றுக்கிழமை நண்பகல் 12 மணியளவில் நடைபெற்றுப் பூதவுடல் தில்லை மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
நடராசா, பாலசுப்பிரமணியம்
(கிளி - மகன்மார்).

(#-45412)(30-15-18)

## இராசசிங்கம் பாலசுப்பிரமணியம் (பாலன்)

(இ.போ.ச.நடத்துநர்)

கரணவாய் கிழக்கு, மணற்பாதியைப் பிறப்பிடமாகவும் கரணவாய் தெற்கை வசிப்பிடமாகவும் கொண்ட இராசசிங்கம் பாலசுப்பிரமணியம் நேற்று (14.05.2005) சனிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (16.05.2005) திங்கட்கிழமை முற்பகல் 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் கிராய் மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

வீரபத்திராஜன்,
கரணவாய் தெற்கு, கரவெட்டி. (#-45412)(30-15-18)

தகவல்:
குடும்பத்தினர்.


EXPOAIR
your friend in the skies...
எக்ஸ்போ எயார்
வானத்தில் உங்கள் நண்பன்...




தினசரி யாழ் - கொழும்பு விமான சேவை
ஒதுக்கீடுகளுக்கும் விமான பயணச்சீட்டுக்களுக்கும்
கொள்ளுப்பிட்டியில் - 011 2372 952 / 3, வெள்ளவத்தையில் - 011 2360 290 / 1
யாழ்ப்பாணத்தில் - 021 222 3891 / 6297, 0772 348888, 0772 349999
E-Mail : reservations@expoavi.com, jaffna@expoavi.com


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 15.05.2005 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

# கரையோர மீனவர்களைப் பாதுகாக்க ‘ஜீவ சமுத்திரம்’ காப்புறுதித்திட்டம்

நாட்டின் முன்னணி காப்புறுதி நிறுவனமான செலிங்கோ ஆயுள் காப்புறுதி நிறுவனம் கரையோரப் பொருளாதாரத்தோடு தொடர்புடைய மக்களின் அன்றாட வாழ்வையும், வாழ்வாதாரங்களையும் பேணும் வகையில் விஷேடமாகக் குறைந்த வருமானம் பெறுபவர்களைப் பாதுகாக்கும் நோக்கில் உன்னதமான ஆயுள் காப்புறுதித் திட்டமொன்றை வகுத்துள்ளது.




''ஜீவ சமுத்திரம்'' என்று இந்தப் புதிய காப்புறுதித்திட்டம் முத்திரையிடப்பட்டுள்ளது. ஒருமுறை மட்டும் கட்டுப்பணத்தை செலுத்துவதன் மூலம் உடனடியாக எவ்வித இடைஞ்சல்களும் இன்றிப் பெற்றுக் கொள்ளக் கூடியதாக இது அமைந்துள்ளது. கரையோர மக்களின் வாழ்வு அன்றாடம் ஆபத்தை எதிர்நோக்குவதை அடிப்படையாகக் கொண்டு இந்த ஆயுள் காப்புறுதி அமைந்துள்ளது.

2,200 ரூபா மாத்திரம் கட்டுப்பணமாகச் செலுத்துவதன் மூலம் ஐந்தாண்டுகளுக்கு 1,00,000 ரூபாவை ஆயுள் காப்புறுதியாகப்பெற முடியும். டிசம்பர் மாதம் 26 ஆம் திகதி ஏற்பட்ட ஆழிப்பேரலை அனர்த்தத்தில் பெரும்பாலான உயிர்கள் பலியானதைக் கருத்திற் கொண்டு இந்த விஷேட ஆயுள் காப்புறுதி உருவாக்கப்பட்டுள்ளது.

''காப்புறுதியின் பெறுமதியை உண்மையில் செய்வதாக ஆழிப்பேரலை அனர்த்தம் அமைந்தது. அத்தோடு கரையோரங்களில் வாழும் மக்கள் எந்தளவு ஆபத்தை எதிர்நோக்கியுள்ளனர் என்பதையும் இது புலப்படுத்துகின்றது.'' -என்று கூறினார் செலிங்கோ ஆயுள் காப்புறுதி நிறுவன பிரதம நிறைவேற்று அதிகாரி ஆர். ரங்கநாதன். ஆழிப்பேரலையால் உயிர் இழந்தவர்கள் சார்பில் விண்ணப்பிக்கப்பட்ட ஒவ்வொரு விண்ணப்பத்துக்குமான கொடுப்பனவுகளையும் செலிங்கோ நிறுவனம் வழங்கியுள்ள போதிலும், இந்த அழிவால் உயிர் இழந்தவர்களுள் ஒரு சிறு பகுதியினர் மட்டுமே காப்புறுதி செய்துள்ளனர்.

கரையோரப் பகுதி மக்கள் எதிர்நோக்கும் ஆபத்துக்கள் இன்னும் தணியவில்லை என்பதை அண்மைய சம்பவங்கள் எடுத்துக் காட்டுகின்றன. மேலும் இவர்களுக்குக் கட்டுப்படியாகும் வித்ததிலான ஒரு ஆயுள் காப்புறுதித் திட்டத்தின் அவசியத்தையும் அது உணர்த்துகிறது. காப்புறுதித் துறையின் புதிய தலைவர் என்ற வகையில் சனத்தொகையின் இந்தப் பிரிவைக் காப்பதற்கான பொறுப்பை ஏற்கமுடிவு செய்துள்ளோம் என்று ரங்கநாதன் மேலும் கூறினார்.

மாதாந்தம் 5,000 முதல் 15,000 ரூபாவரை வருமானமீட்டும் 18 வயதிற்கும் 45 வயதிற்கும் இடைப்பட்டவர்களை இலக்காகக் கொண்டு இந்தப் புதிய திட்டம் உருவாக்கப்பட்டுள்ளது. இத்திட்டம் விஷேடமாகக் கவனம் செலுத்தும் ஒரு பிரிவு மீனவர்களாகும்.


"ஜீவ சமுத்திரம்" மரணத்துக்கான கொடுப்பனவை வழங்கும் ஒரு ஆயுள் காப்புறுதியாக இருந்த போதிலும் காப்புறுதியாளர்களுக்கு செலிங்கோ ஆயுள் காப்புறுதி நிறுவனம் அதன் ''லைப் ரிவோர்ட்ஸ்'' பிரதிபலன்களூடாக வழங்கும் இரண்டு விதமான நன்மைகளையும் அடைந்து கொள்ள முடியும் என்று கம்பனி தெரிவித்துள்ளது. சாதனைபடைக்கும் மாணவர்களுக்கு வழங்கப்படும் பிரணாம புலமைப்பரிசில் மரணமடைந்த ஆயுள் காப்புறுதியாளர்களின் பிள்ளைகளுக்கு கல்வியைத் தொடர வழங்கப்படும் "ஆலோக" நன்மைகள் என்பனவையே இவையாகும்.

கருமபீடத்திலேயே பெற்றுக் கொள்ளக் கூடிய ஒரு சேவையாகஇது அமைவதால் காப்புறுதியாளர்கள் மருத்துவ பரிசோதனை செய்து கொள்ள வேண்டும் என்ற தேவையும் இல்லை. புதுப்பித்தல் கட்டணம், பருவகால கட்டுப்பணம் என எதுவும் இல்லாததால் ''ஜீவ சமுத்திரம்'' காப்புறுதியாளர்களுக்கு எந்த இடையூறும் அற்றதாகும். ஐந்தாண்டு காலகட்டத்தில் காப்புறுதி காலாவதியானதும் காப்புறுதியாளர்கள் இலகுவாக இன்னொரு ஆயுள் காப்புறுதியைப் பெற்றுக் கொள்ளலாம். அப்போது அவர் 45 வயதிற்கு குறைந்தவராக இருக்க வேண்டும் என்பது மட்டுமே நிபந்தணையாகும்.

கட்டுப்பண வருமானம், கிளை வலையமைப்பு என்பனவற்றைப் பொறுத்தமட்டில் இலங்கையின் முன்னணிக் காப்புறுதி நிறுவனமாக செலிங்கோ ஆயுள் காப்புறுதி நிறுவனம் காப்புறுதிச் சந்தையில் விரிவான பல ஆயுள் காப்புறுதித் திட்டங்களைக் கொண்ட நிறுவனமாகும். சந்தைத்தேவைக்கு ஏற்ப பலன் தரக்கூடியகாப்புறுதித் திட்டங்களை வகுத்து வருகின்றமையே இந்நிலைக்கு காரணமாகும்.

வர்ண இறப்பர் முத்திரை தயாரிக்கும் இயந்திரம்

முதன்முறையாக இலங்கையில்






- 10 நிமிடத்தில் முத்திரை தயார்
- வர்ணங்கள் 5
- அதிநவீன அமெரிக்க தொழிநுட்பம்
- மாதாந்த வருமானம் ரூ. 75,000/= க்கு மேல்
- அறிமுக விலை ரூ. 149,500/=
- Contact on weekdays: 0714-810891
  011-5527890, 011-4721102/3

C-Con Engineers (Pvt) Ltd
# 43, Lake Crescent, Colombo -0 2.
Tel: 011-4721102 /3
E-mail: civicon1@sltnet.lk

# 4 விநாடியில் 100 கி.மீ. வேகம்

கலப்பினக் கார் வகைகளில் பலவுண்டு. சமீபத்தில் ஜப்பானிலுள்ள டோக்கியோ வாகன கண்காட்சி இடம் பெற்றது. அதில் ஜப்பானிலுள்ள



கியோ பல்கலைக்கழகத்தின் (Keio University) மின்சார வாகன ஆய்வகத்தின் மாணவர்கள் தயாரித்த எலிகா (ELIICA)-(Electric Lithium lon Car) கான்செப்ட் கார் (Concept Car) என்ற அதி நவீன கலப்பின கார் (Hybrod Car) பார்வைக்கு வந்தது. இது எட்டு சக்கரங்களைக் கொண்டிருக்கும். இதன் ஒவ்வொரு சக்கரமும் 60 கிலோ வாற் சக்தியுள்ள மோட்டாருடன் கியர், பிரேக், சக்கர உருளை தாங்கு (Wheel bearing) என்பவற்றையும் கொண்டுள்ளது.

நான்கு பெரிய சக்கரங்களைவிட நான்கு சிறிய சக்கரங்களையும் கொண்ட இந்த காரின் சிறப்பம்சத்தைப் பற்றி கியோ ஆராய்ச்சி குழு கூறுகையில், ''இதன் அதிகரித்த சில்லுகளால் காரின் உள்ளே விசாலமான இடம் கிடைக்கிறது. சாலைகளில் நல்ல வலுவான பிடிப்பையும், பாதுகாப்பையும் தருகிறது.



அதிக சக்கரங்கள் இருப்பதினால் வினாடியில் 100 கிலோ மீற்றர் வேகத்தை எட்டும்'' –என்கின்றனர் இதன் உச்ச வேகம் மணிக்கு 368 கிலோ மீற்றரைத் தாண்டியது எனப் பரிசோதனையில் கண்டறியப்பட்டது. 328 வோல்ட் பற்றரியுடன் நேர்மாற்றி (Inverter) மற்றும் அனைத்துக் கணினி கட்டுப்பாட்டுச் சாதனங்களும் காரின் தளத்தில் 15 சென்றி மீற்றர் அளவிலேயே பொருத்தப்பட்டுள்ளன.

காரின் பாற்றரிக்கு மின் சக்தியை மீள மின்னேற்றம் (Recharge) செய்வதற்கு 10 மணி நேரம் தேவைப்படுகிறது. காரின் இரண்டு கடைசி சக்கரங்கள் மின்சாதனங்கள் உதவியுடன் வளைவுகளில் கஷ்டமில்லாமல் திரும்புவதற்கு ஏதுவாக வடிவமைக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு ஜோடி சக்கரங்களுடன் அதன் அதிர்வுத் தாங்கிகளும் (Shock Absorbers) நீரியல் தன்மையுடன் (Hydraulically) சக்கரங்களின் விரிவுத் தன்மைக்கு ஈடுகொடுக்கும் வகையில் இணைக்கப்பட்டுள்ளது. செலுத்துபவர் கஷ்டமின்றி திருப்புவதற்கு ஏதுவாக வடிவமைக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு ஜோடி சக்கரங்களுடன் அதனதன் அதிர்வுத் தாங்கிகளும் (Shock Absorbers) நீரியல் தன்மையுடன் (Hydraulically) சக்கரங்களின் விரிவுத் தன்மைக்கு ஈடுகொடுக்கும் வகையில் இணைக்கப்பட்டுள்ளன.

செலுத்துபவர் கஷ்டமின்றித் இலகுவாக காரை நிறுத்தத்தில் நிறுத்தவும், 'U' வளைவுகளில் (U-tuns) ஸ்டைலாகத் திருப்பவும் தக்க வகையில் இதன் தன்மைகள் இருக்கின்றன.

38 முன்னணி வாகன ஆராய்ச்சி நிறுவனங்களின் கூட்டுத் திறமையில் தயாரிக்கப்படும் இக்காரை உற்பத்தி செய்வதற்கு சரியான வரையறைத் திட்டம் எதுவும் இது வரை இல்லாவிட்டாலும் இது சந்தைக்கு வரும் காலம் சமீபத்தில்தான் உள்ளது. இதன் விலை எவ்வளவு தெரியுமா? சுமார் ரூபா இரண்டரை கோடியிலிருந்து மூன்று கோடி வரை. என்ன அசந்து விட்டீர்களா? தற்போதைக்கு இது கோடீஸ்வரர்கள் மட்டும் வாங்கக்கூடிய நிலையிலான அதிக விலை கொண்டவை என்றாலும், இது சந்தைக்கு வந்தபின் போகப்போக சராசரி மக்களும் வாங்குவதற்கு ஏற்றவாறு குறைந்த விலையில் கிடைக்கும்.

சுப்பிரிவிக்கி
மூலிகை
ஆயுர்வேத
பற்பசை




சுமுது
வாயில் உண்டாகும்
தொற்று நோய்களை
கட்டுப்படுத்தும்.

ஆயுர்வேத மூலிகை எண்ணெய் அடங்கிய பற்பசை



சித்தாலேப
குடும்பத்தின் தயாரிப்பு

வடபுல விநியோகஸ்தர்கள் :-
வனிக்கா மெடிகல்ஸ்
இல. 85, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே:- 021 2226291, பக்ஸ் :- 021 2222445.

# பனியை மட்டுமல்ல மனங்களையும் வென்ற சுவிஸ் வாழ் ஈழத் தமிழர்கள்

இனப்பிரச்சினை காரணமாக உலகின் பல்வேறு நாடுகளிற்கும் ஈழத்தமிழர்கள் சிதற நேர்ந்தது. அத்தகைய நாடுகளில் ஒன்று சுவிற்சர்லாந்து. ஐரோப்பாக் கண்டத்தில் ஒரு நாடாக இருந்தாலும் பல வகையில் தனித்துப்



ஆழிப்பேரலை நிவாரண நிதி சேமிப்பு

பார்க்கப்படவேண்டிய நாடு இது. குளிரையும், இயற்கை அழகையும் கொண்டிருக்கும் சுவிற்சர்லாந்தில் டொச், பிரெஞ்ச், இத்தாலி மற்றும் ரொமானிஷ் ஆகிய மொழிகள் பேசப்படுகின்றன.

அகதிகளாய் போன ஈழத்தமிழர்களுக்கு குளிர், பனி, உணவு, மொழி, கலாசாரம் என்கிற ஒரு பட்டியல் அன்னியமாய் - பிரச்சினையாய் இருந்தது. அவற்றை கடந்த இருபதாண்டு காலத்தில் பரிச்சயப்படுத்திக்கொண்டு - வென்று, இன்று அந்நாட்டின் குடிமக்களாகவும் மாறியுள்ளனர். சுவிஸ்காரர்கள் மதிக்கும் ஒரு சமூகமாக - விரும்பிப் பழகும் ஒரு சமூகமாக – தமிழ்ச் சமூகம் இருப்பதை நேரில் காணமுடிந்தது.

1985 ஆம் ஆண்டு சுவிஸ் நாட்டில் அகதியாய்ப் போன நேரம், தாம் எதிர்கொண்டவற்றை நாடகக் கலைஞர் அன்ரன் பொன்ராசா விவரிக்கும்போது, பல என் கற்பனைக்கு எட்டவில்லை. அங்கும் போராட்டம், மாற்று ரூபங்களில் இன்னல்கள் சுற்றியிருந்தன. ஆரம்பத்தில் இரவு தூங்குமிடத்தில் மட்டுமே தான் தங்கல். மீதி நேரங்களை ரயில் நிலையங்களிலோ, ஏதோ ஒரு பொது இடத்திலோ கழிக்க வேண்டும். பனித்திரையால் மூடியிருக்கும் அந்த நாட்டின் குளிரை அனுபவம் மட்டுமே முழுமையாய் உணர்த்தமுடியும். தேவையான உடைகள் இல்லாமல் தொடர்ந்து வெளியிடங்களில் இருக்க நேர்ந்தது ஒரு சவாலாகிவிட்டது.

தமிழர்கள் கூட்டம் கூட்டமாய் உரத்துப் பேசிக் கொள்வதை, அவர்களது உடை, நிறம், முடி போன்றவற்றை ஆரம்பத்தில் வினோதமாய்ப் பார்த்தார்கள் சுவிஸ்மக்கள். "கருப்பர்கள் தெரியும், வெள்ளையர்கள் தெரியும் இவர்கள் இரண்டிலும் அடங்காப் புதிதாக உள்ளனரே" என்றனராம்!

அரசாங்கமும் உடனடியாகத் தமிழர்களை வேலையில் சேர்த்துக் கொள்ள அனுமதிதரவில்லை. ஒருவகையில் தமிழர்களைத் தொந்தரவாக நினைத்த சுவிஸ்காரர்கள் அகதிகளைத் தாழ்வாகப் பார்த்தார்கள். தூரமாய் நின்று வேடிக்கை பார்ப்பதில் ஈடுபட்டனர்.

சுவிற்சர்லாந்து அரசாங்கம், தமிழ் அகதிகளுக்கு வேலை அனுமதி கொடுத்தபோதும் உடனே பெரியதாய் அழைப்புகள் ஏதும் வரவில்லை. முதல் மனப்பதிவின் எச்சம் ஐயமாய் மாறிவிட்டதோ என்னவோ! ஆனால் வேலையில் சேர்ந்தவர்கள் முதலாளிகளின் மனங்களை மாற்றினர். கடும் உழைப்பாலும், விரைவில் ஒன்றைப்புரிந்து கொள்ளும் திறத்தாலும் ஏனைய ஈழத் தமிழர்களுக்கும் வேலை கிடைத்தது. பலருக்கு உடனடியாகப் பதவி உயர்வுகளும் கிடைத்தன. ஒரு தமிழர் பதவி உயர்வு பெற்றாலோ, வேறு பணியின் காரணமாக சென்றாலோ பதவி காலியாகும்போது அவ்விடத்தை ஒரு தமிழரைக் கொண்டுதான் நிரப்ப சுவிஸ் முதலாளிகள் விரும்பினர்.

ஒருமுறை சுவிஸ் அரசு, அகதிகளை ஈழத்திற்குத் திருப்பியனுப்ப முயன்றபோது ஒலித்த எதிர்குரல்களில் ஹோட்டல்காரர்களின் ஒன்றியக் குரல் வலிமையாய் இருந்தது. தமிழர்களும் ஊர்வலம், போராட்டங்கள் மூலம் சூழலை உணர்த்தினர். சுவிஸ் மக்களின் கருத்தும் துணையாய் இருந்தது. இதனால் அகதிகளை திருப்பியனுப்பும் எண்ணத்தை அரசு மாற்றியது.

சுவிஸ் மக்களின் திறந்தமனதும், மனிதநேயமிக்க பார்வையும் நெகிழ்வானதாக இருக்கிறது. தொடர்ந்து பல்லின மக்களோடு அவர்கள்வாழும்வாழ்க்கையானது அந்நாட்டு அரசும், தொண்டு நிறுவனங்களும் சகமனிதர்களிடம் தோழமை காட்ட எடுத்துவரும் முயற்சிகள் சாத்தியமானதாகத் தெரிகிறது.

தூரமாய் நின்ற சுவிஸ் மக்கள், ஊடகம் வழியாகவும், நேரடிப்பகிர்தல், நாடக நிகழ்வுகள் மூலமும் அகதிகள் பற்றி அறிந்த போது தங்களை மாற்றிக் கொண்டார்கள். இளம் தலைமுறையினருக்கு பள்ளி, கல்லூரிகள் வாயிலாக விளங்கப்படுத்தினர். மாலை நேரச் சந்திப்பில் ஐயங்களை கேள்விகளாக்கினர். கலைக்கு குறிப்பாக நாடகத்திற்கு உயரமான இடம் உள்ள அந்த நாட்டில், அகதிகளின் பிரச்சினைகள் குறித்து டொச் - தமிழ் கொண்ட இருமொழி நாடகங்கள் தொடர்ந்து நிகழ்த்தப்பட்டன.

நாடகக்காட்சிகளையும், நாடகக் கலைஞர்களின் கருத்துகளையும் சேர்த்து விவரணப்படங்களாக்கிதொலைக் காட்சிகள் ஒளி பரப்பின.

வேலைசெய்து கொண்டேகலைக்காகவும், மொழிக்காகவும், பண்பாட்டுக்காகவும் எடுத்த முயற்சிகள், சிரமங்கள் தமிழர்களுக்கான அடையாளத்தை இப்போதுவழங்கியுள்ளன. தங்கள்செயல்களால் - நடத்தைகளால் நம்பிக்கைபெற்ற இவர்களுக்கு, வீடுவாடகைக்கு கிடைப்பதிலோ, ஒருவேலையில் சேர்வதிலோ இப்போது பிரச்சினையில்லை என்பது பலரது கருத்தாக உள்ளது.

தமிழர்களுக்கு உதவ வந்தவர்களின் நட்பும், தோழமையும் இருபதாண்டுகளுக்குப் பின்னும் தொடர்வது ஆரோக்கியமாக இருக்கிறது. சில முரண்பாடுகள் இருந்தாலும் தமிழர்களோடு சேர்ந்து நாடகத்தில் ஈடுபடஆர்வமாய் இருக்கும் சுவிஸ்கலைஞர்களைப்பார்க்க முடிந்தது. "நெருங்கி நடிப்பதற்கு தமிழ்ப் பெண்கள் இடம்தருவதில்லை" என்றார் ஊர்ஸ் அந்தர்ஸ் கிராவ் என்ற இயக்குனர். இவர் தமிழர்களுடன் சேர்ந்து நாடகங்களைமேடையேற்றுவதில் தீவிரமானவர். பல சமூகங்களை நன்கறிந்த அல்பின் பியரி என்ற சமூக மானுடவியலாளர், சுவிற்சர்லாந்தில் தமிழர்கள் போல் பிற சமூக மக்கள் இந்த அளவு தங்களை வெளிப்படுத்தவில்லை என்கிறார்.

கலையில் மட்டுமல்லாது, நண்பர்களுடன் பழகுவதில், வீட்டில் இருப்பதில் கூட கட்டுப்படுத்தப்பட்டிருப்பதால் கலாசார ரீதியான பிரச்சினைகள் பல குடும்பங்களில் உண்டு. பிரச்சினை முற்றும் நிலையில் அரசே பிள்ளைகளை வளர்க்க முற்படுவதையும் அறிந்தேன். மொழிவகையிலும் தங்கள் பிள்ளைகளைத் தமிழ் படிக்கக் கட்டாயப்படுத்தும் பெற்றோர்களைக் கண்டேன். பல தமிழ் மன்றங்கள் தமிழைச் சொல்லித்தர பாடத்திட்டங்கள் வகுத்துள்ளன. கடும் குளிரிலும் பிள்ளைகள் தமிழ் வகுப்புகளுக்குப் போகிறார்கள். தமிழர்களின் விழாக்களின் போது பலரும் கூடிக் கொண்டாடுகிறார்கள்.



சுவிஸ் நிதி சேகரிப்பு

எந்தப் பணியானாலும் தங்களின் அடையாளத்தைப் பதித்து முன்செல்லும் தமிழர்களை விரோதமாய் பார்க்கின்றவர்களும் அங்கு இருக்கிறார்கள். ஆனால் பெரும்பான்மையினர் தமிழரை நட்பாய்-உறவாய் - நெருக்கமாய் பார்க்கிறனர். உதாரணத்திற்கு சுவிஸ் நாட்டு அமைச்சு நிலையிலுள்ள ஓர் அதிகாரியைப் பார்க்கப் போனோம். எம்மை வீட்டுக் கழைத்த அவர் வரும் வழியைத் தொடர்ந்து கையடக்கத்தொலைபேசியில் சொல்லித்தான் அவரது வீட்டை சென்று சேர முடிந்தது. அவரிடம் எதையும் கேட்கவும் நகைச்சுவையாய் பேசவும் முடிந்தது. உடன்வந்தநண்பர்கள் அவரது குழந்தையிடம் டொச் மொழியில் பேசி விளையாடினர். சமையலறைக்கு அழைத்துத் தேநீர் தந்தார் அந்த அதிகாரி. தமிழர்களின் நாடக ஈடுபாட்டையும் தான் சமீபத்தில் பார்த்த 'வில்லியம் தெல்' நாடகம் பற்றியும் ஈடுபாட்டோடு பேசினார். பெருமையாய் இருந்தது.

தமிழர்களின் இருபதாண்டு கால சுவிஸ் நட்பை - உழைப்பை அவர்கள் எப்படிப் பார்க்கிறார்கள் என்பதை சமீபத்திய ஆழிப்பேரலை பேரழிவின்போது பலரும் அறிந்தனர். நிதி தருவதிலும், உறவுகளை விசாரிப்பதிலும் தமிழ் மன்றங்களில் குவிந்து உதவிகள் செய்வதிலும் சாலைகளில் நின்று நிதி திரட்டுவதிலும் பெரும் வியப்பையும், நெகிழ்வையும் அளித்துள்ளனர் சுவிஸ் மக்கள்.

"இதை எங்கள் இருபதாண்டுகால சுவிஸ் வாழ்வின் அறுவடையாகத்தான் பார்க்கின்றோம்" என்கிறார் அன்ரன் பொன்ராசா. அகதிகளாகச் சென்று பனியை - மொழியை - கலாசாரத்தை வென்று ஒரு மதிப்பான சமூகமாகியுள்ள ஈழத்தமிழர்கள் இப்போது அகதிகள் அல்லர், சுவிஸ் தமிழ்ச் சமூகத்தினர் சுவிட்சர்லாந்து நாட்டின் குடிமக்கள்.

**சி.அண்ணாமலை**
இந்தியா.

# அதிநவீன மோ.சைக்கிள்

இதோ வந்துவிட்டது. நவீன ரக 'ஈகோமொபைல், (Eco Mobile) மோட்டார் சைக்கிள்கள்.

போக்குவரத்து நெரிசலைச் சமாளிக்கும் விதமாக உருவாக்கப்பட்டிருக்கும் இந்த நவீன மோட்டார் சைக்கிள்களைப் பற்றிய தகவல்கள் பிரமிக்க வைக்கின்றன. 'பெராவ்ஸ்' என்ற சுவிஸ் நிறுவனம் ஒரு அதிசயமான பிரமிக்கத்தக்க முற்றிலும் மூடப்பட்ட -Eco Mobile என்ற மோட்டார் சைக்கிளை அறிமுகப்படுத்தியுள்ளது.

குறைந்த எரிபொருள் சக்தியில் இயங்கக் கூடிய ஒரு மினி கார் போன்ற இது, ஒரு சொகுசு கார் மற்றும் விளையாட்டுக் கார் போல இருக்கும். வடிவமைப்பைக் கொண்டது.

ஈகோமொபைல் காரின் அடிப்பீடம் (Chassis) கெல்வர் என்ற நிறுவனத்தின் மோனோகோக் உலோகத்தால் வடிவமைக்கப்பட்டது. இவ்வாகனம் கண்ணாடியால் மூடப்பட்ட மற்றும் உடையாத பாதுகாப்பு பட்டைகளைக்கொண்டு தயாரிக்கப்பட்டுள்ளது.

இதன் திசை திருப்பி (Steering) விமானத்திற்குண்டான உயர் ரக உலோகங்களைக் கொண்டு வடிவமைக்கப்பட்டுள்ளது. இதன் முன் பகுதிஅதிகஇடத்தைபார்க்கக் கூடிய (Telescopic) கண்ணாடியைக் கொண்டது. இது சூரிய ஒளிபுகும் வண்ணம் கண்ணாடியைக் கொண்ட மேற்கூரையுடன் இணைக்கப்பட்ட இறகு போல் திறக்கும் கதவுகளைக் கொண்டது.

பொருள்கள் வைக்கும் அறை பின்புறம் இருக்கும் காரில் உள்ளதுபோல் இருக்கைப்பட்டி (Seat Belt) பொருத்தப்பட்டுள்ளது. வாடிக்கையாளரின் விருப்பத்திற்கேற்ப நிறத்தைத் தேர்தெடுக்கலாம்.

இயந்திரத்தின் பகுதி சக்தி BMW - K100 கார் ரகத்தை ஒத்த 4 சிலிண்டர் திறன்கொண்டது. அதாவது 1,000 சி.சி. அல்லது 1,200 சி.சி. ஆகும். 4 Speed PG பற்சக்கரத்துடன் உலர் ஒற்றைத் தகடு சுழல்கவ்வி (Dry Monodisc - Clutch) இணைக்கப்பட்டுள்ளது. இவையனைத்தும் BMW வில் ஒற்றைகோல் மூலம் (Monolever Shaft drive) பின்சக்கரத்தை இயக்குகிறது. ஆனால், பிரேக் வட்டத்தகட்டுடன் (Disc) இணைக்கப்பட்ட Hydraulic பிஸ்டனால் மோட்டார் சைக்கிளை நிறுத்த முடிகிறது. பிரேக் மின்னணு தொழில்நுட்ப முறையைக் கொண்டுள்ளது. சக்கரத்தின் ஆரைக்கால்கள் அலுமினியத்தாலான (Spokes) ஒவ்வொரு சக்கரத்தின் அளவிற்கேற்ப 3 அல்லது 8 எண்ணிக்கையைக் கொண்டது. அடிப்படையில் இது விமானத்தின் அமைப்பைக் கொண்டது.

மோட்டார் சைக்கிளின் மற்றப் பாகங்கள்காரில் உள்ளதுபோன்றது இரட்டைக் நிறத்தில் தோலினாலான இருக்கைகள், தானியங்கி இருக்கைப் பட்டியுடன் பொருத்தப்பட்டு உட்புறம் அழகாக அலங்கரிக்கப்பட்டிருக்கிறது. தானாகப் பூட்டிக்கொள்ளக்கூடிய பொருட்கள் வைக்கும் அறை இருக்கையின் பின்புறம் உள்ளது.

பி.எம்.டபிள்யூ காரில் உள்ள வசதிகளைப்போல் வெப்பம் மற்றம் காற்றோட்ட வசதி முறைகள், மூன்று நிலை



மின்விசிறிகள், கண்ணாடியில் படரும் பனி அகற்றும் கருவி, பயணியர் டேப் ரெக்கார்டர், குளிரூட்டும் சாதனம், மொபைல் போன் இன்னும் பல வசதிகள் இம்மோட்டார் சைக்கிளில் பொருத்தப்பட்டுள்ளன.

நம்ம ஓட்டோ போல் காட்சி தரும் ஈகோ மொபைல் (ECO MOBILE) மோட்டார் சைக்கிள் சாதாரண மோட்டார் சைக்கிளில் உள்ளதுபோன்ற கைபிடி (Handle Bar) பலவித அம்சங்களுடன் பொருத்தப் பட்டுள்ளது. இடது புறத்தில் குழல்பிடி (Clutch), பற்சக்கரத்தண்டு (Gear Lever) மற்றும் அதன்ஆழியுடன்இணைக்கப்பட்டுள்ளது.

வலதுபுறத்தில் பிரேக் காலால் மிதிக்கும்(Pedal) முறையில் அதன் தண்டு (Break lever) மற்றும் திருகுகம்பியுடன் இணைக்கப் பட்டுள்ளது. டர்போமேட்ஸ் (TRUBO MADSS) இது ஈகோ மொபைல் சூப்பர் தர்போ என்றழைக்கப்படும் (BMWK-1,200 ரக இயந்திரம் - Engine) பொருத்தப்பட்டுள்ளது. இதனுடைய அதிக வேகம் மணிக்கு 325 கி.மீ. ஆகும். ஊனமுற்றவர்களுக்கான கையால் இயக்கும் ஈகோ மொபைல் (Hand operated ECO MOBILE for Handicapped Drivers) இது ஊனமுற்றவர்களுக்காக பிரத்தியேகமாக கையால் இயக்கும் விதமாக உருவாக்கப்பட்டுள்ளது.

ஊனமுற்றவர்களும் அதில் நுழைவதற்கு மற்றும் சவாரி செய்வதற்கு ஏற்ப அதன் இருக்கை மற்றும் கதவுகள் அமைக்கப்பட்டுள்ளன. சக்கர நாற்காலி வைப்பதற்கும் அதிலே இடம் ஒதுக்கப் பட்டுள்ளது. இதன் தயாரிப்பு ஜெர்மனியைச் சேர்ந்த ஒரு தணிக்கை ஆய்வுக் குழுவால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது. இவ்வகை மோட்டார் சைக்கிள்கள் பெட்ரோலிலும் இயங்கக் கூடியவை. ஹைட்ரஜனிலும் இயங்கக்கூடியவை.





நாடெங்கும் வியாபித்திருக்கும் எமது சக்தி

AMW

'யமஹா கோர்னர்' 14/9, ஸ்ரீ ஜினரத்ன மாவத்தை கொழும்பு 02. தொலைபேசி: 2304231, 2304232, 4718603. தொலைநகல்: 94 11 2304266

077 3047251-5

சூரியகாந்தி

உதயன்

ஞாயிறு சிறப்பம்சம்

15.05.2005

# கண்டி மாநாட்டில் பொதுக்கட்டமைப்பின் அவசியம் அரசுக்கு உணர்த்தப்படுமா?



ஆழிப்பேரலை அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட மக்களின் மீள் கட்டுமானப் பணிகளுக்கு உதவி வழங்குவது குறித்து ஆராய்வதற்காக உதவும் நாடுகளின் கூட்டம் நாளையும் நாளை மறுதினமும் கண்டியில் நடைபெற ஏற்பாடாகி உள்ளது.

இந்த மாநாட்டின் மூலம் இலங்கை எதிர்பார்க்கும் 2 பில்லியன் அமெரிக்க டொலர்களை உதவி வழங்கும் நாடுகள் வழங்கக் கூடும். ஆனால், அந்த நிதி நிபந்தனைகளின் அடிப்படையிலேயே வழங்கப்படலாம் என்ற நிலையே உள்ளது.

யுத்தத்தினால் அழிந்து போன வடக்கு – கிழக்கின் மீள்கட்டுமானப்பணிகளை முன்னெடுக்க அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் நடந்த ஆறு சுற்றுப்பேச்சுக்களின் பயனாக – சர்வதேச சமூகம் 4.5 பில்லியன் அமெரிக்க டொலர்களை வழங்கியது.

ஒஸ்லோவிலும் ரோக்கியோவிலும் கூடிய சர்வதேச நாடுகள் வடக்கு – கிழக்கு மீள்கட்டுமானத்துக்கு நிதி வழங்கியதுடன் நிபந்தனை ஒன்றையும் விதித்திருந்தன.

இலங்கையில் சமாதானச் செயற்பாடுகள் வெற்றிகண்டு அதன் ஊடாகச் சமாதானத்தீர்வு எட்டப்பட்ட பின்பே இந்த நிதியைப் பயன்படுத்தலாம் என்பதே சர்வதேச சமூகம் விதித்த நிபந்தனையாகும்.

இந்த நிதியைக் கையாள 'சிரான்' என்ற அமைப்பும் உருவாக்கப்பட்டது. அந்த அமைப்பு இப்போது பெயரளவில் மட்டுமே செயற்பட்டுக்கொண்டிருக்கின்றது. அதற்கு நிதிவளம் ஏதும் கிட்டவில்லை. அதிகார வலுவுமில்லை. அது செத்துச் செயலிழந்து கிடக்கின்றது.

அந்த அமைப்புக்குப் புறம்பாக இந்த நிதியைக் கையாண்டு மீள் கட்டுமானப் பணிகளை மேற்கொள்ள இடைக்கால நிர்வாக அமைப்பு ஒன்றை உருவாக்க ஐ.தே.க அரசு வரைவு ஒன்றை முன் வைத்தது. இந்த வரைவு மாறிமாறி அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையே பரிமாறப்பட்டது.

அந்த வரைவின் அடிப்படையில் – விடுதலைப் புலிகளின் தலைமை தனது சர்வதேச ஆலோசகர்களின் நிபுணத்துவ உதவியுடன் 'இடைக்காலத் தன்னாட்சி அதிகார சபை' என்ற வரைவை முன் வைத்தது. அந்த வரைவை விடுதலைப் புலிகள் முன்வைத்த நேரத்தில், தெற்கில் உருவான அரசியல் நெருக்கடிகள் காரணமாக ஆட்சியில் இருந்த ஐ.தே.க.அரசு கவிழ்ந்தது. தொடர்ந்து நடந்த தேர்தல் மூலம் சந்திரிகா குமாரதுங்க தலைமையிலான கட்சி ஆட்சிபீடம் ஏறியது. ஆட்சிப்பீடம் மாறியதும் இடைக்கால நிர்வாக அமைப்பை உடனடியாக நடைமுறைப்படுத்தப்போவதாக ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவும் வெளிவிவகார அமைச்சர் லஷ்மன் கதிர்காமரும் பகிரங்க அறிவிப்புக்களை விடுத்தனர்.

சர்வதேசத்தின் பார்வையைத் தம் பக்கம் திருப்பி, ரோக்கியோவில் இணக்கம் கண்ட நிதியைப் பெற்று, தமது அரசின் நிதி நெருக்கடிக்குத் தீர்வு காண அவர்கள் முனைந்தனர்.

ஆனால் , சமாதானச் செயற்பாடுகள் வெற்றி பெறாமல் அந்த நிதி வழங்கப்படவே மாட்டாது என்று சர்வதேச சமூகம் அடித்துக் கூறிவிட்டது.

எதுவும் செய்ய முடியாத இக்கட்டு நிலையில் இடைக்காலத் தன்னாட்சி அதிகாரக் சபை வரைவைக் கிடப்பில் போட்டது அரசு.

## ஆழிப்பேரலை அனர்த்தம்

இந்நிலையில் தான் ஆழிப்பேரலை அனர்த்தம் நிகழ்ந்தது. இதனால், பாதிக்கப்பட்டவர்கள் வடக்கு – கிழக்கு மக்கள் மட்டுமல்லர், தெற்கு மக்களும் தான்.

சகல பிரதேச மக்களின் நலனிலும் அக்கறை கொண்டவர் போல சர்வதேச சமூகத்துக்குத் தன்னைக்காட்ட சந்திரிகா முயன்றார். அதன்பேறாக, வடக்கு – கிழக்கு, தெற்கு மக்களின் மீள்கட்டுமானப் பணிகளை முன்னெடுப்பதற்காக பொதுக் கட்டமைப்பு ஒன்றை விடுதலைப் புலிகளுடன் இணைந்து உருவாக்கப் போவதாக அவர் முதன்முதலாகப் பகிரங்க அறிவிப்பை விடுத்தார்.

சர்வதேச சமூகத்தின் மத்தியில் விடுதலைப் புலிகளுக்கும் தமிழ் மக்களுக்கும் இருந்த மதிப்பை உணர்ந்த ஜனாதிபதி, ஒப்புக்காக இந்த அழைப்பை விடுத்தார். விடுதலைப் புலிகளின் தலைமையும் இதற்கு நேசக்கரம் நீட்டியது.

அரசினதும் விடுதலைப் புலிகளினதும் சமாதானச் செயலகங்கள் மட்டத்தில் பேச்சுக்கள் நடந்தன. அதன் பெறுபேறாக பொதுக்கட்டமைப்பு வரைவு ஒன்று உருவானது. அது தொடர்பான விடயங்களை நோர்வே அனுசரணையாளர்கள் இரு தரப்புக்களுடனும் கலந்துரையாடி வரைவை இறுதியாக்கினர்.


'எமது கரையோரப் பிரதேச மக்களின் வாழ்வாதாரத்துடன் தொடர்புடைய மனிதாபிமானப் பிரச்சினை இது. ஆதலினால் பல்வேறு விட்டுக்கொடுப்புக்களுடன் இந்த வரைவுக்கு இணங்கினோம். அந்த வரைவை நடைமுறைப்படுத்தி மக்களின் இன்னல்களுக்குத் தீர்வு காண வேண்டிய பொறுப்பு கொழும்பிடம் தான் உள்ளது' என்று விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச் செல்வன் தெரிவித்திருந்தார்.

## பொதுக்கட்டமைப்பு மாயை

மக்களின் வாழ்வாதாரத்துடன் தொடர்புபட்ட இந்தப் பிரச்சினையை ஊதிப் பெருக்கவைத்து, நிலைமையைக் கெடுத்துவிட்டார் ஜனாதிபதி. வெளிநாடுகள் வழங்கும் நிதியைப் பெற்று பாதிக்கப்பட்ட மக்களுக்கு மீள்கட்டுமானம் செய்கின்ற ஒரு திட்டம்தான் இந்தப் பொதுக்கட்டமைப்பு. ஆனால், இலங்கையில் நீண்ட காலமாகப் புரையோடிக் கிடக்கும் இனப்பிரச்சினைக்கு ஏதோ இதன் மூலம் தீர்வு ஒன்று எட்டப்படுகின்றது என்பது போலவும் அதன் மூலம் இலங்கை இரண்டாகப் பிளவுபடப் போகின்றது என்றும் சிங்கள மக்கள் மத்தியில் ஒரு பெரிய மாயை உருவாக்கப்பட்டுள்ளது.

இலங்கை அரசும் விடுதலைப் புலிகளும் சமமாக இருந்து உடன்படிக்கையில் கைச்சாத்திடுவது, நாட்டின் இறைமையை மீறும் செயல் என்று உரக்கக் கத்துகின்றது சிங்களப் பேரினவாதம்.

பொதுக்கட்டமைப்பு உருவாக்கப்பட்டால், நாடு பெரும் இக்கட்டில் சிக்கும். அதன் மூலம் சிங்கள இனம் அழிந்துவிடும் என்று கூடப் 'பெரிதாகக்'கதை விடுகின்றன – சிங்களப் பேரினவாதச் சக்திகள் .



இதைப் பார்க்கும்போது உண்மையிலேயே இனப்பிரச்சினைக்குத் தீர்வு ஒன்று எட்டப்பட்டால், அதன் விளைவு எப்படியிருக்கும் என்று கற்பனை பண்ணிக் கூடப் பார்க்கமுடியாது என்று கூறுகின்றனர் ஆய்வாளர்கள்.

தெற்கில் உருவாகியுள்ள பேரினவாதச் சக்திகளின் கூச்சல்களுக்கு மத்தியில், சமாதான தேவதையாகத் எழுந்து நிற்பதாக சர்வதேசத்துக்கு தன்னை நிலை நிறுத்த ஜனாதிபதி முனைந்துள்ளார்.

"எந்தச் சவாலையும் எதிர்கொள்ளத் தயார். யார் எதிர்த்தாலும் பொதுக்கட்டமைப்பை உருவாக்குவேன் "என்று மார்தட்டிக் குரல் கொடுத்து வருகின்றார் ஜனாதிபதி.

திங்கள் மற்றும் செவ்வாய்க்கிழமை நடைபெற ஏற்பாடாகியுள்ள உதவி வழங்கும் நாடுகளின் மாநாட்டில் 'கண்' வைத்துக் கூடுதலான உதவிகளைப் பெற்றுத் தெற்கை வளம்படுத்தி தனது வாக்கு வங்கியைப் பலப்படுத்தவே ஜனாதிபதி முனைந்துள்ளார்.

தெற்கில் பேரினவாதச் சக்திகளின் கூச்சல்களுக்கும் ஜனாதிபதியின் மார்தட்டும் சொற்களுக்கும் மத்தியில் இலங்கை எதிர்பார்க்கும் நிதியை சர்வதேசம் வழங்கும். அதில் சந்தேகம் இல்லை என்கின்றன இராஜதந்திர வட்டாரங்கள்.

- வழங்கப்படும் நிதி சரி சமனாகப் பாரபட்சம் இன்றி பாதிக்கப்பட்ட மக்கள் அனைவருக்கும் சென்றடைவதை உறுதி செய்யவேண்டும்.
- இந்த நிதியை முறையாகக் கையாளக் கட்டமைப்பு ஒன்று அவசியம்.

ஆகிய இரண்டு நிபந்தனைகளின் அடிப்படையிலேயே நிதி வழங்கப்படும் சாத்தியம் உள்ளது என்கின்றன அந்த வட்டாரங்கள்.

சர்வதேச சமூகத்தின் நிபந்தனைகளை நிறைவேற்றி, கிடைக்கும் நிதியை சரியான முறையில் மக்களுக்குக் கிட்டச் செய்வதற்கு பொதுக்கட்டமைப்பு ஒன்று அவசியம். ஆனால், அந்தக் கட்டமைப்பு உடனடியாக உருவாகும் சாத்தியம் இல்லை.

"கடந்த மூன்று வருடங்களாக நடைமுறையில் உள்ள போர் நிறுத்த உடன்படிக்கை ஆட்டம் காண்கின்றது. போரினால் பாதிக்கப்பட்ட மக்களின் இயல்பு வாழ்க்கையை ஏற்படுத்த கொழும்பு அரசு அளித்த வாக்குறுதிகள் நிறைவேற்றபடாததாலும் முக்கிய தமிழ் பிரமுகர்கள் கொன்றொழிக்கப்படுவதாலும் இந்த நிலை ஏற்பட்டுள்ளது" என்று அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச் செல்வன் கடைசியாக எச்சரிக்கைக் குரல் கொடுத்துள்ளார்.

சர்வதேச சமூகத்துக்கு தமிழ்ச்செல்வன் விடுத்துள்ள எச்சரிக்கை, கண்டியில் நடக்கும் மாநாட்டிலும் எதிரொலிக்கும் என்று பெரிதும் நம்பலாம்.

ஜனாதிபதி எப்படியாவது நிதியைப் பெறவேண்டும் என்பதற்காக வெளியிட்டு வரும் கருத்துக்களின் உள்நோக்கம் சர்வதேச சமூகத்துக்கு புரியாத விடயமல்ல. இலங்கை அரசுகளின் செயற்பாடுகளையும் தமிழர் தரப்பின் நியாயப்பாடுகளையும் சர்வதேச சமூகம் இப்போது நன்றாகவே புரிந்து வைத்திருக்கின்றது.

அதற்கு ஏற்ற வகையில் பணத்தை சும்மா அள்ளிக் கொடுக்க சர்வதேச சமூகம் தயாராக இல்லை. வழங்கும் நிதி உரிய முறையில் மக்களுக்குச் சென்றடைவதை உறுதி செய்யும் வகையில் நிபந்தனைளுடனேயே நிதியை வழங்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

## இந்திய எதிர்ப்பு

விடுதலைப் புலிகளுடன் இணைந்து பொதுக்கட்டமைப்பு உருவாக்கப்படுவதை விரும்பாத சக்திகள் தமது தரப்பை நியாயப்படுத்த புதிய உத்திகளைக் கையாளுகின்றன. அந்த வகையில் விடுக்கப்பட்ட கதைதான் பொதுக்கட்டமைப்பு தொடர்பான இந்தியக் கருத்து. பொதுக்கட்டமைப்பை உருவாக்க வேண்டாம் என்று இந்தியா இலங்கைக்குக் கோரிக்கை விடுத்திருப்பதாகச் செய்தி வெளியாகி உள்ளது.

"இலங்கை உள் விவகாரங்களில் தலையிடுவதில்லை என்ற இந்தியாவின் நிலைப்பாட்டுக்கு எதிரான கருத்து இது. அரசும் விடுதலைப் புலிகளும் சம்பந்தப்பட்ட விடயம் இது. அவர்கள் பேசித் தீர்வை எட்டவேண்டும். இந்த விவகாரத்தில் இந்தியா தலையை நுழைக்காது" என்று கூறுகின்றார் வேறொரு இந்திய ராஜதந்திரி.

ஜனாதிபதி பொதுக்கட்டமைப்பை உருவாக்குவதில் தீவிரமாக இருப்பதாகக் காட்டுகிறார். பொதுக்கட்டமைப்பு உருவாகக்கூடாது என்கிறது பேரினவாதச் சக்தி.

இந்நிலையில் தமிழர் தரப்பின் நியாயப்பாட்டை உள்வாங்கி தனது முடிவைச் சர்வதேச சமூகம் வெளியிடும் என எதிர்பார்க்கலாம்.

பொதுக்கட்டமைப்பு உடனடியாக ஏற்படுத்தப்படாவிட்டாலும், பொதுக்கட்டமைப்பு இல்லாமல் எதுவுமே செய்யமுடியாது என்ற இக்கட்டு நிலையை சர்வதேச சமூகம் இலங்கை அரசுக்கு உணர்த்தும் என்பது மட்டும் உறுதியான விடயம்.

— துகா

# தொலைக்காட்சித் தொடர்களில் மூழ்கித் திளைக்கும் பெண் குலம்...



தொலைக்காட்சிகளில் ஒளிபரப்பாகி வரும் தொடர் நாடகங்கள் பற்றித் தரக்குறைவாகப் பேசினால் குடும்பப் பெண்களில் பெரும்பாலானோருக்குக் கோபம் பொத்துக் கொண்டு வருகிறது.

அந்தளவுக்கு இன்று குடும்பப் பெண்களிடையேயும் பெரியோர்களிடையேயும் இந்தத் தொலைக்காட்சித் தொடர் நாடகங்கள் பிரபல்யம் பெற்றுவிட்டன.

போர் நடைபெற்ற காலங்களில் தமது பிள்ளைகளின் கல்வியிலே அதிக அக்கறை கொண்டவர்களாக யாழ்ப்பாணத்துத் தாய்க குலம் விளங்கியது. பிள்ளைகளின் கல்வி தொடர்பான விடயங்களைத் தாம் அறிந்து கொள்வதிலும் தம்மைச் சுற்றி நடக்கும் அரசியல் மற்றும் சமுக விவகாரங்கள் தொடர்பான கருத்துகளை அறிந்து கொள்வதிலும், தமது வாசிப்புத் திறனை விருத்தி செய்வதிலும் அக்கறை கொண்டவர்களாகப் பெரும்பாலான தாய்மார்கள் இருந்தனர்.

ஆனால், புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் பின்னர் நிலவும் தற்கால அமைதிச் சூழ்நிலை இவற்றையெல்லாம் மாற்றிவிட்டு இப்போது புதியதோர் அத்தியாயத்தைத் தொடக்கியிருக்கின்றது.

இந்தச் சமாதான சூழலைப் பயன்படுத்தி தொலைக்காட்சி சேவைகளும் யாழ்ப்பாணத்துக்கு விஸ்தரிக்கப்பட்டன. அந்த விஸ்தரிப்பு மெல்லமெல்ல இப்போது ஓர் அதிர்ச்சி வைத்தியத்தைக் கொடுத்திருக்கிறது.

இந்தத் தொலைக்காட்சி சேவைகளில் ஒளிபரப்பாகிவரும் தொடர் நாடகங்கள் இங்குள்ள குடும்பப் பெண்களின் மனோ உலகத்தை கொஞ்சம் கொஞ்சமாக விழுக்கத் தொடங்கியிருக்கின்றன. இவற்றின் பாதிப்பு இப்போதுதான் உணரப்படத்தொடங்கியுள்ளது.

பிள்ளைகள் படிப்பதற்காக மேசையில் அமர்கிறார்களோ இல்லையோ பெற்றோர்கள் தொலைக்காட்சிக்கு முன்னால் அமர்வதைத் தமது அத்தியாவசிய கடமைகளில் ஒன்றாகக் கொள்ளத் தொடங்கிவிட்டார்கள். இது குடும்பப் பெண்களின் கணவர்மாருக்கு எரிச்சலைக் கொடுத்திருக்கிறது.

தொலைக்காட்சித் தொடர் நாடகங்கள் தொடர்பாக அதனைத் தொடர்ந்து ரசித்துப் பார்த்து வரும் பெண்கள் மேற்கொண்டு வரும் தீவிர பிரசாரம் அயலில் (தொடர் நாடகங்கள் தொடர்பான வர்ணணை) தொலைக்காட்சி இல்லாத வீடுகளிலும் அதனை வாங்கி விடவேண்டும் என்ற அதீத ஆவலைத் தோற்றுவித்து விடுகிறது.

தொலைக்காட்சித் தொடர்களைப் பொதுவாக இளைஞர்கள் பாப்பது மிகவும் குறைவு. ஆனால், வயதானவர்களும் குடும்பப் பெண்களுமே இதில் அதிகம் மூழ்கிப் போயிருக்கின்றார்கள். பொழுதுபோக்கு வசதிகளற்று இருக்கும் முதியவர்களுக்கு இத்தொடர்கள் ஏதோ ஒரு வகையில் நிம்மதியைத் தருகின்றன. அவர்களுடைய காலத்து எண்ணங்களுக்கும் சில பல நம்பிக்கைகளுக்கும் இவை தூபம் போடுவதால அவர்களுடைய மனங்களை இத் தொடர்கள் வென்றுள்ளன.

முன்பெல்லாம் தாம் கூடும் இடங்களில் பல்வேறு ஊர்ப் புதினங்களைப் பற்றிப்பேசி சந்தோஷப்பட்டுக் கொள்ளும் எமது பெண்களில் பெருமபாலானோர் இப்போது தொடர் நாடகங்களின் அடுத்த அத்தியாயம் என்ன என்பதைப் பற்றியே பேசிக்கொள்கின்றார்கள். தொடர் நாடகங்களில் வரும் கதாபாத்திரங்கள் தொடர்பாக அவர்கள் செய்யும் வர்ணணையோ தனிரகம்.

பல வீடுகளில் வீட்டுக்குவரும் விருந்தினர்களைவிட இந்தத் தொடர்நாடகங்களே முக்கியமானவையாகக் கருதப்படுகின்றன. இதனால், நாடகங்கள் முடிந்த பின்னர்தான் விருந்தினர்களுடன் பேசிக்கொள்கிறார்கள் பெண்கள்.

தொடர் நாடகங்களால் வீட்டில் நேரத்திற்குச் சாப்பாடு கிடைப்பதில்லை. பிள்ளைகளின் கல்வி மிகவும் பாதிப்புக்குள்ளாகின்றது என்று வெளிப்படையான குற்றச்சாட்டுகள் எழுகின்றன. நாடகங்கள் ஒளிபரப் பாகும் வேளைகளில் பிள்ளைகள் கல்வியில் சிந்தனை யைச் செலுத்த முடியாமல் உள்ளனர். இதனை இந்த தாய்க்குலம் விளங்கிக் கொள்ளவில்லை என்று ஆசிரியர்கள் குற்றஞ்சாட்டுகின்றனர். சில பாடசாலைகளில் கற்பித்தல் வேலைகளில் ஆசிரியைகளும் இந்தத் தொடர்களின் கதைகளில் லயித்து விடுவதாகவும் கூறபபடுகிறது.

குடாநாட்டில் கல்வித் தரம் தொடர்ந்து வீழ்ச்சி கண்டு வருவதற்கு இத்தொடர் நாடகங்களும் ஒரு முக்கிய பங்கை வகிக்கின்றன என்கிறார் மூத்த கல்வி அதிகாரி ஒருவர். அதில் ஆச்சரியப்பட ஒன்றுமே இல்லை. அது நிஜம்தான்.

தமிழகத் திரையுலகம் இப்போது திரைப படங்களை விடத் தொடர்நாடகங்களைத் தயாரிப்பதிலேயே அதிக ஈடுபாடு காட்டத் தொடங்கியிருக்கின்றது. காரணம் இதன் மூலம் குவியும் வருவாய்தான். பணம்தான்.

விகடன் தொடர், பாலச்சந்தர் தொடர், ராடன் தொடர், வை.ஜி.தொடர், எஸ்.வி. தொடர் எனத் தொடர் நாடகங்களைத தயாரிக்கும் நிறுவனங்களின் பட்டியல் நீண்டு கொண்டே செல்கின்றது.

காலையில் காவியாஞ்சலியுடன் ஆரம்பமாகி 'நீ–நான்–அவள்', 'ஆனந்தம்', 'கோலங்கள்', 'மனைவி', 'மெட்டிஒலி', 'ராஜராஜேஸ்வரி','வேலன்', 'மைடியர் பூதம்', 'ருத்ர வீணை', 'அண்ணாமலை', 'விக்கிரமாதித்தன்', 'காவேரி' எனத் தொடர் நாடகங்களின் பட்டியலும் நீண்டு கொண்டே செல்கிறது.

இத் தொடர்களில் போலியான சடங்கு சம்பிரதாயங்களும், மூடத்தனமான கருத்துகளும் அதிகம் இடம் பெற்றிருக்கின்றன. இதன் மூலம் சில காலமாக அற்றுப்போன சடங்கு – சம்பிரதாயங்கள், மூட நம்பிக்கைகள் மீண்டும் சமுகத்தில் தலை தூக்குவதற்கான சாத்தியக்கூறுகள் இப்போது அதிகரித்துள்ளன. இத்தகைய மூடக் கலாசாரத்துக்குள் ஈழத்தமிழினம் மீண்டும் மூழ்கிப் போகுமானால் நாம் கடந்த 30 ஆண்டுகளாக நடத்திவரும் விடுதலைப் போராட்டம் சமுகத்தில் என்ன பலனைத் தரப் போகின்றது? இதுதான் இவ்போது எழுந் துள்ள கேள்வி.

இருதயன்

# சுக்குப் புக்கு ரயில் வண்டி

சென்ற மாதம பொலகாவலைக்கும அளவ்வைக்குமிடையேயுள்ள யாக்கல்மோதர ரயில் கடவையில் ஏற்பட்ட பயங்கர விபத்தினை மறந்துவிட முடியாது. அந்த ரயில் – பயணிகள் பஸ் விபத்திலே 38 பேர்கள் உயிரிழந்தும் பலர் காயமடைந்துமுள்ளனர். அத்தனை பேர்களும் பஸ் பயணிகளே! பஸ்ஸை மோதிய ரயில் அதனை 500 யார் தூரம் வரை இழுத்துச் சென்றதாம். விபத்துக்கு பஸ் சாரதி – நடத்துநர்களின் கவலையீனமே காரணம் என்றும் சொல்லப்படுகிறது.

அந்த விபத்திலே ரயில் பயணிகளுக்கோ ரயிலுக்கோ அவ்வளவு பாதிப்புகள் ஏற்பட்டதாகத் தெரியவில்லை. வாழை முள் மரத்திலே மோதினாலும் சரி முள் மரம் வாழையில் மோதினாலும் சரி சேதம் வாழைக்குத்தான் என்பார்கள். அது ரயிலுக்கும் பொருந்தும். ரயில் 'சடின் பிறேக் போட்டிருந்தால்தான் பாரதூரமான விளைவுகள் ஏற்பட்டு அது தடம்புரண்டு அதைவிடப் பன்மடங்கு ரயில் பயணிகள் உயிரிழந்திருப்பார்கள்.

ரயில் தனக்கெனவுள்ள தண்டவாளத்திலே நேரக்கட்டுப்பாடு – வேகக் கட்டுப்பாடுகளுக்கு அமையத் தான் ஓடிக்கொண்டிருக்கும். அதைத் தடுக்கின்ற உரிமை யாருக்குமே இல்லாமல் போய் விடுகிறது. அதனோடு போய் வில்லங்கத்துக்கு மோதிக் கொள்வதற்கு யார் தான் என்ன செய்யமுடியும்? பொழிப்பாகச் சொல்லப் போனால் ரயிலோ அதன் சாரதிகளோ தவறாக நடந்து கொள்வதில்லை. 'இப்படி ஓர் அசம்பாவிதம் நடந்து விட்டதே என்று யாரும் ரயிலைக் கொளுத்தப் போவதும்இல்லை' . ரயில் சாரதிகள் விளக்கமறியலுக்கு அனுப்பப்படுவது இல்லை.

நடிகர் எஸ்.வி.சுப்பையாவை குணசித்திர நடிகராக அறிமுகப்படுத்திய அந்தக் காலத்துப் படம் 'வள்ளியின் செல்வன்' என்பதாகும். படம் வெளி வந்த காலத்திலே அதனைப் பார்க்க முடியாதாவர்களும் பின்னர் அது 'புதுக்கொப்பி' யாக வந்தபோது பார்த்திருக்கலாம். அதிலே பல சிறுவர்கள் ஒருவர் தோளை ஒருவர் தொட்டவாறு வரிசையாகப் பாடியவாறு ஓடி ஓடி ரயில் விளையாட்டுக் காட்டுகிறார்கள். அந்தப் பாட்டிலே வருகின்ற ஓர் அடி.... 'தண்டவாளத்தின் 'இசுக்குறு' ஆணியை எவனோ ஒருவன் பெயர்த்து விட்டதாலே (ரயில்) அரைமணி நேரம் லேட்...'

(இப்போதைய பெரியவர்கள் சிறுவர்களாக இருந்த அந்தக் காலத்திலே அந்த ரயில் விளையாட்டையும் தான் ஆடி மகிழ்ந்திருந்தார்கள். அதற்குக் காரணமாக இருந்தது அந்த 'வள்ளியின் செல்வன்' பாட்டுக் காட்சிதான் காரணமாக இருந்ததோ?)

ஆமாம் 'இசுக்குறு' ஆணிப் பிரச்சினைகள் போன்ற அசம்பாவிதங்கள் ஏற்படாத பட்சத்திலே ரயில் நேரம் தவறாது கட்டுப்பாட்டுடன்தான் ஓடிக்கொண்டிருக்கும். அந்தக் காலத்திலெல்லாம் காலையில் சேவல்கள் கூட ரயிலைப் பார்த்துத்தான் கூவுவதுண்டாம்...(?)

எவரேனும் ரயில் வரும்போது தண்டவாளத்தின்




குறுக்கே பாய்ந்து உயிரை மாய்த்துக்கொண்டதாக வைத்துக்கொள்வோம். அந்த இடத்திலே கூட ரயில் அதிக நேரம் நின்று 'துக்கம்' கொண்டாடிக் கொண்டிருக்க மாட்டாது. ஆரம்ப விசாரணைகளைப் பதிவுசெய்து கொண்டு, சடலத்தைப் பொதிசெய்துகொண்டு போய் அடுத்த நிலையத்திலே ஒப்படைத்துவிட்டுத் தன்பாட்டிலே போய்விடும்.

அப்படியான அசம்பாவிதங்களால் ஏற்படுகின்ற தாமதங்களை மட்டும் ரயில், பின்னால் வருகின்ற நிலையங்களுக்கிடையேயான தூரத்தில் தனது வேகத்தைக் கூட்டி அதனைக் கூடியவரை ஈடுசெய்யும். இவ்வளவும் ரயிலின் 'கடமை கண்ணியம்– கட்டுப்பாட்டு விதிகளை எடுத்துக் காட்டுவதற்காகச் சொல்லப்பட்டவை.

ரயில் பெட்டிகளில் 'அபாயச் சங்கிலி' என்றிருக்கும். அதற்கும்தான் கட்டுப்பாடுண்டு. கைக்குட்டை, தொப்பி பறந்துவிட்டதற்காகவெல்லாம் அதனை இழுத்து ரயிலை நிறுத்தமுடியாது. தகுந்த காரணம், பெறுமானம் இல்லாமல் அதனை இழுத்தால் தண்டனை அபராதம் என்றிருக்கிறது.

• • •

ஒரு சமயம் ராஜாஜி அவர்கள் வெங்கட சுப்பையர் என்ற பிரபல வக்கீலுடன் ஒரு கூட்டத்திலே பேசி விட்டு ரயிலில் சென்னைக்குத் திரும்பிக்கொண்டிருந்தார். வெங்கட சுப்பையர் ஜன்னல் ஓரமாக அமர்ந்து பயணித்துக் கொண்டிருந்தார். அவருக்குப் பக்கத்திலே ராஜாஜி!

திடீரென்று ஓர் இடத்திலே வக்கீலின் கைக்கடிகாரம் நழுவி ஜன்னல் வழியாக வெளியே விழுந்துவிட்டது. அது அவருக்கு அன்புப் பரிசாகக் கிடைத்த – அவர் உயிருக்கு உயிராகப் பாதுகாத்துவந்த – கடிகாரம். அதனால் அவர் "ஐயையோ கைக்கடிகாரம் வெளியே விழுந்து விட்டதே" என்று சத்தம்போடத் தொடங்கிவிட்டார். ராஜாஜியோ பதட்டப்படாமல், பதில் எதுவும் சொல்லாமல் தம்பாட்டுக்கு ஒன்று, இரண்டு, மூன்று என எண்ணிக்கொண்டிருந்தார்.

வெங்கட சுப்பையர் மிகவும் வேதனைப்பட்டார். "நான் தவித்துக்கொண்டிருக்கிறேன். நீங்கள் கொஞ்சம் கூட அக்கறைப்படாமல் என்னவோ செய்து கொண்டிருக்கிறீர்களே" என்றார். அப்போதும் ராஜாஜி பதில் ஒன்றும் பேசவில்லை. தம்பாட்டுக்கு விடாமல் எண்ணிக் கொண்டிருந்தார்.

அடுத்த நிலையத்திலே ரயில் நின்றது. ராஜாஜி நிலையப் பொறுப்பாளரை அழைத்துக் கூறினார். "சார் நாங்கள் வரும் வழியில் நண்பரின் கைக்கடிகாரம் வெளியே விழுந்துவிட்டது. அந்த இடத்திலிருந்து தந்திக் கம்கங்களை விடாமல் எண்ணிக்கொண்டே வந்திருக்கிறேன். இருபது கம்பங்களுக்கு அப்பால் அது கிடைக்கலாம் தயவு செய்து யாரையாவது அனுப்பி அதைத்தேட ஏற்பாடு செய்யுங்கள். அது கிடைத்துவிட்டால் அன்பளிப்புத் தருவோம். கிடைத்துவிட்டால் எங்களுக்கும் அறிவியுங்கள்."

அப்படியே சில நாட்களில் கடிகாரமும் அவர்களுக்குக் கிடைத்துவிட்டது. ராஜாஜி அவர்கள் பதட்டம் அடையாமல் புத்திசாலித்தனமாகச் செயற்படுவதில் வல்லவர் என்பதற்காக இந்த நிகழ்ச்சியைச் சொல்வதுண்டு. அவர் நினைத்திருந்தால் அந்த இடத்திலேயே ரயிலை நிறுத்தியிருக்கலாம். அவர் அப்படிச் செய்யாததுதான் சிறப்பாகச் சிந்திக்கத்தக்கது.

– சன் அங்கிள்




## செல்லையா தாத்தாவும் செல்லக் குழந்தைகளும்....-01

புளியமர நிழலில் சிறுவர்கள் கிட்டியடித்துக் கொண்டிருந்தனர். சிறுமியர் நாலு பெட்டிக் கெந்தல் விளையாடினர். தூரத்தே பனங்கூடலூடாக உயர்ந்த ஓர் உருவம் தெரிந்தது. தோளில் துண்டும், வேட்டியும் அணிந்து நிமிர்ந்து நடந்து வந்து கொண்டிருந்த அந்த உருவத்தைக் கண்டதும் சிறுவர்கள் மகிழ்ந்தனர்.

'செல்லையா தாத்தா வாறார்' கண்ணன் கத்தினான்.

எல்லோரும் விளையாட்டை நிறுத்தி விட்டு, புளியமரத்தைச் சூழ்ந்து கொண்டனர்.

தாத்தா புன்னகைத்தபடி வந்தார். சற்றுத் தள்ளியிருந்த வைரவரைப் பார்த்து 'அப்பனே! வைரவா!' என்றபடி மரவேரில் அமர்ந்து கொண்டார்.

கோயில் கிணற்றிலிருந்து தண்ணீர் அருந்தி விட்டு வந்த இனியன்,

'ஒரே வெயில், களைப்பாய்க் கிடக்குது' என்றான்.

'ஏன் வெயில் காலத்தில் அதிகம் களைக்கிறது?' என்று கேட்டார் செல்லையா தாத்தா.

பிள்ளைகள் ஒருவரையொருவர் பார்த்தனர்.

'களைப்பு என்பது நம்முடைய தசை, நரம்பு முதலிய உடலுறுப்புகளில் ஏற்படுகிற சோர்வுதான். எங்கடை இரத்தம் அசுத்தமடைவதே இப்பிடிச் சோர்வு ஏற்படக் காரணம்'

'எப்பிடித் தாத்தா?'. 'நாங்கள் உணவைச் சாப்பிடுகிறோமல்லவா? மாச்சத்துள்ள, கொழுப்புச்சத்துள்ள, புரதச்சத்துள்ள உணவுகளை நாங்கள் அதிகம் சாப்பிடுகிறோம். இவை செமித்து இரத்தத்தில சேருது. எஞ்சியவை கழிவாகப் போகின்றன.

நாங்கள் சுவாசிக்கிறோமல்லவா? சுவாசிக்கும் போது எதை உள்ளெடுக்கிறோம் தெரியுமா?'

'ஒக்சிசனை' 'ஓமோம்! அதைத்தான் பிராண வாயு என்று சொல்லுகிறோம். இந்த ஒக்சிசன் செமிபாடடைந்த உணவினை எரிக்குது. இதனாலை வெப்பமும் சக்தியும் நமது உடலுக்குக் கிடைக்குது. உணவிலை இருக்கிற காபன் இந்த ஒக்சிசனுடன் சேர்ந்து காபனீரொக்சைட்டாக வெளியேறுது. இதை நாங்கள் கரியமில வாயு என்று சொல்லுகிறோம்.

புரதச்சத்து இருக்கிறதே, இது எங்கடை உடலிலை புதிசாகக் கலங்களை உருவாக்கி உடம்பை வளர்க்கவும், அழிந்து போகிற கலங்களுக்குப் பதிலாக புதுக்கலங்களை உருவாக்கவும் உதவுது. அழிகிற கலங்கள் வியர்வை, சிறுநீர் மூலமாக வெளியேறுகின்றன.

இப்படியான மாற்றங்கள் எல்லா நேரமும் நடந்து கொண்டுதானிருக்குது. வெப்பமான காலத்திலை இந்தச் செயற்பாடுகள் வேகமாக நடக்கின்றன. ஆனால், கழிவுப் பொருள்கள் எல்லாம் உடனுக்குடனே அகற்றப்படாமல் ஒரு பகுதி இரத்தத்தோட சேர்ந்திருக்கும். இதாலை இரத்தத்தின்ர தூய்மை கெட்டுப் போகுது.

தூய்மையான இரத்தம் இருந்தால்தான் மூளை சுறுசுறுப்பாக இயங்கும். தசைகள் செயற்படும். அப்படியில்லாததாலைதான் வெயில் காலத்தில் களைப்பாய் இருக்குது. குளிர்காலத்தில் களைப்பே தெரிவதில்லை'

'அப்படியா தாத்தா! அப்ப குளிர் காலத்திலை கழிவுகள் உடனையே அகற்றப்படுகுது. அதாலைதான் களைப்பு வரேல்லை இல்லையா' என்றாள் சாந்தி. 'ஓ மாம்... அதாலைதான் வெக்கையான இந்த மாதத்திலை நுவரேலியா பக்கம் சுற்றுலா போகிறவை'

'தாத்தா ஒரு கதை.. பிளீஸ்' என்றான் செந்தில். தாத்தா சிரித்தார். பிறகு கதையைச் சொன்னார்.

'ஒரு நாட்டை அரசனொருவன் ஆண்டு வந்தான். அவனுக்கு நீண்டதொரு கதையைக் கேட்க வேண்டுமென்ற ஆவல் பிறந்தது. ஆனால், கதை சொல்பவருக்குப் பரிசு கொடுக்க அவனுக்கு விருப்பமில்லை. நீண்ட கதை சொல்பவருக்கு ஆயிரம் பொற்காசுத் தரப்படும் என்று அறிவித்தான். பலரும் அரசனிடம் சென்று கதை கூறினர். ஒரு கிழமை, பத்துநாள், ஒரு மாத்தில் எல்லோரும் கதையை முடிக்க நேர்ந்தது. பரிசும் கிடைக்காமல் ஏமாந்து போனார்கள். இதைக் கேள்விப்பட்ட முதிய புலவர் ஒருவர் அரசனைப் 'பழக்கும்' நோக்கோடு போனார். அரசனுக்கு முன்னால் அமர்ந்தார்

'அரசே நான் கதையைச் சொல்லவும், நீங்கள் கேட்கவும் நமது ஆயுள் போதாது. என்றாலும் சொல்கிறேன். நீங்கள் கதையைக் கேட்கும் போது 'பிறகு' என்று கேட்கவேண்டும். அப்போதான் என்னால் கதையைத் தொடர முடியும்' என்றார். அரசனும் 'சரி' என்றார். புலவரும் கதையைச் சொல்லத் தொடங்கினார்.

ஓர் அரசனுடைய நாட்டில் நிறைய நெல் விளைச்சல். பத்து ஆண்டுகளுக்குப் போதுமாக இருந்தது. அவற்றையெல்லாம் பெரியதொரு களஞ்சியம் கட்டிச் சேமித்து வைத்தான். களஞ்சியத்தின் மேல் பகுதியில் காற்று வருவதற்காக ஒரு துளை விட்டிருந்தான். அதன் வழியாகச் சிட்டுக் குருவியொன்று உள்ளே நுழைந்தது. அங்கிருந்த நெல்லையெல்லாம் தனது கூட்டிற்குக் கொண்டு வரச் சிட்டுக்குருவி எண்ணியது. ஒரு நெல்லைக் கொத்திக் கொண்டு வந்து தனது கூட்டில் வைத்தது.

'பிறகு' என்றான் அரசன்.

மீண்டும் ஒரு நெல்லைக் கொத்தி வந்து கூட்டில் வைத்தது.

'பிறகு' 'மீண்டும்....' அரசனுக்குப் புரிந்துவிட்டது. குருவி ஒவ்வொரு நெல்லாக எடுத்து வந்து போடுவதற்குள் தமது ஆயுள் முடிந்து விடும் என்பதைப் புரிந்து கொண்டார்.

தனக்குள் வெட்கப்பட்டார்.புலவருக்கு ஆயிரம் பொற்காசுகளையும் அளித்து அவரை வழியனுப்பிவைத்தார். 'நல்ல கதை தாத்தா ..... புலவரின் புத்திசாலித்தனந்தான் அவரை வெல்ல வைத்தது என்ன தாத்தா?' 'ஓமோம். நீங்களும் புத்திசாலித்தனமாக நடந்து கொண்டால் வெற்றிதான்' என்று சொல்லியபடி செல்லையா தாத்தா எழுந்தார். பிள்ளைகளும் வீடுகளை நோக்கிப் புறப்பட்டனர்.

*(தாத்தா மீண்டும் வருவார்)*

**பாபு அண்ணா**



## யார் வீரன்?

அமெரிக்கா ஒரு காலத்தில் இங்கிலாந்திடம் அடிமைப்பட்டுக் கிடந்தது. அமெரிக்க மக்கள், இங்கிலாந்து மக்களிடமிருந்து சுதந்திரம் பெறுவதற்காகப் போராட்டம் நடத்தினர். அது.கி.பி.பதினெட்டாம் நூற்றாண்டு.

அமெரிக்க இராணுவப்படை, இங்கிலாந்து இராணுவப்படையுடன் கடுமையாக மோதியது. போராட்டம் நடைபெற்றுக் கொண்டிருந்த காலத்தில் கிறிஸ்மஸ் பண்டிகை வந்தது. ஆகவே, இரண்டு தரப்பினரும் போர் நிறுத்தம் செய்தனர்.

அச்சமயம் அமெரிக்க இராணுவத்தைச் சேர்ந்த அதிகாரிகளில் ஒருவரான இஸ்ரேல் பொட்னாம் என்பவர் இங்கிலாந்தைச் சேர்ந்த இராணுவ அதிகாரி ஒருவரைச் சந்தித்தார். இருவருக்குமிடையே கடுமையான போர் நடந்தது.

பொறுத்துப் பொறுத்துப் பார்த்த அமெரிக்க அதிகாரி, ஆங்கிலேய அதிகாரியை மிகவும் கேவலமாகத் திட்டி விட்டார். இதைக் கேட்ட ஆங்கில அதிகாரி கொதித்தெழுந்தார்.

'இவ்வளவு தூரம் நீ பேசி விட்டாய் அல்லவா...? நாளை நீ என்னுடன் சண்டைக்கு வரவேண்டும். நீ உன் துப்பாக்கியை எடுத்துக் கொண்டு வா. நான் என் துப்பாக்கியை எடுத்துக் கொண்டு வருகிறேன். இருவரும் துப்பாக்கியால் சண்டை போடுவோம். யார் வெல்கிறார்கள் என்று பார்க்கலாமா?' என்றார்.

இஸ்ரேல் பொட்னாம் இதைக்கேட்டு பதில் எதுவும் பேசவில்லை. அமைதியாக அங்கே கிடந்த மரப் பீப்பாய் ஒன்றின் மேல் உட்கார்ந்திருந்தார். போர்க்களத்தில் இந்த மரப் பீப்பாய்கள் அதிகமாகக் காணப்படும். காரணம் இம்மாதிரிப் பீப்பாய்களில் தான் போருக்குத் தேவையான வெடி மருந்துகள் நிரப்பி வைத்திருப்பர்.

இதைப் பார்த்துக் கொண்டிருந்த ஆங்கிலேய அதிகாரி அதிகமான கோபம் அடைந்தார்.

'அப்படியானால் நீ ஒரு கோழை என்பதை வெளிப்படையாகவே ஒப்புக்கொள்ள வேண்டியதுதானே! மௌனம் ஏன்?' என்று சீண்டினார்.

'நான் உன்னைப் போன்ற கோழை இல்லை. வாய்ச் சொல்லில் வீரம் பேசவும் எனக்குத் தெரியாது. நான் செயல் வீரன். நீ உனக்குச் சாதகமான முறையில் துப்பாக்கிச் சண்டை செய்யலாம் என்று கூறினாய். உனக்குத் துப்பாக்கி சுடுவதில் நல்ல பயிற்சி உண்டு என்பது எனக்குத் தெரியும்.

"ஆகையினால் நீ துப்பாக்கிச் சண்டையைத் தேர்ந்தெடுத்தாய். என் விஷயம் அப்படி இல்லை. எனக்குத் துப்பாக்கி சுடுவதில் அத்தனை அனுபவமில்லை. யார் வீரன் என்பதை நிரூபிக்க ஒரு பொதுவான வழிமுறையை உன்னால் சொல்லத் தெரியவில்லையே!"

"ஏன், நீதான் செயல் வீரனாயிற்றே! பொதுவான ஒரு வழியைச் சொல்லேன் பார்க்கலாம்" என்று குமுறினார் ஆங்கில அதிகாரி.

*(மிகுதி அடுத்த வாரம்)*

## பொன்மொழிகள் சில....

- **நீ சந்தோசமாக வாழ வேண்டுமெனில் உன்னிடமுள்ள தீய குணங்களை விட்டுத் தொலை; அன்புடன் அனைவருடனும் பழகு.**
  *– ஓர் அறிஞர்*
- **நன்நெறியில் நாம் செல்ல வேண்டுமெனில் எண்ணம் சொல், செயல் யாவும் ஒன்றாக இருக்கவேண்டும்.**
  *– திருவள்ளுவர்.*
- **கல்வியறிவு இன்ப வாழ்வில் ஓர் அணியாகவும் துன்ப வாழ்வில் கேடயமாகவும் விளங்குகிறது.**
  *– அரிஸ்டோட்டில்*
- **நீண்ட நாள் வாழ வேண்டும் என்ற எண்ணத்தை விட, நல்லவர்களாக வாழ வேண்டும் என்ற எண்ணமே உயர்வைத் தரும்.**
  *– ஓர் அறிஞர்*
- **பாராட்டுவதற்கு நாவின் ஈரம் மட்டும் போதாது, உள்ளத்திலும் ஈரம் வேண்டும்.**
  *– காண்டேகர்*
- **துணிவுடன் நற்செயல்களில் ஈடுபடுவோர் வெற்றிகளையே பரிசாகப் பெறுவார்கள்**
  *– புரூம்*

ஆர்த்தி

## மே மாதத்தின் முக்கிய தினங்கள்

01 - உலக தொழிலாளர் தினம்
01 - ரணசிங்க பிரேமதாச நினைவு தினம்
03 -பத்திரிகை சுதந்திர தினம்
04 -சேர். முத்துக்குமார சுவாமி நினைவு தினம்
06 -ரவீந்திரநாத் தாகூர், மோதிலால்நேரு பிறந்த தினம்
08 -உலக நூதனசாலை தினம், கென்டி டுனாட் பிறந்த தினம், உலக செஞ்சிலுவை தினம், புலவர் மு.நல்லதம்பி நினைவு தினம்
09 -உலக அன்னையர் தினம்
11 - கவியோகி சுத்தானந்தபாரதியார் பிறந்ததினம்
12 - புளோரன்ஸ் நைற்றிங் கேர்ல் பிறந்ததினம்
13 - வி.தெட்சனாமூர்த்தி நினைவு தினம்
14 - கந்தமுருகேசனார் நினைவு தினம்
15 - எ. ஆர்.கனநாயகம் நினைவு தினம், உலக குடும்ப தினம்,
17 - உலக தொலைத்தொடர்பு தினம்
20 - அருளம்பலவாணர் தினம்
21 - கலாசார பண்பாட்டுத் தினம் பாரதிதாசன் நினைவு தினம் ராஜீவ் காந்தி நினைவு தினம்
25 - லை.கனகசபைப்பிள்ளை பிறந்ததினம்
27 - ஜவர்ஹர்லால் நேரு நினைவு தினம்
31 - யாழ்.நூல் நிலையம் எரித்த தினம் உலக புகையிலை மறுப்புத் தினம்

தொகுப்பு : **கீர்த்தனா விக்னராஜா,**
தரம் -10A,
*மானிப்பாய் மகளிர் கல்லூரி.*



வரைந்தவர் : **கோபிசாலினி போலிங்கம்**
தரம் -1
யா/ புனித ஜோண் பொஸ்கோ வித்தியாலயம்

**தம்பி, தங்கைகளே! 'சிறுவர் பொழில்' பகுதிக்கு உங்கள் ஆக்கங்கள் வரவேற்கப்படுகின்றன. எண்ணங்களை எழுதி அனுப்புங்கள். அவை தரமாக இருப்பின் பிரசுரத்திற்கு ஏற்றுக் கொள்ளப்படும்.**

# அக்கினிக் குஞ்சு....

( IV பக்கம் பார்க்க)

கடும் கோடைக்கு எதிராய் மழை வேண்டியும், கொடுமைகள் அராஜக அடக்கு முறைகளுக்கு எதிராய் விடுதலை வேண்டியும் கொடும் பாவி எரிக்கும் சடங்கு தமிழ்ப் பண்பாட்டில் மிக நீண்ட பாரம்பரியம் உடையது.

அந்தப் பண்பாட்டுச் சடங்கையே பேரினவாத ஆக்கிரமிப்பு இராணுவத்தினருக்குப் பாடம் சொல்லும் விதத்தில் அழகான உணர்ச்சியோடும் அமைதியான உறுதியோடும் பார்ப்பவர் வியக்கும் வண்ணம் நிகழ்த்தி முடித்தனர் எங் கள் பெண்கள். அவ்வளவுக்கு இவர்கள் புடம் போடப்பட்டிருந்தனர்.

எமது தேசியத் தலைமை பெண்களுக்குக் கொடுத்த முக்கியத்துவத்தின் அனுபவமும் அரங்கச் செயற்பாட்டு குழுவினதும், பெண்கள் பண்பாட்டு மையத்தினதும் பாசறைகளுக்குள் வாழ்ந்து, பயின்று, ஆளுமையைச் செதுக்கி வளர்ந்ததும் இவர்களை இவ்வாறு புடம் போட்டது. சாதிக்கும் வித்தையைக் கற்றுக் கொடுத்தது.

இந்த ஆளுமைச் செழிப்போடு இவர்கள் நடந்து கொண்ட பண்பாட்டை இராணுவத்ததினரால் நிராகரிக்க முடியாமற் போனதுதான் வெற்றி. இந்தக் கடிதத்தை எல்லா இராணுவத்தினருக்கும் கொடுப்போம். உங்களது உணர்வுகளை எங்களால் புரிந்து கொள்ள முடிகிறது என்று இராணுவ அதிகாரி உறுதியளித்திருந்தார்.

கடிதம் கொடுத்து விடை பெற முன்னர்
தம்பி ராசா இராணுவ வீரா
சிங்கள சோதரி பெற்ற புதல்வா?
உந்தன் ஊருக்குத் திரும்பி நீ சென்று
ஊருடன் வாழும் பேற்றினைப் பெறுவாய்

என்று தாலாட்டுத் தொனியில் பாடியபடியே வந்திருந்தனர் பெண்கள். கடிதம் கொடுத்த பின் னர் பாடையின் பின்னே தீப்பிழம்புகள் கையில் ஏந்திப் புறப்பட்டனர்.

எங்கள் நிலம் எமக்கு வேண்டும். எங் கள் நிலமே எமக்கு வேண்டும் என்று நெருப்பு வெளியில் நின்று பாடி ஆடி இராணுவ ஆக்கிரமிப்பின் குறியீடான அந்தப் பிரேதத் தைத் தீ மூட்டித் தகனம் செய்தனர்.

நீண்ட கால ஆக்கிரமிப்பின்போது நீங்கள் செய்த கொடுமைகளின் மீதான கோபம் தமிழ் மக்கள் நெஞ்சுகளில் எரிநெருப்பாய் கனன்று கொண்டிக்கிறது.

ஆண்கள், பெண்கள் எங்கள் எல்லோர் மனங்களிலும் விடுதலைத் தீ சுவாலிக்கத் தொடங்கி விட்டது. அது உங்களைச் சுட்டெரிக்கும் நாள் வெகுதொலைவில் இல்லை. எனினும், எங்கள் தேசியத் தலைமையின் கீழ் அணி திரண்டபடியே பண்போடு உங்களுக்குச் சொல்கி றோம், நீங்கள் எங்கள் நிலத்தை விட்டு போய் விடுங் கள். உங்கள் கொடூரமான ஆக்கிரமிப்பு சிந்தனையைச் சுட்டெரிக்கும்வரை ஓயமாட்டோம் – என்ற பேருண்மையை ஒரு பண்பாட டுப் போர் முறை வழியூடாக சர்வதேசமும் உணர வெளிப்படுத்தி இருக்கிறார்கள் பெண்கள் பண்பாட்டு மையத் தினர்.

அந்த மாலைப் பொழுதின் தீச்சுடர்ந்த செவ் வொளியில் எங்கள் தமிழ்ப் பெண்களின் முகங் கள் பிரகாசித்தன. நாளை ஏதோ ஒரு நாள் எங்கள் தேசத்து இலட்சோபலட்சம் பெண்கள் விடுதலைத் தீ சுமந்து வீதி வெளியிறங்கி சுய நிர்ணயத்துக்காய் அணி திரளப்போகும் கண்கொள்ளாக் காட்சியை உறுதிப்படுத்தியது அந்த நெருப்பு மகளிரின் விழிச் சுடர்.

மகளிர் தினத்திற்கும் இராணுவத்திற்கும் என்ன சம்பந்தம் என்று இராணுவத் தளபதி ஏற்கனவே வினவியிருந்தார். சம்பந்தமிருக்கிறது என்பதை எடுத்து விளக்கினர் பெண்கள்.

தேச நிர்மாணப்பணிகளில் எமது இளம் பெண்கள் ஈடுபடுவதற்கு விரும்புகின்றனர். ஆனால், இராணுவத்தைக் காரணம் காட்டி பெற்றோர் அவர்களைத் தடுத்து விடுகின்றனர். இராணுவ ஆக்கிரமிப்புப் பிரதேசங்களில் பெண்களின் பாதுகாப்புக்கு உத்தரவாத மில்லை என்ற உண்மையை புரிய வைத்தனர். ஏனெனில். தமிழீழப் பெண்களின் அனுபவம் வித்தியாச மானது.

விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ள தமிழ்ப் பிரதேசங்களில் பெண்களுக்கான பாதுகாப்பு உறுதிப்படுத்தப்பட்டு இருக்கிறது. உலகில் எங்கும் இல்லாத அளவுக்குத் தமிழீழச் சட்டக்கோவையில் பெண்களுக்கான பாது காப்புச் சட்டம் உச்சமாகக் காணப்படுகின்றது. தமிழீழக் காவற்றுறையில் பெண்களின் விசேட பிரச்சினைகளைக் கவனிக்கவென்றே தனிப் பிரிவு இயங்கி வருகிறது. பெண்கள் மீது பலாத் காரம் புரிந்த எந்த ஒருவரும் கடும் தண்டனைக்கு உட்படுவதைத் தமிழீழ சட்டத்துறை உறுதி செய் கிறது.இந்த அனுபவங்களுடன்தான் எமது பெண் கள் அன்றைய பொழுது எமது நிலத்தை நாமும் தேசியத் தலைமையுடன் இணைந்து புனர் நிர்மாணம் செய்ய வழிவிட்டு நீங்கள் உங்கள் இடங் களுக்கு போய் விடுங்கள், எமது பெண்களின் விடுதலை என்பது எமது தேசத்தின் விடுதலை யோடு இணைந்ததே என்று உறுதிபடத் தெளிந்து குரல் கொடுத்திருந்தனர்.

ஜெ.விந்தன்
அரங்கச் செயற்பாட்டுக் குழு

# “கலைகள் மனதுக்கு நிம்மதி தருபவை”



ஓவியக் கலையில் பிரகாசித்து வரும் இளங்கலைஞர் இரத்தினசிங்கம் நிதர்சன், யாழ்ப்பாணம் தம்பாலையைச் சேர்ந்தவர். யாழ்ப்பாணத்திலிருந்து சிறு குழந்தையாக பெற்றோருடன் புலம்பெயர்ந்து இந்தியாவில் மதுரையில் வாழ்ந்தவர். தற்போது கொழும்பு திரும்பியுள்ள அவர் ஓர் இளம் ஓவியக்கலைஞராகப் பரிணமிக்கிறார். இந்தக் கலையில் ஆர்வத்துடன் உழைத்து வரும் அவருடன் தொடர்புகொண்டோம். அவரது செவ்வி இது.

*கேள்வி:-* உங்களைப்பற்றிக் கூறுங்களேன்?

*பதில்:* – நான் தம்பாலை, அச்சுவேலியில் பிறந்து 1990ஆம் ஆண்டு இடம்பெற்ற இனப்பிரச்சினையையடுத்து இடம்பெயர்ந்து குடும்பத்தினருடன் இந்தியா சென்றுவிட்டேன். அப்போது நான் கைக்குழந்தையாக இருந்தேன். 1993ஆம் ஆண்டு மதுரை கூடலூரில் புனித வளனார் மெட்ரிக் மேல்நிலைப் பள்ளியில் எனது ஆரம்பக்கல்வியைத் தொடர்ந்தேன். பாடசாலையில் படித்த காலம்முதலே நான் ஓவியம் வரைவதில் மிகவும் ஆவலாக இருந்தேன். எனக்கு எனது பெற்றோர் நல்ல ஊக்கம் அளித்தனர்.

2002ஆம் ஆண்டு மீண்டும் யாழ்ப்பாணம் வந்து, தற்போது கொழும்பில் வசித்துவருகின்றேன். நான் குடும்பத்துடன் கனடா செல்வதற்காகக் காத்திருக்கும் அதேவேளை, கொழும்பு மத்திய இந்து மகாவித்தியாலயத்தில் தரம் 9இல் கல்வி கற்றுவருகின்றேன். எனக்கு இரண்டு தம்பிமாரும் உள்ளனர். ஒருவர் தரம் 7 இலும் மற்றவர் தரம் 4இலும் கல்விகற்று வருகின்றனர். எனது தந்தையார் வேலுப்பிள்ளை இரத்தினசிங்கம் கனடாவில் தொழில் புரிகிறார்.

*கேள்வி:-* ஓவியத்துறையில் எவ்வாறு உங்களுக்கு நாட்டம் ஏற்பட்டது?

*பதில்:* – சிறுவயது முதலே ஓவியம் வரைவதில் எனக்கு ஆர்வம் இருந்துவந்துள்ளது. நான் முறையாக எங்கும் கற்கவில்லை. ஆனால், எனக்குள்ளேயே இந்த ஆர்வம் காணப்பட்டதை என்னால் உணரமுடிந்தது. சிறுவயதில் ஒற்றைகளை எடுத்து ஏதாவது வரைந்துகொண்டிருப்பேன். இதனை அவதானித்த எனது பெற்றோர் நன்றாக உள்ளது. மேலும் வரையும்படி எனக்கு ஊக்கம் அளித்தார்கள், அந்த ஊக்கமே ஓவியத்துறையில் இந்தளவிற்கு என்னை வளரவைத்தது.

*கேள்வி:-* நீங்கள் வரைந்த முதலாவது ஓவியம் உங்களுக்கு நினைவிருக்கிறதா?

*பதில்:* – ஆம் ‘மிக்கி மவுஸ்’ என்னும் பொம்மைச் சித்திரத்தையே முதல் முதலாக வரைந்தேன். அது மிகவும் அழகாக இருந்ததனால், எல்லோரும் என்னைப் பாராட்டினர். அது எனக்குப் பெருமையாக இருந்தது. மேலும் படங்களை வரைய வேண்டுமென எனது ஆர்வத்தை மெருகூட்டியது.

*கேள்வி:-* ஓவியப் போட்டிகளில் பங்கு பற்றிய அனுபவம் பற்றி...?

*பதில்:* – இந்தியாவில் பாடசாலையில் நடைபெற்ற போட்டிகளில் நானே முதலிடத்தைப் பெற்றேன். அதிக சான்றிதழ்களையும் பரிசுகளையும் பெற்றிருக்கிறேன். அவற்றை நான் ஆவணங்களாகப் பேணி வருகின்றேன். (அவற்றை எமக்குக் காட்டுகின்றார்)

*கேள்வி:-* உங்கள் ஓவியங்கள் பத்திரிகைகளில் இடம்பெற்றதுண்டா?

*பதில்:* – எனக்கு 12 வயதாக இருக்கும்போது இந்தியப் பத்திரிக்கையான ‘தினமலர்’ எனது பேட்டியை வெளியிட்டது. அப்போது அவர்களின் முன்னிலையிலே ‘அன்னை திரேசா’, ‘தாஜ்மகால்’ போன்ற ஓவியங்களை வரைந்து கொடுத்தேன். அப்படங்களும் அப்பத்திரிகையில் இடம் பெற்றன.

*கேள்வி:-* இந்த ஓவியத்துறை உங்களை எவ்வாறன பாதைக்குக் கொண்டு செல்கின்றது.

*பதில்:* – இந்த ஓவியத்துறையைப் பொறுத்தமட்டில் எனக்குக் கடவுளால் வழங்கப்பட்ட கொடை என்றே கூறவேண்டும். இந்தக் கலை என்னை நல்ல பாதையில் வழி நடத்திக் செல்கின்றது. இவ்வாறான கலைகள் எம்மை நல்ல பாதையில் கொண்டு செல்லும் என்பதே எனது நம்பிக்கை.

*கேள்வி:-* இலங்கை வந்த பின்பு உங்கள் ஓவியம் வரையும் ஆர்வம் எப்படி உள்ளது?

## – இளம் ஓவியக் கலைஞர் நிதர்சன்

*பதில்:* – நான் கொழும்பில் ஒரு தனியார் ஓவியக்கலை நிறுவனத்தில் ஓவிய வர்ணம் தீட்டுவது தொடர்பான கற்கை நெறிக்குச் சென்றேன். அங்கு எனக்குச் சிறந்த முறையில் சொல்லிக்கொடுத்தனர். நானும் ஆர்வத்துடன் நுணுக்கமாகக் கற்றேன். சென்றவருடம் அங்கு இடம்பெற்ற ‘ஓவியக் கண்காட்சியில்’ எனது படங்கள் அதிகமாக இடம்பெற்றன. அந்த ஓவியங்கள் பலரது பாராட்டையும் பெற்றமை குறிப்பிடத்தக்கது.

*கேள்வி:-* இந்தியாயில் ஓவியம் தொடர்பாகப் பத்திரிகைகளில் உங்கள் பேட்டி வெளியான பின்பு யாரும் உங்களைத் தேடி வந்தார்களா?

*பதில்:* – இந்தியாவில் மதுரை மீனாட்சி அம்மன் ஆலயத்தில் உள்ள சிற்பங்களை வரைவதற்காக ஆலயத்துடன் தொடர்புடைய சிலர் என்னைத் தேடி வந்தார்கள். அப்போது எனக்கு 13 வயது. எனது கல்வி பாதிப்படையும் எனக்கருதி எனது பெற்றோர் அதற்கு மறுப்புத் தெரிவித்து விட்டனர்.

*கேள்வி:-* ஓவியத்துறையை விட வேறு கலைத்துறைகளில் உங்களுக்கு ஆர்வம் உள்ளதா?

*பதில்:* – ஆம் எனக்கு ‘ஓர்கன்’ வாசிப்பது ‘கிற்றார்’ வாசிப்பது போன்ற கலைகளிலும் ஈடுபாடு உள்ளது. ஆனால் இத்துறைகளுக்கு நான் வகுப்பு எதற்கும் செல்லவில்லை. ஓர்கன் சிறந்த முறையில் வாசிப்பேன். எனக்கு இசைத்துறையிலேயே அதிக நாட்டம் தற்போது ஏற்பட்டு வருகின்றது. இருப்பினும் ஓவியத்துறையை கைவிடவில்லை. பாடசாலைகளில் வரைதலை மேற்கொள்வதுடன், போட்டிகளிலும் பங்குபற்றி வருகின்றேன்.

*கேள்வி:-* உங்களுடைய எதிர்கால இலட்சியம் குறித்துக் கூறமுடியுமா?



*பதில்:* – கலைத்துறையில் ஏ.ஆர்.ரகுமான் போல் வரவேண்டும் என்பதே எனது இலட்சியமாகும்.

*கேள்வி:-* இன்று எமது மண்ணில் உள்ள உங்களை ஒத்த இளம் சமுதாயத்தினருக்கு என்ன கூற விரும்புகின்றீர்கள்?

*பதில்:* – ஒவ்வொரு கலையும் மனதுக்கு நிம்மதியைத் தரக்கூடியவை. அவ்வாறான கலைகளில் போட்டி இருக்கவேண்டுமே தவிர பொறாமை இருக்க கூடாது.

இந்தியாவைப் பொறுத்தவரையில் கலையில் நல்ல முன்னேற்றம் கண்டுள்ளது. என்னைப்போல் இந்த இளம் சமுதாயத்தினர் கலைக்கு முக்கியத்துவம் கொடுத்தால் எமது நாட்டின் பண்பாடு, கலை, கலாசாரம் என்பதைச் சிறந்த முறையில் முன்னெடுக்கமுடியும்.

சந்திப்பு : பகீர்

# நட்சத்திரம்

விடை பெறுகிறேன் உன்னிடமிருந்து
சிறு கூடாரம் வானமல்ல
வானம் சிறு கூடாரமுமல்ல
எப்போதும் வாதிட்டுக் கொண்டிருக்க முடியாது
உண்மையை விட பிடிவாதத்தின் கூர்
அதிக காயங்களைத் தரும்.

விடை பெறுகிறேன்
எந்தத் தோல்வியுமில்லை
ஏதொரு வஞ்சனையுமில்லை.

கழிவிரக்கங்கள் இனியும் வேண்டாம்
கத்தியாகவும் கேடயமாகவும் இருக்க முடியாது
ஒரு பயணிக்கு இது அவசியமுமில்லை

கோபங்களில்லாத காடு
தீப்பற்றியெரியாத வெளி
விசமற்ற நீர்ச் சுனை
பொறிகளில்லாத வழி
எங்கேனுமிருக்குமென்று தெரியவில்லை.

குலுக்கும் கரங்களில்
பளபளக்கின்றன நகங்கள்
நரகத்தின் ஈரமும்
அன்பின் நெருக்கமுமிருக்கின்றன.

எல்லாவற்றையும் பிரித்துப் பார்ப்பதில்
அழிய வேண்டுமா பொழுது?
எல்லாவற்றுக்கும் பொறி வைப்பதில்
கசங்க வேண்டுமா மூளையின் மலர்.

எதையும் நான் எடுத்துச் செல்லவில்லை
என்னிடம் எதுவுமில்லை
கொண்டு போவதற்கும்.

ஞாபகங்களும் வேண்டாம்
வலிதரும் நினைவுகளால் என்ன லாபம்?
விடை பெறுகிறேன் சுவடுகளின்றி
ஆகையால்
எந்த நெருடலுமில்லை

அதோ பறவைகள்
பூக்கள்
மனிதர்கள்
குழந்தைகளும் விரிந்த நிலமும்
புன்னகைக்கும் மனிதமும்

வழி மாறிய ஆட்டுடன்
ஓரிடையன் அலைய முடியாது

உனது சொற்களிலிருந்து
விடைபெறுகிறேன்
செயலின் முகம் எப்போதும் என்னோடிருக்கும்.

கருணாகரன்

நன்றி :– மகிழ்இனி



# அக்கினிக் குஞ்சு!

சர்வதேச மகளிர் தினம் யாழ்ப்பாணத்தில் இம்முறை வித் தியாசமாக இருந்தது.

இப்படித்தான் பத்திரிகைகள், ஏனைய ஊடகங்கள் வியாக்கியானம் செய்திருந்தன. கொழும்பில் சக்தி ரீ.வி, எம்.ரீ.வி.,தமிழ் பத்திரிகைகள், யாழ்ப் பாணத்தில் இருந்துவரும் தமிழ்ப் பத்திரிகைகள் எல்லாம் இதற்கு முக் கியத்தும் கொடுத்திருந்தன. ஏதோ கொஞ்சப் பெண்கள் ஏதோ செய்த னர் என்று எவரும் கண்மூடி மயங்கி யிருக்க வில்லை. இம்முறை இந்த 'வித்தியாசம்' எல்லோர் பார்வையி லும் விமர்சனங்களைக் கிளர்த்தியிருக் கிறது.

இதய வீணைக்குக் கூட இதற்குள் அவல் கிடைத்திருந்தது. அந்த வித்தியாசம் பற்றி அதிகம் அக்கறையும் கவலையும் கொண்டிருந்தார்கள்.

அது என்ன அந்த வித்தியாசம்?

எப்படி வந்தது அந்த வித்தியாசம்?

சில பத்துப் பெண்களின்அசுர பலம் கொண்ட குழு, பல இலட்சம் பெண்களின் நெஞ்சுக்குள் கனன்று கொண்டிருக்கும் விடுதலைத் தீயினைச் சுமந்த படி களமிறங்கியது. குடாநாட்டின் பல ஊர்களிலும் உள்ள பெண்களின் பிரதிநிதிகளாக இவர்கள் குழுமியிருந்தனர்.

பெண்கள் பண்பாட்டுமையம் அந்த விடுதலைக்கான அரங்கை ஏற்பாடு செய்திருந்தது. அரங்க செயற்பாட்டுக் குழுவைச் சேர்ந்த ஆண்களும் இந்தப் பண்பாட்டுப் போர் அரங்கில் சங்கமித்திருந்தனர்.

உண்மையில் இது பெண்கள் விடுதலைக்கான நிகழ்வு மட்டுமல்ல, தேச விடுதலைக்கானதும் பண்பாட்டு விடுதலைக்குமான போர் முறையும் கூட.

ஏனெனில், "பண்பாடு" என்ற போர்வையில் எமது சமூகம், பெண்கள் எவை எவற்றை செய்யக்கூடாது என்று வரம்புகள் போட்டிருந்ததோ அவையவற்றையெல்லாம் வரம்பறுத்து செதுக்கி பவனி வந்தனர் தமிழீழப் பெண்கள் .

ஆத்தி சூடி வீதியில் உள்ள பெண்கள் பண்பாட்டு மைய நிலையத்திலிருந்து தொடங்கி கந்தர்மடம் ஆலடிச்சந்தி இராணுவ காவல் அரண் வரை நிகழ்ந்தது இந்த ஆற்றுகை.

ஆக்கிரமிப்பு இராணுவ அடையாளச் சின்னத்தை பாடை சுமந்து வந்தனர் தமிழீழப் பெண்கள்.

பறை முழங்கினர்.....

கொள்ளிக்குடம் சுமந்தனர்.......

தீ சுமந்தனர்.......





விடுதலைத் தீ மூண்டெரியும் பின்னணியிலேயே "பூவுக்குள் ஒரு பூகம்ப மடல் சுமந்தனர்"

ஆமாம்!

பூக்கள்,பழங்கள் நிறைந்த தட்டொன்றில் சிறிலங்கா இரணுவத்திற்கு ஒரு பூகம்பமடல் சுமந்து சென்றனர். கோயிலுக்குள் குருக்களிடம் ஆசீர்வாதம் பெற்றனர். ஆலடிச் சந்தியில் இராணுவ காப்பரணில் நின்றிருந்தனர் இராணுவத்தின் பிரதிநிதிகள். யாழ். மாவட்ட இராணுவத் தளபதி சுனில் தென்னக்கோனின் பிரதிநிதியாக நின்றிருந்த இராணுவ அதிகாரியிடம் புயல் சுமந்த அந்தக் கடிதத்தைக் கையளித்தனர்.

வேம்படி மகளிர் கல்லூரி மாணவி இராணுவ வாகனத்தால் மோதப்பட்டு இறந்தமைக்கு எதிர்ப்புத்தெரிவித்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட தமிழ் மக்கள் மீது இராணுவத்தினர் காட்டு மிராண்டித்தனமாகத் தாக்குதல் நடத்தி, கொலைகள் புரிந்த ஓரிரு நாள்களுக்குள் அதே தெருவெளியில் இந்தத் துணிகரமான போராட்டத்தை முன் வைக்க தமிழீழப் பெண்களால் முடிந்திருக்கிறது.

கடிதக்கையளிப்பு மௌனமாக நடைபெறவில்லை. கையளிப்பின் நடுவிலே இராணுவத்தினருடன் கதையாடல் நிகழ்ந்தது. மென்மை குழைந்து உறுதியோடு நிகழ்ந்தது கதையாடல்.

"நாங்கள் எங்கள் நிலத்தில் - வீதிகளில் சுதந்திரமாக - நிம்மதியாக வாழ வழிவிட்டு நீங்கள் உங்கள் வீடுகளுக்குச் சென்றுவிடுங்கள். அப்போது நாங்களும் நீங்களும் நண்பர்களாக இருக்க முடியும். இல்லையேல் நாங்கள் எல்லோரும் போராட்டத்தில் ஈடுபடுவது தவிர்க்கமுடியாது" என்று ஆணித்தரமாக உரைத்தனர்

( V பக்கம் பார்க்க)

---

# நடப்பதற்குப் பாதைகள் தயாராகவிருந்தும் பாதங்கள் மறுத்திடக் காரணம் என்ன?

**விழிப்புணர்வுக் கழதம்**

மண்ணில் வேரோடி, மாநிலத்தில் கால்பதித்து, வீசும்புயற்காற்றை விழும்வரைக்கும் நின்றெதிர்க்கும் தன்மைபொருந்தியவர்களாயிருந்து தரணியின் போக்கினைக் கட்டுப்படுத்தி அதனைத் ஆரம்பித்த [?] வேண்டியவர்களாய் அக்கறையுடன் அபிவிருத்திப்பணியில் [?] முண்டியடித்துக்கொண்டு முன்நிற்க வேண்டிய நாங்கள் – அதாவது இந்த இளைய சமுதாயம் இன்று எங்கே நிற்கின்றோம்? சிந்தித்துப் பாருங்கள்.

அன்பிற்குரியவர்களே!

உங்கள் அனுமதியோடு, அக்கறையுடன் ஆதி எழுதுகிறான். கொஞ்சம் யோசியுங்கள். புதுவருடம் பிறந்தபோது, புதுச்சிந்தனைகள், செயல்கள் வெளிக்கொணரப்படவேண்டுமே என்று நம்மில் யாராவது சிந்ததித்திருப்போமா? ஆம், எனில் இதனை வாசிக்கவேண்டிய அவசரம் உங்களுக்கோ, எழுதவேண்டிய அவசியம் எனக்கோ வந்திருக்கப் போவதில்லை. ஆக, இல்லை என்பது இதன் உள்ளார்ந்த பொருள் ஆகும் என்பதில் மாற்றுக்கருத்துக்கு இடமில்லை. புதுவருடக்கொண்டாட்டத்தில் நாம் புதுப்படம் பார்க்க வரிசையிலே முண்டியடித்துக்கொண்டு நிற்கிறோமே தவிர புதிதாய் எதையாவது செய்திருக்கிறோமா? வேண்டாம் சிந்தித்தாவது பார்த்திருக்கிறோமா? இல்லை. இந்தநிலையில் நாம் நிற்கின்றோம். எப்போது நாம் இதை உணர்ந்து எப்போது முன்னேறுவது?

அபிவிருத்தியடைந்த நாடு என்ற வரிசையில் இன்னும் அறுபது ஆண்டுகள் கடந்தாலும் நம் நாடு வரப்போவதில்லை. ஏன்?

அபிவிருத்தியடைந்துவரும் நாடு இலங்கை என்பதில்தான் உங்களுக்கு பெருமையா?

உண்மையில் சிந்தனையில் நாங்கள் வளரவில்லை. ஆதலால் அபிவிருத்தியில் எங்களால் வளரமுடியவில்லை. ஏன்? எங்களுக்கெல்லாம் இலங்கையும் ஓர் அபிவிருத்தியடைந்த நாடு என்று சொல்லிக்கொள்ள விருப்பமில்லையா? விருப்பம் இருக்கின்றது. ஆனால் உங்களிடம் அதற்கான முயற்சிகள் இல்லை,சிந்தனைகள் இல்லை,செயல்கள் இல்லை மொத்தத்தில் அக்கறை இல்லை.

நாங்கள் எதைப் பழக்குகிறோமோ, எதைத் தூண்டுகிறோமோ, எதை ஊக்குவிக்கிறோமோ பின்வரும் நாளில் அதனாலேயே அழியவேண்டிய சூழ்நிலைக்கு நாம் தள்ளப்படுகிறோம். அதனால்தான் நாம் இன்னமும் தொடங்கிய இடத்திலேயே நின்றுகொண்டிருக்கிறோம். வெளிநாட்டவர்கள் முன்னேறிக்கொண்டே செல்கிறார்கள். இது யார் தவறு? ஒட்டுமொத்த சமூகத்தின் தவறு இது –.

அடிப்படையில் நாம் விட்ட தவறுகள்தான் இவற்றுக்கெல்லாம் காரணம். ஒரு வேண்டுகோளை முதலில் நாம் விடுக்கின்றோம். உயர் மட்டத்திலிருந்து சரியான பதில் எமக்கு வரவில்லை. உடனே இரண்டு சாளரங்களுக்கு கல்லெறிகிறோம். அந்தக்கணமே எமது வேண்டுகோள் நிறைவேற்றப்படுகிறது. இதுதான் நாம் பகிஷ்கரிப்புப் போராட்டம் நடத்த வேண்டியதற்கான உண்மைக் காரணம் என்று இன்றைய இளைய சமுதாயம் தமக்குள்ளே ஒரு மனப்பாங்கை வளர்த்துக் கொண்டதற்கு இந்த சமூகம்தான் காரணம். நீங்கள் மௌனமாயிருந்ததன் மூலமும், அவர்களுடைய போராட்டத்தின் பின்னர் செயலாற்றியதன் மூலம், அவர்களுடைய போராட்டத்தின் பின்னர் செயலாற்றியதன் மூலமும் கல்லெறியவதைதான் பழக்கியிருக்கிறீர்கள். முடிவில் வீதி விபத்து என்றால் என்ன? வளரும் கல்விக் கூடங்களென்றால் என்ன? எல்லாவற்றுக்கும் இதுதான் பதிலடி என்ற சிந்தனை இந்த இளையசமுதாயம் மத்தியில் இருக்கின்றது. இது அவர்கள் தவறல்ல. இது உங்கள் தவறு. உங்கள் சமூகத்தின் தவறு.

வீதியிலே செல்லும்போது தலைக்கவசம் அணிய வேண்டியது முறை . "அவன் என்ன சிங்களவன் சொல்வது? நாம் என்ன போடுவது?" இது நம்மவர் வாதம். கொஞ்சம் யோசியுங்கீள். இலங்கை இனப்பிரச்சினைக்கு, வீதி ஒழுங்குக்கும் ஏதாவது தொடர்பு உண்டா? இனவாதத்தில் நின்று உயிரை அழித்துக் கொள்வதைத் தவிர நீங்கள் வேறு எதை இதன் மூலம் நிறைவேற்றிக் கொள்கிறீர்கள். சிறிது சிந்தித்துப் பாருங்கள். உங்கள் மீது குற்றப்பிரேரணை அவிழ்த்து விட நான் வரவில்லை. உங்கள் மீது அக்கறை கொண்டு, நாளைய நம் சமுதாயத்தின்பால் அக்கறை கொண்டே நான் எழுதுகிறேன்.

மற்றவர் உடம்பில் உங்கள் பாரத்தை நிறுத்திக்கொண்டு உங்கள் கால்களில் நிற்பதுபோல் பாசாங்கு செய்கிறீர்களே, இது உங்களுக்குப் பெருமையா? இன்று உங்களுக்கு மதிப்பு இருக்கிறதென்றால் அது எங்கள் பதவிக்கு அளிக்கப்பட்ட மதிப்பு என்று யோசியுங்கள். அப்போது உங்கள் கடமையை நீங்கள் இன்னமும் சரியாகச் செய்வீர்கள். இது நம் சமூகத்தின் பக்கம்.

இனி நம் மாணவர்பக்கம் சற்றுப் பார்ப்போம் இன்றைய கால கட்டத்தை வைத்துக்கொண்டு உயர் தரக்கற்கைத் துறைகளை தேர்ந்தெடுக்கும் சகோதரர்களே! கொஞ்சம் சித்தியுங்கள். நீங்கள் கற்று, குறைந்தது பத்து வருடங்களின் பின்னர்தான் வேலைக்கு செல்லப்போகிறீர்கள். அந்நிலையில் இன்றையை திகதியை வைத்துக்கொண்டு துறைகளை தேர்ந்தெடுத்து என்ன பலன்? ஆக இந்தக் கஷ்டத்திற்கு உள்ளாகாமல் உங்களால் இயலுமானதென நீங்கள் தீர்மானிக்கும் துறையைத் தேர்ந்தெடுங்கள். அது உங்களுக்கு என்றைக்கும் கை கொடுக்கும். இது உங்கள் எதிர்காலம். நீங்கள்தான் இதனை முடிவுசெய்யவேண்டும். அத்துடன் உங்கள் பழக்கவழக்கங்களையும் சற்றுக்கவனிக்கவேண்டும்.

யாரோடு, எந்தநேரத்தில், என்ன சூழ்நிலையில், எவ்வாறு பேசுகிறோம் என யோசித்துப்பேசுங்கள் பாதிப் பிரச்சினைக்குத் தீர்வு கிடைத்துவிடும். பிழை என்பது வேறு. நாகரிகம் என்பது வேறு. பாடசாலைக்கு சேர்ட்டை வெளியில் விட்டுச் செல்வது பிழையல்ல. ஆனால், அது நாகரிகமல்ல. ஆக எந்தெந்தநேரம், எந்தெந்தச் சூழ்நிலையோ அந்தந்தச் சூழ்நிலைக்கேற்றவாறு எம்மை நாம் மாற்றிக்கொள்ளவேண்டும். எனவே, எம் இளைய சமுதாயமே! சற்று சிந்தியுங்கள். உங்களால் மட்டுமே இந்நாட்டின் தலையெழுத்தை மாற்ற முடியும். உங்களின் சிந்தனைகள் இனியாவது அக்கறையுடனிருக்கட்டும். உங்கள் செயல்கள் நிச்சயமாகச் சமூக அக்கறைபால் மாறுமானால் நம் நாடும் முன்னேறும். நாமும் முன்னேறுவோம். இதுவே சிறந்தவழி.

மாற்றம் என்ற ஒன்றைத்தவிர எல்லாமே மாறும்.

*அக்கறையுடன் :- ஆதி*




# அரங்காலயம்

"எழுந்து வா பெண்ணே
உன் அடிமைத் தளைகள் நீங்க.....
துணிந்துவா பெண்ணே
ஊரும் உலகும் போற்ற....."

பெண்ணின் ஏற்றமும்,
தாழ்வும் ஆணையே சார்ந்தது. அவனால்தான் பெண் அடிமைப்படுத்தப்படுகின்றாள். இதுதான் அனைவரும் கூறும் கருத்து.
இது பிழையானதல்ல. ஆனால், ஏதோ ஒரு பக்கத்தை எடுத்தோமானால் அதற்கு மறுபக்கம் என்ற ஒன்று உண்டென்பதை நாம் ஏற்றுக்கொள்கின்றோம். அதே போலவே பெண் அடிமைத்தனத்திற்கும் இன்னொரு முகம் – இன்னொரு பக்கம் – உண்டென்பதே உண்மை.
அதுதான் பெண்ணே பெண்ணை அடிமை கொள்ளும் – அடக்கியாளும் – நிலை.
அடக்கியாளல் என்பது அடித்துத் துன்புறுத்தல் மட்டுமல்ல, அவளின் தேவைகளை மறுத்தலும், சுதந்திரத்தை மழுங்கடித்தலும் கூட அடக்கியாளலே.
ஒரு பெண் தான் விரும்பிய இடங்களுக்குச் செல்வதற்கும், விரும்பியவர்களுடன் பழகுவதற்கும் இன்றும் தடை விதிக்கப்படுகின்றது.
பெண்ணிற்குப் பாதகத்தை ஏற்படுத்தக் கூடிய விடயங்களுக்குத் தடைவிதித்தல் என்பது ஏற்றுக்கொள்ளக்கூடிய விடயம். ஆனால், பெண்ணிற்கு ஏற்றத்தையும், அவளது வாழ்விற்கு மேன்மையையும் தரக்கூடிய விடயங்களுக்குக் கூட தடை விதிக்கப்படுகின்றது.
இதில் முக்கியமான தடையாளிகளாகத் திகழ்பவர்கள் நம் பெண்களே.
இதை வெளிப்படுத்திய களம் – அதாவது சமூகத்தில் இப்படியும் உள்ளார்கள். நாமும் அடக்கப்படுகின்றோம். எம் பெண்ணினமே எம்மை அடக்குகின்றது – என்று வெளிப்படுத்தி நின்றது அரங்காலயம்.
அண்மையில் பெண்கள் பண்பாட்டு மையத்தின் உயிர்ப்பூக்குநர்களின் ஒழுங்குபடுத்தலின் கீழ் நல்லூர் மங்கையர்க்கரசி வித்தியாலயத்தில் அரங்காலயம் இடம்பெற்றது.
அந்த அரங்காலயப் பங்காளிகளுடனும், உயிர்ப்பூக்குநர்களுடனும் கலந்துரையாடும் சந்தர்ப்பம் எமக்குக் கிடைத்தது.
அவ்வாறு நாம் அவர்களுடன் கதைத்தபோது அவர்கள் எமக்குக் கூறியவற்றில் இருவரின் கருத்துக்களை இங்கே தொகுத்துத் தருகின்றோம்.



## "... இங்கை வந்தால்தான் மூளை சுயமாக வேலை செய்யுது..."

– குழந்தையுடன் வந்த ஒரு தாய்

**திருமதி சரஸ்வதிதேவி ஆனந்தகுமார்**
(உரும்பிராய் கிழக்கு) (வயது -24)

பெண்கள் என்றால் வீட்டுக்குள்ளேதான் இருக்கவேண்டுமென்பதல்ல. வெளியேயும் வெளிக்கிட்டு வெளி உலகத்தில என்ன நடக்குதெண்டு பார்க்க வேண்டும். அடுப்படியைச் சுத்திக்கொண்டிருந்தால் சரியா? எங்களுக்கும் நாலு விஷயங்கள் தெரியவேண்டாமா?

வெளியுலகம் தெரியாமல் இருப்பதை விட இப்படியான நிகழ்வுகளில் கலந்து கொண்டு எங்களுக்குள்ளே இருக்கின்ற இயலாமை, பயம் போன்றவற்றை நீக்கி உற்சாகமாக இருக்கலாம் தானே. இப்படியான நிகழ்வுகளில் நாங்கள் கலந்து கொள்கிறபோது என்னைப் போன்ற எத்தனையோ பெண்கள் உற்சாகமடைகின்றனர்.

இந்த அரங்காலய நிகழ்விற்கு வந்து நாம் துள்ளிக்குதித்து ஆடும்போது எங்கட மூளை சுயமாக வேலை செய்யத் தொடங்குகின்றது. அதன்மூலம் எத்தனையே வேலைகளை நாம் தனித்துச் செய்வோம் என்ற துணிவும் எம்மிடையே ஏற்படுகின்றது. அந்தத் துணிவை வைத்துக்கொண்டே நாம் ஒரு சுய தொழிலைச் செய்ய முடியும்.

இப்பத்தையப் பெண்களுக்குச் சுயதொழில் செய்வதற்கான அறிவு போதாது. அவர்களிடம் அறிவு இல்லை என்பது இதன் அர்த்தமல்ல. பெண்களிடம் இயல்பாகக் காணப்படுகின்ற பயம், வெட்கம், இயலாமை போன்றன இவர்களிடையே அதிகமாகக் காணப்படுகின்றன. அவை மாற்றப்படவேண்டும். பெண்களுக்கான குணாங்கள் இருக்கத்தான் வேண்டும். ஆனால், அவை கூடுதலாக சில பெண்களிடையே உள்ளதால் அவர்களின் எதிர்கால வாழ்வு, முன்னேற்றம் தடைப்பட்டுவிட வாய்ப்பு ஏற்படும். இப்படியான நிகழ்வுகளில் கலந்து கொள்கின்ற போது இயல்பாகவே எம்மாலும் எதையும் சாதிக்க முடியும் என்ற எண்ணம், துணிவு உருவாகும். அத்துடன், இந்த அரங்காலயக் குழுவினரிடம் ஆலோசனைகளைப் பெற்றுச் சுயதொழில் முயற்சிகளையும் நாம் செய்யக் கூடியதாக உள்ளது.

இந்த நிகழ்வுகளில் கலந்து கொள்வதற்கு உங்கள் கணவர் எந்தவிதமான தடையும் விதிக்கவில்லையா எனக் கேட்டோம். எனது கணவர் எனக்கு இப்படியான தடைகள் எதுவும் போடுவதில்லை அதேவேளை நான் எனது கணவனின் விருப்பு வெறுப்புகளுக்கு மதிப்புக் கொடுத்து அவருக்கு, இந்த அரங்காலயம் என்றால் என்ன? அதன் பயன்பாடுகள், நன்மைகள் போன்றவற்றைக் கூறி, அவரின் அனுமதியைப் பெற்ற பின்பே இங்கு வருகின்றேன். அவரின் அனுமதியுடன் நான் இங்கு வரும்போது அது எனக்கு மேலும் உற்சாகத்தை உண்டு பண்ணுகின்றது.

இப்படியான நிகழ்வுகளில் நாங்கள் கலந்துகொண்டு எமது அறிவை, ஆற்றலை விருத்தி செய்வதன் மூலம் எங்கட பிள்ளைகளின் எதிர்காலத்தையும் ஒரு நல்ல நிலைக்குத் கொண்டு வரமுடியும். அரங்காலய நிகழ்வில் கலந்து கொண்டு ஆடிப்பாடி, எல்லோருடனும் கதைத்து ஒன்றாக இருக்கும்போது மனதில் உள்ள கவலைகள், துக்கங்கள் எல்லாம் மறந்துவிடும்.

இங்கு உற்சாகமாக இருந்து விட்டு வீட்டுக்குப் போகும்போது அங்கே இருக்கிற வீட்டுவேலைகளை இந்த உசாரில் செய்து முடித்துவிடுவேன். சோம்பல் இல்லாமல் செயற்படக்கூடிய சக்தியையும் இந்த அரங்காலயம் எனக்குத் தருகின்றது.



## "... சுயசிந்திப்பை, தன்னம்பிக்கையை தருகின்ற ஆலயம் இது ..."

**எஸ்.டிசாந்தனி**
வவுனியா (வயது -20)

இந்த அரங்காலய நிகழ்வு ஆரம்பித்த காலத்தில் இருந்து நான் இங்கு வேலை செய்கிறேன். அத்துடன் தொழில்நுட்பக் கல்லூரியிலும் படித்துவருகின்றேன். என்னைப் பொறுத்தவரையில் இந்த அரங்காலயம் பெண்களுக்குக் கிடைத்த ஒரு கோயில் என்றுதான் நான் சொல்லுவேன்.

கோயிலுக்குச் சென்றால் எங்களுக்கு எவ்வாறு மன அமைதி கிடைக்கின்றதோ அதைப்போல இங்கு வரும் பெண்களும் தமது மனப்பாரங்களை இறக்கி வைத்துவிட்டு ஆறுதலுடன் வீடு திரும்புகின்றனர்.

பெண்கள் என்றால் ஆடக்கூடாது, பாடக்கூடாது, அடக்கமாக இருக்க வேண்டும் என்று கூறுவார்கள். ஆனால் பெண்கள் அவ்வாறு இருக்கும் போது மன அழுத்தத்திற்கு ஆளாகின்றனர். ஆடிப்பாடி தமது உடம்பை அசைப்பதன் மூலம் தானாகவே அவர்களிடமுள்ள மன இறுக்கம் அகன்று போய்விடும். இதனால் அவர்கள் எந்த இடத்திலும் துணிவுடன் - உறுதியாக - ஒரு செயலைச் செய்யமுடியும்.

இங்கு வந்து இங்குள்ள பெண்களைப் பார்க்கும் போது எனக்கு மிகவும் சந்தோசமாக உள்ளது. ஆனாலும் எவ்வளவு பெண்கள் இருக்கிறார்கள் அவர்களில் எத்தனைபேர் இப்படி வெளியுலகைப் பார்க்கிறார்கள் என்பது கேள்விக்குறியான ஒன்றாக உள்ளது. அதனை நினைத்தால் எனக்கு மிகவும் வேதனையாக உள்ளது.

பெண்கள் வெளியே வெளிக்கிட்டால் ஆண்கள் கிண்டலடிப்பார்கள். அதனால வெளியால போகாமல் இருந்தால் எந்தப்பிரச்சினையும் ஏற்படாது என்று வீட்டுக்குள்ளேயே எத்தனையோ பேர் இருக்கின்றனர். ஆனால், வீட்டுக்குள் இருந்தால் தான் பிரச்சினைகள் அதிகமாக வரும்.

வெளி உலகத்தில் எது நடக்கிறது என்று தெரியாத பெண்கள் வீட்டிற்குள் இருக்கும் போது வீட்டில் வரும் சிறிய பிரச்சினைகளைக் கூட அவர்களால் கையாள முடியாது போய்விடும் நிலைமையை அவர்கள் எதிர்கொள்கின்றனர்.

பெண்களைக் கண்டால் ஆண்கள் பகிடி விடத்தான் செய்வார்கள், அது இயல்பு. பெண்களுக்கு கிண்டல் விடுவது என்பது அவர்களுக்கு சுவீற்றையும் விட இனிமையான ஒரு விடயம். அதனால் கிண்டல் விடும் ஆண்கள் எல்லோரும் கெட்டவர்கள் என்று பொருள் அல்ல. அவர்களும் வீட்டில் பெண் சகோதரங்களுடன் பிறந்தவர்கள்தான். பெண்களின் உடையைப் பார்த்து நடையைப் பார்த்து ஆண்கள் கிண்டலடிக்கின்றனர் என்று எத்தனையோ பேர் சொல்கிறார்கள். ஆனால், அப்படி நூறு வீதம் கூறமுடியாது.

பெண்கள் தமது வேலைகளை இலகுவாகச் செய்யவும், போக்குவரத்தை இலகுபடுத்தவும் தமக்கு ஏற்றவகையான உடைகளைப் போடுகின்றனர். அவை தவறு என்று நான் கூறவில்லை. ஆனால், எமது பண்பாட்டைச் சீரழிக்கக்கூடிய அரைகுறை உடைகளைப் போடக்கூடாது என்பதே எனது கருத்து.

பெண்ணானவள் எவரதும்கட்டுக்குள் கட்டுண்டு போய் பிறரது சிந்தனையில் வாழக்கூடாது. சுயமாகச் சிந்தித்துச் செயலாற்ற வேண்டும். அந்தச் சுய சிந்திப்பை - உற்சாகத்தை - தன்னம்பிக்கையை - இந்த அரங்கலாய நிகழ்வு அவர்களுக்கு ஏற்படுத்திக் கொடுக்கிறது. இந்த அரங்காலயம் எமது சமூகப் பெண்களுக்கு ஓர் சிறந்த எதிர்காலத்தை அமைத்துக் கொடுக்கும் என்பதில் எந்தவிதமான சந்தேகமும் இல்லை.

தொகுப்பு:– கங்கா – தீபா

## என் மழை தட்டுகையில் ....

என்னை
மழையில் நனையவிட்டு
மறைந்து போன
மின்னல் அவள்.

வானவில்லாய்
வளைந்து சிரித்து
நான்
வண்ணங்கள்
உணரும்முன்
குருடாக்கிப் போன
ஒளிப்பிறை அவள்.

விரிந்த குடையில்
மோதும் நீர்க்குச்சிகள்
பரிகசிக்கும்
என் தோல்வியை.

ஈரக்காலணிகளுள்
பிசுபிசுக்கும்
மழைநீர்
இரங்கலிடும்
என் இயலாமையை.

அன்றுபோல்
மழையை ருசிக்கும்
மனம்
இன்று இல்லை.

உன்னிடத்தில்
பெய்யும் மழை
இந்த முறையும்
என்னைப்பற்றி
ஏதேனும்
சொல்ல வருகையில்
வழக்கம் போல்
சாரலைத் துரத்தி
ஜன்னலைச் சாத்தாதே.
என்
மழை தட்டுகையில்
உன்
கதவுகளைப் பூட்டாதே.

வாசலில் நின்று
'ச்சோ' வெனக் கதறும்
இன்றைய மழையாவது
உன்
ஆலங்கட்டி
மனதைக் கரைத்து
இங்கே
என்
இதயக்கூரையில்
கொட்டாதா?

வானம் பார்த்த
காதலில்
நீ வந்தால் மழை
இல்லையெனில்
காதல்
என்றும்
பிழை.

நெப்போலியன்



# ஆலயங்களை களியாட்ட இடங்களாக மாற்றக் கூடாது!



## சோதிட பூஷணம் சிதம்பரநாதக் குருக்கள்

*கேள்வி :-* வணக்கம். உங்கள் வாழ்க்கை பற்றி வாசகர்களுக்கு விளக்குவீர்களா?

*பதில் :-* சாவகச்சேரி இந்துக்கல்லூரியில் கல்வி பயின்றேன். பாடசாலைக் காலத்தில் தமிழ், கணிதம், ஆங்கிலம் ஆகிய துறைகளில் சிறப்புத் தேர்ச்சி பெற்று முதல் நிலை மாணவனாக விளங்கினேன். வியாகரண சிரோண்மணி, கி.சீதாராம சாஸ்திரிகள், கி.நாராயண சாஸ்திரிகள் ஆகியோரிடம் சமஸ்கிருத மொழி, இலக்கண - இலக்கியம், வேத அத்யயனம் என்பவற்றைக் கற்றுத் தேர்ந்தேன்.

*கேள்வி :-* நீங்கள் ஒரு சிறந்த சிவாச்சாரியாராக, பஞ்சாங்க கணிதராக, அச்சகராக விளங்குகிறீர்கள். உங்கள் சிறப்பான சிவாச்சாரியப் பணிகள் பற்றிக் கூறுவீர்களா?

*பதில் :-* நான் இளமைக்காலம் முதலே சிவாச்சாரியப் பணிகளில் ஈடுபட்டு வருகிறேன். 1963 இல் சிவாச்சாரிய அபிஷேகம் செய்து கொண்ட பின் நான் கலந்து கொண்ட முதலாவது மஹா கும்பாபிஷேகம் இந்திய சிவாச்சாரியார்கள் கலந்து கொண்ட சிலாபம் முனீஸ்வரன் சிவன் ஆலய கும்பாபிஷேகம். இது எனக்கு இத்துறைசார் உந்து சக்தியாக அமைந்தது. இதனைத் தொடர்ந்து இன்று வரை தென்மராட்சியில் மட்டுமல்ல பல இடங்களிலும் ஆலய மஹோற்சவ குருவாகவும், கும்பாபிஷேகக் குருவாகவும் செயற்பட்டு வருகிறேன். இளம் தலைமுறை சிவாச்சாரியார்கள் பலரை உருவாக்குவதிலும் ஏற்ற வழிமுறைகளை மேற்கொண்டு உள்ளேன். பிரபல சிவாச்சாரியர் பலரைக் கொண்ட ஒரு குழாம் எனது தலைமையில் தென்மராட்சியில் இயங்கிவருகிறது. இச்செயற்பாட்டினால் தென்மராட்சிக்கு வேறு இடத்தைச் சேர்ந்த குருமாரின் தேவை அவசியம் இல்லை என சிவஸ்ரீ தா. மகாதேவக்குருக்கள் பாராட்டியுள்ளார்கள்.

*கேள்வி :-* குருத்துவப் பணிகளை விட வேறு எத்துறைகளில் எல்லாம் உங்கள் ஆளுமை சிறந்து விளங்குகிறது?

*பதில் :-* ஆகமப் பணிகளுடன் மட்டுமல்லாது வைதீகக் கிரியைகள், பிராமணர்களின் பூர்வ - அபர கிரியைகள், ஆலயக் கட்டட நிர்மாணம், கோவில் அமைப்பு முறை, நித்திய நைமித்திய



லண்டனில் பொன்னாடை போர்த்து கௌரவிப்பு....

ஒழுங்குகள் போன்ற பல நிகழ்ச்சிகளிலும் சிறப்புடன் பணியாற்றி வருகிறேன்.

*கேள்வி :-* லண்டன் மாநாட்டில் 'பஞ்சாங்கம்' பற்றிய ஆய்வுக் கட்டுரை சமர்ப்பித்ததாகக் கூறினீர்கள். பஞ்சாங்கம் பற்றிய தொடர்பு உங்களுக்கு எப்படி ஏற்பட்டது?

*பதில் :-* எனது மைத்துனரும் திருக்கணித பஞ்சாங்கக் கணிதருமான பிரம்ம ஸ்ரீ சி.சுப்பிரமணிய ஐயர் FRAS, எனது மாமனார் மட்டுவில் சிவஸ்ரீ கிருஷ்ணசாமிக் குருக்கள் (பொன்னுச் சாமிக்குரு) ஆகியோரின் மறைவுக்குப் பின் இரு குடும்பத்தினரின் மூத்தோனாகிய நான் பஞ்சாங்கப் பொறுப்புகளை ஏற்க வேண்டி ஏற்பட்டது. இளமையில் கணித பாடத்தில் பெற்ற அறிவு, பஞ்சாங்க கணிப்பிடல் நேர்த்தி, ஒழுங்கு முறை, நுண்ணறிவு என்பவை காரணமாகப் பஞ்சாங்கக் கணிப்பில் பரிச்சயமடைந்தேன். சோதிட பூஷணம் விஸ்வநாத சிரௌதிகளின் சிஷ்யர்களான சுப்பிரமணிய ஐயர், கந்தசாமி ஐயர் ஆகியோரிடம் பஞ்சாங்க கணிதமும் வானியல் சாஸ்திரமும் கற்றேன். கரைநகர் நொத்தாரிசு கா.ச.மகேசசர்மாவிடம் கிரகணம் சம்பந்தமான நுண்கணிதம் கற்றேன். ஆரம்ப காலத்தில் திருக்கணிதப் பஞ்சாங்கத்தை உபயோகிப்போர் சிலராக இருந்த போதிலும் இன்று குறிப்பிடத்தக்க அளவில் அதிகரித்துள்ளனர். இதனை வியாபார நோக்கமாகக் கொள்ளாது நியாயமான, சரியான மார்க்கத்தைப் பின்பற்ற வைக்கும் ஒரு முயற்சியாகவே செய்து வருகிறேன்.

*கேள்வி :-* பஞ்சாங்க கணிப்பில் - சோதிடத்தில் - வெளிநாடுகளில் வாழும் நம்மவர்களுக்கு எப்படியான நிலையில் கணிப்பீடு செய்கிறீர்கள். நேர வேறுபாடுகள் காணப்படுமல்லவா?

*பதில் :-* புலம் பெயர்ந்து வாழும் இலங்கை, இந்து தமிழ் அன்பர்கள் தாங்கள் இலங்கையில் பின்பற்றியது போலவே அவ்வவ்பிரதேச மத்திய நாடிக்கு கணிப்பிடப் பெற்ற திருக்கணித பஞ்சாங்கத்தை நேரடியாக உபயோகிக்கக் கூடியவாறு பஞ்சாங்கம் தயாரிக்கிறோம். வேறு எந்த பஞ்சாங்கக் கணிதரும் - ஏன் இந்தியக் கணிதர்கள் கூட முயலாத ஒரு காரியமாகவே நாம் இதனைச் செய்கிறோம். உண்மையில் மேற்குலக நாடு ஒன்றுக்கு அந்நாட்டுக்குரிய மத்திய நாடிக்குப் பஞ்சாங்கத்தை வெளியிடும்போது புவியியல், பிரதேச வேறுபாடு காரணமாக விரத நிர்ணயங்களில் ஏற்படும் சிக்கல்களுக்கு முகம் கொடுக்க வேண்டி இருக்கும்.

பெரும்பாலும் பல சோதிடர்கள் வெளிநாட்டில் பிறந்த குழந்தைகளுக்கான ஜாதகத்தைக் கணிக்கும் போது பிள்ளைபிறந்த நேரத்தை இலங்கை நேரத்துக்கு மாற்றி, இலங்கையில் பிறந்த ஒரு குழந்தைக்கு ஜாதகம் கணிப்பது போல கணிக்கிறார்கள். அந்தந்த நாட்டுக்குரிய இட அட்டகாம்சம், தேசாந்திரம் என்பற்றுக்குக்கேற்பவே உண்மையில் ஜாதகங்கள் கணிக்கப்படவேண்டும். நாட்டுக்கு நாடு வேறுபடும் புவியியல் - பிரதேச வேறுபாடுகள், திகதிக் கோட்டு வேறுபாடுகள், குளிர் - கோடை கால வேறுபாடுகள் போன்றவற்றைக் கருத்தில் எடுத்து கீழ் நாட்டுக் கலாசார விழுமியங்களுக்குரிய பஞ்சாங்கத்தை வெளியீடுவ தென்பது அசாதாரணமான ஒரு விடயமேயாகும்.

**முத்தான மூத்தவர்கள் – 14**

தென்மராட்சிக்குப் பெருமை தேடித்தந்த வேதாகம சோதிட பூஷணம் சிவஸ்ரீ சி.சிதம்பரநாதக்குருக்கள் இலங்கையில் முதன்முதலாக சோதிடம் மற்றும் சிவாச்சாரியத் துறைகளுக்கான கலாபூஷணம் விருது பெற்ற பெரியாராவார். சிவாச்சாரிய பணி (ஆலய விவகாரம்), பஞ்சாங்க கணிதம் (சோதிடம்), அச்சகர் (பிரசுரிப்புகள்) ஆகிய முத்துறைகள் வாயிலாக சமூகத்துடன் நெருங்கிய தொடர்புகளை ஏற்படுத்திக் கொண்ட பெரியாருங்கூட. சியாமளா பவனம், கல்வயல், சாவகச்சேரியில் உள்ள குருக்கள் அவர்களின் இல்லத்திற்குச் சென்றேன். 2000ஆம் ஆண்டு நடைபெற்ற இராணுவ நடவடிக்கையால் முற்றாகச் சேதமடைந்த அவ்வீட்டைப் புனரமைத்து சேவையாற்றிவரும் குருக்களைக் கண்டு, கலந்துரையாடிய போது பெற்ற அனுபவ முத்துக்களை மாலையாக்கி வாசகர்களுக்கு த்தருகிறோம்.

*கேள்வி :-* திருக்கணித பஞ்சாங்கத்துக்கு வெளிநாடுகளில் வரவேற்பு எவ்வாறு அமைந்துள்ளது?

*பதில் :-* கோலாலம்பூர், ரொறண்டோ, இலண்டன், சூரிச் போன்ற இடங்களை மத்திய நாடியாகக் கொண்டு கணிக்கப்பட்ட பஞ்சாங்கங்களை முறையே மலேசியா- சிங்கப்பூர், கனடா, இங்கிலாந்து, சுவிற்ஸர்லாந்து ஆகிய நாடுகளில் வாழும் இந்து தமிழ் மக்களின் பாவனைக்கென அனுப்பி, இந்துக் கலாசாரத்தைப் பேணும் ஒரு முயற்சியின் திறவுகோலாக மேற்கொண்டு வருகிறோம். எமது இப்பஞ்சாங்கத்துக்கு அதிகப்படியான ஆதரவும் வரவேற்பும் கிடைத்து வருகிறது. பெரும்பாலான மக்கள் இதனையே பயன்படுத்தி வருகின்றனர். லண்டன் திருக்கோயில்களின் ஒன்றியம் லண்டனுக்கெனக் கணிக்கப்பட்ட எமது பஞ்சாங்கத்தையே அங்குள்ள ஆலயங்களில் எல்லாம் பிரயோகிக்கச் செய்து வருகிறது. ஒன்றியத்தின் வேண்டுகோளுக்கமைய லீலா பஞ்சாங்கக் கலண்டரையும் நாமே கணித்து, தயாரித்து வருடம் தோறும் வழங்கி வருகிறோம்.

*கேள்வி :-* லண்டனில் 'பஞ்சாங்கம்' என்ற தலைப்பில் ஆய்வுக்கட்டுரை சமர்ப்பித்ததாகக் கூறினீர்கள். அதன் விளக்கத்தையும் அதனால் நீங்கள் பெற்ற அனுபவத்தையும் விளக்குவீர்களா?

*பதில் :-* லண்டனில் உள்ள பல ஆலயங்கள் ஒன்று சேர்ந்து திருக்கோயில் ஒன்றியம் என்ற பெயரில் இயங்கி வருகின்றன. அத்தனை கோயில்களிலும் திருக்கணித பஞ்சாங்கத்தையே பின்பற்றி கருமங்கள் நடைபெறுகின்றன. எனது ஆய்வுக் கட்டுரை பஞ்சாங்கத்துக்கு ஒரு குறிப்பிட்ட மேம்பாட்டை- வெற்றியை - தந்துள்ளது.

அந்தக்கோயில் ஒன்றியத்தினருக்குப் பஞ்சாங்கம் பற்றிய ஒரு விளக்கம் தேவை ஏற்பட்டது. ஆகவே, திருக்கணித பஞ்சாங்கம், வாக்கிய பஞ்சாங்கம் என்பவற்றுக்கிடையே உள்ள வேறுபாடுகள் பற்றியும் விரதங்கள் போன்றன ஒவ்வொரு நாட்டிலும் எப்படி அனுஷ்டிக்கப்படவேண்டும் என்பது பற்றியும் விவரமாக எடுத்துக் கூறினேன். இலங்கையில் நடைபெறும் விரதங்கள் லண்டனில் நடைபெறும் போது நாள் வித்தியாசங்கள் சில சந்தர்ப்பங்களில் ஏற்படுவது தவிர்க்க முடியாதது. எனவே, பஞ்சாங்கம் அந்த அந்த இடங்களுக்கேற்ப கணிக்கப்படவேண்டும். தாம் கைக்கொள்ள வேண்டிய பஞ்சாங்கம் ஒன்றைத் தெரிவு செய்யும் நோக்கில் நடத்தப்பட்ட அம்மாநாட்டில் எனது விளக்க உரையின் பின், இலங்கை மற்றும் இந்தியாவில் இருந்து வெளிவரும் பஞ்சாங்கங்களையும் ஆய்வு செய்த அவர்கள் திருக்கணித பஞ்சாங்கமே உரிய முறையில் கணிப்பிடப் படுவதாக ஏற்றுக்கொண்டுள்ளனர். அந்த வகையிலே எனது லண்டன் பயணமும் எனது ஆய்வுக் கட்டுரை விளக்கமும் எமது பஞ்சாங்கத்துக்கு ஒரு சிறப்பான இடத்தையும் திருப்தியையும் தந்துள்ளது.

*கேள்வி :-* இலங்கையில் வெளிவரும் திருக்கணிதம், வாக்கியம் ஆகிய பஞ்சாங்கக் கணிப்புகளில் வேறுபாடுகள் காணப்படுகிறதே. அதற்குக் காரணம் யாது?

*பதில் :-* வாக்கிய பஞ்சாங்கம் பழையகாலத்தில் இயற்றப்பட்ட வாக்கியங்களை (TABLES ) எந்த வகையிலும் திருத்தம் செய்யாமல் மீண்டும் மீண்டும் அதனையே வெளியிட்டு வருகின்றனர். தற்போதைய கால கிரகநிலை மாற்றங்கள் அந்தக் கணிதத்துக்கு அகப்படாமல் வேறுபட்டுப் போகின்றன. தற்போதைய கால கிரகநிலை மாற்றங்களைக் கண்டு அவற்றுக்குத் திருத்தமாக நாம் பஞ்சாங்கத்தை வெளியீடு செய்கிறோம். கணிதங்களைத் திருத்தி வெளியீடுவதால் திருக்கணிதம் எனப் பெயரிட்டுள்ளோம். வாக்கியம் 'முனிவர்களுடைய வாக்கு' என அவர்கள் கூறினாலும் காலத்துக்குக் காலம் ஏற்படும் கிரகமாற்றங்களை அனுசரித்து, வேண்டிய திருத்தங்களைச் செய்து பஞ்சாங்கத்தை வெளியீடுங்கள் என்றும் அதே முனிவர்கள் கூறியுள்ளார்கள். எனவே, வேண்டிய திருத்தங்களைச் செய்து திருத்தமான வாக்கிய பஞ்சாங்கம் என்ற பெயரில் வெளியீட்டால் அது மக்களுக்குப் பிரயோசனமானதாக அமையும்.

*கேள்வி :-* இப் 'பார்த்திப' வருஷத்தில் சில விரத காலங்கள் மாதக்கணக்கில் இரு பஞ்சாங்கங்களிலும் வித்தியாசப்பட்டுப் காணப்படுகிறதே. மக்கள் எதனைக் கைக்கொள்ள வேண்டும்?

*பதில்:-* 'பார்த்திப' வருஷ பஞ்சாங்கத்தில் சர்வாலய தீபம், விநாயக சஷ்டிவிரதம், ஆருத்ரா தரிசனம் போன்றவை ஏறக்குறைய ஒரு மாதகால வித்தியாசத்தில் காணப்படுகின்றன. வாக்கிய பஞ்சாங்கத்திலே ஐப்பசி மாதக் கடைசியில் சர்வாலய தீபம் எனக் குறித்துள்ளார்கள். கார்த்திகை மாதத்தில்தானே சர்வாலய தீபம் வரவேண்டும். ஐப்பசியில் விளக்கீடு வருவது எமது வாழ்கையிலேயே அறியப்படாத ஒன்று. மேலும் ஆருத்ரா தரிசனம் பற்றிக் குறிப்பிடும் பொழுது, ஒருமாதத்திலே முன்னும் பின்னுமாக ஒரு நட்சத்திரம் இரண்டு முறை வருமாயின் பிந்திவந்த நட்சத்திரத்தையே கைக்கொள்ள வேண்டும் என்று ஆகமங்கள் கூறுகின்றன. அந்த நட்சத்திரம் சங்கிரமங்களாலே - கிரகணங்களினாலே- தோஷம் அடைந்தால் மட்டுமே முதல் வரும் நட்சத்திரத்தைக் கைக் கொள்ளவேண்டும். தோஷம் அடையாவிடின் பின்னதையே கொள்ளவேண்டும்.

இந்த வருடம் வரும் மார்கழி மாதம் முதலாம் திகதியிலும் 29ஆம் திகதியிலும் இருமுறை திருவாதிரை நட்சத்திரம் வருகின்றது. இந்த நட்சத்திரத்திலே சங்கிரம தோஷம் எதுவும் கிடையாது. எனவே பரிபூரணமாகப் பிந்திய திருவாதிரையிலேயே ஆருத்ராதரிசனம் கொள்ளலாம். அதில் எந்தக் கஷ்டமும் இல்லை. இந்திய வாக்கிய, திருக்கணித பஞ்சாங்களில் எல்லாம் மார்கழிக் கடைசியிலேயே ஆருத்ரா தரிசனம் குறித்துள்ளார்கள். ஆக, இலங்கை வாக்கிய பஞ்சாங்கத்தில் தான் ஐப்பசியில் விளக்கீட்டையும், கார்த்திகையில் திருவெம்பாவை ஆரம்பத்தையும் மார்கழி ஆரம்பத்தில் ஆருத்ரா தரிசனத்தையும் கைக்கொள்ள வேண்டும் என்று குறித்திருக்கிறார்கள். அது தவறு என நான் பலவகையாலும் எடுத்துக் காட்டி விளக்கியுள்ளேன். இன்னும் மேலும் பல விளக்கங்களையும் தர முடியும்.

*கேள்வி :-* உங்கள் அச்சகப் பணி பற்றி விளக்குவீர்களா?

*பதில் :-* திருக்கணித பஞ்சாங்க கணிதர் சுப்பிரமணிய ஐயர் ஸ்தாபித்த ஜோதிஷ ரத்னாகர அச்சியந்திர சாலையை அதன் எதிர்கால பல்நோக்க செயற்பாட்டை எதிர்வு கண்டு அதற்கு திருக்கணித நிலையம் எனப் பெயர் மாற்றினார். கணனி அறிமுகமாக முன், சமஸ்கிருத மொழி நூல்களை அச்சிடக் கூடிய ஒரேயொரு அச்சகமாக இது விளங்கியது. பல தெய்வங்களின் அஷ்டாத்திர சகஸ்ர நாம நூல்கள், பிரதிஷ்டா விதிகள், அட்சர மனனங்கள், தகன சம்ஸ்காரம், ஸ்வஸ்தி ஆபஸ்தம்ப பிரயோகம் போன்ற பலநூல்களை வெளியிட்டுள்ளோம்.

*கேள்வி :-* உங்கள் வாழ்க்கையில் மறக்கமுடியாத - மனதில் நிலைத்து நிற்கக்கூடிய சம்பவங்கள் ஏதும் நிகழ்ந்ததுண்டா?

*பதில் :-* 2000ஆம் ஆண்டு இடம்பெற்ற இடப்பெயர்வு எனது வாழ்க்கையில் மறக்கமுடியாத ஒரு அனுபவத்தைத் தந்தது. தமிழ்மக்கள்-இராணுவ சண்டைகள் வலுத்தபோது எமது தென்மராட்சிப் பகுதி பெரும் பாதிப்பைச் சந்தித்தது. எமது வீட்டைச் சுற்றி செல்மாரி பொழிய, எங்குமே போகமுடியாத நிலையில் அதற்குள் அகப்பட்டுக்கொண்டோம். பின் ஒருவாறு புறப்பட்டு செல்மாரியூடாக ஒவ்வொரு இடமாகத் தங்கித்தங்கி இறுதியில் உடுவிலில் உள்ள எமது உறவினரான வி.பி சர்மாவின் வீட்டில் வந்து தங்கினோம். பின் இணுவிலில் ஒரு வீடு வாடகைக்கு எடுத்துத் தங்கினோம். ஒரு வருடத்தின் பின் இராணுவத்தின் அனுமதி பெற்று எமது கல்வயல் வீட்டைச் சென்று பார்த்த போது, அது முற்றாகச் சேதமாக்கப்பட்டிருந்ததைக் கண்டு வேதனைப்பட்டேன். இது என்னால் மறக்கமுடியாத ஒன்று.

*கேள்வி :-* வளரும் சிவாச்சாரிய இளம் தலைமுறைக்கு என்ன கூற விரும்புகிறீர்கள்?

*பதில் :-* சோதிடக் கலையைச் சரியான முறையில் கணிக்கப் பழகுங்கள். சரியான முறையில் ஒழுங்காகக் கணித்துப் பழகவேண்டும். இளம் பிராமணப் பிள்ளைகள் ஆலயங்களில் பக்குவமாக நடந்து கொள்ளவேண்டும். ஆலயங்களை விழாக்களின் மையமாக -களியாட்ட இடமாகக் கருதக்கூடாது. தெய்வவழிபாட்டுக்குரிய இடங்களாகவே ஆலயங்கள் உள்ளன. ஆலய மண்டபங்களை வேறு எக் கருமங்களுக்கும் பயன்படுத்த அனுமதிக்கக் கூடாது. விவாகம் போன்ற நிகழ்வுகளை ஆலய மண்டபங்களில் நடத்தாமல் ஆலயங்களை நல்லமுறையில் பேண முற்பட வேண்டும். பண்பாட்டோடும் கட்டுப்பாட்டோடும் நடக்கப் பழகவேண்டும்.

செவ்வி:- நிறைமுனைவன்



# சிவராம்: அறியாத இன்னொரு பக்கம்

ஊடகவியலாளர் சிவராமின் படுகொலை ஏற்படுத்திய பரபரப்பு சற்று அடங்கி வருகின்றது. தனிமனிதனாகவும் ஒரு சிறந்த ஊடகவியலாளனாகவும் அவர் வாழ்ந்த வாழ்க்கை பற்றித் தென்னிலங்கையின் மூத்த பத்திரிகையாளர்களும் பெரும்பான்மையின புத்திஜீவிகளும் தங்கள் நினைவுகளை எழுதி வருகிறார்கள். ஒரு தமிழ் ஊடகவியலாளனுக்கு - அதுவும் 'புலி' முத்திரை குத்தப்பட்ட ஒரு தமிழ் தேசியவாதிக்கு - சிங்கள ஊடகவியலாளர்கள் மத்தியில் இந்தளவுக்கு மதிப்பும் மரியாதையும் இருந்திருக்கிறது என்பது அவரது மறைவுக்குப் பின்னர்தான் பெரும்பாலான தமிழ்ப் பத்திரிகையாளர்களுக்குக் கூடத் தெரியவந்திருக்கிறது.

சிவராமின் மனிதநேயத்தைப் பற்றி, மொழிப் புலமை பற்றி, சக இன ஊடகவியலாளர்களுடன் கொண்டிருந்த சிநேகபூர்வமான நேசிப்பு பற்றி, உண்டு, குடித்து உல்லாசமாகப் பொழுதுபோக்கும் அவரது குணநலன் பற்றியெல்லாம் பலரும் தங்கள் பத்திகளில் எழுதிக் கொண்டிருக்கிறார்கள்.

பெரும்பாலான ஊடகவியலாளர்களைப் போல சிவராமும் தனக்கென்று எதனையும் சேமித்து வைக்காது ஓர் ஏழையாகவே இறந்து போயிருக்கிறார் - என்று ஒரு கட்டுரையில் அவரைப் பற்றி நினைவு கூருகிறார் மூத்த பத்திரிகையாளர் காமினி வீரக்கோன்.

பதினெட்டு ஆண்டுகளுக்கு முன்னர் 'சண்டே ஐலண்ட்' வாரப் பத்திரிகையில் வெளியாகிய சிவராமின் முதற் கட்டுரையை, அதற்கு இடப்பட்ட புனைபெயரைப் பின்வருமாறு நினைவு கூருகிறார் காமினி வீரக்கோன்.

"தமிழ்த்தேசிய இராணுவத்தின் இராணுவத் தந்திரோபாயங்கள் என்பதே சிவராமின் முதற்கட்டுரை. எனக்கு அது இப்போதும் நினைவிருக்கிறது. துடிப்புள்ள அந்த இளைஞரை யாரென்று இனம் காட்டாமல் இருப்பதற்காக, ஒரு பெண்பாற்பெயராக 'தராக்கி' (Tharakki ) என்ற புனைபெயரை அந்தக் கட்டுரைக்குச் சூட்டினேன். ஆனால், பின்னர் நான் அதனை அச்சில் பார்த்தபோது அது 'தராகி' (Taraki )என்று அச்சாகியிருந்தது. ஆப்கானிஸ்தானின் முன்னாள் சர்வாதிகாரியின் பெயர் அது- அது பற்றி சிவராம் எதுவும் அலட்டிக் கொள்ளவில்லை. அந்தப்பெயரே பின்னாளில் அவரது நிரந்தரப் புனைபெயர் ஆயிற்று.... என்று நினைவு கூருகிறார் காமினி வீரக்கோன்.

"ஒரு பத்திரிகையாளன் ஆபத்தான சூழ்நிலையில் உயிரிழக்க நேரும்போது முழுத்தேசமுமே அவனுக்காக அழுகிறது. அடுத்தநாளே அவர்களை மறந்துவிடுகின்றது. சிவராம் ஒரு சுயாதீனப் பத்திரிகையாளர். (Free - Lance Journalist) வரைகின்ற கட்டுரைகளுக்காக மட்டும் ஊதியம் வாங்குகின்றவர். ஓய்வூதியமோ, ஊழியர் சேமலாப நிதியோ இல்லாதவர். தன்னுடைய எழுத்துக்களை மட்டுமே அவர் விட்டுச்சென்றுள்ளார். அவை இந்த நாட்டின் வரலாற்றின் ஓர் அத்தியாயமாக இருக்கப் போகின்றன. அவரது உழைப்பு பத்திரிகைகளுக்கும் அவை சார்ந்த நிறுவனங்களுக்கும்தான் இலாபகரமாக சேர்ந்திருக்கும். தன்னுடைய குடும்பத்திற்காக அவர் எதனையும் சேர்த்து வைக்கவில்லை என்றும் சிவராமைப் பற்றி எழுதுகிறார் காமினி வீரக்கோன்.

### ஓர் அன்பான தந்தையாக......

ஓர் அன்பான தந்தையாக - துணைவராக -சிவராம் எப்படி வாழ்ந்தார் என்பது அவரது இன்னொரு பக்கம். அதைப்பற்றி சக இன ஊடகவியலாளர் ஒருவர் நினைவு கூருகிறார்.

'..... அமெரிக்காவிலும் இங்கிலாந்திலும் விரும்பியபடி வாழ்வதற்கான பன்னாட்டு வதிவிட வீஸாக்கள் (Multiple Visas) சிவராமுக்கு வழங்கப்பட்டிருந்தன. ஆனால், அவர் இலங்கையில் வாழ்வதையே விரும்பினார். இங்கேயே வாழ்வை முடித்தும் கொண்டார்.

'அவர் தனது பிள்ளைகளைக் கண்டிப்பது இல்லை. அவர்கள் மீது மிகுந்த பிரியமும் நேசமும் கொண்டிருந்தார். உண்மையில் அவர் ஒரு செல்வந்தர் அல்லர். ஆனால், மனதளவில் அவர் செல்வந்தராக இருந்தார். எல்லோருடனும் உண்டு, குடித்து உல்லாசமாக வாழ்ந்தார். மிகச் சாதாரணமான தனது இல்லத்தில் இருந்து பஸ்ஸிலேயே எங்கும் போவார். இறப்பதற்கு இரண்டு நாள்களுக்கு முன்னர் கூட 'சந்திரமுகி' படம் பார்ப்பதற்காக குடும்பத்தினரை அழைத்துச் சென்றிருந்தார் சிவராம். மாலைப்பொழுதுகளைத் தனது குழந்தைகளோடு கழிக்க விரும்பினார். பிள்ளைகளின் கல்வி மீது ஆழ்ந்த அக்கறை கொண்டிருந்தார். பிரச்சினைகளை அணுகுவதற்கான வழியாக அன்பையே தெரிவுசெய்தவர் சிவராம். பிள்ளைகளைத் தண்டிப்பதில் நம்பிக்கையில்லாதவர். எல்லாவற்றுக்கும் தண்டனை தீர்வாகி விடாது என்று நம்பியவர்...' என்று சிவராமின் இன்னொரு முகத்தைப் பதிவு செய்கிறார் அந்த ஊடகவியலாளர்.

சிங்களப் பேரினவாதிகளால் பெரிய 'புலி'யென்று முத்திரை குத்தப்பட்ட ஒருவரை -தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவரால் மாமனிதர் என்ற உயரிய பட்டம் வழங்கிக் கௌரவிக்கப்பட்ட ஒருவரை - சிங்களப் பேரினவாதப் பத்திரிகையாளர் என்று வர்ணிக்கப்படுகிறவர்கள் கூடப் புகழ்ந்து பேசியும் எழுதியும் கொண்டிருக்கிறார்கள். அந்தளவுக்குச் சிவராம் எதிர்க்கருத்து கொண்டவர்களினது நம்பிக்கைக்குரிய நண்பனாகவும் வாழ்ந்திருக்கிறார்.

சிவராமின் கொலையாளிகள் யாரென்பது இன்னமும் வெளிவராத மர்மமாகவே இருக்கிறது.

### இரகசிய போர்க்களம்

இரகசியமான ஒரு போர்க்களமாக மாறியிருக்கும் தலைநகரில் அப்பட்டமான ஒரு இலக்காகத் தெரிந்தவர் சிவராம். எனினும் அதுகுறித்து அலட்டிக்கொள்ளாமல் அல்லது அசட்டுத் துணிச்சலுடன் உலாவி வந்த தமிழ்த்தேசியவாதி அவர்.

சிவராமின் கைத்தொலைபேசி இன்னமும் இயங்கிக் கொண்டிருக்கிறது. அந்தத் தொலைபேசிக்குக் கடைசியாக வந்த அழைப்பு உணவு விடுதிக்கு வெளியே அவரைச் சிறிது நேரம் தாமதித்து நிற்க வைக்க விடுக்கப்பட்ட அழைப்பாக இருக்கலாம் என்று ஒரு சந்தேகம். அல்லது கடத்தல்காரர்களுக்கு வசதியாக அவரது கவனத்தைத் திசைதிருப்பும் ஓர் அழைப்பாகக் கூட அது இருந்திருக்கலாம். ஆனால், அந்தத் தொலைபேசி எங்கே, யார் வசம் இருக்கிறது என்பதைப் பொலீஸார் இன்னமும் கண்டுபிடிக்கவில்லை.

சிவராமை கருணாவே தன் கையால் நேரடியாகக் கொன்றார் என்றவாறான ஒரு தகவலை பிரபல ஆங்கிலப் பத்தி எழுத்தாளர் ஒருவர் வெளியிட்டிருக்கிறார். சிவராமைக் கொல்வது என்று தீர்மானிக்கப்பட்டிருந்தால் பம்பலப்பிட்டியில் வீதியில் வைத்தோ அல்லது பஸ் ஒன்றில் வைத்தோ அதனை வெகு கச்சிதமாக நிறைவேற்றியிருக்கலாம். அதற்கு நிறையவே வாய்ப்பும் இருந்தது. அப்படியிருக்க அவரைக் கடத்திச் சென்று கொல்ல முடிவு செய்யப்பட்டது ஏன்?

சிவராமை விசாரணை செய்து அவரிடமிருந்து ஏதேனும் இரகசியத் தகவல்களைக் கறக்க வேண்டிய தேவை இருந்திருப்பின் கடத்தப்பட்டு ஓரிரு நாள்களுக்காவது அவரைத் தடுத்து வைத்திருந்திருப்பார்கள். ஆனால், அப்படி நடக்கவில்லை. கடத்தப்பட்டு ஓரிரு மணித்தியாலங்களுக்குள்ளேயே அவர் கொல்லப்பட்டு விட்டார் என்பதை மருத்துவ அறிக்கை உறுதிசெய்கிறது. அவ்வாறாயின் சிவராம் ஏன் கடத்தப்பட்டார்?

கொழும்பில் மறைவிடம் ஒன்றில் தங்கியிருந்த கருணா முன்பாகக் கொண்டு செல்லப்படுவதற்காகவே - அவரது கையால் சிவராம் கொல்லப்படவேண்டும் என்பதற்காகவே - அவர் கடத்திச் செல்லப்பட்டார் என்ற சாரப்பட எழுதியிருக்கிறார் அந்தப் பத்தி எழுத்தாளர்.

ஊகங்கள் எவ்வாறாயிருந்தாலும் தமிழ்ப் புலமையாளர்களுக்கும் தமிழ்த் தேசியத்திற்கு ஆதரவாகக் குரல் கொடுப்போருக்கும் தமிழ் ஊடகவியலாளர்களுக்கும் தலைநகர் கொழும்பு இனி பாதுகாப்பான தளமாக இருக்கப் போவதில்லை என்பதனை இச்சம்பவம் சுட்டி நிற்கிறது.

**— ஆதர்ஷா தாஸ்**

# கருத்துக்களைக் கருத்துக்களால் எதிர்கொள்ளப்

துப்பாக்கி முனையிலும் வலிமை வாய்ந்தது பேனா முனை. இப்படித்தான் எல்லோரும் சொல்கிறார்கள். ஆனால், மக்களிடத்தே கருத்துக்களை விதைத்து, தீமைகளைச் சாடியும், நன்மைகளை வலியுறுத்தியும் எழுதும் பத்திரிகையாளர்களுக்குத் துப்பாக்கிக் குண்டுகளும், கத்திகளும் அச்சுறுத்திக் காத்திருக்கும் நியதியே உள்ளது.

உலலெங்கிலுமுள்ள பத்திரிகையாளர்களுக்கும் இந்த ஆபத்து உள்ளதுதான். ஆனால், ஆசிய, ஆபிரிக்க நாடுகளில் பத்திரிகையாளர்கள் மிகப் பெரியளவில் அச்சுறுத்தல்களை எதிர்நோக்குகின்றனர்.

சாதாரணமாக ஒவ்வொரு குடிமகனுக்கும் தனது கருத்துக்களை வெளியிடுகின்ற உரிமை உண்டு. சுயாதீனமான மனித சிந்தனை, சொல், செயல்களில் - அது மற்றவரைப் பாதிக்காத நிலைமையில் - ஈடுபடும் உரிமை எவருக்கும் உண்டு.

பத்திரிகையாளர்கள் தாம் வாழும் சமூகத்தின் சமூக, கலாசார, அரசியல், பொருளாதாரக் கூறுகளை உள்வாங்கி, அதன் தாற்பரியங்களை மதிப்பீடு செய்து சார்பாகவோ எதிராகவோ குரல் கொடுப்பவர்கள். ஒரு சமூகத்தின் எண்ணவோட்டங்களைப் பிரதி பலிப் பவர்கள். மாற்றுக் கருத்துக்களைத் தேவைப்படும்போது முன்வைப்பவர்கள். தமது எழுத்துக்க ளால் வீரியமான சிந்தனை யோட்டத்தை விதைப்பவர்கள்.

உண்மையில் பத்திரிகையாளர்கள் என்போரும் சமூகத்தின் ஓர் அங்கமே. அவர்கள் தாம் சார்ந்த அரசியல் சமூகச் செயலொழுங்கின் பாதிப்புக்கு உட்பட்டவர்களே. எனவே, நடுவு நிலையானவர்கள் என்று எவரையும் பார்க்க முடியாது. ஆனால் ஓரளவு நடுவு நிலைமையோடு, அதிகம் எத்தரப்பையும் சாராது சுயாதீனமாக எழுதும், செயற்ப டும் பத்திரிகையாளர் உள்ளனர். அது தவிர, ஆட்சியாளருக்குச் சார்பாகவும், எதிராகவும் செயற்படும் அரசியற் சார்பு நிலைப்பட்ட பத்திரிகையாளர்களும் உள்ளனர்.

வரலாற்றுக் கால கட்டங்களில் எல்லாம் கருத்துகளை விதைக்கப் புறப்பட்டவர்களுக்குச் சாவும், வசைகளுமே பரிசாகக் கிடைத்தன. கிரேக்க சிந்தனையாளர் சோக்கிரடீஸிலிருந்து சிவராம் வரை கருத்துக்கள் காரணமாகக் காவு கொள்ளப்பட்டவர்களது பட்டியல் நீளமானது.

இலங்கையில் பத்திரிகையாளர்கள் பெரும் அச்சத்துடனேயே தமது பணியினை ஆற்ற வேண்டிய சூழல். ஏற்கனவே ரிச்சட் டீ சொய்ஸா, ரோஹணகுமார, செழியன் பேரின்பநாயகம், தினமுரசு அற்புதராசா, பாலநடராஜன் ஐயர், நிமலராஜன், நடேசன், சிவராம் என நீளும் கொலை செய்யப்பட்ட பத்திரிகையாளர்களின் பட்டியல்.

இவர்களில் செழியன், அற்புதன், பாலநடராஜன் ஆகியோர் அரசியல் வாதிகளாகவும் இருந்துள்ளனர். எனவே அவர்களின் படுகொலையை அரசியற்கொலையாக நோக்கினாலும், பத்திரிகையாளர் என்ற கோதாவில் அவர்களது படுகொலைகளும் கண்டிக்கப்பட வேண்டியவையே.

நிமலராஜன், சிவராம் ஆகியோர் முழுமையாகவே தம்மைப் பத்திரிகையாளர்களாக ஆக்கியவர்கள். அரச தொழி லோடு பத்திரிகைத் தொழிலில் பெருமளவு தன்னை ஈடுபடுத்தியவர் நடேசன். இவர்கள் மூவரும் தமிழ்த் தேசிய நிலை நின்று தமிழ் மக்கள் அரசியல் ரீதியாக அனுபவிக்கும் துன்பதுயரங்களை சர்வதேசமெங்கும் எடுத்துக் காட்டியவர்கள். எனவே, இவர்களது படுகொலையென்பது தமிழ்த்தேசிய ஆன்மாவைச் சிதைக்கும் ஒரு செயற்பாடாகவே அமைந்துள்ளது. சிவராம் தமிழ்த் தேசிய சிந்தனையின் பிரயோக நிலைச் செயற்பாட்டாளராக விளங்கியவர். அரசியல், இராணுவ விடயங்களைக் கூர்மையாக அவதானித்து, அவற்றை ஆய்வு நிலைப்பட அணுகி,

## யாரோடு நோவோம்...?

தனது நுட்பமான ஆங்கில மொழிக் கையாளுகையூடாக வெளியுலகுக்குத் தந்தவர்.

ஒரு காலத்தில் அவரெழுதிய ஆய்வுகள் பொதுவிமர்சனமாக இருந்தபோது அதனைச் சிங்களப் பேரினவாதிகள் வரவேற்றனர். அதைக் கொழும்பில் நடைபெற்ற சிங்கள - தமிழ் கலைக் கூடல் நிகழ்வில் நினைவு கூர்ந்த சிவராம் அவர்கள், 'அப்போது நான் சிங்களவர் களின் செல்லப் பிள்ளையாக இருந்தேன். சிங்கள அரசியல் வாதிகள் பலரும் எனது எழுத்துக்களை வியந்து படித்தார்கள். அதன் பின்னர் நான் எனது அனுபவத்தினூடாக என்னைப் பற்றியும், எனது மக்களைப் பற்றியும் சிந்தித்துச் செயலாற் றத் தொடங்கிய போது என்னையும் பயங்க ரவாதியாகவே பார்க்கத் தொடங்கினர். எந்த வேளையும் உயிர் பறிக்கப்படக் கூடிய நிலையிலேயே, அச்சுறுத்தல்களுக்கு மத்தியிலேயே நான் செயலாற்றிக் கொண்டிருக்கிறேன்' எனக் குறிப்பிட்டிருந்தார். சிங்கள புத்திஜீவிகள் பலரிருந்த மேடையில், சிங்கள இனவாதிகளால் கூட்டத்தைக் குழப்பும் வன்முறைகள் பிரயோகிக்கப் பட்ட நிலையில் அவரது இக்கூற்று அர்த்தம் பொதிந்த உண்மைச் சாட்சியமாக அப்போது அமைந்திருந்தது.

## பழகவேண்டும்

'தராக்கி' என்ற புனைபெயரால் அறியப்பட்ட அவர் எழுத்தில் 'ஜாம்பவானாக' இருந்தபோதும், தன்னடக்கமும் எளிமையும் மிக்கவராக இருந்தார். நாலு 'செய்தி' களைக் கொடுத்து விட்டு 'நீட்டி முழுக்குகிற' பத்திரிகையா ளர்கள் சிலர் மத்தியில் சிவராம் 'நிறை குடமாக' இருந்தார் என்பது அவரது இமாலய குணாம் சமே!

நெருக்கடிகளின் விளிம்பில் நிற்கும் தமிழினத்தின் குரலைச் சர்வதேசமெங்கும் ஓங்கி ஒலித்த ஒரு குரல் சிவராமினுடையது. அவரது 'வெற்றி டத்தின்' பெறுமதியை உணர்ந்தே இந்தக் கைங்கரியம் செய்யப்பட் டுள்ளது. சிவராமின் இழப்பு தமிழினத்துக்கு, தமிழ்த் தேசியத்துக்கு, தமிழ்ப் பத்திரிகை உலகுக்கு மட்டுமல்ல இலங்கையின் அமைதிக்காக ஏங்கும் சிங்கள மக்களுக்கும் பேரிழப்பே. வன்மையாகக் கண்டிக்கப்பட வேண்டிய படுபாதகச் செயலாகவே தமிழ் மக்கள் இதனை நோக்குகின்றனர். கருத்துகளைக் கருத்துகளால் எதிர்கொள்ளும் நாகரிகமான சூழ்நிலையை சிவராமின் மரணமாவது இனி ஏற்படுத்தட்டும்

**ஏகலைவன்**